வானதி பதிப்பகம்

காணி நிலம் வேண்டும்

பூவை எஸ். ஆறுமுகம்

31



காணி நிலம் வேண்டும்

பூவை எஸ். ஆறுமுகம்

வானதி பதிப்பகம்
தி.நகர் • சென்னை-17

முதற்பதிப்பு; ஜூன் 1978
உரிமை : வானதி பதிப்பகத்துக்கு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ 10-00

பிரபு பிரிண்டிங் ஹவுஸ், சென்னை—17.

மண்ணின் புதிய கதை இது

"மண்ணை நம்பி மரம் இருக்கு, ஐலேசா!' என்று எங்கள் பட்டிக்காட்டுப் பக்கத்தில் ஓர் ஏற்றப்பாட்டு பாடப் படுவது உண்டு. ஏற்றம் மிகுந்த இப்பாட்டு எங்களுடைய மண்ணுக்கு மட்டுமே சொந்தம் என்பதல்லதான!—நம்முடைய பொது மண்ணுக்கே அது சொந்தம்!

இந்நிலையிலே:

மண்ணை நம்பி மரம் இருக்கின்றதோ, இல்லையோ?—மண்ணை நம்பி இந்தப் பாரதத் திருநாடு இருக்கின்றது! அதனால்தானே என்னவோ, கிராமங்கள்தாம் நமது இந்திய நாட்டின் ஜீவநாடி என்பதாக அன்றே அண்ணல் காந்தி அடிகள் தீர்க்க தரிசனத்துடன் வலியுறுத்திச் சொல்லிவிட்டார்கள். அந்த நல்வாக்கின் நற்பலனாகவே, மத்திய—மாநில அரசுகளின் கவனம் கிராமங்களின்பால் வெகுவாக நிலைத்து விட்டிருக்கிறது!

காணிநிலம் அமரகவி பாரதிக்கு மாத்திரம் சொந்தமாக அமையவில்லை; அந்த நற்கனவு வீரமணிக்கும் ஓர் இலட்சியமாக அமைகிறது. இலட்சியம் என்றாலே, அக்கினிப் பரீட்சைகளுக்கும் அக்கினிப்பிரவேசங்களுக்கும் பஞ்சம் இருக்க முடியுமா?-இருக்கலாமா? பட்டிக்காட்டில் பிறந்த யதார்த்தவாதியான இவ்விளைஞன் ஒரு தனிபிறப்பு; ஏன் தெரியுமா?-அவன் தன்னைமட்டும் நேசிக்கவில்லை; தன் மனச் சாட்சியையும் நேசிக்கிறான்! அத்துடன் நின்றிருந்தால் தேவலாமே? அவன் தன்னுடைய மனத்தின் சாட்சியாகத் தனது அம்மான் மகளான அன்னக் கொடியை—பொற்பின் செல்வியாம் அன்னக்கொடியை நேசிக்கிறான்; உயிரும் உயிர்ப்புமாகவே நேசிக்கிறான்! கதை—அவன்கதை மேலும் பல சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியதாக ஆகிறது; ஆக்கப்படுகிறது!

தமிழச்சாதிக்கு அகமும் புறமும் புதிதல்லவே!

உதாரணம்: வீரமணி-அன்னக்கொடி ஜோடி!

உத்தாரணம் தருவதோ, அவர்களது ஜோடிக் காதலின் ஜோடி சேர்த்த-ஜோடி சேர்ந்த கதை!

கதை என்றால், அது வாழ்க்கையின் பிரதிபலிப்புத்தான்.

ஆனால், இங்கே கதைக்கு ஓர் அதீதமான மகத்துவமும் கிடைத்துவிடுகிறது! அந்தப் புண்ணியத்தைக் கட்டிக்கொள்கிறாள் பவளக்கொடி!-அவள் ஓர் அதிசயம்!-அந்த அதிசயம், பவளக்கொடியை நாளும் பொழுதும் வாழ்த்தவே செய்யும்! அதுமட்டுமல்ல; ஆண்டாளும் அவளை வாழ்த்தட்டும்!-வாழ்த்துவாள்!

தமிழக அரசின் ஏடு 'தமிழரசு'; அதன் 1974-ம் ஆண்டுப் பொங்கல் சிறப்பிதழில் 'காணி நிலம் வேண்டும்' என்ற என் தொடர்கதை ஆரம்பமாயிற்று; நான் தமிழ் மண்ணைப் பிரிந்து கேரளமண்ணில் வாசம் செய்ய நேர்ந்த காலத்திலும் தமிழ்மண்ணின் கதையைச் சிந்திக்க வேண்டிய ஒரு கட்டாயத்தையும் இக்கதை என்னுள் உண்டாக்கிவிட்டது. மீண்டும் தமிழ்மண்ணுக்கே திரும்பியிருக்கிறேன்; இப்போதும் மேற்கண்ட கதை என்னுள் நிழலாடத் தொடங்குகிறது. ஆம்; என்வரை காலம் மாறிவரவில்லை; மாற்றப்பட்டு வருகிறதென்றும் கூறுவேன்!-காலத்தை மாற்றும் 'ரசவாதம்' எனக்குத் தெரியாதா, என்ன? ஆகவேதான் என்னுடைய இந்தச் சித்துவிளையாட்டிலே, நாகரிக நெறியும் மனிதப்பண்பும் பொங்குவிரி காவிரியின் மண்வாசனையுடன் ஒரு நூதனமான போக்கில், ஒரு வித்தியாசமான லயத்தோடு விளையாடுகின்றன; விளையாட்டுக் காட்டுகின்றன! இப்படிப் பட்டதோர் அழகான, நல்ல அனுபவம் எனக்குக் கிட்ட வாய்ப்பளித்த 'தமிழக அரசு'க்கும் 'தமிழரசு' இதழுக்கும் இதயபூர்வமான என் நன்றியறிவைப் பணிவன்புடன் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

'வானதி' உரிமையாளர் உயர்திரு திருநாவுக்கரசு அவர்கள் 'காணிநிலம் வேண்டும்' என்ற என்னுடைய நவீனத்தை வழக்கம்போல் நவீனமான அமைப்புடன் சிறப்பாக வெளியிட்டிருக்கிறார். அவர் என்பால் கொண்டிருக்கும் அன்பும் பாசமும் ஆலமரத்தைப் போன்றது. இந்நிழல் எனக்குத் தொடர்ந்து கிடைத்துவரும். நன்றி.

'ஏலக்காய் வாரியம்'
சென்னை—17
12-6-1978

பூவை எஸ். ஆறுமுகம்

காணி நிலம் வேண்டும்

1. நேசம் மறக்கவில்லை நெஞ்சம்!

உதய சூரியனின் செம்பொற் கதிர்கள் மண்ணைப் பொன்னாக்கி விளையாடிக் கொண்டிருக்கின்றன; விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கின்றன!

அறந்தாங்கி வழியே காரைக்குடி செல்லும் 'பாண்டியன் போக்குவரத்துக் கழக பஸ்' ஆவணத்தாங்கோட்டைச் சந்தைப்பேட்டையில் நின்றது.

வீரமணி கம்பீரமான ஒயிலோடும், நேர்மையான பெருமையோடும் கீழே இறங்கினான். பிறந்த மண்ணின் எல்லையில் அவன் பாதங்களைப் பதித்த போது, அவனுடைய நெஞ்சில் பாதம் பதித்த புதிய கனவும், பழைய வைராக்கியமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து நிழலாடிய விந்தையை அவனால் நன்கு உணர முடிந்தது. ஆடிப் புனலாக ஓடத் தொடங்கிய புதிய ரத்தத்தின் புதிய உணர்வுகள் அவனை ஓர் இமைப் பொழுது மெய்ம் மறக்கச்

செய்திருக்க வேண்டும்! சுயப்பிரக்ஞை கண் திறந்தது; அவன் கண்களைத் திறந்தான்.

பசுமைப் புரட்சியின் அடித்தளங்கள் எத்தனை பெருமையோடும் பெருமிதத்தோடும் இளங் காலை வெய்யிலிலே பளிச்சிட்டு மின்னிக் கொண்டிருக்கின்றன!

அவனது அழகான இதழ்க் கரையில் நயமான புன்னகை விநயமாகக் கரை சேர்ந்தது. 'தமிழ்ச் சமுதாயத்தின் வளப்பம் மிக்க வருங்காலத்துக்குக் கட்டியம் கூறிடத்தான் இம்மாதிரியான சின்னஞ் சிறு கிராமங்களெல்லாம் கூடப் பொருளாதார ரீதியிலும் விஞ்ஞான முறைமையிலும் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கின்றனவே! அப்பால் தமிழ் மண் நிறக்க—தமிழ்ச் சாதி சிறக்கக் கேட்கவா வேண்டும்?'—தனக்குரிய சமுதாயக் கடமையைச் சுற்றி அவன் சிந்தனைகள் அறிவு பூர்வமாகவும், உணர்ச்சி பூர்வமாகவும் ஆறுதலோடு பற்றிப் படரத் தலைப்பட்டன.

அப்போது :

உந்திக் கமலத்தினின்றும் புறப்பட்ட குரலொன்று காலத்தை வெல்லும் அறைகூவலுடன் பாய்ந்து வருகிறது.

"அண்ணே!......"

நாடி வந்த பாசத்தின் அழைப்பொலி ஓடி வந்து அவனுடைய பாசத்தின் நெஞ்சில் எதிரொலித்ததுதான் தாமதம்; அவன் உள்ளம் சிலிர்த்தது:

உடலும் சிலிர்த்தது. கண்மூடிக் கண் திறக்கும் நேரத்தில், அவன் விண்ணுக்குப் பறந்தான்; மண்ணுக்கு மீண்டான். அவன் மெய் உணர்ந்து, விழிப்புப் பெற்ற சமயம் அவன் மெய்யை உணர்ந்தான். அள்ளக் குறையாத பாசம் அள்ளக் குறையாமல் பொங்கியது; பீறிட்டது. நன்றியறிவுக் கண்ணீரின் முத்தங்கள் அவனது அழகான கன்னங்களை முத்தமிட்டன; தேங்காய்ப் பூத் துண்டை எடுத்தான் அவன். 'அண்ணே!'—யார் அழைத்தார்கள்? மாறாத சோகத்தோடும், மறையாத ஏக்கத்தோடும் திரும்பலானான் வீரமணி.

"வீரமணி அண்ணே!"

வீரமணி புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டான். "ஓ! ......மாணிக்கமா?"

"ஆமாங்க, அண்ணாச்சி," என்று வாஞ்சையுடன் கூறினான் மாணிக்கம். "தஞ்சாவூரிலிருந்து திரும்பிட்டீங்களா? முதலிலே உங்களோட தேர்வு முடிவைச் செப்புங்க. அப்பத்தான் மனசு சமாதானப் படுமுங்க.முடிவு நாம எதிர்பார்த்தாப்பிலே பழம் தானுங்களே?" என்று ஆர்வம் மேலிடக் கேட்டான்.

"பழம்தான் தம்பி, பழம் தான்!... உன் நல்லெண்ணமும், நல்வாக்கும் பலிச்சிடுச்சு! நான் முதல் வகுப்பிலே தேறியிருக்கேன், மாணிக்கம்!" என்றான் வீரமணி; கனி இதழ்கள் கனிவாய்த் துடித்தன.

"அப்படீங்களா? பலே!... பலே!"

மாணிக்கம் பச்சைப் பிள்ளை மாதிரி தாவிக் குதித்தான். சவாலில் செலித்த களி துள்ளியது.

"நீங்க சொன்ன இனிப்புச் சேதியைக் கேட்டடியும், என்னோடு மேனி முச்சூடுமே ஒரே முட்டாய் இனிச்சுதுங்க!" என்றான். தலைமுண்டாசுத் துவாலை தோளுக்குச் சரிந்தது. பெருமிதம் பூத்த பரவசத்தோடு தலையை நிமிர்த்தினான் மாணிக்கம்.

"அப்படியா? ரொம்ப மகிழ்ச்சி, மாணிக்கம்," என்று புன்னகை செய்தான் வீரமணி. அரும்பு மீசையை முறுக்கி விட்டான்; கைப் பையைக் கை மாற்றிக் கொண்டான்.

நண்பர்கள் தேடி வந்தனர்.

பட்டப் படிப்புத் தேர்வில் வீரமணி வெற்றி வாகை சூடிய அமுதச் செய்தி அஞ்சல் செய்யப் பட்டது.

"எங்க வீரமணி அண்ணன் இனிமே பட்டதாரி விவசாயி—விவசாயப் பட்டதாரி!... ஆகா!"—முத்து கைகொட்டிக் களித்தான்.

கைலாசம் கும்மாளம் போட்டான்.

தோழர்கள் குதூகலம் அடைந்தார்கள்.

அன்பு பெருக, பாசம் உருக நின்றான் வீரமணி. இனி, அவன் வீட்டுக்குப் புறப்பட்டாக வேண்டும். அப்பா அங்கே எதிர்நோக்கித் தவித்துக் கொண்டிருப்பார்!

"வாங்க, அண்ணு; ஆளுக்கொரு தேத்தண்ணி ஊத்திக்கிட்டுப் பறியலாம்,'' என்று மாணிக்கம் வேண்டிக் கொண்டான்.

"ஊம்!''

அடடே! கொம்பிலே வைக்கோலைக் கட்டிக் கொண்டு மாடு ஒன்று ஓடுகிறதே? மேயவா?... ஊகூம்!—நீராட!

சாலை அத்தளிப்பட்டது.

நட்பு முன் தொடர, நட்பு பின் தொடர்ந்தது.

கை வீசி நடந்தான் வீரமணி. ஊராட்சி மன்றம் அவனுக்கு வழி விட்ட நேரத்தில், அவனை உரசிக் கொண்டு அவனுடைய தாய் மாமன் ராமையாத் தேவர் வடக்கே காடு மேடு தெரியாமல், கண் மண் புரியாமல், ரேக்ளாவில் பறந்த காட்சியைக் கண்டதும், அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவன் எதை நினைப்பான்? அல்லது, எதை மறப்பான்? என்னென்னவோ எண்ணங்கள் 'உப்புக் கோடு' மறித்தன. தன் வசம் இழந்து, மின் விளக்குக் கம்பத்தின் அருகில் அப்படியே நின்றுவிட்டான். அப்போது எதிர்ப்புறத்திலிருந்து நண்பர்களின் அழைப்புக் குரல் கேட்கவே, அவன் சுய நினைவையும் நல்ல நிதானத்தையும் துணை சேர்த்துக் கொண்டு, சாலையைத் துண்டாடிப் பாய்ந்தான்: அவன் போட்டிருந்த 'டெரின் ஸ்லாக்' வெகு எடுப்பாக விளங்கியது.

எங்கிருந்தோ சிரிப்பொலி இளங்காற்றில் மிதந்து வந்து கொண்டிருக்கிறது!

வீரமணி திரும்பிப் பார்த்தான்.

கங்காணியர் தென்னந்தோப்புக் கேணியடியிலிருந்து ஐந்தாறு பெண்கள், தண்ணீர்க் குடம் சலசலக்க, சாந்துப் பொட்டு தளதளக்க வந்து கொண்டிருந்தார்கள்.

கூர்த்த மதி பதித்தான் வீரமணி. இருட்டைக் கீறிக் காட்டும் கொடி மின்னலென, கன்னியர் கூட்டத்தின் மத்தியிலே, 'அந்த முகம்' பளிச்சிட்டுப் பள பளத்தது!

வீரமணியின் செவ்வதரங்களிலே நளினமான குறுஞ்சிரிப்பு நெளிந்தது. நெஞ்சிலும் நினைவிலும் நீக்கமற நிறைந்திருக்கும் ஆசை முகம் ஆயிற்றே அது!...'ஓ! அம்மான் மகள் அன்னக்கொடி!'— எண்ணிய மனம் பூச்சிதறலாக மணத்தது; பூந்தென்றலென இனித்தது.

அன்னக்கொடி நோக்கினாள்.

வீரமணியும் நோக்கினான்.

அவள் என்னவோ சொல்லத் துடித்திருக்க வேண்டும்.

அவனும் என்னவோ பேசத் தவித்திருக்க வேண்டும்.

ஆனால், வாய்ச் சொற்கள் இரு தரப்பினின்றும் பிறந்தால் தானே?

அரைக்கணம், கனவு கண்டு விழித்தவன் மாதிரி தடுமாறினன் அவன். கண்களைத் திறந்து திறந்து மூடினன்! மூடி மூடித் திறந்தான். இதயத்தின் இதயத்தில் ஏதோ தைத்தது. நெருஞ்சி முள்ளாக இருக்கலாமோ? கனவாய் வந்தவள், கனவாய் மறைந்து விட்டாளோ?...

'அன்னக்கொடி,!'...

அழகின் உச்சி அல்லவா அவள்!

பேசும் விழிகள்!

அவை அவனைப் பேசவொட்டாமல் செய்து விட்ட வேளைகள் ஒன்ரு, இரண்டா?

சிரிக்கும் உதடுகள்!

அவை அவனைச் சிரிக்க வைத்துச் சிந்திக்க வைத்த கட்டங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல.

துடிக்கும் நெஞ்சம்!

அது அவனைத் துடிக்க வைத்து, வேடிக்கை பார்த்து, வேடிக்கை காட்டியது பொய் அன்று; கனவு அன்று; கதையும் அன்றுதான்!

பருவப் பண்புக்கு அவள் ஒரு புதிய அலை!

அந்த அலையே பாசத்தின் நேசம் கொண்ட— நேசத்தின் பாசம் பூண்ட ஆழியாகி, அவனைத் தத்தளிக்கச் செய்த அதிசயங்கள் மகத்தான உண்மைகள்.

அவன் தலைநிமிர்ந்தான்.

அவன் நினைவுகள் தலைநிமிர்ந்தன.

"அன்னக்கொடி!...... அம்மான் மகளே அன்னம்!''

விளைந்தவை:

புன்சிரிப்பு!

பெருமூச்சு!

அவனும் அவளும் துள்ளித்திரிந்த காலத்திலே, "அம்மான் மகளே!—அத்தை மகனே!'' என்று உறவு சொல்லி உறவு கேட்டும், உரிமை கோரி உரிமை பெற்றும் இணைச்சிட்டுக்களாக மணல் வீடு கட்டி, தாயம் போட்டு, ஆடிப் பாடிக் கொண் டாட்டம் போட்ட நிகழ்ச்சிகள், காலக்கருவூலத்தின் அன்புச் சேம நிதிகள்தாம்!

காலம் ஒரு புள்ளிமான்.

பருவம் திரைகிழித்துத் திரைவிரித்த நாட்கள் அவை; பச்சைக்கொத்துமல்லியாக மணம் கூட்டும்.

மதுக்குடம் ஏந்திய மணமலராக அவள் வந்தாள். "அத்தான், நான் இப்ப முன்னே மாதிரி இல்லே. நாம் சதா கண்டு தண்டிக்கிட இனி வாய்க் காது. நம்ப சாதி சமுதாயக் கட்டுதிட்டம் அப்படி. ஒரு அந்தரங்கத்தை உங்க நெஞ்சுக்கு நீதியாய் ஒப்படைச்சாகணும். எனக்கிண்ணு ஒரு குடும்ப வாழ்க்கை லவிக்க வேணும்னு விதிச்சிருந்தால், அந்தப் பாக்கியம் நீங்க எனக்கு இடுற அன்புப் பிச்சையினுலேதானுங்க கிட்ட முடியும்! இந்த

விதியை எப்பேர்ப்பட்ட சோதனையிலேயும் நான் சத்தியமாய் மறக்க மாட்டேன். அதே கணக்கிலே, நீங்களும் மறந்துப்புடாதீங்க, அயித்தைமகனே!...'' என்று மனம் உருகி வேண்டிக் கொண்டாள் அன்னக்கொடி. பூவும் பொட்டும் புது வெள்ள மாகப் பொலிந்தன!

உள்ளம் தொட்டவளின் பேச்சு அவன் உள்ளத்தைத் தொட்டது. மேனி புல்லரித்தது. பார்வை கூடு விட்டுக் கூடு பாய்ந்தது. கண்கள் பொடித்தன. ''எனக்கு உயிரே நீ தானே, அம்மான் மகளே?...என்னோட உயிருக்கே நீதானே நாற்றங் கால், அன்னம்?...உன் சத்திய வாக்குத்தான் எனக்கு மனச்சாட்சி! இந்த அந்தரங்கம் தான் உன்னோட நெஞ்சுக்கு நீதி! இந்த மணவாழ்க்கை நம்ம அளவிலே சத்திய சோதனை மாத்திரமில்லே; அக்கினிச் சோதனையும் கூட!...இந்தச் சோதனை யிலே தேறி, நாம ரெண்டு பேரும் நம்மோட மன வைராக்கியத்தோடே,இந்த ஊர் மண்ணிலே ஜோடி யாய் வாழ்ந்து காட்டினுல்தானே நம்பளோட பாசத்துக்கும் நேசத்துக்கும் நல்ல அர்த்தம் கிடைக்க வாய்க்கும், அன்னம்?...'' என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசினுன், அவன். அவன் வீரமணி. அவள்—அன்னக்கொடி மெய்ம் மறந்தாள்.

''அன்னம்!...அன்னம்!...''

அன்னம் தான் சிரித்தாளா?

சிரித்தவள் அன்னமேதானு?

விண்ணைத் துறந்தோ, மறந்தோ ஆவணத்தாங் கோட்டைக்குச் சொந்தமான தாய்மண்ணை மிதித்தான் வீரமணி. உள் மனத்தில் உள்வட்டமாக விம்மல் வெடித்தது. தலையை உயர்த்தினான். சூன்யம் கொக்கரித்தது. அறுவடையான வயல் வெறிச் சோடிக் கிடக்குமே, அப்படி மனம் தவித்தது. அவன் சுழலை மறந்தான்; சூழலை மறக்கவில்லை. கலக்கமும் நெகிழ்ச்சியும் சிந்த, ஏக்கமும் உருக்கமும் சிதற, மடங்கினான்!—அவன் தற்சமயம் புதிய வீரமணி!

தேநீர் வந்தது.

சூடும் சுவையும் கமழ்ந்தன.

“டீ குடிங்க, வீரமணி அண்ணே!”

“ஆகட்டும், மாணிக்கம்!”

வீரமணி தேநீர்க் கோப்பையை ஏந்தியவாறு, நாலா பக்கமும் கண்ணோக்கம் பதித்தான். சேக்காளிகள் கோப்பையும் கையுமாக, கும்மாளமும் குமிழ் சிரிப்புமாக விளங்கிய காட்சியைக் காணக் காண, அவனுக்கு இதமாக மட்டும் அல்ல, இன்பமாகவும் இருந்தது. “எல்லாரும் குடிங்கசாயாவை!...” என்றான். பேச்சின் நாணயமான சாதுர்யம் அவனுக்கு நமட்டுச் சிரிப்பை உண்டாக்கியிருக்கலாம்.

தலைவாசலில்—தயங்கித் தயங்கி வந்து நின்ற சாம்பான், “முதலாளி, கனமாய்த் தூள் போட்டு ஒரு ‘கோப்பி’ குடுங்க,” என்று கேட்டான் பணிவன் போடு.

தேநீர்க் கடை உரிமையாளருக்கு வாயெல்லாம் பல் ஆயிற்று. ''ஏம்ப்பா மாஸ்டர்! கோப்பின்னு காப்பின்னு அர்த்தம். சாம்பான் அக்கரைச் சீமை ஆசாமி. அதுதான் பழைய மண்வாசனை வீசுதாக்கும்!'' என்றார்.

வீரமணி தனக்குத் தானே நலியாமல் சிரித்துக் கொண்டான். மறு விநாடி, அந்தச் சிரிப்பு மாறத் தொடங்கியது. பொசுக்கும் வெயிலிலே பொசுங்கி ஒதுங்கி நின்ற அந்த மனிதனை அனுதாபம் பொங்கப்பார்த்த அவன் கண்கள் பொங்கின. இருக்கையினின்றும் மெல்ல எழுந்தான். மனிதாபிமானம் சிறக்க, ''சாம்பான், உள்ளே வந்து பெஞ்சியிலே குந்தி கோப்பி சாப்பிடுங்க. அதோ பாருங்க; உங்களை வரவேற்க ஒரு மகாத்மா பொக்கை வாய்ச் சிரிப் போடே காத்துக்கிட்டிருக்கார்,'' என்று அவன் கூறினான்.

''ஊம், வாப்பா உள்ளே,'' என்று அனுமதி கொடுத்தார் தேநீர்க் கடைக்கு உடையவரான ஞானசீலன். சாமர்த்தியசாலிதான்!—இப்போது தான் அவருடைய நெற்றியை ஒற்றி விளங்கிய திரு நீற்றுப்பட்டைகளுக்கு யதார்த்தமானமகிமையோ, தார்மிகமான அர்த்தமோ கிடைத்தது போலும்!

அமரப் புன்னகையோடு வரவேற்ற மகாத்மாவைச் செய்ந்நன்றியோடு பார்த்துக் கொண்டே உள்ளே பிரவேசித்தான் சாம்பான்.

இருட்டறையிலே வெளிச்சம் பரவினாற் போன்று, ஆரோக்கியமான சூழ்நிலை உருவாயிற்று.

வீரமணி ஆறுதலடைந்தான். புதுப்பிக்கப்பட்ட தெம்போடு காப்பியைச் சுவைத்துப் பருகிக் கொண்டிருந்த சாம்பானைப் பார்த்தபோது, அவனுக்கு எவ்வளவோ நிம்மதியாக இருந்தது.

சுவர்க் கடிகாரம் எட்டு முறை குரல் கொடுத்தது.

கோப்பையை எச்சரிக்கையுடன் சிமிட்டித் தட்டில் வைத்துவிட்டு, அவசரம் அவசரமாகத் தோல்பையைப் பிரித்தான் வீரமணி. ஊதா நிற நாட் குறிப்புப் பிரிந்து விழவே, அதைப் பதட்டத்தோடு எடுத்தான்.

உலைப் பானையில் மகிழ்ந்து கொட்டுமே சோற்றுப் பருக்கைகள், அந்தப் பாவனையில், அன்பின் தொடர்பு கொண்ட கடிதங்கள் பலவும், நீதி மன்றத்தின் தொடர்பு சேர்த்த தீர்ப்புத் தாள்கள் சிலவும் சிதறின.

வீரமணி சிந்தனை வசப்பட்டான். இதயம் பந்தயத்திடலாக மாறும் பொழுது, நினைவுகள் பந்தியக் குதிரைகளாக மாறுவது இயல்புதான். கடிதங்களைக் கண்டதும், அவன் அண்ணாமலை நகருக்கும் சென்னைக்குமாகப் பறந்தான். நீதிமன்றத் தீர்ப்புத் தாள்களைப் பார்த்ததும், அவன் ஆவணத் தாங்கோட்டைக்குத் திரும்ப வேண்டியவன் ஆனான்.

அவனுடைய நெஞ்சத்தின் பகைமை மறக்காத நினைவிலே 'மாமன்' வேம்பாகக் கசக்க, நேசம் மறக்காத நினைவிலே 'மாமன் மகள்' செங்கரும்பாக

இனிக்க இப்படிப்பட்டதொரு முரண்பட்ட நில வரத்தில் மனம் ஊசலாட, சிதறியவை அனைத்தை யும் கருக்கடையாக ஒழுங்கு சேர்த்துப் பைக்குள்ளே திணித்த பின், பையின் மறுபக்கத்தைத் திருப்பி, ஐந்து ரூபாய் நோட்டொன்றைத்தேடி எடுத்தான். கல்லாவை இலக்காக்கி நடந்தான்.

''ஐயா, மொத்தம் ஏழு சாயாவுக்குத் துட்டு எடுத்துக் கிட்டுப் பாக்கியைத் தாங்க,'' என்று வீரமணி கேட்டுக் கொண்டான். அவனது சகாக் கள், ''நான் முந்தி—நீ முந்தி' என்று தலைக்கொரு பத்து ரூபாய்த்தாளை நீட்டி அன்புக்குப் போட்டி போட்டதை உணர்ந்த அவன், அவர்கள் அனைவரை யும் அதே அன்பால் வெல்லவும் செய்தான். ''என் ஞேட வெற்றிக் களிப்பிலே பங்கு கொண்டவங்க நீங்க; ஒரு சில புல்லுருவிகளைப் போல நம்பிக்கை மோசம் பண்ண ஒப்பாதவங்க. என் பேரிலே உயிரையே வச்சிக்கிட்டு இருக்கிறவங்க. அதனுலே என்னுேட அன்பிலேயும் நீங்க பங்கு கொள்ள வேண்டியது தான் நியாயம்!... அப்பத்தான் வள்ளுவப் பெருமானுேட 'நன்றி அதிகார'த்துக்கு நம்ப மூலமும் ஒரு நியாயம் கிடைக்க இயலும்,'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் பேசினுன். வீரமணி மீதிப்பணத்தைக் கணக்கிட்டுப் போட்டு கொண் டான்.

நண்பர்கள் உடல் புல்லரிக்க, உள்ளம் சிலிர்க்க நின்ருர்கள்.

"நம்ப வீரமணி அண்ணன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு, அவர் சொல்லுகிற வழியிலே நடக்க வேண்டியது தான் நம்ப கடமை," என்று குழை யப் பேசித் தழையச் சிரித்தான் மாணிக்கம்.

மற்றவர்கள் 'ஊம்' கொட்டினார்கள்.

அன்பும் பாசமும் பேணி, அமைதியோடு வீரமணி புன்னகை ஏந்தினான்.

அவர்கள் இனிமேல் கிளம்பி விடுவார்கள்.

ஆனால் ...

அப்போது, புதிய வாடை அலைந்து வந்தது. வாடையென்றால் கெட்ட வாடை!

ஒய்யாரக் கொண்டையும் தாழம் பூவுமாக, நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு, ஒருத்தி உள்ளே நுழைந்தாள். அந்தச் சிங்காரிக்குப் பெயர் இல்லா மல் இருக்கலாமோ?—ஊகூம், கூடாது! கூடவே கூடாது! அவள்: செங்கமலம்.

சூடான பரபரப்பு சூடேறியது; சூடேற்றியது.

கூடியிருந்தவர்கள், அவரவர் மனோபாவனைப் பிரகாரம் உத்தி செய்து, அந்தக் 'கனி'யைக் கள்ளத் தனம் பாய்ச்சிப் பார்வையிடத் தொடங்கினார்கள். கனி எனில், கல்லெறிக்குத் தப்புமா?

வீரமணிக்கோ எரிச்சல் பற்றி எரிந்தது. பை யிலிருந்து பத்திரிகையை எடுத்துப் புரட்டினான். அவன் வாய் 'துறு துறு'த்துக் கொண்டிருந்தது. செங்கமலம் ஆடும் கூத்து எங்கே போய், எப்படி

முடியப் போகிறதென்று வேடிக்கை பார்க்க வேண்டாமா?—எடுப்பார் கைப் பிள்ளை ஆயிற்று பொறுமை.

செங்கமலம் யாரையும் லட்சியம் செய்தவளாகத் தெரியவில்லை. யாருக்காகவும் வெட்கப்படுபவளாகவும் தென்படவில்லை. "சுடுதண்ணி வேணும்; நல்லதாய்ப் போட்டுக்கொடுக்க வேணும்!" என்று அதிகாரமாகச் சொன்னாள், அவள். இரட்டை வடத் தென்னம்பாளைச் சங்கிலி மின்னாமல் இருக்காது.

ஞானசீலன் முகத்தைச் சுளித்தபடி, அந்த ஒய்யாரியை அருவருப்போடு நோக்கினார்; பிறகு பார்வையின் வேண்டா வெறுப்புத் தன்மையை மாற்றிக்கொண்டு, ஓர் அச்ச உணர்வோடு, வீரமணியை அளந்தார். வீரமணியின் உருவம் அவருக்கு ரத்த தானம் வழங்கியிருக்குமோ? ஆவேசத்துடன் எழும்பினார். 'எலே செங்கமலம், என் கடையிலே இனி உனக்குச் சுடுதண்ணியும் கிடைக்காது; சுடாத தண்ணியும் கிடைக்காது! கைக்கு மெய்யாய் முதலிலே நீ இந்த இடத்தைக் காலி பண்ணிடு!" என்று ஆணையிட்டார்.

செங்கமலமா மான அவமானத்துக்கு எல்லாம் அஞ்சுபவள்?—மூச்! மறு பேச்சாடவில்லை; 'சுருட்டை நோய்' பீடித்த நெல் வயலுக்கு நேராக தலையை மட்டிலும் தொங்கப் போட்டவளாக, அங்கிருந்து நழுவி விட்டாள். செங்கமலமா இல்லை, கொக்கா?

அவள் தலை மறைந்ததோ இல்லையோ, கடை எடுபிடிப்பயல் தலைதெறிக்க ஓடி வந்து, அந்தப் 'புண்ணியவதி' யின் 'திருப்பாதங்கள்' பட்டிருந்த இடத்திலே வள்ளிசாக ஒரு சருவம் தண்ணீரைச் சாய்த்து முடித்த பிற்பாடுதான், நல்ல மூச்சு விடலானான்.

கரவொலி வெடிக்கக் கேட்பானேன்?

வீரமணி அமைதியடைந்தான்; நன்றியறிவு துலங்க, ஞானசீலனைப் பார்த்தான். 'பரவாயில்லை! —சமூக நீதிக்குப் பிழைக்கத் தெரிஞ்சிட்டுது! பாவி செங்கமலமே சதம்னு மனப்பால் குடிச்சுத் தடம் புரண்டு திரிகிற என் அம்மான் ராமையா தேவருக்கு நானும் இந்த ஊர்நாடும் பாடம் படிச்சுக் கொடுக்கிறதுக்கு உண்டான கெடு, கிட்டே நெருங்கிக்கிட்டே இருக்கிற துப்பை அவர் எப்படி அறிவார்? பாவம்!' நெடுமூச்சுப் புறப்பட, அவன் புறப்பட்டான். எதிர் நீச்சல் போடப் பழகியவனை எதிர் வெய்யில் என்ன செய்ய முடியும்?

ஆடிப் பட்டத்துக்குப் பட்டம் சூட்ட மண்ணும் மண்ணை நம்பின மக்களும், மக்களை நம்பிய மாடுகளும் சுதாரிப்போடும் சுள்ளாப்போடும் தயாராகச் செயற்பட்டுக் கொண்டிருந்த நேரம் அது.

தேசப் பாதுகாப்பிலே கடமையாற்றிப் பங்கு பற்றிய அனைத்துக் கட்சித் தொண்டர்களை நினைவூட்டும் வகையில் குப்பை வண்டிகள் சாலை நெடுகிலும் போய்க் கொண்டிருக்கின்றன!

வீரமணிக்கு வியப்பு மேலோங்கியது. வாய் பேசத் தெரிந்த மனிதர்களின் பசிப் பிணியைத் தீர்ப்பதில் வாய் பேசத் தெரியாத பிராணிகள் தேசீயக் கடனோடும் தார்மீகப் பண்போடும் மேற் கொண்டிருந்த அக்கறையை எண்ண எண்ண, படைப்பின் இயற்கைக்கு முன் விண்வெளி வெற்றி கள் எல்லாம் கூடத் துச்சமாகவே தோன்றத் தொடங்கின.

மண் சிரித்தது!

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் வேளாண் மைத் துறைக் கல்வி பயின்ற காலே, செய்முறைப் பயிற்சியின் நிமித்தம், திருவேட்களத்தின் தெய்விகப் பின்னணியிலே மயங்கி, இயற்கையின் தாலாட்டுஇசையிலே சொக்கி,தோளில் ஏர் குலுங்க நெஞ்சில் உரம் குலுங்க மெய் வருத்தம் பாராமல் உழைத்து, மண்ணைப் பொன்னுக்கிக் காட்டிய அந்த நாட்களை வீரமணி எங்ஙனம் மறப்பான்?

விடுமுறை ஓய்வுக்காக அவன் பிறந்த மண்ணை நாடி ஓடி வரும் போதெல்லாம், ஓய்வை மறந்து தன்னுடைய நிலம் நீச்சிலும், காடுகரையிலும், தோட்டம் துரவிலும் வேர்வையோடு படிப்பையும் துணைக்கொண்டு, நாளும் பொழுதும் கருமமே கண்ணுகிப் பாடுபட்ட அந்த நாட்களைத்தான் வீரமணியால் மறக்க முடியுமா?

கதை சொல்ல மண் இருக்கிறது.

கதை கேட்க வீடு இருக்கிறது.

வீட்டின் ஞாபகம் அவனுள் நிழலாடத் தொடங்கியதும், தந்தையின் ஞாபகம் அவனை ஆட்டிப் படைத்தது. வீட்டில் அப்பா ஆவலோடு காத்துக் கொண்டிருப்பார்; திட்டங்களை வரை யறுத்துச் செயற்படுத்த வேண்டும்!—நடந்தான். கையில் விரிந்த ஏடும் நடந்தது. 'உடன் பிறப்பே!' என்ற பாசத்தின் விளிப்புச் சொல் அவனை ஆனந்தக் கடலாடச் செய்தது. பாசம் ஆயிற்றே அது!

மடக்கத்தில், லேவாதேவி நல்ல தம்பிச் செட்டி யார் எதிர்ப்பட்டார். "தம்பி, உங்க அப்பா உங்களுக்காக மகமாயி கோயில் பஸ் நிறுத்தத்திலே கூட்டுவண்டியோடே காத்துக்கிட்டுஇருக்காகளே!" என்று வீரமணியிடம் விவரம் தெரிவித்தார்.

"சரிங்க, ஐயா!"

வீரமணிக்கு வியப்பும் அதிர்ச்சியும் உண்டா யின. 'தள்ளாத காலத்திலே அப்பா ஏன் வண்டியை ஓட்டிக்கிட்டு வந்திருக்காங்க? வண்டிக்கார நாச்சி எங்கிட்டுப் பறிஞ்சிட்டானும்? அது சரி; ஒற்ற பாம்பை மிதிக்கிற இந்த விடலைக்குப் பாதை புரிந்து, பாதை பார்த்து நடந்து வீடு வந்து சேரத் தெரி யாதா, என்ன?' உணர்வுகள் குறுகுறுத்தன நட்பின் அணியை நோக்கினான். "நீங்க அந்திக்கு எங்க வீட்டுப் பக்கம் வாங்க. நிறையப் பேச வேண்டி யிருக்குது," என்று கூறிவிட்டு விடைபெற்றான்.

நிழல் நீண்டது.

பாசம் பூவிலங்காக மணத்து அழுத்த, கால்களை எட்டிப் போட்டான் வீரமணி!

2. கொஞ்சும் சலங்கைகள் கெஞ்சும்

அந்தச் சலங்கை ஓசை வீரமணியின் இதயத்தில் அமுத கீதமாக இசைத்திருக்க வேண்டும். சாலையின் இருமருங்கிலும் ஆலமரங்கள் வெண்சாமரம் வீச, அடி வைத்து அடி விலக்கி நடந்து கொண்டேயிருந்தான் அவன். நெற்றி மேட்டில் கைவிரல்களை ஓட்டி, பார்வையில் அன்பைச் செலுத்தி, நினைவில் பாசத்தை ஊட்டி, நேர் வசமாக ஊடுருவிப் பார்த்தான். கோயிற் கலசத்தைத் தொடர்ந்து தென்பட்ட கூட்டு வண்டியைக் கண்டதும், அவனுக்கு ஆனந்தம் நிலை கொள்ளவில்லை. அக்கரைச் சீமையில் நாலு கணக்குக் 'கொண்டு வித்து'த் திரும்பியவன், தாய்மண்ணைக் கண்டவுடன் கும்மாளமும் கொண்டாட்டமுமாகத் தவிப்பான் அல்லவா? — அதே கணக்கில்தான், இப்பொழுது வீரமணியும் தவித்தான். இன்பத் தவிப்பு. மூன்றே மூன்று தினங்கள்தான் அவன் ஊரில் இல்லை. தஞ்சைக்குச் சென்றிருந்தான். அதற்குள் இப்படியொரு தாபமா, தாகமா? கூட்டு வண்டிக் காளையைக் கண்டானோ இல்லையோ, அவன் தன்னையறியாமலே ஒரு தரம் சிலிர்த்துக் கொண்டான். அவனுடைய மனிதத் தன்மையில் 'செவலை'க்காக அவன் ஒதுக்கியிருந்த இடம் அவனுக்கு மட்டுந்தான் தெரியும் என்பதில்லை.

ஒரு பொடியன் வழி நெடுகிலும் பட்டம் விட்டுக் கொண்டே ஓடினான்.

வீரமணிக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. ஒரு காலத்தில் இம்மாதிரி தானும் ஆடிப்பாடி மகிழ்ந்த கதையை நினைத்துக் கொண்டிருப்பான் அவன். ஆனால், திரும்பவும் அவன் நிகழ் காலத்திற்குத் திரும்ப நேர்ந்து விட்டதே?-பையன் விட்ட பட்டத்தின் காட்சி, அவன் வாங்கப் போகும் பட்டத்தின் காட்சிக்கு முன் அறிவிப்புக் கூறியிருக்கக்கூடும்.

அதோ, ஆதிமூலத்தேவர் வண்டியின் இருப்பிடத் தட்டிலே தலைவைத்து, ஒருக்களித்துச் சாய்ந்தவாறு காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார்!

பாசத்தின் நெகிழ்ச்சி துள்ள "அப்பா!" என்று கூவினான் வீரமணி.

செம்பாதிச் சொப்பனத்தில் விழித்துக் கொண்ட போக்கில், தலையை உலுக்கிச் சிலிப்பிய படி எழுந்தார் பெரியவர். நுகத்தடியைத் தாண்டித் தாவினார். "தம்பி!" என்று செல்லம் கொஞ்சக் கூப்பிட்டுக் கொண்டே, அருமை மகனை ஆர்வத்தோடு எதிர்கொண்டார் தேவர்; குழி பறித்துக் கிடந்த கண்களில் கனவுக் குமிழ்கள் தெறித்தன.

"அப்பா, நல்ல இருக்கீங்களா?" என்று நலன் விசாரித்தான் வீரமணி.

"பார்த்தால் தெரியலையா, வீரமணி? ஆத்தா மகமாயி புண்ணியத்திலேயும், உன் அன்பிலேயும் நல்லாத்தான் இருக்கேனுக்கும்," என்று யதில் உரைத்தார் ஆதிமூலம். மிஞ்சியிருந்த ஐந்தாறு பற்

களுக்கு ஊடாக மடை திறந்தது இளநகை. இள வட்டம் மாதிரி, வாட்ட சாட்டமாக முதுகை நிமிர்த்தி கருக்கரிவாள் மீசையை முறுக்கி விட்டார் பெருநிலக்கிழார்.

வீரமணியால் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை. முச்சந்திப் புழுதியில் நின்று கொண்டிருக்கும் நினைவே அப்பாவுக்கு மறந்துபோய் விட்டதோ? ஏகக் களிப்போடு இருக்கிறாரே? தேர்வின் வெற்றிச் செய்தி முன்பே அவருக்கு எட்டியிருக்குமோ?—காலைத் தட்டிக் கொடுத்த வாறே யோசனை பண்ணினான் அவன்.

முக்கியமான ஒன்றை ஒரு கணம் மறந்துவிட்டு, மறு கணம் அதை நினைவு கூர்ந்தவராகப் பதட்ட மடைந்தார் பெரியவர். பாசமும் நம்பிக்கையும் சூழ்ந்திட, மைந்தனை ஆழ்ந்து நோக்கினார். "வீர மணி, உன் பரீட்சையிலே எல்லாம் நீ கெலிச்சிட்டே தானே?" என்று பதறிய தொனியில் கேட்டார் அவர்.

"ஆமாங்க, அப்பா, ரொம்பவும் எடுப்பாகத் தேறியிருக்கேனுங்க!"

"சபாகுடா பாண்டியா!" என்று ஆனந்த கூத்தாடினார் ஆறுகரைத் தலைமைப்புள்ளி. அவிழ்ந்து கிடந்த குடுமியைக் கோதி முடித்துக் கொள்ளலானார் அவர். நரைமுடிகள் காலத்துக்குத் 'திரை' செலுத்தியிருக்கும்.

"நான் தேறின சங்கதி உங்களுக்கு முன்னடியே தெரியுமா, அப்பா?"

''தேறின தகவல் முன்னாடியே தெரியாது; ஆனா, நீ கட்டாயம் தேறிவிடுவாய் என்கிற துப்பு எனக்கு முன்னதாகவே புரிஞ்சிடுச்சு. நான் பெற்ற மகன் என்னோட நம்பிக்கையைக் கட்டிக் காக்கத் தவறிப்பிடுவானா, என்ன?''

அமைதி கனிந்திடப் புன்னகை செய்தான் வீரமணி; 'அப்பாவுக்கு என் பேரிலேதான் எவ்வளவு நம்பிக்கை!'-இவ்வாறு எண்ணிப் பெருமைப்பட்ட போது, இத்தகைய நினைவின் இன்பமும், இன்பத்தில் வழிந்த அமைதியுமே அவனுக்கு உயிராகவும் உயிர்ப்பாகவும் இயங்கிய அந்தரங்கத்தை அவன் உணராமல் இல்லை. வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டு, பட்டுத் துப்பட்டாவை உருமாலையாகக் கொய்து கழுத்தைச் சுற்றிப் போட்ட வண்ணம் தார்க்குச்சியும் கையுமாக மாட்டைப் பூட்டிக் கொண்டிருந்த தன் அன்புத் தந்தையைக் கண்டதும், வீரமணியும் புறப்படத் தயாரானான். குறுக்கு மறித்த ஒற்றையடிப் பாதையில் ஒதுங்கி நின்ற சீமைக் கொன்றைத் தூரடியை நாடி மீண்டான்; தோற்பையைக் கட்கத்திடையே இடுக்கிக் கொண்டான். மற்றச் சமாச்சாரங்களைப் பற்றியெல்லாம் வீட்டுக்கு போன கையோடுதான் அப்பாவுடன் ஆற அமரப் பேசியாக வேண்டும் என்றும் முடிவு கட்டினான் அவன்.

''வீரமணி!''

''அப்பா!''

''கிளம்பலாமா?''

''நல்லதுங்க!''

''நீ இன்னம் பசியாறலேயே?

''இல்லீங்க. நீங்க......?''

''ஊகூம்,'' என்று உதட்டைப் பிதுக்கிஞர் தேவர். ''வெள்ளென, கோழி கூப்பிட, வயல் காட்டுப் பக்கம் கிளம்பினப்ப ஒரு குவளை நீராகாரம் குடிச்சேன்; அம்புட்டுத் தான்!''

''உங்களுக்குப் பசியெடுத்தால், சந்தைப் பேட்டைக்குப் போய்க் காப்பி பலகாரம் சாப்பிட்டு விட்டு, அப்பாலே வீட்டுக்குப் புறப்படலாமுங்களே, அப்பா?''

அவர் பான்மையோடு முறுவல் பூத்தார்; சாண் வயிற்றைத் தடவிக் கொண்டார். ''என்னைக் கேட்கமால் எனக்குப் பசி கிளம்பாது, அது தவிர, நீ சொன்ன இனிப்புச் சேதியே என் வயிற்றை நிரப்பிடுச்சு. நீ வேணும்ஞ நாலு இட்லியைப் பிட்டுப் போட்டுக்கிட்டு ஓட்டமாய்த் திரும்பி தம்பி!'' என்று 'தாயினும் சாலப் பரிந்து' உரைத்தார்.

''வேண்டாங்க. ரெண்டு பேரும் வீட்டுக்குப் போய்ச் சுடச் சுடச் சாப்பிடுவோமுங்க!'' வீரமணியின் குரல் கம்மியது.

''அடி சக்கை! அதுதான் லாயக்கு!'' என்று ஆமோதிப்புக் கொடுத்தார் தேவர். ஒரே குதியாய்க் குதித்து, இருப்பிடத்தில் குந்திஞர். அவரது கைப்

பிடியில் மூக்கணாங்கயிறு லாகவமாகச் சுழலக் காத்திருந்தது. "தம்பி, மணி என்ன சொல்லுது?" என்று வினவினார்.

"மணி எட்டு நாற்பது!" என்று தெரியப்படுத்தினான் மைந்தன்.

"ஆத்தாடியோ!...சரி, சரி. பதனமாய் ஏறிக்கப்பா!"

"ஆகட்டுங்க, அப்பா!" என்று கூறிய வீரமணி, கால் மிதிப் பலகையில் கால் பாவிய தருணத்தில், நியாயம் ஒன்று தோன்றியது.

"அப்பா, இளவரசுப் பட்டம் கணக்கிலே என்னை வண்டியிலே குந்த வச்சிட்டு, வயசான நீங்க பண்ணையாளாட்டம் வண்டியை ஓட்டறதை யாராச்சும் கண்டால் இளக்காரம் பேசமாட்டாங்களா? ஆகச்சே, நீங்க வந்து வண்டியிலே உட்காருங்க. நான் வண்டியை விரட்டுறேனுங்க; அது தானுங்க முறை," என்று இங்கிதம் பேசினான்.

பெரியவர் அமர்க்களமாகச் சிரிக்கலானார். "தம்பி, பாசத்தோட மகத்துவத்தைப் புரிஞ்சுக்கிட திராணி இல்லாத புறம்போக்குப் பயல் எவனாவது எதையாவது புரளி பேசிக்கிட்டுப் போகட்டுமே?—அதைப்பத்தி நம்பளுக்கு என்ன கவலை? என் மட்டுக்கு, நீ மெய்யாலுமே இளவரசுப் பட்டம் தான்! ரொம்பக் காலமாய் இந்தக் கிழவாடிக்கு ஒரு ஆசை உண்டு. ஆனா, அது பேராசை இல்லே. நியாயமான ஆசை. அது என்ன தெரியுமா தம்பி? நீ உன்

ஞேட விவசாயப் பட்டப் படிப்பிலே பேர் சொல்லி, பேர் எடுக்கிற மாதிரி தேறினதும், உன்னை வண்டியிலே குந்தவச்சு, நானே வண்டியை ஒட்ட வேணும் என்கிறதுதான் அந்த ஆசையாக்கும்!...அதைத் தொட்டுத்தான், பண்ணைக்காரனைக்கூட அனுப்பல்லே!'' என்று உருக்கமாகப் பேசி முடித்தார் ஆதிமூலம்.

வீரமணி உருகிக் கரைந்தான்: ''ட்ரியோ...!''

ஆவணத்தாங் கோட்டைச் சாலையில் ஓடிக் கொண்டிருந்த கூட்டுவண்டி, கீழ்த்திசையில் பாதை குறித்து நின்ற 'பூவைமாநகர் வழி' என்னும் அறிவிப்புக் கல்லைத் தொட்டு நின்றது.

பாரதி திடலில் எல்லை சொல்லி, எல்லை காட்டி, கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

ஆதிமூலத்தேவர் அடிமடியிலே செருகி வைத்திருந்த மஞ்சள் கடுதாசிப் புகையிலைப் பொட்டணத்தை விசையோடு எடுத்துப் பிரித்து, ஒரு கொத்து அள்ளி வாயில் போட்டுக் கடைவாயில் அடக்கிக் கொண்டார். சுரத்து சுரந்திருக்கும். முகத்தில் அடித்த கதிர்வீச்சைச் சட்டைபண்ணுமல் சட்டையை இழுத்துவிட்டவராக, மூக்கணாங்கயிற்றைச் சுண்டி இழுத்தார். மேற்குத் திக்கில் 'மேலக்குடியிருப்பு'க்கு வழி காட்டிய வண்டித் தடத்தில் மடங்க எத்தனம் செய்து, செவலையைத் தட்டி, அதட்டி மடக்கினுர்.

அச்சமயத்திலே:

எதிர்ப் புறத்திலிருந்து சூறைக் காற்ருகப் பறந்து வந்தது ராமையாத் தேவரின் ரேக்ளா வண்டி.

ஆதிமூலத்தேவருக்குத் திகீரென்றது. 'முரண்டு' பிடித்து சண்டித்தனம் பண்ணின காளையைத் தென் வசத்தில் முறுக்கி இழுத்து, கால்வாயில் சறுக்கி விடாமல் தற்காத்துக் கொண்டார் பெரியவர். பிடி கயிற்றைத் தளர்த்தி நிதானமாக வசப்படுத்தி, நேர்த்தடத்தில் வண்டியை மேற்கே செலுத்திஞர். ஒரு வண்டி போகவும், மறுவண்டி வரவும் தோது கொண்ட தடத்தில், சுளுவாகவே வண்டியைச் செலுத்தி வர இயலும். ஆஞல் கண்களை மூடிக் கொண்டு பறந்து வருபவன் ராமையா ஆயிற்றே?— 'மச்சான் ராமையா என்ருல் சாமான்யமான மச்சாஞ? அடுத்துக் கெடுத்த அயோக்கியஞச்சே? தெய்வத்துக்குப் பயந்து, நேர்பாதையிலே அவன் தாராளமாகப் போகலாம்! அந்த நயவஞ்சகப் பாவி தடம் தவறி வந்தால், அப்புறம் அவனைச் சும்மாவா விடுவேன்? என்னமோ, ஒரு புரோநோட்டுக்குள் ளாற தான் லோகமே அடங்கி முடங்கிக் கிடக்கு தின்னு அவன் பகல் கஞ கண்டுக்கிட்டிருக்கான்! பாவம்!'... நினைவுகள் சூடுபிடிக்க, அவர் வெகு எச்ச ரிக்கையோடு வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தார்.

ஆஞல்......

பறந்து வந்த ரேக்ளாக்காளை, 'படா'ரென்று கூட்டுவண்டிக் காளை மீது முட்டி மோதிவிட்டது!

ஆதிமூலத் தேவருக்கு உடைமை கொண்ட 'செவலை'க்கு அவருடைய கோபத்தில் முக்கால் வாசியாகிலும் இல்லாமல் இருக்குமா? அது, ஈட்டிகளாகப் பளபளத்த கொம்புகளால் எதிரியின் 'வெள்ளை'யைத் தாக்கத் தொடங்கியது. உச்சாடனம் பெற்ற சாமியாடி மாதிரி தலையைச் சிலுசிலுத்துக் கொண்டே, வெள்ளையை ரோசம் பொங்க முட்டிக் கொண்டிருந்தது!

பெரியவருக்கு எக்காளம் பிடிபடவில்லை.

நியாயத்துக்கும் அநியாயத்துக்கும் இடையிலே, வாய் பேசாமல் நடந்த மௌனச் சண்டையிலே, நீதி உறங்காத கதையை அனுபவித்துக் கொண்டிருந்தான் வீரமணி—அதே ரோசத்தோடு! கன்னியாகுமரி மாவட்டத்தில் இனி அரிசி நியாய விலைக்குக் கிடைக்குமாம்! —முதல்வர் அறிவித்து விட்டார்! —நாள் இதழை மடித்தான் அவன், நிறைவோடு.

பாலைவனம் ஜமீன்தாருக்குச் சமபடியாக ஆரோகணித்து வீற்றிருந்த ராமையாத் தேவரின் நாடி வீழ்ந்தது. வெள்ளை தோற்று விட்டபோது, அவரால் மட்டும் எப்படி முகத்தை நிமிர்த்த முடியும்? முகத்தை நிமிர்த்தினால், வழிந்த அசடை யார் வழிப்பதாம்?

ஆதிமூலம் ஓங்காரமிட்டுச் சிரித்தார். "டேய் ராமையா! உனக்கு வம்பை விலைக்கு வாங்கத்தான் வக்கு இருக்கு. ஆனா, எனக்கு அன்பை விலைக்கு வாங்க மனசு இருக்காக்கும்! இப்ப என்னோட காளை

உன் மானத்தை வாங்கு வாங்குன்னு வாங்கிப்பிடுச்சுதே, கண்டியாடா?'' என்று கேட்டார். நையாண்டித்தனம் முழங்கியது.

வீரமணியின் உள்மனம் 'சபாஷ்' போட்டது. வெளிமனம் 'கடகட' வென்று நாணயங்கள் குலுங்கினாற் போலே நகைப்பைக் கக்கியது.

இறங்கிய முகத்தை—ராஜபார்ட் முகத்தை ஏற்றி விட்டார் ராமையா. ''ஐயாவே மச்சான்காரரே! கூடிய சீக்கிரத்திலேயே, நம்ப ஊர் முச்சந்தியிலேயிருந்து உம்மோட மானம், மரியாதை அத்தனையுமே ரசூலா கப்பலிலே ஏறப்போற சங்கதியை உம்மோட லேஞ்சிலே முடிச்சுப் போட்டு வச்சுக்கிட மறந்திடாதீங்க!'' என்று 'சிவப்பு விளக்கு'க் காட்டினார். மறு இமைப்பில் அவருடைய வெள்ளைக் காளை சவுக்கடி தாளாமல் ஓட ஆரம்பித்தது.

பெரியவர் சிலையானார்.

வீரமணியின் பெருமூச்சு அவனுக்குத்தான் வெளிச்சம். இருட்டைக் கீறிக் காட்டும் மின்னல் கீற்று அவனுடைய நெஞ்சின் அடிவாரத்தில் பளிச்சிட்டது. அவன் தலையை உயர்த்தினான். ''அப்பா, கேணி வாயினாலே இடிபடும். இதுதான் இந்நாளைய உலக நடப்பு. அம்மான்காரர் நடந்து காண்பிக்கிற நடப்பும் இதுதான்! சத்தியமும் தர்மமும், அன்பும் நியாயமும் நம்பளுக்கு நம்மோட மனச்சாட்சியாய்க் காவல் காக்கையிலே, நாம எந்தப் பூச்சாண்டிக்கும்

எப்பவும் பயப்பட வேண்டிய தேவையே கிடையா துங்க!...மாட்டைத் தட்டுங்க, நாம வீட்டுக்குப் போகலாம்!'' என்று சன்னமான குரலெடுத்துக் கெஞ்சினுன் அவன்.

இருதயத் தொகுதியை அழுத்தியவாறு, தலை நிமிர்ந்த முதியவரின் சோகம் மிகுந்த விழிகள் ஏனோ கலங்கித் தடுமாறின!

சலங்கைகள் கொஞ்சின; கெஞ்சின!

ஒற்றை வேப்பமரம்.

அது, ஆதிமூலத்தேவரின் முப்பாட்டன் சொத்து.

திட்டிவாசல் நிழலில் கூண்டு வண்டி நின்றது.

முதலில் இறங்கியவன் வீரமணிதான்!-தன்னைக் கையேந்தி அன்பேந்தி வரவேற்று,வண்ணம்காட்டி-வண்ணம் கூட்டிப் பளிச்சிட்டு விளங்கிய மச்சு வீட்டைப் பாசத்தின் ஏக்கத்தோடும் அன்பின் தவிப்போடும் ஏறிட்டு நோக்கினுன் அவன். நெஞ்சின் அலைகள் சங்கம் முழக்கின. வேதனையும் வெய்துயிர்ப்பும் மேலிட்டன. திரும்பிப் பார்த்தான்.

வேப்பங்காற்று தாலாட்டுப் பாடும்.

வீரமணின் அழகான விழிகள் அழகாகச் சொக்கின.

சீமை முருங்கைப் போத்து, வெண்ணிறப் பூக்கள் சிணுங்கச் செழித்துத் தழைத்து வளர்ந்திருக்கிறது.

ஆடுதுறை வாழைகளுக்கு ஈரம் மிகுதிதான்.

அதோ, பூக்களின் தோட்டம்!-சாதி மல்லியும், வெள்ளை ரோஜாவும், சூரியகாந்தியும், துலுக்கச் சாமந்தியும் புன்னகைப் பூ தூவிச் சிலிர்த்துச் சிரித்துக் கொண்டிருக்கின்றன! மலர்களை அணைந்த கதிர்கள் நாணம் பூத்தன. கதிர்களை அணைத்த மலர்கள் மணம் பூத்தன.

அற்புதம்!—'காட்டுத் தீப் பூக்கள்' காலையிலேயே அந்திச் செவ்வானத்தைச் சித்திரமாக்கி விட்டனவே!

மண்வளம் ஆராய்ந்து இந்தப் பூங்காவை அவன் இங்கே உருவாக்கிய தருணத்திலே 'பதியன்' இனங்களையும் விதை ரகங்களையும் அண்ணமலை நகரிலிருந்து கொண்டு வரப்பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல. காலம் என்னும் மணல் வெளியில் பதிந்திட்ட அடிச்சுவடுகளா இந்தப் பூஞ்செடிகள்! அல்லது, பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவும் என்பதற்கு அமைந்திட்ட உயிர்ச் சாட்சிகளா?...ஆகா!... 'மேரி கோல்ட்' மலர்கள் எவ்வளவு ரம்மியமாகப் பொன்னொளி சிந்திக் கண் சிமிட்டுகின்றன!

தென் கோடியினின்றும் மறுகிறான் அவன். தாய்ப்பசு தன்கன்றைப் பாசம் சொட்ட நக்கிக் கொண்டிருந்த காட்சியைக் கண்டவுடன், அவனது

பாசநெஞ்சம் உயிர்க்கழுவில் துடித்தது. 'ஆத்தா!' என்று செருமினான். பசுவையும் கன்றையும் பரிவுடன் தடவிக் கொடுத்துவிட்டு மடங்கினான் தனயன்.

நடையன்கள் பின்தங்கின.

செவலையை வைக்கோல் பரண் அடியில் கட்டிப் போட்டுத் தீவனம் போட்டுத் திரும்பினார் பெரியவர். "வாப்பா, போகலாம்," என்று மகனைக் கூப்பிட்டார். தலைவாசல் நிலைப்படியைக்கடந்து தயங்கித் தயங்கி இரண்டாம் கட்டை அடைந்தார். கிழக்குப் பக்கத்துச் சுவரைத் தவிப்புடன் ஏற இறங்கப் பார்த்தார். பிறகு, "தம்பி, உன்னைப் பெற்ற புண்ணியவதி உன்னை ஆசீர்வதிக்க உள்ளார காத்துத் தவம் கிடக்கிறு; போய்க் கும்பிடப்பா," என்று தாழ்வான குரலில் கூறினார்.

வீரமணி கூடத்தில் வந்து நின்றான். மேனி அல்லாடித் தள்ளாடியது. அன்னையின் படத்தைத் துடிப்புடன் நோக்கினான். பெற்ற ஆத்தாளுக்குக் கும்பிடு கொடுத்தான். கண்களில் பாசம் வழிந்தது; நெஞ்சில் உதிரம் வழிந்தது. அன்னை இட்ட தீ அடிவயிற்றில் எரிகிறது. அணையாத பாசத்தீ!—அவனை—தவமிருந்து பெற்ற குலக்கொழுந்தை வாழ்த்தவும் வாழவைக்கவும் கடமை கொண்ட பாசத்தின் தீ! — விசும்பல் கேட்டது. திரும்பிப் பார்த்தான். அவன் எதிர்பார்த்த நடப்புத்தான்! "அப்பா!" என்று விம்மினான். அவருடைய கண்ணீரைத் துடைத்து விட்டான். சத்து மிக்க கரங்கள் சத்திழந்து நடுங்கின. தேவர் மூக்கைச்

சிந்தினுர். அன்புப் புதல்வனை ஆதரவுடன் நெருங்கி, அவனுடைய கண்ணீரைத் துடைத்தார். "வீரமணி, சீதேவி உன் ஆத்தா ரூபத்திலே நம்ப வீட்டுக்கு தேடிவந்தா. மகராசி வள்ளியம்மை மஞ்சளும் மருக்கொழுந்துமாய் இருந்த வீட்டிலே பணமும் காசும் பொன்னும் மணியும் குமிஞ்சிக் கிடந்திச்சு. நம்மோட கண்டுமுதல் களத்திலே பொன்னி நெல் அம்பாரம் அம்பாரமாய்க் குமிஞ்சி கிடக்குமே அந்தக் கதையே தான்! மகாலட்சுமி பூவும் பொட்டு மாய்ப் போனுள்; எல்லாமே போயிடுச்சே! ஐயை யோ, தெய்வமே!" —தொடர்ந்த பேச்சைத் தொடர வாய்க்காமல், தொண்டை அடைத்தது. மூச்சும் அடைத்தது. நிலை குலைந்து திக்கு முக்காடினுர்!

வீரமணி தண்ணீர் கொடுத்தான்.

காசி, தடவிக் கொடுத்தார்.

திண்ணைக் கடிகாரம் பத்து என்று அறிவிப்புக் கொடுத்தது.

பெரியவர் தப்பினுர்.

"தம்பி, அப்பாவைக் கூட்டிக்கினு வாங்க. தோசை ஆறிடப் போகுது. உங்களுக்குப் பிடிச்ச பச்சைக் கொத்தமல்லித் துவையல் அரைச்சிருக் கேன். பொறிச்ச விளைமீன் குழம்பும் உங்களுக்காக எடுத்து வச்சிருக்கேன். நான் போய் முட்டைத் தோசைக்கு மாவு ஊத்துறேன்," என்று சொல்லிக் கிளம்பினுர் காசி. 'சமையல் காசி' அவர்.

பச்சைக் கொத்தமல்லி மணக்கிறது!

வீரமணி செய்வகை புரியாமல் மலைத்தான். தன் ருசி உணர்ந்து பச்சைக் கொத்தமல்லித் துவையல் தயாரித்து வைத்திருப்பதாக விளம்பிய காசியின் அன்பு அவனை அம்மான் மகள் அன்னக்கொடியிடம் இட்டுச் சென்றிருக்குமோ?—உண்மைதான். இந்தப் பச்சைக் கொத்தமல்லித் துவையலை முதன் முதலில் பழக்கப் படுத்தி வைத்தவளே அன்னக் கொடிதான்! துவையலும் கையுமாக துவளும் மேரலும் துவளாத அன்புமாகத் தரிசனம் கொடுத்து, இனம் புரிந்த நேசத்தையும் இனம் புரியாத பாசத்தையும் காட்டி, 'அத்தான், அத்தான்!' என்று சுற்றிப் படரும் கொடியாகச் சுற்றிச் சுற்றி வந்து, தானும் சுற்றி, தன்னையும் சுற்றிக் கொண்டு ஆடிப் பாடித் திரிந்த அம்மான் மகள் அன்னக்கொடியை அவன் நினைத்து மகிழாத வேளை உண்டா? ஏங்கித் தவிக்காத தருணம்தான் உண்டா?

காலத்தின் செப்பிடு வித்தைக்கு ஈடில்லை; எடுப்பில்லை.

நடந்த மகமாயி தேரோட்டத் திருநாளன்றைக்கு "அயித்தை மகனே!...அத்தான்காரரே!" என்று கொஞ்சிக் கொஞ்சி ஓடோடி வந்தாள் அன்னம். ஆடவந்த பொற்பாவையாக ஆடிவந்தாள். சொக்கட்டான் சேலையின் முந்தானையில் முடிந்து வைத்திருந்த கொத்தமல்லித்தழைத் துவையலை வளைகுலுங்கச் சமர்ப்பித்தாள்; மருதாணி நகங்களில் சிந்தூரம் படர்ந்தது.

முறைமைப் பெண்ணை முறைத்துப் பார்த்து, அவளை-அவளுடைய துல்லியமான பட்டிக்காட்டு அழகைப் பகுதி பகுதியாகவும் தொகுதிதொகுதியாகவும் அனுபவித்து ரசித்துக் கொண்டிருந்த வீரமணி, அந்தத் துகையலைப் பிரித்து, அதில் துளி எடுத்து நுனி நாக்கில் இட்டுச் சுவைத்தான். 'நப்பு'க் கொட்டிச் சுவைத்தான். பிறகு அவளைக் குறும்பு அரும்ப ஓரப் பார்வையிட்டு அளந்தான். "அது சரிபுள்ளே! திருநாளும் அதுவுமாக, இருந்திருந்து உறைச்சுப் பிடுங்கிற இந்தத் துவையலைத் தானா உன் ஆசை மச்சானுக்கு நீ கொண்டாந்து தரவேணும்? உன் அப்பன்காரருக்கு இந்த உளவு தெரிஞ்சா உன்னைச் சும்மா விடுவாரா, அன்னம்?" என்று வேதனையும் கவலையும் மூள வினவினான் அவன்.

அன்னக்கொடி புனிதம் தழைக்கத் தன் அத்தை மகனைப் பார்த்தாள். எதையும் சாடவல்ல வல்லமையைத் தூவி விட்டாள். சாதிமல்லிப்பூ மடல் மடலாக அவிழ்ந்து மணம் அரும்புமே, அவ்வாறு நகை ஏந்தி நகை சிந்தினாள்.

"முறை மச்சானுக்குத் துவையல் கொண்டாந்து தந்ததுக்காக அப்பன்காரர் என்னைச் சும்மா விடாமல் இருந்தால், என்னைத் தலைமேலே சுமந்து வச்சுகிடட்டுமே! உங்களுக்கு ஆத்தா மூத்தவளோட துயவினாலே, ஆயுசு மட்டும் கெட்டியாய் எழுதிப் போட்டிருக்கட்டும்!—என் கையினாலே உங்களுக்கு நித்த நித்தம் இந்த மாதிரித் துகையல் அரைச்சுச் சோறு ஆக்கிப் போடுகிறேனா இல்லையா, பாருங்

களேன்!...இந்தத் துகையல் சாமான்யமில்லேங்க. இது உங்க நெஞ்சுக் குருத்திலே நேர்முகமாய் முளேப் போட பாய்ஞ்சு உறைக்குமாக்கும்! அப்பத்தான் உங்க நினைவிலே உங்க அன்னம் சுள்ளாப்போடே சதா உறைச்சுக்கிட்டே இருப்பாளாக்கும்! அத்தான், நான் அடிக்கொரு வாட்டி செப்புற தொப்ப, நான் வீட்டிலே நல்ல விளக்கு கொளுத்தி வச்சு, உங்களுக்கு நான் முந்தானே தருகிற அண்ணேக்குத்தான் உங்களேப் பெத்த புண்ணியவதியோட ஆத்மாவும் என்னே பெத்த மகராசியோட ஆத்மாவும், மெய்யாலுமே அமைதியடைய ஏலுமுங்க! ஆமாங்க; இது சத்தியமுங்க; அது மட்டுமில்லே! இதுதான் தருமமும் கூட!''

உணர்வுகள் சுகந்தம் பரப்பிச் சுழிக்கப் பேசினுள் சிங்கப்பூர்த் தேவர் ராமையாவின் செல்லப் பூங்கொடி அன்னக்கொடி!

வெளவால்கள் 'சடு குடு' ஆடின. வீரமணி மண்ணே உணர்ந்தான். பாசத்தை உணர்ந்தான். ''அப்பாவுக்கு நெஞ்சு உடைஞ்சதாலே தான் நெஞ்சடைப்பு அடிக்கடி வந்து தொலேக்குது. போன கிழமை தஞ்சாவூர்லே நீதிமன்றத் தீர்ப்பை அறிஞ்சிக்கிட்டதும் மூச்சடைச்சு அவதிப்பட்டாங்க அப்பா. நாளே ஓட்டாமல் அவங்களே தஞ்சாவூருக்கு இட்டுக்கிட்டுப்போய் பெரிய வைத்தியமாய்ச் செஞ்சால் தான் அப்பா பிழைப்பாங்க! நானும் பிழைப்பேன்! 'கண்கள் கசிந்தன. என்னவோ அரவம்

கேட்டது. அரவம் கண்ட பாங்கில் நடுங்கிஞன் 'அப்பா!' என்று வீரிட்டான்.

அங்கே:

பெரிய பண்ணை ஆதிமூலத் தேவர் அடி பெயர்ந்த ஆலமரமாகச் சாய்ந்து கிடந்தார்!

3. முட்டைத் தோசை—ஒரு சிக்கல்

வெண்ணெய் உருகிஞல், கமழ்கின்ற நெய் கிடைக்கும்.

மனம் உருகிஞல், வெடிக்கின்ற நெடுமூச்சும் சுரக்கின்ற நீள் கண்ணீரும்தான் கிடைக்குமோ?

நழுவிக் கழிந்த இந்த ஒரு நாழிப் பொழுதிற் குள்ளாக, முதியவர் ஆதிமூலத் தேவர் மட்டுமல்லா மல், அவரது தவப் புதல்வன் வீரமணியும் எப்படிப் பட்ட பயங்கரச் சோதிப்புக்கு ஆளாகி விட்டனர்!

அப்படியென்ருல், சோதிப்பு ஒன்றுதான் வாழ்க்கையின் ஐந்தொகைக் கணக்கிற்குக் கிடைக் கக்கூடிய ஆதாயமா? வாழ்க்கை ஒரு விளையாட்டு என்பதெல்லாம் பொய்தாஞ? கனவுதாஞ? பழங் கதையேதாஞ?

சிந்தனையைத் துண்டுதறித்து ஏறிட்டு விழித் தான் வீரமணி. மறுபிறவி எடுத்தவனைப் போன்று அவன் உள்ளம் புத்துயிர் பெற்ற உணர்வுகளைச் சந்திக்க முயன்றது. மலை போல வந்த ஆபத்து, பனி

போல விலகக் கருவியாக இருந்த அந்த விந்தைச் சக்தியை அவன் மனப்பூர்வமாகத் தொழுதான்; போற்றினன்.

ஏறுமுகக் கதிரவன் நிலா முற்றத்தில் காய்ந்து கொண்டிருக்கிறன்.

விதைப்புக்கான நிலக்கடலை அரிசிகள் வெய்யிலில் காய்ந்து கொண்டிருக்கின்றன.

செத்துப் பிழைத்த தேவர் இப்போதுதான் புரண்டு படுத்தார். பட்டு மெத்தை கருவேல முள்ளாகக் குத்தியது போலும்! கலவரமும் கலக்கமும் சுழிக்க, மல்லாந்து படுக்கலானர். பாதாளக் கேணியில் தத்தளித்துக் கொண்டிருக்கும் தண்ணீராக அவருடைய கண்ணீர் தென்பட்டது.

வீரமணிக்குத் திகீரென்றது. ''அப்பா!'' என்று விளித்தான். பாசம் நெஞ்சை அடைக்கிற மாதிரி இருந்தது, அவனுக்கு. இதே பாசம்தான் அப்பாவின் நெஞ்சையும் அடைத்துவிட்டிருக்குமோ? அலங்கோலமாகக் கிடந்த தந்தையைக் கண் கொண்டு பார்க்கவே அவனுக்குப் பயமாக இருந்தது; வாய் விட்டு 'ஓ' வென்று ஒரு பாட்டம் அழுது தீர்த்தால் கூடத் தேவலாம் போலிருந்தது. கதறிப் புலம்பிக் கண்ணீரைக் கரை சேர்த்து விட்டால் மாத்திரம், மனச்சுமை கரை சேர்ந்து விடுமா, என்ன? ஊகூம்: ஒருகாலும் இல்லை!...'அப்படியென்றல், அந்தச் சுமைகளையெல்லாம் எந்தச் சுமைதாங்கியில் எப்போது எப்படி இறக்கி வைப்ப

தாம்? கண்ணுக்குத் தெரியாத ஆண்டவன் கண்ணுக்குத் தெரிந்த நல்ல மனிதர்களுக்காக இரங்கி வந்து—இறங்கி வந்து—சுமை தாங்கியாக வும் இருப்பானுமே!'—இக் கூற்று மெய்தானே? அவனது உணர்வுகள் சிலிர்த்தன; சுழித்தன. "ஆத்தா!''—இதயத்தின் இதயம் ஓலமிட்டது. ஆத்தாள் வள்ளியம்மை மட்டுமல்லாமல், ஆத்தாள் மகமாயியும் நிழலாடினர். அவன் முகத்தைத் துடைத்துக் கொண்டு, பெரியவரை உற்றுப் பார்த்தான்.

ஆதிமூலத் தேவர் இருந்திருந்தாற் போன்று செருமத் தொடங்கினார்.

வீரமணி தடுமாறினான்.

தலைமாட்டில் அமர்ந்து வீசிக் கொண்டிருந்த காசி நகர்ந்தார்.

"அப்பா, பச்சைப் பாலகனுட்டம் ஏன் இப்படிச் செருமிறீங்க? செருமாதீங்க அப்பா, செருமாதீங்க!...என் நெஞ்சு பொறுக்காதுங்க; பொறுக்கவே பொறுக்காதுங்க!'' என்று வேண்டினான் தேவர் மைந்தன். கைப்பிடித் துணியை எடுத்து, அப்பாவின் முகத்தைத் துப்புரவு செய்ய எண்ணித் தாழ்வாரச் சுவரை உராய்ந்தபடி இடுப்பை நகர்த்தியபோது, சுவரின் காரை, நிலை பெயர்ந்து சிதறக் கண்டதும், அவன் அப்பால் நகரலானான். நனைந்த துணியை வீசிவிட்டு எழுந்தான்.

தேவர் படுத்துக் கிடந்த மெத்தையை இழுத்து நறுவிசான இடத்துக்கு மாற்றினார் பண்ணை யாட்கள்.

குதிர் குதிராகக் 'கோட்டை' கட்டி வைக்கப் பட்டிருந்த 'விதை நெல்' காய்ந்தாக வேண்டும்—நாளை!

"அப்பா, ஒரு தோசையாச்சும் கிள்ளிப் போட்டுக்கிடுங்க. மல்லித் துவையல் வாய்க்கு உணக்கையாய் இருக்கும். தோசை தின்னிட்டு, துளி காப்பித் தண்ணியை ஊத்திக்குங்க. அப்பத்தான் குடல் காயாமல் இருக்கும்," என்றான் வீரமணி.

செல்வக் குமரனை ஏற இறங்க ஒரு பயணம் பார்த்தபின், விரக்தி ஊடாட, இதழ்களை விலக்கினார் பெரிய பண்ணை. "என் நெஞ்சு காயுது; அப்பாலே குடல் காய்ஞ்சா மோசமாக்கும்? நீ சின்னஞ் சிறுசு. நீ தான் வயிற்றுக்கு வஞ்சனை பண்ணப்படாதப்பா! உன்னைப் பெற்றவளா இருக்கா, உனக்கு ஆக வேண்டியதைக் கவனிச்சுச் செய்ய?..." என்று நெடுமூச்செறிந்தார்.

காசி குறுக்குச் சாலிட்டுப் பாய்ந்து "அப்படிச் சொல்லப்படாதுங்க, பெரியவுகளே! எங்க சின்ன ஐயாவைக் கவனிச்சுப் பணிவிடை செய்ய சீதேவி வரமட்டுக்கும், நான் கண்ணிலே விளக்கெண்ணெய் ஊற்றிக்கிட்டு எங்க வீரமணித் தம்பியைப் பார்த்துக்கிட மாட்டேனுங்களா? இந்த நாள் பரியந்தம் பார்த்துக்கிட்டு வரலேங்களா?" என்று கிலேசம் பிசிறு தட்டக் குறிப்பிட்டார்.

தேவர் நன்றியோடு காசியை நோக்கினார். 'நீ கூறுவது மெத்தச் சரி' என்கிற பாவனையில் கையை அமர்த்திச் சமிக்ஞை செய்தார்.

மணி: பதினொன்று முப்பது.

வீரமணிக்கு இருப்புக் கொள்ளவில்லை. தகப்பனாரின் முதுகைப் பத்திரமாகப் பற்றிப் பிடித்துத் தாங்கிக் கொண்டே, ''எழுந்திருச்சு உட்கார்ந்துக்கங்கப்பா. நீங்க பசியாறினால்தானே என் பசி ஆறுமுங்க?'' என்று மடக்கினான்.

அன்பெனும் பிடியில் அவர் அகப்பட்டிருக்க வேண்டும். மறுபடி சுடு நீர் மடை திறந்தது. சூம்பிய கன்னங்களில் வழிந்தது. மயிர்க் கால்கள் காளான்களாகக் குத்திட்டு நின்றன.

தொடுத்த விழி எடுக்காமல், பெற்றவரையே பார்த்துக்கொண்டிருந்தான் வீரமணி. 'அப்பா ஏன் இவ்வாறு எப்போதும் கண் கலங்குகிறார்? கையோடு கூட்டி வந்த சீதேவியைக் கையுடனேயே கூட்டிச் சென்று விட்ட விதியின் நாயகியை நினைத்தா? அல்லது, சூதுமதி விதியாகி, தெய்வத்திற்கும் கூடப் பயப்படாத வகையிலே, தங்கள் குடும்ப கவுரவத்தை அறையினின்றும் அம்பலத்திற்குக் கொண்டு வரக் கங்கணம் கட்டித் திரியும் அம்மான் ராமையத் தேவரின் பேய்க் குணத்தை எண்ணியா? அப்பாவின் அவல நிலைக்கு என்ன காரணம்? யார் காரணம்?

எதிர்க் குடிசைக்குச் சொந்தமான கோழிக்கு இப்பொழுதுதான் பொழுது விடிந்தது போலும்!

அது வெகு சுதந்திரத்தோடு கூவியது. அது துயில் கலையும் நேரம் பார்த்துப் பொழுது விடியும் நாட்டிலே அவதரிக்க வேண்டியதோ, என்னவோ?

எச்சில் துப்பிக் காயும் நேரம் வரை, பெரியவர் சூன்யத்தைச் சூறையாடினார். பிறகு ஏதோவொரு வைராக்கியம் கொண்டவராக எழுந்தமர்ந்தார். "தம்பி, விளைப் புரிஞ்சதுக்குப்புறம், மகன் பேச்சை அப்பன் சரின்னு தெரிஞ்சுக்கிட்டுத் தட்டி நடக்கிறது ஞாயம் இல்லே. நாம ரெண்டுபேரும் இங்கிட்டாலே குந்திகிட்டே தோசை தின்னப் போறோம்," என்று வாஞ்சை துலங்கத் தெரிவித்தார்.

நல்ல மூச்சோடு காசி அகன்றார்.

தஞ்சாவூரில் வாங்கி வந்து வெட்டி வைத்திருந்த ஆப்பிள் துண்டங்களிலே ஒன்றை எடுத்து நீட்டினான் வீரமணி. மணி பன்னிரண்டு அடித்ததும், குழாய் மாத்திரைகளைக் கொடுக்க வேண்டும்!

கடன் பட்ட நெஞ்சின் தத்தளிப்புடன் மகனிடமிருந்து பழத் துண்டைக் கையேந்தினார் தேவர். "மகனே, இந்தா; இதிலே கொஞ்சம் நீ கடிச்சுக்க," என்று நீட்டினார்.

பிள்ளையின் அன்பைத் தந்தை தட்ட முடியாதபோது, தந்தையின் பாசத்தைத் தனயன் மட்டும் தட்ட முடியுமா?

கடன் பட்ட அதே தவிப்போடு, அப்பா நீட்டிய பழத்துண்டில் ஒரு பகுதியைக் கடித்துக் கொள்ள வேண்டியவன் ஆனான் அவன். இப்போது அவன்

விதுரனை கற்ற விடலை. ஆனால், விவரம் விளங்கா திருந்த பிஞ்சுப் பருவத்திலே இதே போலத்தான் அப்பா தின்பண்டங்களை நீட்டுவார்; மகன் கடித் துக் கொள்வான். மிகுந்த எச்சிலை மிகுந்த பாசத் துடன் சுவைப்பார் தேவர். வாய் கொள்ளாமலும் மனம் கொள்ளாமலும் அன்னை சிரிப்பாள். சிரிப் புக்கும் பாகம் கிட்டும். பாசம் கூட கடன் வகையின் பாற்பட்டதுதானே? அந்தக் கடனுக்கும் சட்டப் பிரகாரம் வட்டி வாசி எல்லாம் செல்லுமோ?

எச்சிற்பழம் இனித்தது; இனிமையாக இனித் தது.

"வீரமணி, நீ தின்னப்பா!"

"ஊகூம்; நீங்க சாப்பிடுங்க!"

"இல்லே. நீதான் சாப்பிடணும்!"

"மாட்டேன். நீங்க என்னைப் பெற்ற அப்பா. நீங்கதான் முதலிலே சாப்பிடவேணும். அதுதான் மரியாதை."

"அதுதான் முடியாதாக்கும். எனக்குப் பிறந்த மகன் நீ! ஆனபடியினாலே, நீதான் முதலிலே ருசி பார்க்கவேணும். இதுதான் சுற்று வட்டாரத்திலே வளமை," என்று வீம்பு பிடித்தார் பெரியவர்.

பலே!...

வீரமணிக்கு ஆனந்தம் பீரிட்டது. நல்ல வேளை யாக, காசி இன்னொரு தோசையைக் கொண்டு வரவே, அதைத் தட்டோடு வாங்கினான் அவன்.

அப்பாவின் முன்னே அந்த எவர்சில்வர் தட்டை அனுசரணையுடன் நகர்த்தி விட்டு, அப்பாவின் நிழலில் இருந்த தட்டைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டான்.

"ஓகோ! காதும் காதும் வச்சாப்பிலே ஒரு பாகப் பிரிவினையை ரொம்பவும் கச்சிதமாகவும் கெட்டியாகவும் நடத்திக் காட்டிட்டியே, வீரமணி?" என்று பாராட்டினார் பெரியவர்.

"தோசை விசயத்தைப் பற்றித்தானுங்களே சொல்லுறீங்க, அப்பா?"

"பின்னே?" என்று பற்களைப் பிரித்தார் அவர்.

ஆமாம்; பாசத்துக்கோ—அல்லது, அன்புக்கோ பிரிவினை ஏது?

'கொஞ்ச நாழிகைக்கு முன்னே அப்பாவுக்கு நெஞ்சடைப்பு வந்து, பூவை மாநகர் அரசினர் மருத்துவ மனையிலிருந்து உடனடியாக டாக்டரை வரவழைத்துச் சிகிச்சை அளித்திருக்கா விட்டால், அப்பா இருக்கும் இவ்விடத்திலே இந்நேரம் பூண்டு முளைத்திருக்காதா? அப்பாவோட உயிருக்கு ஏடா கூடமாக ஏதானும் அசம்பாவிதம் நடந்திருந்தால், அப்பாலே என் கதி என்னவது? இந்தக் குடும்பத்தின் நிலை என்னாகும்?"—சிந்திக்கவே அவனுக்கு அச்சமாக இருந்தது.

"என்னப்பா! மருள் கொண்டு போய், கதி கலங்கி குந்திக்கிட்டிருக்கே? நான்தான் எமலோகத்தை எட்டிப் பார்த்துப் பாச்சா காட்டிப்புட்டு, கடலே கதின்னு ஓடியாந்து உன் காலடியிலே விழுந்

திட்டேனே? அப்புறம் உனக்கென்ன கவலையாம்? எதையும் தாங்குற இதயம் வேணும்னு அடிக்கொரு தரம் நீ சொல்லமாட்டியா? சரி, சரி. ஒரே ஞாபகமாய்த் தோசையைத் தின்னப்பா, தம்பி!''

''ஆகட்டுங்க!''

தோசையைக் கிள்ளி வாயில் போட்டுக்கொண்டார் தேவர். என்னவோ விகடத்தை நினைத்துக் கொண்ட நிலையில், தமக்குத் தாமே சுமுகமாகச் சிரித்துக் கொண்டார் அவர். பிறகு, மகனை விளித்தார். ''ஒரு சங்கதியை மறந்திட்டியே?'' என்று விடுகதை போட்டார்.

தஞ்சாவூர் விவகாரம் பற்றிய விவரம் கேட்கிறாரா அப்பா? ''எந்தச் சங்கதிங்க?'' என்று கேள்விக்கு எதிர்க் கேள்வி போட்டான்.

''நீ உன் ஆத்தா வள்ளியம்மை பெற்ற மகன்!''

''ஆமாங்கப்பா; அட்டி ஏது?''

''நாம ரெண்டு பேரும் கொஞ்ச முந்தி தோசை சாப்பிடுறதுக்காகப் போட்டுக்கிட்ட அன்புச் சண்டையிலே, 'நீங்க பெற்ற மகன் நான்' அப்படின்னு என்கிட்டே ஒரு பேச்சுச் சொன்னே. அதுக்கோசரம்தான் ஞாபகப்படுத்தினேன்,'' என்று சிரிப்பை அடக்கிக் கொண்டு பேசினார்.

அவனுக்கும் சிரிப்பைக் கட்டுப்படுத்தக்கூட முடியவில்லை. ''எல்லாம் நீங்க சொல்லிக்கொடுத்த பாடம் தானுங்க. காலையிலே கோயிலடியிலே நான்

நல்ல விதமாய்த் தேறின தகவலைப் பற்றிச் சொல்லிக்கிட்டு இருக்கையிலே, 'நான் பெற்ற மகன் என் நம்பிக்கையைக் காப்பாற்றத் தவறிப்புடுவானா?' அப்படின்னு சொன்னீங்களே, அந்தச் சங்கதியை நீங்கதான் மறந்திட்டீங்க போலே!'' என்று ஒரு போடு போட்டான் வீரமணி. மீன் பொரியல் மூக்கைத் துளைத்தது.

''ஓகோ! அப்படியா கதையைத் திருப்பிட்டே? போடு சக்கை!'' என்று கூறி, அதிர் வேட்டுச் சிரிப்பொலியை வெளிப்படுத்தினார் தேவர். ''சரி, சரி. பசி எடுத்தாச்சு; சாப்பிடலாம்,'' என்று உத்தரவு கொடுத்தார். பிறகு, குழந்தைத் தனமான குதூகலத்தோடு தட்டுத் தோசைகளைக் கிள்ளிக் கிள்ளித் தின்ன ஆரம்பித்தார் ஆதிமூலம்.

மண் வாழ்க்கை என்றால், சிரிப்பும் கண்ணீரும் மாறி மாறி இடம் பெறுவது இயல்பு. இதுவே வாழ்க்கையின் விதி; நியதி; தத்துவம். இவ்வுண்மைக்கு விளக்கம் காண அல்லது விளக்கம் சொல்ல, வாழ்க்கையை வாழ்க்கையாக மதித்து, அங்கீகரித்துப் பிரகடனப்படுத்தும் ஒரு சமுதாயச் சிந்தனையோடுதான் அப்பா வாழ்ந்து கொண்டிருப்பாரோ —வாழ்ந்து காட்டிக் கொண்டிருப்பாரோ என்று கூட எண்ணி வியக்க முனைந்தான், வீரமணி. அவ்வாறெனில், அப்பா ஒரு புதிர் அல்லரே!

பச்சைக் கொத்துமல்லித் தழைத் துவையலுக்கென்று இப்படியொரு வாசனை போலிருக்கிறது!— உயிராய் மணக்கிறது!

துவையலில் கடுகத்தனை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான் வீரமணி. தொண்டையில் இறங்கிய உறைப்பு உந்திக் கமலத்தைத் தொட்டு நின்றதை அவன் உணர்ந்த பொழுது, அம்மான் மகள் அன்னக்கொடியும் அதே சடுதியிலே நினைவில் உறைத்து நெஞ்சைத் தொட்டு நின்ற அதிசயத்தையும் அவனால் பூரணமாக உணர முடிந்தது. அன்னக்கொடி பொய் சொல்லுவாளா, என்ன? ஊகூம்! 'அம்மான் மகளே...... அன்னம்!' —சாதி மல்லி நெஞ்சிலும் நினைவிலும் மணக்கத் தலைப்பட்டது. பூவின் மணத்தில் பூவையின் பேச்சுக்களும் மணத்தன.

பச்சைக் கொத்துமல்லித் துவையல் ஆராய்ச்சி நடத்துகிறவர் மாதிரி துளித் துளியாகச் சுவைத்து, ருசி பார்த்து, சோதித்துக் கொண்டிருந்த தேவர் வெந்நீரில் ஒரு வாய் அருந்தி விட்டு, 'தம்பி!' என்று குரல் கொடுத்தார்.

வீரமணி கலைந்த சிந்தனையோடும் கலையாத கனவோடும் "என்னுங்க?" என்றான்.

"வீரமணி, பச்சைக் கொத்துமல்லித் துவையல் என்றால் உனக்கு ரொம்ப நாள் தொட்டே ரொம்ப ரொம்பப் பிடிக்குமில்லையா?" என்று கேட்டார் பெரியவர்.

இத்தகைய விசாரிப்பை இப்போது அவன் எதிர்பார்த்து இருக்கவில்லைதான். இருந்தாலும், அவன் திடமான குரலெடுத்து, "ஆமாங்க!" என்று

பதில் சொன்னான். இது சம்பந்தமான கதை, காரணம் எல்லாம்தான் பெரியவருக்கு வெளிச்சமாகத் தெரியுமே?

"உன் அம்மான் மகள் அன்னக்கொடிதான் ஆதியிலே உனக்கு இந்தத் துகையலைப் பழக்கம் செஞ்சு வச்சுது. மெய்தானே, தம்பி?"

"நீங்க பொய் சொல்ல மாட்டீங்களே, அப்பா!"

"அது சரி; கொஞ்ச நேரத்திற்கு முன்னடி இந்தத் துகையலே எடுத்து எடுத்து நாக்கிலே போட்டுப் பார்த்தியே அந்தச் சமயத்திலே, உனக்கு உன்னோட அம்மான் மகள் அன்னக்கொடியோட ஞாபகம் ஓடோடி வந்திருக்கும், இல்லையாப்பா?"

நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகமா?

"மெய்தானுங்க!"

தன் குடும்பமும் தன் தாய் மாமன் குடும்பமும் கற்பிளவாகப் பிளந்து,காடுமேடாகப் பிரிந்து விட்ட இரண்டுங் கெட்ட இந்நேரத்திலே, அப்பா என்னென்னவோ குறுக்கு விசாரணை யெல்லாம் நடத்துகிறாரே? வீரமணிக்குக் கிழக்கும்புரியவில்லை; மேற்கும் புரியவில்லை.

"அதுவும் சரிதான். உன் முறைப் பெண் அன்னக் கொடியைப் பத்தி நீ என்ன நினைக்கிறே தம்பி?"

வீரமணிக்கா விடைகொடுக்கத் தெரியாது?—"பாரதியாருடைய புதுமைப் பெண் நம்ப அன்னக் கொடி!...நம்ப அன்னக்கொடி, பாரதிதாசனுடைய புரட்சித் தமிழச்சி! ஆமாங்க, அப்பா!"

"ஓ!...அப்படியா?"

தேவர் வாயைப் பிளந்தார். கேட்காததைக் கேட்ட மாதிரி ஆச்சரியப்பட்டிருக்கலாம். காணாததைக் கண்ட பாவனையில் அதிசயப்பட்டிருக்கலாம்! பொட்டுப் பொழுது என்னவோ ஆலோசனை செய்தார். சலனமும் சாந்தியும் இழை பின்னின. விழித்திரை வீசி, மகனைத் துழாவினார்; ஏதோ சொல்ல அல்லது, கேட்க வாயெடுத்தார் அவர்.

அதற்குள்:

முட்டைத் தோசையின் வாசனை இணை சேர்ந்து வந்து விட்டது.

குறிப்பறிந்த தேவர், "நம்ப காசியும் பெரிய கைகாரன் தான். அப்பனுக்கும் பிள்ளைக்கும் ஊடாலே வம்பு தும்பு மறுதரமும் மூண்டிடப் பிடாதேன்னு, ஆளுக்கொரு முட்டைத்தோசையாய்ச் சுட்டுப்போட்டுக் கொண்டாந்திட்டானே, கண்டியாப்பா, வீரமணி?" என்று குறிப்புணர்த்தித் துருவினார்.

"ஊம்!"

காசி ஆளுக்கொன்றாகப் போடும் வரை 'கம்' மென்றிருந்தார் தேவர். பிறகு, தன் பங்குக்குக்

கிடைத்த முட்டைத் தோசையையும் தன் மைந்தனின் தட்டிலேயே போட்டார். "எனக்குத்தான் மேலுக்கு முடியலையே? இந்த லட்சணத்தில், முட்டைத் தோசையை வாயைக் கட்டாமல் தின்னுப்பிட்டா, அப்புறம் வயிற்றிலே மப்பு வந்துப் புடாதா?... அளவறிஞ்சு உண்ணவேணும்னு சும்மாவா பாடிவைச்சிருக்காங்க மூத்தவங்க? தம்பி, நீ சும்மா சாப்பிடு. துள்ளித்திரிகிற வயசு: கல்லைத் தின்னாலும் செரிச்சிடுமாக்கும்! ஆனா ஒரு சின்னச் சரத்து! 'தந்தை சொல் மிக்கதொரு மந்திரமில்லை' என்கிற பாட்டை அசை போட்டுக் கிட்டே, நீ பாட்டுக்குக் கல்லைத் தின்னுவச்சு என்னைச் சோதிக்க மட்டும் துணிஞ்சுடாதே!..." என்று எச்சரித்தார். பிறகு "ஆவணி, ஒழுங்கை வாசலிலே வந்துக்கிட்டிருக்குது. கண்ணாலம் காட்சிக்குத் தலை கொடுக்க வேண்டிய தங்கம் நீ! வேண்டிய மட்டும் சாப்பிடு!" என்று முத்தாய்ப்பு வைத்தார் ஆதிமூலம்.

வெட்கம் பற்களைக்காட்ட, மறு பேச்சாடாமல் முட்டைத் தோசையில் சுவை பதித்தான் வீரமணி.

காது செவிடுபட, வாசல் வெளியில் பறந்தது லாரி ஒன்று.

"பெரியவகளுக்கில்ல...உங்க மச்சான் ராமையாத்தேவர்தான் லாரியிலே கிழக்கே பறந்துக்கிட்டிருக்காங்க. ஆவணி பிறந்தடியுமே, அவர் கட்டிக்கிட்டிருக்கிற புது மாடி வீட்டுக்கு மேளதாளத் தேட குடி புகுந்திடுவாராம்," என்று விவரித்தார் காசி.

"அப்படியா?"

அத்தோடு, பேச்சை மட்டுப்படுத்திக் கொண்டார் மச்சு வீட்டுக்காரர்.

அச்சமயம்:

சாதி மல்லிப் பூவின் நெடி, கொடி கட்டிப் படர்ந்து வந்தது; அன்னநடை பயின்று வந்தது.

ஆசை, கனவாக நிழலாட, கனவு அன்பாக ஒளியாட, ஏதோ ஒரு திடமான கணிப்புடன் வீரமணி வெளியே எட்டிப் பார்த்தான்; மறுகணம் உதட்டிதழ்களிலே நளினமும், கண்ணிதழ்களிலே பரவசமும் மிதக்க, அப்படியே மெய்ம் மறந்து நின்றான். பிறகு சுய உணர்வு கொண்டான். பெற்றவர் பக்கம் திரும்பினான். "அப்பா, அப்பா! நம்ப அன்னம் வந்து நம்பவீட்டுத் தலைவாசல் நிலைப் படியிலேயே நின்னுக்கிட்டு இருக்குதுங்களே, அப்பா!" என்று ஆர்வத்தோடு செய்தியை வெளியிட்டான் இளவல்.

ஆதிமூலம் தமக்கே உரித்தான அமைதி கொண்டு தலையை உயர்த்தினார். புகையிலையை எடுத்தார். பிறகு நிதானமாகச் செல்லப்பிள்ளையை நோக்கினார். "அப்படியா? உன் வீடு தேடி வந்த உன் அம்மான்மகளை 'வா' என்று சொல்லி, அத்தை மகளை நீ கையேந்தி வரவேற்க வேண்டியது தானே ஒழுங்கு, வீரமணி? ஊம், போ!" என்றார்.

வீரமணிக்கு நல்ல மூச்சு வந்தது. மென்னகை, யும் வந்தது. "ஆகட்டுங்க, அப்பா!" என்றான்; புத்துயிர் பெற்றிருப்பான்! எச்சில் கையை வீசிக் கொண்டே நடந்தான். வேகாத வெய்யில் வேகாதா, என்ன?—நிலைப்படியை அடைந்தான் அவன்.

அங்கே:

ஒற்றைக்கால் தவம் செய்த வண்ணம், அழகே உயிராகவும் உயிரே அழகாகவும் பொலிந்து, பாச மும் நேசமும் சிறந்து நின்று கொண்டேயிருந்தாள் அன்னக்கொடி!

4. ஆடி வந்த பொற்பாவை

ஆடி வந்த பொற்பாவையாக—தேடி வந்த பூந்தென்றலாக—பாடி வந்த பூஞ்சிட்டாகத் தோன்றினாள் அன்னக்கொடி!

அவளையே வைத்தகண் வாங்காமல் பார்த்தான் வீரமணி; பார்த்துக் கொண்டேயிருந்தான். கண்ணுக்குக் கண்ணாகக் காணும் இக்காட்சி சொப்பனம் அல்லவே?—சுந்தரக் கனவிலே சுந்தரி அன்னக்கொடியைக் கண்டு ரசித்து, பின்னர் கனவு கலைந்ததும், அன்னத்தைக் காணாமல் ஏங்கிப் புழுங் கித் தவித்த நாட்கள் அவன் வரை எத்தனையோ இருந்தது உண்டு. ஆனால், இப்போது அவன் கனக் காணவில்லை. ஆனாலும், அவனுடைய கனவுக் கிளி பொற்கனவாகிக் கண் சிமிட்டிக் கொண்டேயிருக்

கின்றன்! பிரத்தியட்சமான இவ்வுண்மை அவனுக்கு உயிரளித்திருக்கும்; உயிர்ப்பளித்திருக்கும்.

ஆம்.

அவள் அவனைப் பார்த்தாள்; பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

அவன் அவளைப் பார்த்தான்; பார்த்துக் கொண்டேயிருந்தான்.

கண்களும் கண்களும் கலந்தன; பேசின.

கண்கள் இணை சேர்ந்து, இணை சேர்த்துப் பேசிவிட்டால் மட்டும் போதுமா? வாய்ச் சொற்கள் பயன்பெற வேண்டாமா?

"அன்னம், வந்த காலோட இங்கிட்டே தவம் செஞ்சுக்கிட்டு இருக்கியே? உள்ளே வா," என்று அழைத்தான் வீரமணி.

"வர்றேனுங்க, அத்தான்!"

"தேடி வந்தவளை ஓடி வந்து 'வா'ன்னு கூப்பிடலையே அத்தான்காரன் என்கிற சடைவிலே தான் நீ இவ்வளவு நேரமாய்க் காத்திருந்தியாக்கும்?"

அவள் விநயமாக இளநகை சிந்தினாள். "ஒண்ணுக்குள்ளாற ஒண்ணான நம்பளுக்குள்ளே இம் மாதிரியான வளமை வாடிக்கையெல்லாம் தேவையில்லேதான். ஆனாலும் உங்களையும் என்னையும் அந்நியம் அசலாட்டம் ஆக்கிவச்சு, கண்ணாமூச்சி

ஆடிக்கிட்டு இருக்கிற நம்பளோட குடும்ப விவகாரத்துக்கு ஊடாலே, உங்க வீட்டுக்கு நானே வலிய வந்திருக்கிற இந்த நிலவரத்திலே, வந்த பொண்ணை 'வா' ன்னு ஒரு பேச்சுக் கப்பிடாட்டி, ரோசம் தாங்குதுங்களா?'' என்று விநயமும் குறும்பும் கூட்டிச் சொன்னாள். மஞ்சள் பூசிய வதனம் பெருமையோடு விளங்கியது. நாணம் பூசிய நயனங்கள் கருவத்தோடு பொலிந்தன. சாதி மல்லி கமழ்ந்தது.

ஓவியத்தை ரசிக்கத் தெரிந்தவனுக்கு உயிரோவியத்தை ரசிக்கத் தெரியதா? ''என் அன்னத்தைப் பத்தி நான் படிக்காததா? உன்னைக் கண்டடியும் தான், அப்பாகிட்டே சொல்லிட்டு வந்திட்டேனே?'' என்று கூறினான். பயந்த சுபாவம் படைத்தவன் மாதிரி 'பாவலா' காட்டிவிட்டு, நகைத்தான். அப்புறம் காய்ந்த எச்சில் கையைக் காட்டி ''உன் அத்தான் உன்கிட்டே பொய் பேசுவேனா? தோசை சாப்பிட்டுக்கிட்டிருந்தேன். காசி பச்சைக் கொத்தமல்லித் துவையல் வச்சிருந்தார். அதைக் கண்டதிலேயிருந்து உன்னைப் பற்றின நினைப்பிலேயே போராடிக் கிட்டிருந்தேன். அப்பத்தான் நீ வந்திருக்கே!'' என்று விளக்கினான்.

'' ஆத்தாடியோ' இப்பத்தானா பலகாரம் சாப்பிட்டீங்க? உச்சிக்கு வந்திடுச்சே சூரியன்?'' என்று பதறினாள் அன்னம்.

'' நான் என்ன செய்யட்டும்? என்னைப் பெற்ற ஆத்தாளோ கண்ணை மூடிக்கிட்டாங்க. எனக்காகக்

காத்துகிட்டு இருக்கிற உற்றவளோ கண்ணை மூடிக்கிட்டு இருக்கா!'' என்றான்; ஆற்றாமையோடும் ஆறாத் துயரத்தோடும் வார்த்தைகள் வெளிவந்தன.

அவன் வேதனை அவள் உள்ளத்தைத் தொட்டிருக்க வேண்டும். "என்னை என்ன செய்யச் சொல்லுறீங்க, அத்தான்? வேளை கூடிவந்தா, நான் ஓடி வந்து உங்க காலடி நிழலிலேயே மண்டிபோட்டு ஒண்டியிருந்துக்கிட்டே' மம்மலிலேயே உங்களுக்குச் சுடச்சுட தோசையும், உறைக்க உறைக்க பச்சைக் கொத்தமல்லித் துவையலும் இனிக்க இனிக்கக் காப்பித் தண்ணியும் தந்துப்பிட மாட்டேனுங்களா?'' என்று உருக்கமாகப் பேசினாள், அன்னம்.

இப்போதைக்கு மூச்சை நெட்டித் தள்ளுவது ஒன்று தான் அவனுக்கு நேர்பாதையெனத் தோன்றியது. "சரி, வா உள்ளே! அப்பன்காரருக்கு மேலுக்கு முடியல்லே!'' என்றான்.

அன்னக் கொடி பதறிப்போனாள். "அயித்தை புருசனுக்கு மேலுக்கு என்னாங்க வந்திச்சு, அத்தான்? இம்மாம் பொழுதுக்குச் சொல்லவே இல்லீங்களே?'' என்று வருந்தினாள்.

"அப்பாருக்கு உடம்பு சரியில்லேன்னு கேள்விப்பட்டுத்தான் விசாரிக்க வந்திருக்கியோன்னு நான் நினைச்சேன்!''

"அந்தத் துப்பே காதுக்கு எட்டலீங்க. நீங்க உங்க படிப்பிலேயும் பரீட்சையிலேயும் நல்லதனை

மாய்த் தேறிவிட்டதாக ஆரியப்பூ தான் காதிலே ஓதுச்சுங்க. இங்கே கமுக்கமாய் வந்து குதிக்கிறதுக்கு காலம்பறவே பிடிச்சுத் துடிச்சேனுங்க. அகிலாண்டத்தையும் அமிர்தத்தையும் கேட்டுக் கிடுங்க; கொஞ்ச முன்னடி தான் எங்க அப்பன்காரப் புண்ணியவானோட தலை மறைஞ்சுது. ஊம், நடங்க அத்தான்!'' என்று துருசுப் படுத்தினள் சிங்கப்பூர்க் காரர் மகள். ''உதயத்திலே நான் தண்ணி இறைச்சுத் திரும்பையிலே, சாலையோரத்திலே உங்களை எட்டத்திலே வச்சுக் கண்டப்போ, எனக்கு ஒரு விசயமும் தெரியாதுங்களே!'' என்று குறிப்பிடவும் தப்பவில்லை, வீரமணியின் முறைப்பெண்.

ஆதிமூலத் தேவருக்குக் காப்பியில் சூடு பறக்க வேண்டும். இல்லையேல் அவரது பொறுமை பறந்து விடும். காசி, சாயத்துண்டை எட்டாக மடித்து, அதில் காப்பிக் குவளையை வைத்துக் கையில் ஏந்தி வந்து நீட்டிய சடுதியிலேயே அதை வாங்கி 'மட மட' வென்று குடிக்க ஆரம்பித்த அவர், 'நைலக்ஸ்' புடவையின் சலசலப்பும் சரிகை வேட்டியின் படபடப்பும் முயங்கிக்களித்திட்ட ஓசைக்கேட்டுப் பின்புறம் திரும்பிப் பார்த்து விட்டு, மீண்டும் தம் கருமத்தில் கண் ஆனார். சொட்டு மிச்சம் வைக்காமல் பருகித் தீர்த்த பின்னர் தான், அவர் ஏப்பம் விட்டார்; பார்வையை நிமிர்த்தினர். காப்பியின் சூடு அடிவயிற்றில் இன்னமும் சுட்டுக் கொண்டிருந்தது. சூடு என்றால் அதில் அவருக்கு ஓர் அலாதி ருசி தான்!

''அம்மான் மகளும் அயித்தை மகனும் இம்மாம் பொழுதுக்கா ரகசியம் பேசிக்கிட்டு இருக்கோணும்?''

கேள்வியில் சூட்டைக் காண்பிக்காமல், ஆனால், கேள்விக்கு சூடுகாட்டிக் கேட்டார் தேவர். அன்னக் கொடியையும் வீரமணியையும் தமக்கே உரித்தான புதிர்நோக்குடன் ஊடுருவித் துழாவினார் அவர்.

தந்தைக்குத் தந்தையாக மட்டுமல்லாமல், தாய்க்குத் தாயாகவும் விளங்கித் தன்னை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தந்தைக்கு இந்தக் கேள்வியைக் கேட்கக் கூடவா உரிமை இல்லை? எனவே, உரிமைப் பிரச்சினை எதையும் கிளப்பத் தயாராக இல்லை அவன்— வீரமணி.

ஆனால், அன்னம், தன் அத்தையைக் கொண்டவரின் வினாவை அவ்வளவு லேசாக எடுத்துக் கொள்ள ஒப்பமாட்டாள். மகிழ்ச்சியின் ரேகைகள் மறையத் தொடங்கின. ''ஊர் உலகத்துக்கோ, இல்லாட்டி, உங்களுக்கோ தெரியாத எந்த ரகசியத்தை நானும் என்னோட அத்தானும் பேசிக்கிடப் போறோமுங்க? அப்படியே புது ரகசியத்தைப் பேசிக்கிட்டாலும், அதிலே தப்பு கிப்பு கிடையாதுங்களே? அயித்தை மகனும் அம்மான் மகளும் தானுங்களே பேசிக் கிட்டோம், மாமா?'' என்று தர்க்கரீதியான பேச்சால் மடக்கினாள். நேர் கொண்ட பார்வையால் தன் அத்தையின் கணவரை அளந்தாள் கன்னிப்பூ.

அன்னத்தின் துணிச்சல் வீரமணிக்குப் பிடிக்கவே செய்யும். பரிசுத்தமான நேர்மையின் பலத்தோடு ஊக்கமாகப்பேசுகிறாள் அம்மான் மகள். நியாயம் தான்! ஆனால், அப்படியே உள்ளது உள்ள படி, அன்னத்தின் பேச்சை நியாயத்தின் அடிப் படையில் அப்பா எடுத்துக் கொள்வார் என்பது என்ன நிச்சயம்?

அப்பாவுக்கு முகம் சுண்டி விட்டது. தீவிரமான சிந்தனையில் ஈடுபட்டவராக அவர் காணப்பட்டார். கறுமை படிந்த கனத்த உதடுகளில் ஒரு நெளிவு தோன்றி மறைந்தது. ''அன்னம், மெய்யாகவே நீ ஒரு புதுமைப் பொண்ணு தான்!'' என்று புகழ்ந்து பெருமூச்செறிந்தார்.

அந்தப் பாராட்டை அவள் அங்கீகரித்தாளோ; என்னவோ? ''அது கிடக்கட்டும். உங்களுக்கு உடம்பு இப்போ சரிப்பட்டிடுச்சுங்களா? அயித்தை மகன் சொல்லக் கேட்டதும் எனக்கு மூச்சே நின்னுப்பிடும் போல இருந்திச்சுங்க,'' என்று கவலை தெரிவித்தாள் அன்னம்.

''அன்னம், உன்னோட மூச்சு பத்திரம்!...என் மூச்சு இன்னம் கொஞ்ச நாளைக்கு நிற்கவேநிற்காது. இந்தக் குடியிருப்பு மண்ணிலே நான் செஞ்சு முடிச் சாக வேண்டிய கடமைகள் எம்புட்டோ நிலுவை நிற்குது. தர்மராசா, ரெண்டொருத்தர் மாதிரி தட்டுக்கெட்ட புள்ளி இல்லே. அவன் நல்லவன். பேரிலேயே தர்மத்தையும் ராசாவையும் கோத்து வச்சிருக்கிற புண்ணியவான் அவன். என் மனசு

அவனுக்கு விளங்காமல் தப்பாது! ஆகச்சே, இப் போதைக்கு அவன் என் பக்கம் தலைவச்சுக்கூடப் படுக்க மாட்டான்!''—பெரியவரின் குரல் சிலும்பல் தட்டியது.

வீரமணியின் மன உணர்வுகள் நெகிழ்ந்தன.

அன்னம் சிரம் தாழ்த்தி மௌனமாகச் சமைந் தாள்.

''தம்பி, இன்னமுமா சாப்பிடலே?'' என்று சமையல்காரர் நினைவுபடுத்தினார்.

''அடேடே! சாப்பிடப்பா!'' என்றார் தேவர்.

முட்டைத் தோசையையும் மல்லித் துகையலை யும் பார்த்தான் வீரமணி. பிறகு அன்னக்கொடியை யும் தகப்பனாரையும் நோக்கினான். தோசை சாப் பிடும்படி அன்னக்கொடியை உபசரிக்க மாட்டாரா அப்பா? சில விநாடிகளைச் சோதனைக்கு உள்ளாக்கிய பின் ''சும்மா குந்து. தோசை கொண்டாரச் சொல் லுறேன்; சாப்பிடு அன்னம்,'' என்று கோரினான் முறை மச்சான்காரச்சிங்கம்.

அவள் தயங்கினாள்.

வாசற்பக்கம் மேற்கு நோக்கித் திரும்பிய லாரியை நோட்டம் பார்த்த காசி, ''தங்கச்சி, உன் அப்பன்காரர் கண்மண் தெரியாது வீட்டுக்குப் பறந்துக் கிட்டிருக்கார்,'' என்று தாக்கீது கொடுத் தார்.

இனி, நிற்க நிலைக்க நாழி ஏது?—அன்னம் பரபரப்புடன் நகர்ந்தாள். உரிமையின் உறவு நெகிழ, வீரமணியின் தட்டிலிருந்த எச்சில் முட்டைத் தோசையைக் கிள்ளி, அதை மல்லித் துகையலில் தொட்டுத் துவைத்தெடுத்து, வாயில் போட்டுக் கொண்டாள். "நான் போயிட்டு வாரேனுங்க, மாமா!" என்று நாணம் பூத்து, மரியாதை தூவி விடை கோரினாள் அன்னக்கொடி.

"நல்லது. புறப்படு, அன்னகொடி!" என்று தேவர் அமரிக்கையாக விடை கொடுத்தார்.

"போயிட்டு வர்றேனுங்க, அத்தான்!" என்று அத்தானிடம் பயணம் சொல்லிக் கொண்டாள் ராமையாத் தேவரின் செல்வி.

"போயிட்டு வா, அன்னம்!"

ஒற்றைக்கல் மூக்குத்தி ஒற்றைத் தனி வின்மீனாக ஒளி காட்ட, விடைபெற்றாள் அன்னம்.

வீரமணியின் உள்ளம் விம்மிப் புடைத்தது: 'அன்னம்! அம்மான் மகளே அன்னம்!'

நாட்டிற்குச் சரித்திரம் படைக்கச் சரித்திரமாகி விட்ட செம்மல்களும், நாட்டின் சரித்திரம் காக்கச் சரித்திரத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும் நல்லவர்களும் அதோ, சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்!...

கை ஈரத்தைத் துவாலையில் துடைத்துக்கொண்டான்; சன்னல் ஓரமாகக் குறிச்சியை வசம்கணித்து

இழுத்துப் போட்டான்; பதமாக உட்கார்ந்தான்; விசுப்பலகையில் இருந்த தோல்பையை எடுத்தான். லேசாக இருந்தது. தீர்ப்புத் தாள்களின் சுமை மிக மிகக் குறைச்சல்தான். ஆனால், அவை இக்குடும் பத்தை அழுத்திச் சோதிக்கக் காத்திருக்கும் சுமை யின் பயங்கரம் அற்ப சொற்பமல்ல. சுமை தாளா மல் மண்டை வலித்தது. பொட்டு நரம்புகள் விட்டுப் போகிறமாதிரித் தெறித்தன. அம்மான் சம்பந்தப்பட்ட சட்டத்தின் தீர்ப்புப் பற்றித் தன் தந்தை அலட்டிக் கொள்ளாமல் 'சிவனே' என்று இருக்கும் போக்கு அவனுக்கு அதிர்ச்சியாகவே இருந்தது. வீங்கின புண் வெடிக்காமல் தப்ப முடி யாது. அப்பாவிடம் தீர்ப்பு சம்பந்தமகாக சுணங் காமல் பேசியாக வேண்டும். இந்தக் கண்டத்தை விட்டு, எப்படித் தப்பிப் பிழைக்கப் போகின்றோம் என்பதற்கும் விளக்கம் வேண்டும். வழி புரிந்து விட் டால், அப்பால் வழியைக் கடப்பது ஒன்றும் கம்ப சித்திரமல்ல. அவன் முதுகை வாய்ப்பாகச் சாய்த்துச் சாய்ந்து கொண்டான்.

அது அவனது தனி அறை.

தெற்குப் பார்த்த வீடு. இதமான காற்றுக்கு மட்டும் பஞ்சம் இருக்காது.

மின் விசிறி நின்றது.

தூக்கம் சொக்கியது. ஏப்பம் பறிந்தது. தான் எச்சில் படுத்தியிருந்த முட்டைத் தோசையில் அன்னம் ஒரு பகுதியைக் கிள்ளிச் சாப்பிட்டு விட்டுச்

செல்ல, அவள் தீண்டிய மிச்சத்தைச் சொச்சம் வைக்காமல் அவன் ஒரு விசித்திரமான சிருங்கார ரசிகத் தன்மையோடு சாப்பிட்டுத் தீர்த்தானே, அப்பொழுது அது அமிர்தமாகச் சுவைத்திட்ட அருமை பெருமை அவன் அந்தரங்கத்துக்குத்தான் அத்துபடியோ?—மறுக்க முடியாது; மறுக்கவும் கூடாது. மனம் கொண்டதே மாளிகை!—அம்மான் மகள் நெஞ்சில் விளையாட, அவளோடு அவன் நினைவில் விளையாட, ஊரை மறந்து. உலகத்தை மறந்து, மெய்ம் மறந்த சித்திர விசித்திரமும் அவனுடைய அந்தரங்கத்துக்குதான் வெளிச்சமோ? ஆனால் அவனுடைய அம்மான் ராமையாத் தேவர் நினைவில் குதித்து, நெஞ்சில் பாய்ந்தபோது, அவன் தன்னையும் அறியாமல், தன்னையும் மீறிய விதத்தில் பற்களை 'நற நற' வென்று கடித்துக்கொண்டான்!

குலச்சுடரைப் பெயர் சொல்லிப் பாசம் சொல்லி அழைக்கின்றார் முதியவர்.

மடியிலிருந்த மண் ரசாயனம் நழுவுகிறது; பேரு மடியிலிருந்து நழுவவில்லை.

"அப்பா!" என்று விளித்தவாறு, வீரமணி தன் தந்தையின் காலடியில் வந்தமர்ந்தான். தேங்காய்ப் பூத் துண்டைத் தோளில் வாகாகப் போட்டிருந்தான்; 'முண்டா' பனிய'னை இழுத்து விட்டான்; சுருள்முடிகளை ஒதுக்கிக் கொண்டான்.

பெரியவர் ஆதிமூலம் மெள்ள எழுந்தார்; ஊசி குத்தின இடத்தைத் தடவிக் கொடுத்தவராக, திண்டை நகர்த்திச் சுவரோடு சுவராகச் சாய்ந்தார்

அவர். புகையிலைச் சிதறல் உணக்கை கூட்டியது. பெற்றெடுத்த அன்புப் புதல்வனை அருமையாகவும் பெருமையாகவும் என்னவோ ஒரு புதிய நம்பிக்கை யோடு ஊடுருவிப் பார்வையிட்டார். பின்னர் இருதயப் பகுதியைப் பிசைந்து கொண்டார். "வீரமணி," என்று கூப்பிட்டார்.

"சொல்லுங்க, அப்பா!" என்றான் வீரமணி. சோதனைக்குத் தயாராகும் மாணவனைப்போல, என்னவோ ஓர் இலட்சியக் குறிப்புடன் அவனும் தன் பங்கிற்கு அப்பாவை ஊடுருவத் தொடங் கினான்; தஞ்சை மாவட்ட நீதி மன்றத்தின் தீர்ப்பை வெளியிலே எடுக்கலானான் அவன்.

உறை கிழிக்கப்பட்ட உறைக் கடிதம் ஒன்றை வீரமணி வசம் ஒப்படைத்தார் தேவர். "சிதம் பரத்தைச் சேர்ந்த லட்சாதிபதி மகள் தமிழ ரசியைப் பத்தி நீ ரொம்பப் பெருமையாய்ச் சொல்லிக்கிட்டிருப்பியே, அந்தப் பொண்ணு உனக்கு என்னென்னமோ எழுதி அனுப்பியிருக்குது, தம்பி. அதை மறுகா தனியே படிச்சுக்கலாம்...!" என்று குறிப்பிட்டார். பின்பு, சற்று நேரம் பேச்சு மூச்சு காட்டவில்லை. வீரமணியை மேலோட்ட மாகக் கவனித்தார். கிழிக்கப்பட்டிருந்த கடிதத் தின் வாயைச் சலனத்தோடு தடவிக் கொடுத்தபடி சிந்தனைக்கு ஆளாகி 'கம்' மென்றிருந்த தனயனைக் கண்டதும், அவர் கனைப்புச் சத்தம் எழுப்பினார். "வீரமணி, நீ கையிலே அடக்கி வச்சிருக்கியே அதுதானேப்பா கச்சேரித் தீர்ப்பு நகல்?" என்று

அமைதியைக் கலைத்துக் கேட்டார். கேள்வி அமைதி யாகவே ஒலித்தது. ஆனால், கேள்வியில் அமைதி இருக்க 'கடவு' இல்லை.

"ஆமாங்க," என்று 'சடனை' யை உணர்ந்தும் உணர்த்தியும் சொன்னான் அவன்.

"தீர்ப்பைப் படிச்சிட்டியா?"

"தீர்ப்பை நான் படிக்கிறதாவது? தஞ்சா வூரிலே இதுக்கு எட்டாம் நாள் நீதிபதி தீர்ப்பைப் படிச்சிட்டாருங்களே, அப்பா?" என்றான் வீரமணி; குறும்புத்தனம் வாய்க்குள்ளாகவே சுழித்தது.

தேவருக்குத் தம் மைந்தனின் பொடி தெளித்த பேச்சு விளங்காமல் இல்லை. "இப்பைக்குக் கைக்கு மெய்யாய் வச்சுக்கிட்டிருக்கியே தீர்ப்பு நகல். அதைப் படிச்சிட்டியான்னுதான் நான் உன்னைக் கேட்டேன்," என்றார். மடங்கவும் மடக்கவும் தமிழுக்கும் தெரியும்; அவருக்கும் தெரியும்.

"தீர்ப்பைத்தான் தஞ்சாவூரிலேயே படிச்சுப் பார்த்திட்டேனுங்களே!" மண்வளம் படித்தவன் வீரமணி, மனவளமும் பழகியவன். வீசிக் கொண் டிருக்கும் புயலுக்கு நடுவிலே, அகல் வைராக்கியத் தோடும் ரோசத்தோடும் எரிந்து கொண்டிருக் கிறது!—வியப்பு ஆட்கொண்டது.

"என்ன சொல்லுது தீர்ப்பு?" கைகளில் தாங்கிய கன்னத்தைச் சாய்த்தார் அவர்.

"புதுசா என்ன சொல்லப் போகுதுங்க, அப்பா?" என்று கூறி நிறுத்தினான் வீரமணி. முதுகைச் சொறிந்து கொண்டான். ஏறிட்டான். "எல்லாம் ஏற்கெனவே நம்பளுக்குத் தெரிஞ்ச ரகசியம்தானுங்க. நீங்களும் அம்மான் ராமையாத் தேவரும் ஆதியிலே ராசியாகப் பேசிப் புழங்கிட்டுச் சுமுகமாய் இருந்த காலத்திலே, நீங்க அம்மான் கிட்டே வாங்கின கடன் தொகை பதினெட்டாயிரம் ரூபாய்தான்! ஆனா, நீங்க எழுதிக் கொடுத்ததோ ரூபாய் இருபதாயிரத்துக்கு!—அம்மானுக்கு நீங்க புரோநோட்டு வரைஞ்சு, கையொப்பம் போட்டுக் கொடுத்த அந்தத் தொகை—பிராமிசரி நோட்டுத் தொகைரூபாய் இருபதாயிரத்தையும். சட்டப்படி அதுக்கு உண்டான ஆறேகால் சதவீத வட்டியையும் உடனடியாய் நீங்க வாதிக்குக் கட்டியாக வேணும்னு தீர்ப்பிலே எழுதியிருக்குதுங்க, அப்பா!" என்று விவரித்தான் இளைஞன்.

ஆதிமூலம் நிதானம் காக்க எத்தனம்செய்தார்! வீண்! கண்கள் ரத்தம் கட்டிச் சிவந்தன. "ராமையா அடுத்துக் கெடுத்தவன்!... நயவஞ்சகன்!" சொற்களில் சோளம் பொறிந்தது. நெடுமூச்சை நெட்டித் தள்ளியபின் பேச ஆரம்பம் பண்ணினார்:

"தம்பி, உலகத்திலே என்னென்னமோ இடுசாமமெல்லாம் தலைகீழாய் நடக்குது. உன் தாய் மாமனை நினைச்சுப் பார்த்தாக்க, உண்ண சோறு உடம்பிலே ஒட்டலே! ஆனா, அந்தப் படுபாவிக்கு

எல்லாம் ஓட்டுது!—உப்புப் போட்டுச் சாப்பிடுருனு அவன்? ராமையா அண்ணேக்குக் கடுத்தத்திலே சொன்ன சொல்லே நம்பினேன் நான்; நினேச்சுப் பார்த்தால் பயாஸ்கோப் பார்க்கிறதாட்டமே இருக்குது! நான் அவன் கிட்டே உதிரி உதிரியாய் வாங்கியிருந்த கடன் தொகை சாடாவையும் எங்க ரெண்டு பேர் பேரேட்டுப் பிரகாரம் ஒத்துப் பார்த்துக் கூட்டுப் புள்ளி போட்டோம். கடன் பதினெட்டாயிரத்துக்கு ஓடிடுச்சு. புரோநோட்டுப் பூரிச்சுக்கிட்டால் தேவலாம்னு பல்லேக் காட்டினுன் அவன். தாயும் மகளும் என்ருலும் வாயும் வயிறும் வேறேதானே? நான் அட்டி சொல்லலே! அப்பத் தான் ஒரு புதுச் சூதைப் பொருத்திப்பிட்டான் அந்த அயோக்கியத் துரோகி!''

பெரியவர் சற்றே ஓய்ந்தார். பிறகு தொடர்ந் தார்:

''வீரமணி, கேட்டுக்க கதையை: 'அயித்தான், விடிஞ்சதும் நாள் சுகமில்லே. ராவோடு ராவா புரோநோட்டு எழுதித் தந்திடுங்க. நீங்க எனக்குத் தர வேண்டிய பதினெட்டாயிரத்துக்கு இப்ப நோட்டு எழுதப்போறீங்க. உங்களுக்கு என்னமோ அவசரமான முடை உறுத்துதின்னு சொன்னீங் களே? நாளே அந்திக்குள்ளே ரூபாய் ரெண்டாயி ரத்தை ரொக்கமாய் உங்க கையிலே கொண்டாந்து தந்துப்புட்றேன் கட்டாயம். ஆனபடியினுலே, தொகை ரவுண்டா வருறப்பிலே நீங்க இருபதா யிரத்துக்கே எழுதித் தந்திட்டால் சிலாக்கியம். ஒரு

சல்லிக் கூட பிசகு பண்ண மாட்டேன். நம்புங்க! அப்படின்னு சொப்பினுன். சொந்த மச்சான் பேச்சை, அதிலேயும் பணத்திலே படுத்துப் புரளுற மச்சாவி பேச்சை நம்பாமல் என்ன செய்ய? ஒப்புக் கிட்டு அவன் சொல்லை நம்பி, இருபதாயிரத்துக்கே அவன் இஷ்டப்பிரகாரம் நோட்டு எழுதிக் கொடுத் திட்டேன். ஆனு, விடிஞ்சதும் கதை திசை மாறிப் பூடுச்சு!—முதல் காளாஞ்சி தவசல் மூண்டிச்சு. ஆத்தாளுக்குப் பயப்படுகிற ஆத்மா இது. நியாயத்துக்குத் துணை நின்னேன். அவனே, தன்னேட அநியாயத்துக்கும் நான் துணை நிற்கல் லேன்னு கடுப்பு கொண்டு, சொன்ன சொல்லையும் காற்றிலே தூற்றி விட்டுப் புட்டான். கடைசி மட்டுக்கும் அவன் அந்தப் பணம் ரெண்டா யிரத்தை என் கையிலே கொடுக்கவே கிடையாது!''

இருமல் சிணுங்கிற்று.

பேச்சு முடியவில்லை.

''தம்பி, தெய்வம் கண்ணுக்குத் தெரியாது. ஆனாலும் நாம பயப்படுறோம். ஆனல் உன் மாமன் ராமையாத் தேவனே கண்ணுக்குத் தெரிகிற பணத்துக்குத்தான் பயப்பட்டுப் பழக்கம். ஊர்க்கட்சித் தகராறிலே அந்தப் பயலோட மானத் தைக் காத்தவன் நான். அந்த நன்றியை மறந்திட் டான். போகுடிச் சென்மம்!... தெய்வம் வெறும் கல்தானேன்னு நம்பி, என்கிட்டே கொடுக்காத ரூபாய் ரொண்டாயிரத்தையும் சேர்த்து எழுதப் பட்டிருந்த என் புரோநோட்டின் பேரிலே எம்மேலே

அவன் பிராது போட்டு தாவா தொடுத்தான். ராமையாகிட்ட கைநீட்டி வாங்கினது பதினெட்டாயிரமே தான்னு வக்கீல் அய்யர் மூலம் சொல்லி எதிர் தாவா போட்டேன் நான். என்பேச்சு செல்லலே! தெய்வத்துக்குத் தெரிஞ்ச உண்மைச் சங்கதி நீதிக்கு விளங்காமலே போயிடுச்சுதே? ம்...சட்டம் ஒரு இருட்டறை என்கிறது மெய்தான் போலே! ஊம்...காலம் கெட்ட இந்தக் கலியுகத்திலே சத்தியத்துக்கும் தருமத்துக்கும் பணியாம அடாவடி அடிச்சு அக்கிரமம் செய்கிற ராமையாத் தேவன் மாதிரியான நயவஞ்சகத் துரோகிப் பயல்களுக்குத் தான் காலம் போலே!''

ஆத்திரமும் சோகமும் எரிமலையாக வெடிக்கப் பேச்சை முடித்தார் பெரியவர். விழி முனைகள் கசிந்தன.

வீரமணி நெடுமூச்செறிந்தான். "நீதிக்குச் சட்டப்படியே தான் பேசத் தெரியும். ஆனால், அந்தச் சட்டம் எப்பவுமே தருமநியாயப் படியே பேசிடும்னு நாம எதிர்பார்க்கிறதுக்கில்லை!...இந்த விதி விசித்திரமானதுதான்!—இந்த விசித்திரத்துக்கு இப்ப நாமே உதாரணமாக நின்னுக்கிட்டு இருக்கோமுங்களே? ஊம்! அப்பா! நீங்க அம்மான் கிட்டே வாங்கின கடன் பணம் ரூபாய் பதினெட்டாயிரம் மட்டும்தான்! பேச்சுப்படி, அனுமத்திலே நின்ன ரூபாய் ரெண்டாயிரத்தை அந்த மனுசன் தரவே கிடையாது. ஆனா, ரெண்டாயிரத்தையும் மறுநாளே தந்திடுறேன்னு சொல்லி, நையம்பாடி

உங்ககிட்டேயிருந்து இருபதாயிரம் ரூபாய்க்கு பிராமிசரி நோட்டு எழுதி வாங்கிட்டார் அவர். கேடு கெட்டவர்! திட்டமிட்டே நம்பிக்கைத் துரோகம் பண்ணிட்டார்!—உண்மை கசக்கத்தான் செய்யுது. அம்மான் ராமையாத் தேவர் வேணும்னே மோசடி செஞ்சிட்டார். அந்த எமகாதக மனுசன் இரண்டாயிரத்தை உங்க கையிலே ஏற்கெனவே கொடுத்திட்டுத்தான் உங்க கிட்டேயிருந்து நோட்டெழுதி வாங்கினேன்னு கோர்ட்டிலே அடிச்சுப் பேசுறதுக்குச் சாட்சி சொல்ல உங்க பிராமிசரி நோட்டு அவர் கையிலே இருந்திச்சு! ஆனா, நீங்க அந்தத் தொடுசுப் பணம் ரெண்டாயிரத்தை அவர் கிட்டேயிருந்து வாங்கல்லே என்கிறதுக்குச் சட்ட பூர்வமான சாட்சி எதுவுமே உங்க வசம் இல்லாமல் போயிடுச்சுங்களே? இல்லீங்களா... அப்பா!''

''அது உண்மைதான், தம்பி!''

''அந்த உண்மைக்குப் பேர் தான் தருமம். அந்தத் தருமம் தான் கடவுள். 'அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்' என்கிறது மூத்தவங்க வாக்கு. அதைச் சோதிச்சுக் காட்ட வேண்டியது, காலத்தோட பொறுப்பு. ஆனா நம்பளைச் சோதிக்க நேரம் காலம் பார்த்துக்கிட்டுப் பிணந்தின்னும் கழுகாய்க் காத்துக்கிட்டு இருக்கார் ராமையா அம்மான்! அதைச் சமாளிக்கக் கைக்கு மெய்யாய் இப்பவே ஒரு வழியைத் திட்டமிட்டு முடிவு செஞ்சாக வேணுங்க, அப்பா!''

''சுத்தமான பேச்சு, வீரமணி. உன் அம்மான் கடனை உளவடைக்க ஒரு நோது பண்ணியிருக்கேன். அது கிடக்கட்டும். இப்போ ஒரு முக்கியமான காரியத்தைப் பத்திப் பேசிக் கலந்து நாம ஒரு நல்ல முடிவுக்கு வந்தாக வேணும். ரொம்ப அவசரமான காரியம் இது; அவசியமான காரியமும்தான்!'' தேவரின் உதடுகளில் இதயம் துடித்திருக்க வேண்டும்.

''என்ன காரியமுங்க அது?''

''நல்ல காரியம்தான், தம்பி! மங்களகரமான சேதிதான், மகனே! நம்ப வீட்டு வாசற்படியை மிதிக்க ஓட்டமும் நடையுமாய் வந்துக்கிட்டிருக்குதே ஆவணி? இனிமேலும் அந்த நல்ல சங்கதியைப்பத்தி உன்கிட்டே சொல்லாமல் மெத்தனமாய் இருப்பேனு நான்? இந்தாலே சொல்லிப்பிடுறேன், வீரமணி!''

ஆதிமூலம் பேச்சை நிறுத்தினர்.

அவரா நிறுத்தினர்?

அவருள் வெடித்திட்ட புகைச்சல் இருமல் அல்லவா நிறுத்தித் தொலைத்தது!

வீரமணி வாய்பிளந்து நின்றான்: அவனுடைய நெஞ்சம் அவனிடமா தஞ்சம் அடைந்திருந்தது?

அந்தச் சத்தியம் அன்னக்கொடிக்குத் தான் தெரியுமோ?

பெரியவர் வாய் திறந்தார்.

அப்பா விடுகதை எதுவும் போடாமல் இருக்க வேண்டும்!

5. ஏழிற்கனவு காதலா? காலமா?

காவடிப் பாரம், சுமப்பவனுக்குத்தான் தெரியும்!

இது உண்மை.

ஆதிமூலத்தேவரின் தலையில் சுமந்திருக்கும் அல்லது, சுமத்தப்பட்டிருக்கும் சுமையை அவரே அறிய முடியும்.

அதே மாதிரி, வீரமணியின் மனத்தில் சுமந்திருக்கும் அல்லது சுமத்தப்பட்டிருக்கும் சுமை அவனுக்குத்தான் அர்ப்பணம்.

'அப்பா விடுகதை போடாமல் இருக்க வேண்டும்!'—இவ்வாறு அவன் கவலைப்பட்டான். கவலையில் அச்சமும் மேலோங்கி யிருந்தது. இப்பொழுது தன் தந்தை பேசப்போகும் விஷயம், அவர் சுட்டின மாதிரி, தன்னோடு சம்பந்தப்பட்ட மங்களகரமான காரியம் பற்றியதுதான் என்பதை அறிந்ததும், அவனுக்குத் தன் திருமணம் பற்றிய சிந்தனைதான் எடுத்த எடுப்பிலே தொடுத்து நின்றது. கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்னும் விவரத்தை அவன் அறிவான். ஆகவே, அந்த நீண்ட பந்த பாசத்துக்குத் தன் கனவுப்படி ஆளாவதோ

அல்லது தன் கனவைச் சிதைத்து ஆளாக்கப்படு வதோ அவனுடைய மன அந்தரங்கத்தைப் பொறுத்த காரியம் என்பதுதான் அவனுடைய சொந்தக் கருத்தாக அமைந்திருந்தது. இந்நிலை யிலே, தன் தந்தை புதிராகப் புதிர் போட்டு விடாமல் இருந்தால் தேவலாமே என்றும் எதிர் பார்த்தான்; கவலையும் அச்சமும் சூழ்ந்திட எதிர் பார்த்தான். இதற்கு மத்தியில், குடும்பத்தின் கவுர வத்தை உயிர்க் கழுவில் நிறுத்தி வைத்துச் சோதிக் கக் காத்திருக்கும் சூழ்நிலையை வேறு முதற் காரிய மாகச் சமாளித்து, சுதந்திரமாகத் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும். இது அவனது குடும்பத்தின் மானப் பிரச்சினை!

பெரியவர், முற்றத்திற்குத் திரும்பினார். இடம் மாற்றிக் கட்டிலில் அமர்ந்த வேளையில், தாழ்வாரச் சுவரின் தொங்கலில் பதுங்கி ஓடிய கடுவன் பூனை, மண் சுவரின் சுண்ணும்புப் பூச்சைப் பெயர்த்துத் தள்ளியதன் விளைவாக, அவர் தலை மீது ஓட்டடை யும் தூசும் மண்ணும் சிதறவே, அவர் 'பழைய குருடி கதவைத் திறடி!' என்ற மாதிரி, பழைய திண் ணைக்கே திரும்ப வேண்டியவரானார். அமிர்தாஞ்ச னம் நெற்றிக்குத் தாவிற்று.

"அப்பா!"

"இருக்கேன் மகனே, இருக்கேன்! உன் கிட்டே என்னென்னமோ சொல்லணும்னு இருக்கேன்!"

"சொல்லுங்கப்பா!"

"சொல்லத்தான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்: சொல்லவும்தான் போறேன். கதிர் பறியத் தலைப் பட்ட நிலத்திலே வாய்க்கால் வழியே முறைத் தண்ணி ஒரு சீராய்ப் பாய்ஞ்சோடுற தொப்ப, என்னோட நெஞ்சடியிலே ஒழுங்கு முறையாக ஊர்ப் பட்ட எண்ணங்கள் ஓடிக்கிட்டு இருக்கையிலே, வேறே சில நினைப்புக்கள் என் மனப் போக்குக்குச் சவால் விடுறதாட்டம் குறுக்குமடை பாய்ச்சுது. இப்படியான அவலக் குழப்பத்துக்கு நடுவிலே போராடிக்கிட்டிருக்கக் கூடிய எனக்கு, எதை, எப்படி ஆரம்பிக்கிறதின்னு மட்டுப்பட மாட்டேங்குது. சே! பிறவி என்கிறதே ஒரு கடனுட்டம் தான். பட்ட கடனுக்குப் பட்டுத் தீர்க்கக் கடமைப் பட்டதுதான் இந்தப் பிறப்பு. படைச்சவன் மனுசனை வாய்—பேச வச்ச ஒரு குற்றத்துக்காக, மனுசன் வாய் பேசத் தெரியாத மிருகத்தைக் காட்டிலும் கேடாக எம்புட்டோ குற்றங்களைச் செய்கிருன். ஆனுல் அவன் செஞ்ச குற்றங்களை அவனே சுமந்து அறுவடை செய்ய வேண்டியவன் என்கிற சத்தியத்தை அவன் மறந்தே போயிடுருன், பாவம்! அதனுலேதான் அவன் தர்மத்தை மறந்து, அன்பை மறந்து, பண்பை மறந்து, நீதியை மறந்து, ரோசம் கெட்டு, மானம் கெட்டு ஈனத் தனமாய் ஆடுருன்; பணத்தைக் கட்டிக்கிட்டு ஆடுகிருன். ஆனு, மண்ணிலே பிறந்தவன் மண்ணுக்கே உடைய வன் என்கிற தடயம் கேவலம் இந்த மனுசனுக்குப் புரியவே புரியாதோ? ஊம்...பூனைக்கு மத்தியிலே

தான் எலிப் பண்ணையும் பேரன் பேத்தி எடுத்துகிட்டிருக்குது!...''

ஊர் நாட்டாண்மைத் தேவருக்கு மூச்சு வாங்கியது; பேச்சு பின் வாங்கியது.

கார்த்திகைப் பனி மூட்டத்தில் கணப்பின் சந்நிதியில் குளிர் காய்கிற மன உணர்வை அடைந்தான் வீரமணி; உணக்கையாய் இருந்தது. சுறுசுறுப்போடு நிமிர்ந்து அமர்ந்து கொண்டான். காவிரித் தரணியாம் தஞ்சையிலே தேர்வின் தீர்ப்பை நாளிதழ் வாய் மூலமாக அவன் அறிவதற்குள் அவன் அனுபவித்த தொல்லைகள் மீண்டன.

''வீரமணி!''

''ஊம்; பேசுங்க அப்பா!''

''தம்பி, உன்னைத் தவம் இருந்து, விரதம் பிடிச்சு,முந்நூறு நாள் சுமந்து பெற்ற புண்ணியவதி வள்ளியம்மை இருந்த வரைக்கும் இந்த வீட்டிலே மகாலட்சுமி அல்லும் பகலும் கொழிச்சுக்கிட்டே இருந்தாப்பா. ஒரு முட்டு முடை ஏற்பட்டது கிடையவே கிடையாது. வானம் பார்த்த பூமியானாலும் வெள்ளாமை விளைச்சலுக்குப் பாடு வந்தது இல்லை; மகசூல் கையைக் கடிச்சது கிடையாது. காலம் மானமாய் ஓடிச்சு. உன் ஆத்தா செத்துச்சிவலோகம் பறிஞ்சா. அப்பவே பிடிச்சது சனியன். பொய் இல்லே! முன்னே ஒரு தரம் செப்பினுப்பிலே, அந்தச் சீதேவியோடே சகலமுமே போயிடுச்சு!—வயல் காட்டிலே வாரத் தகராறு, குத்தகைச் சங்கடம் அது

இதுன்னு அக்கம் பக்கம் முளைச்சதாட்டம் நம்ப சம்பந்தத்திலேயும் தொல்லைகள் சகட்டு மேனியாய் கலாட்டா பண்ணிடுச்சு. வயலிலே களை முளைச் சாக்க, களை எடுத்து மருந்தடிச்சு, உரம் தூவிப் பயிர் பச்சையைப் பேணிக் கண்காணிக்கிறோமே, அப்படி நம்ப குடும்பத்தையும்—செய்நேர்த்தி பண்ணத் துவங்கினேன்...! எலுமிச்சம்மன் கம்மாய் உள் வாயிலே இருந்த நம்பளுக்குக் குடிக்காணியாட்சிப் பாத்தியம் கொண்ட நிலங்கள் அல்லாத்தையும் சீராக்கி, சொந்தப் பண்ணை வச்சுச் சோதிச்சுப் பார்த்தேன். அந்த நடவடிக்கை, முடிஞ்ச முடிவிலே என்னைக் காலை வாரி விட்டு என்னையே சோதிச்சுப் புடுச்சு!... உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்கிற வாசகம் பொய் யாகல்லே. இது சம்பந்தமான காரியங்களுக்கு, தாய் வீட்டிலே இருந்த இரும்புப் பெட்டகத்திலே அழகு காட்டின காசுமாலை, மகர கண்டி முதலான நகை நட்டுக்கள் பலியாச்சு!...''

பெரு மூச்சோடு நெட்டி பறித்தார் பெரியவர்; தொடர்ந்த பேச்சுக்குத் தொடர் சேர்க்க எத்தனம் செய்தார்:

''வீரமணி, எட்டுக் கண் விட்டெரிய நாம கொடிகட்டி வாழ்ந்த கதைக்கு மையத்திலே 'ஏழரை நாட்டான்' சனி கன்னக்கோல் வச்சுப் புகுந்துக் கிட்ட சோகத்தை உன்னிப்பாய்க் காதிலே வாங்கிக்கப்பா!... நெற்றி வேர்வை நிலத்திலே சிந்த, மண்ணை நம்பி மண்ணிலே மனசைப் பதிச்சு,

ராத்திரி-பகல்னு பார்க்காமல் உழைச்ச உழைப்பு நல்ல பலன் காண்பிக்கல்லே! விழலுக்கு இறைச்ச நீராச்சு. இதுக்கு ஊடேதான் நீ உன் சின்னப் படிப்பைப் பட்டுக்கோட்டையிலே முடிச்சே. பெரிய படிப்புக்கு விவசாயத்தைப் படிச்சுக்கிட வேணும்னு மண்ணு பேரிலே உனக்கு இருந்த பாசத்தினாலே நீ சொன்னே!...

"தம்பி, இந்தக் காலக் கட்டத்திலேதான் நம்ப ஆவணத்தான் கோட்டையிலே உன் அம்மான் ராமையாத்தேவனைக் காரணமாய்க் கொண்டு கட்சி முளைச்சு ஊர் ரெண்டு பட நேர்ந்திச்சு. ஊர்க்கார வாரிலே அம்பலம் பண்ணிக்கிட்டிருந்த பெரியட்டான் புரத்துக்காரங்க குடி வரி தண்ட உன்னோட அம்மான் வீட்டை பாதிச் சாமத்திலே தட்டியிருக்காங்க. அக்கரைச் சீமையிலிருந்து பசையும் பச் சாப்புமாய் ராமையா வந்திருந்த புதுசு. வரி கேட்க வந்தவங்க அகராதி படிக்கவே, இவனுக்கு மூக்குக்கு மேலே கோபம் புட்டுக்கிட்டு வந்திருக்குது. ரெண்டு தரப்புக்கும் பேச்சுத் தடிச்சு, கை கலப்பும் மூண்டுச்சு. கூடப் பிறந்த அக்காளை எனக்குக் கட்டிக் கொடுத்தவன் ராமையா. அவனோட மானத்துக்கு ஈனமோ, வில்லங்கமோ வந்தால் என் நெஞ்சு பொறுக்குமா? பொறுக்கல்லே, தம்பி! அவன் மானத்தைக் காக்க, நான் களத்திலே குதிச்சேன். நம்ம மேலக் குடியிருப்பு ஒரு கட்சியும் கீழக் குடியிருப்பு இன்னொரு கட்சியுமாகப் பிரிஞ்சுது. ஊர்ச் சண்டை அறந்தாங்கித் தாணா மட்டுக்கும் நீண்டு, கச்சேரியையும் எட்டிடுச்சு. ரோசமும் வீம்பும்

கொண்டுளன்கைப் பணத்தையும் தண்ணியாய் வாரி இறைச்சேன். கட்சி சேர்க்க வேணுமா? ஆளுங் களைக் கூட்டித் திரட்டிக் கச்சை கட்ட வேணுமா? இதுசமயம், ராமையாகிட்டே கடன் உடன் வாங் கத் தலையெடுத்தாச்சு. உன் படிப்பை உத்தேசிச்சு முதலிலே நீ கோயம்புத்தூருக்கு அலைஞ்சு, கடை சிலே சிதம்பரத்திலே திகைஞ்சுது உன் பட்டப் படிப்பு; அந்தப் படிப்பை உத்தேசிச்சும் ராமையா கிட்டே ஒரு நம்பிக்கையோட நாலைஞ்சு வருசம் கடன் பட நேர்ந்திடுச்சு. என் கிட்டே கொடுக்காத ரூபாய் ரெண்டாயிரத்துக்கும் சேர்த்து, நையம் பாடி என்னை நோட்டெழுதித் தரச் சொல்லிட்டு, மறு நாள் முதல் காளாஞ்சி விசயமாய் நியாயத்தை முன்னிட்டு அவனுக்குப் பாதகமாய் நான் நின்ன கோபத்திலே, என் பேரிலே அநியாயமாகக் கோபப் பட்டான். முடிஞ்ச முடிவிலே, என்னைப் பிராது பண்ணித் தனக்குச் சாதகமாய்த் தீர்ப்பையும் 'நிறைவேற்றி' வாங்கி வச்சுக்கிட்டான் அவன்!...

''வீரமணி! அந்த நாளையிலே உன் தாய் மாமன் ராமையாவோட மானம், மரியாதையை நிலைநிறுத் திக் காப்பாத்த வேண்டி, அவனுக்காக நான் என் தலையைக் கொடுத்தேன். அந்த நன்றியைக் கூட மறந்திட்டான் அந்தப் படுபாவி! ரோசம் கெட்ட வன், இப்போ தன்னோட பரம வைரிகளோடே ராசி யாகிக் கூடிக்கிட்டான்! மானங் கெட்ட ராமையாப் பயல் என் மானத்தை வாங்கப் போறானும்! மனப் பால் குடிக்கிறான்!...சாலைச் சந்தியிலே சவடால் பேசலையா அவன்? அந்த நயவஞ்சகப் பாவி எப்படிப்

பட்ட சூதோடு அப்படிச் சவால் விட்டிருப்பான் என்கிற துப்புக் கூடவா எனக்குப் புரியாது? பாவியிலேயும் பாவி, பைத்தியக்கார பாவி!...பரம்பரை பரம்பரையாய் உசிருக்கும் மேலாகக் கட்டிக் காத்துகிட்டு வருற நம்ப குடும்பத்து மானத்தை—மரியாதையை— கவுரவத்தைப் பங்கப்படுத்தறதுக்கு இந்தப் போகுடிப்பயலுக்கு வயது போதுமாக்கும்? நாறப் பொட்டச்சி செங்கமலச் சிறுக்கி பின்னுடி அலைஞ்சு திரிகிற இவனோட சுரணை கெட்ட மானத்தை இவனோட தட்டுக் கெட்ட பணமா நாளைக்கு காப்பாத்தப் போகுதாம்? ...நான் மட்டும் உயிர் தரிச்சிருந்தேனுனல், என்னைச் சோதிக்க நினைக்கிற அந்தக் கிராதகன் ராமையாவுக்கு ஈரலிலே பித்தா, இல்லே, எலும்பிலேதான் பித்தா அப்படின்னு ஒரு கை பார்க்காமலா இருப்பேன்?...''

கருக்கரிவாள் மீசையை எத்துணை ரோசத்துடனும் ஆத்திரத்துடனும் முறுக்கிவிட்டுக் கொண்டிருக்கிறார் தேவர்!...

வீரமணியின் மனக்கொதிப்பு அடங்கவில்லை. பற்கள் ஒன்றோடொன்று உராய்ந்து மோதிக் கொண்ட சத்தமும் ஓயக் காணோம். சுருள் முடிகளை இடது கை விரல்களால் கோதி நெருடி விட்டான். வலது கையிலிருந்த தமிழரசியின் கடிதத்தைச் சுற்றின நினைவையே அவன் மறந்து விட்டான் போலும்!

இளைஞர் சங்கத்தை அடுத்திருந்த ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் புறப்பட்ட மணி

யொலி வடக்கில் தொடங்கி, மேற்கே மறுகி மிதந்து வந்து கொண்டிருக்கிறது.

காசி, பெருங்காய டப்பாவும் கையுமாக வந்தார். ஆடுகல் இடுக்கில் ஒளிந்திருந்த தம்பிக் கோட்டை வீச்சரிவாளைத் தேடிப்பிடித்து, கைப்பிடியைத் தாங்கிப் பெருங்காயத்தைத் துண்டு பண்ணினார். பெருங்காய வாசனையை நுகர்ந்தவராக எழுந்தார். ''சோறு வடிச்சாயிடுச்சுங்க, ஐயா!'' என்று சேதி தெரிவித்தார்.

''சோறு வடிச்சிட்டா, சாப்பிடறதுதானே, காசி?'' என்றார் பெரியவர்.

வீரமணி சிரிக்க முயன்றான்.

''தலை இருக்க வாலை ஆடச் சொல்லுறீகளா' பெரியவுகளே! என் சாப்பாட்டுக்கா இப்போ அவதி? நீங்களும் சின்னவரும் காலா காலத்திலே சாப்பாட்டை முடிச்சிக்கிட்டா, அது போதுமுங்க. ரெண்டு மாமாங்கத்துக்குக் கிட்டே உங்க நிழலிலேயே அண்டிக் கிடக்கிற கால்படிஅரிசிஆத்மா இது. என் சோற்றைக் குறளியா கொண்டு போயிடும்? சரி, எந்திருங்க. மத்தியான்னச் சாப்பாடு முடிஞ்சு பள்ளிக்கூடம் கூடத் தொடங்கியிருச்சுங்க,'' என்றார் சமையல் காசி. ''நான் போய், தக்காளி ரசத்துக்கு ரவை பெருங்காயம் போடணும்,'' என்றும் கூறினார்.

புகையிலைச் சக்கையைக் காறி உமிழ்ந்தார் முதிய மனிதர். பெருங்காயத்தின் நெடி அவருக்கு

இதமளித்திருக்கலாம். பெருங்காயம் வைத்திருந்த பாண்டம் அவர் சிந்தனையில் ஆலவட்டம் சுற்றியதோ, என்னவோ?—“தம்பி, மூச்சுள்ள மட்டும் பேச்சு மாளாது. ஏந்திரு. சோறு உண்ணுவோம். நாம் ஒரு வேளை கூடப் பட்டினி கிடக்க உன் ஆத்தா மகராசி சம்மதிக்க மாட்டா; காசியும் அப்படித் தான்!'' என்றார். பின்னர், முகத்தில் ஒரு தெளிவைக் காட்டி மைந்தனை நோக்கி விழித்தார். ''தம்பி, உனக்குப் பிடிக்குமேன்னு வத்தல் குழம்பு ஆக்கச் சொன்னேன். பூண்டுப் பல் உண்டனவே போட்டிருப்பான் காசி. நித்திலி கச்சப் பொடியை மசாலா தூவி வறுத்திருப்பான். என் பாடு வேட்டைதான். உன் பேரைச் சொல்லி நானும் மூக்குப் பிடிக்கச் சாப்பிடப் போறேன்!'' என்றார்.

வீரமணி பதனமாக முறுவல் அணிந்தான். இடுக்கண் இடை விளைந்த பூஞ்சிரிப்பு. துன்பத்திற்கு மத்தியில் அவனால் சிரித்திட முடிகிறது!— வள்ளுவர் வல்லவர்!

''தம்பி, நீ போய்ச் சிதம்பரம் கடுதாசியை நிதானமாய்ப் படிச்சிட்டு வா. அதுக்குள்ளே நான் மூஞ்சி கழுவி, சாமி கும்பிட்டுட்டு வந்திட்றேன். நாம ரெண்டு பேரும் சுடுசோறு சாப்பிடலாம். அந்திக் கட்டுக்குள்ளாற நான் சிலட்டூர் அரிதி போய், போனதும் வந்ததுமாய்த் திரும்பியாகணும்,'' என்று குறிப்புத் தந்தார், தேவர்.

ஆடும் சிதம்பரத்தினின்றும் ஆடாமல் அசையாமல் வந்து, இப்பொழுது ஆடியசைந்த மணிய

மாய்த் தன் கை விரல்களிலே காட்சியளித்த உறைக் கடிதத்தை—உறைகிழிக்கப்பட்டிருந்த கடிதத்தைப் படித்துப் பார்க்க முனைந்தான் வீரமணி.

''அன்பிற்கினிய அன்பர் திருமிகு வீரமணி அவர்கட்கு,

அஞ்சலிகள்.

'காதல் ஓர் எழிற்கனவு' என்று ஒரு நாவலாசிரியர் குறிப்பிட்டிருந்ததை நான் நாளும் பொழுதும் நினைத்துக் கொள்வது உண்டு.

காதல் மாதிரியே, காலமும் ஒரு அழகான கனவுதான். கனவுக்கு அழகு கூட்டி, அழகுக்குக் கனவு காட்டும் காரணத்தினால்தான், காலத்தை எழிற்கனவு என்று குறிப்பிட்டேன் நான்.

நீங்களும் நானும் நட்பின் பின்னணியிலே அன்பின் பெயரால் பின்னிப் பிணைந்திருக்கும் சக்திக்கு—மகத்தான சக்திக்கு 'அன்பு' என்று மட்டுந்தான் பெயர் சூட்டப் போகிறீர்களா?-அப்படியேதான் காலமும் சொல்லிக் காட்ட வேண்டுமா?

'அன்பு எதையும் கேட்காது; கொடுக்கவே செய்யும்!'-இது அண்ணலின் அமுத மொழி.

நம் இருவரைப் பொறுத்த அளவிலே, என் அன்பு கொடுக்கத் தவம் இருக்கிறது.

ஆனால், உங்கள் அன்பு எதையும் என்னிடம் கேட்டால்தானே?...

ஆகவேதான், நட்பின் பெயரால் உங்களிடம் அன்பைக் கேட்கிறேன். எனக்குரிய அந்த அன்பைக் கேட்கிறேன்.

அண்ணாமலைப் பூவெளியிலே நாம் சந்தித்திருக்கின்றோம்.

தில்லைப் பெருவெளியிலே பேசியிருக்கிறோம்.

இதுகாறும் வாய்விட்டுப் பேசிய நாம் இருவரும் இனி மனம் விட்டுப் பேச வேண்டாமா?

நான் பேசிவிட்டேன்.

இனி, தாங்கள்தான் பேச வேண்டும்.

உங்கள் அன்பைப் பேசச் சொல்லிக் கேட்க வேண்டுமெனக் கனவு காண்கிறது என் அன்பு.

அன்பைத் தாருங்கள்.

பதிலையும் தாருங்கள்.

தங்கள் அன்பு மறவாத
ராம. தமிழரசி."

பின் குறிப்பு:

கிண்டித் தொழிற்பேட்டையில், ஆகஸ்ட் இருபதில் இயங்கவிருக்கின்ற எங்களின் பென்சில் தொழிற்சாலைக்குத் தங்களது ஒத்துழைப்புக் கிடைக்குமேயானால், நான் மட்டுமல்ல, என் அருமைத் தந்தையாரும் மகிழ்வார்கள். அன்புக்கு அன்பு பரிவர்த்தனை என்கிற தார்மீக அடிப்படையி

லேயே இவ்வேண்டுதலை மறுபடி விடுத்துள்ளேன். மற்றப்படி, இதற்கு 'பண்ட மாற்று' அந்தஸ்து ஏதும் கொடுக்கவில்லை நான். தாங்களும் கொடுக்கலாகாது. அன்புப் பதிலை என்னோடு அப்பாவும் ஆவலோடு எதிர்பார்ப்பாராம்!

—தமிழரசி.''

உயிர் நிலையாக இயங்கின அன்போடு கடிதத்தைப் படித்து முடித்தான்; அழகிற்கு அரசியான தமிழரசி அன்பிற்கு அரசி என்பதை அவன் தத்ரூபமாக அறிந்திருக்கின்றான். அவள் தமிழுக்கும் அரசி தான் என்ற உண்மையை இப்பொழுது வீரமணி அறிந்தான். அவள் கடிதத்தை அவனுடைய இலக்கிய ரசிப்பு மனம் வெகுவாக நேசித்தது. கடிதத்தில் அவள் அள்ளிச் சொரிந்திருந்த அள்ளக் குறையாத அன்பைப் பெரிதும் பாராட்டினான். 'ஆனால், அக்கடிதத்தில் குமாரி தமிழரசி பேசாமல் பேசியிருக்கும் அந்தப் பேச்சுக்குப் பொருள் என்ன? அந்தப் பொருளுக்கு விடை என்ன? விடையை யார் சொல்ல வேண்டும்? நான் அல்லவா?—நான் என்ன விடை சொல்லுவேன்? என்ன மறுமொழி கூற வேண்டும் நான்? ஓ...! தமிழரசி என்னைக் காதலிக்கிறாள்.!'...விழிகளின் ஈரம் இதழ்களைச் சுட்டிருக்கலாமோ?

"தம்பி, வா...வா!''

ஆதிமூலம் ருசித்துச் சுவைத்து உணவு கொண்டார். நடந்த நடப்புக்கள் சகலத்தையும்

மறந்து விட்டவர் போல ஒரு கணம் தோன்றினார். நடந்த கதை எதையுமே அவர் மறக்கவில்லை என்று சுட்டும் வகையில் மறுகணம் அவர் காணப்பட்டார். ஆனால் அவரது நாட்டமெல்லாம் இப்போது சாப்பாட்டில்தான்.

"இன்னம் ஒருவாட்டி மட்டும் பூண்டுக் குழம்பு ஊத்தட்டுங்களா?"

"ஆத்தாடியோ! தாங்காது!...தாங்காது!"

"தம்பிக்கு?..."

"வேணும்...வேணும்!"

"நான் கிழம் கட்டை; உறைப்பு தாளாது. நீ வயசுப் பிள்ளை. அதிலேயும் உனக்குத்தான் உறைப்பு ஏகமாய்ப் பிடிக்குமே?"

"சரிங்க; கொஞ்சமாய் ஊத்துங்க, காசி"

"தக்காளி ரசத்தில் உப்பு முனைப்பாம்; பெருங்காயம் தூக்கலாம்!"

காசிக்கு முகத்தில் ஈ ஆடவில்லை.

கட்டித் தயிரும் வடுமாங்காய் ஊறுகாயும் என்றால் இருவருக்குமே நிரம்பவும் பிடித்தம். ஒரு பிடி சாதம் கூடுதலாகவே செல்லும்.

"ஆவன்னா-தீனா!"

வெண்கலக் கடைக்குள் புகுந்த யானைக்கு முன்னே வரும் மணியோசையாகக் குரலை முன்னே

அனுப்பிவிட்டு, பின்னே வந்தார் செட்டித் தெரு நல்ல தம்பிச் செட்டியார். அவர் குரல் மணியடித்த தற்கு மாற்றாகக் கேட்கும். ஆனால் அவரை யானை என்று பல்மேல் பல்போட்டு நாக்கில் நரம்பின்றிச் சொல்ல முடியுமா? ஒரு சிதம்பர ரகசியம் உண்டு. அவர் குடைவள்ளல். வீட்டை விட்டு வெள்ளோட்டம் புறப்பட்ட குடை வீடு சேர்ந்தால் தான் உண்டு! உஸ்......!

"யாரு, நாணுவா? வாங்க. இப்பத்தான் உங்களைப்பத்தி நெனைச்சேன். உங்களுக்கு ஆயுசு நூறுங்க!"

"திருவாளர் தர்மர்-அதாகப்பட்டது, எம தர்மர் ஏமாந்திருந்தால், எனக்கு சர்வ நிச்சயமாய் நூறு வயசுதான். ஆனா நடப்பு வயசு அம்பத்தி நாலேதான்!"-லேவாதேவிச் செட்டியார் பல்லெல்லாம் தெரியக் காட்டினார். தேவை இல்லை.

"குழந்தை குட்டிங்க சுகம்தானே?"

"அதுக சிவப்பு முக்கோணத்துக்குள்ளே நல்ல சுகம்தாங்க!"

"இலை போடச் சொல்றேன். கை நனைங்க. கவுச்சிகூட புழங்குது," என்றார் தேவர். நல்லதம்பியின் பூடகமான குடும்ப நலக் குறிப்பில் எழுந்த ரசனை மாறவில்லைதான்!

"வாரப்பதான் சாப்பிட்டு வந்தேன். ஈரல் கறின்னு எங்க ராசாவுக்கும் ராணிக்கும் ரொம்ப ஆசை. உங்க சாப்பாடு ஓடியா போகப் போகுது?

ஊங்க சோற்றைச் சாப்பிடாதவுக பாவம் செஞ்சவங்களாச்சுங்களே, தேவர் ஐயா!''

''அதெல்லாம் பழங்கதைங்க, செட்டியாரே!''

''நல்லாச் சொன்னீகளே? தருமத்துக்கும் பழங்கதை என்ன, புதுக்கதை என்ன?—தர்மம்னு தர்மம்தானுங்களே? ரெண்டு கையும் பத்தாமல் செஞ்ச குடும்பமாச்சுங்களே இது?''

தேவர் மெய்யுணர்ந்து களேயோடு சிரிக்கலானார். வட்டிலே விட்டு எழுந்தார். ''இந்தா வந்திட்டேனுங்க,'' என்று சொல்லி அண்டாவை நாடினார்.

நல்லதம்பி பதற்றம் நீங்க முந்திக் கொண்டு, பெரியவரின் சிறு கரங்களைப் பரிவுடன் பற்றி ''வட்டிச் சோத்தைத் துட்டி வச்சிட்டா ஏந்திருப்பீங்க? எனக்குச் சமாதானப்படாது. கப்பலுக்கா பயணம்படப் போறேன்? இல்லே. எனக்குத் தலைபோற அவசரமா, என்ன?'' என்றார்.

''தலைபோற அவசரத்துக்கு நோட்டு சாட்டு கூடப் பூரிக்காமல், வெறும் நம்பிக்கையின் பேரிலே கைமாற்றுத் தோதாய் கொடுத்தீங்களே நீங்க? நான் மறக்க ஏலுமா? நீங்க கொடுத்த ஐநூறு ரூபாய்க் காசைக் கொண்டுதானுங்களே நாலு தாக்குக் கடலைக் கொல்லையிலே பீப்பாய் மூலம் தண்ணி அடிச்சி, பூச்சி பொட்டு அரிச்சது போக, மிச்சம் சொச்சத்தை அரிச்சு எடுத்து உருவாக்க முடிஞ்சதுங்க?......'' நன்றி மறக்காமல் பேசினார். சுத்தமாகச் சாப்பிட்டுவிட்டு எழுந்தார் தேவர்.

வீரமணி, கைகழுவி வந்த தந்தையை நெருங்கினான்; இடுப்பில் செருகியிருந்த பொட்டலத்தை எடுத்தான். "இதிலே தஞ்சாவூர்ப் பயணச் செலவுச் சீட்டையும் மீதிப்பணமும் இருக்குதுங்க," என்று நீட்டினான்; முகப்புப் பக்கம் நாடினான்.

இருப்புப் பெட்டகச் சாவியும் கையுமாக மீண்டார் பெரியவர்.

"ஆவன்னா-தினாவுக்கில்லே!... நீங்க பிள்ளை வளர்த்ததாட்டம் அத்தனை பாசத்தோடவும் அம்புட்டுக் கண்டிப்போடவும் வேறே யாராலேங்க வளர்க்க முடியும்? உங்க மாதிரி ஒருத்தர் இந்தச் சுற்றுவட்டம் பதினாறு ஊர்ப் புறத்திலேயும் இனிமேல் பிறந்து தலையெடுத்தால்தான் உண்டு. மறு தாரம் கல்யாணம் பண்ணிக்கிட்டா, வீட்டுக்கு வருற புண்ணியவதி இந்தத் தாயில்லாப் பிள்ளையை ஓரவஞ்சனையாய் நடத்தி, இந்தப் பிள்ளை கண்ணைக் கசக்க நேர்ந்தா என்ன ஆகிறது என்கிற அந்த ஒரே கவலையிலே தானுங்களே, அந்த நாளையிலே உச்சத்திலே ஆனப்பகூட நீங்க ரெண்டாந்தாரம் கட்டிக்கிட ஒப்பவே மாட்டேன்னு வைராக்கியமாய் மறுதளிச்சிட்டீங்க? உங்க ரோசமும் வைராக்கியமும் ஊரறிஞ்சதாச்சுங்களே? என்னமோ, காலம் வெல்லலே!—உங்க இஷ்டப் பிரகாரம் ஒரு நல்ல மருமகள் நாளைக்கு வந்து சேர்ந்திட்டா, முன்னை மாதிரி மறுபடியும் இந்த வீடு விளக்கெரிஞ்சு, சீரும் சிறப்புமாய் விளங்கக் குறியா பார்க்க வேணும்?" என்றார் நல்லதம்பி.

"நூற்றிலே ஒரு தாக்கல் தானுங்க, நல்ல தம்பி என் வீட்டிலே காலடி எடுத்து வைக்கிறதுக்குத் தகுதி படைச்ச ஒரு மருமகள் சம்பந்தமாய்த்தான் நானும் யோசிச்சுக்கிட்டிருக்கேன். ஆவணியிலே அந்த நல்ல காரியம் முடிஞ்சுதின்னு, நீங்க சொன்னாப்பிலே முன்னே எங்க வள்ளியம்மை ஆளுறப்ப இந்த வீடு பூத்துக் குலுங்கினது கணக்கிலே, மறுபடியும் சிதேவி சிரிச்சுத் 'தன்னானே—தன்னானே' என்று கும்மி கொட்ட ஆரம்பிச்சிடுவாள்னுதான் எனக்கும் நல்ல நம்பிக்கை கைகூடி இருக்குது!"

"உங்க நல்ல மனசுக்கு நல்லது கட்டாயம் நடந்தே திரும். மகமாயி நல்ல விளக்கைச் சத்தியமாய் ஏற்றி வச்சிடுவாங்க, ஐயா!"

தேவரின் இமைகள் நனைந்தன. சூன்யத்தை நோக்கி அவருடைய நலிந்து மெலிந்த கைகள் குவிந்தன. பிரார்த்தனைக்குக் காணிக்கை வேண்டும்; முத்துக்கள் சிதறின. தன் நிலை எய்தினார். விரலிடுக்கில் ஒடுங்கியிருந்த நோட்டுக் கற்றையை நீட்டினார். "செட்டியார் ஐயா, உங்க கையிலே கைமாற்றி வாங்கின கடன் ரூபாய் ஐநூறும் இருக்கு. எண்ணிப் பார்த்துக்கிடுங்க. எல்லாம் அசல் நோட்டுங்க. சரி பார்த்துக்கிடணும்," என்றார். பிறகு, வலது கை உள்ளங்கையில் ஒளிந்திருந்த பத்து ரூபாய்த் தாளை நீட்டி, "ஆனி முதல் தேதிக் கடுத்தத்திலே கடன் தந்தீங்க. இன்னைக்கு ஆடி முதல்நாள். ஆக, ஒரு மாசத்துக்கு உண்டான நடைமுறை வட்டியை

எடுத்துக்கிட்டுப் பாக்கியைத் தரணும்,'' என்று நிறுத்தினர்.

நல்லதம்பி பணத்தை ஒரு தரத்துக்கு இரண்டு தரமாக எண்ணிச் சரி பார்த்து மடியில் வைத்துக் கொண்டபின், ஏறிட்டு விழித்தார். ''நம்பளுக் குள்ளே வட்டிவாசிப் பேச்சு வரலாமுங்களா? அடி நாளிலே ஆபத்துச் சம்பத்துக்கு எனக்கு உதவலீங் களா? புதுப் பணக்காரர் ராமையாத் தேவரிலிருந்து பழைய பணக்காரர் 'சோலன்ஞ மாஞ' வரைக்கும் யார்தான் உங்ககிட்ட கை நீட்டலேங்க? பத்து ரூபாயை ஞாபகத்தோடு உள்ளே வச்சுக்கங்க!'' என்று கூறினர்; தாம்பூலம் தரித்துக் கொண்டு வெளியேறினர், 'கொடுக்கல் வாங்கல்' நல்லதம்பி.

முகப்பில் வாஞெலிப் பெட்டியைத் திருகிக் கொண்டிருந்தான் வீரமணி.

''வீரமணி, வழித் தடத்திலே ஒரு நல்ல தகவல் காதுக்கு எட்டுச்சு. அதுக்குத் தங்களை உங்க அப்பாரும் அனுசரணையாய்ப் பேசிஞங்க. நான் நடைவழியிலே கேள்விப்பட்டது போல, கொள் வினை-கொடுப்பினை நல்லவிதத்தோட கைகூடி, நீங்க உங்க அம்மான் மகள் அன்னக்கொடி கழுத்திலே மூணு முடிச்சுப் போட்டுப்பிட்டால் எவ்வளவோ சிலாக்கியம்தான்!''

வீரமணி வாய் நிரம்ப—மனம் நிரம்பப் புன்னகை புரிந்தான். அவன் முன்னிலையில் கனவின் வட்டம் சுழல ஆரம்பித்தது. கனவுக்கிளி அன்னக் கொடி கனவு காட்டி, அழகு கூட்டி, காலத்தைச்

சுற்றி வளைத்துச் சிரிக்கத் தலைப்பட்ட ரகசியம் அவனுக்குப் புரியாத புதிர் அல்ல; ரகசியமல்ல!

காலம் ஓர் எழிற்கனவுதானா?

அப்படியென்றால், காதலும் ஓர் அழகுக் கனவேதானா?......

6. மௌனம் விடுகதை போடுகிறது!

செஞ்சுடர் செல்வன் இறங்கு முகம் காட்டத் தொடங்கி ஐந்தாறு நாழிகைக்குக் கூடுதலாகவே ஆகியிருக்கும். பனை உச்சிக்குத் தாவியவன், அங்கேயே சதமென்று இருந்து விட்டால், அப்பால், காலம் என்ன ஆவது? கடமை தான் என்ன ஆவதாம்?

கூண்டு வண்டியை ஒழுங்கு படுத்தி, வைக்கோலில் நாலு 'குடங்கை' தூவி வீசி, அதன் மேலே சமுக்காளத்தை விரித்து, வரிசைக் கம்பின் வளைவில் பார்வைக்குத் தட்டுப்படும்படியாகத் தார்க் குச்சியைச் செருகி வைத்தான் வீரமணி. தீவனம் காட்டிய செவலைக் காளைக்குப்பின்னுக்குத் தண்ணீர் காட்டி ஓட்டி வந்து பூட்டினான். மூக்குக் கயிற்றை இருப்பிடச் சட்டத்தில் முடிச்சுப் போட்டு வைத்தான்; வண்டியின் அச்சாணிக்கு 'மசகு' ஊற்றினான். பிளாஸ்டிக் பையில் ஆப்பிள்—சாத்துக்குடிப் பழங்களைப் போட்டுக் கழி முனையில்

மாட்டிஞன். அப்பா புறப்பட வேண்டியது தான் பாக்கி சரி; சிலட்டூரில் அப்பாவுக்கு அப்படி என்ன புது அலுவலாம்? விடுகதையும் புதிரும் அப்பாவைத் துறந்து திரும்பிப் பார்க்காமல் ஓட்டம் பிடிக்க எப்போது 'வேளை' கூடிவருமாம்?...

நல்லதம்பி சற்று முன் சொல்லிச் சென்ற நல்ல சேதி அவனுக்கு வியப்பளித்ததில் வியப்பில்லை. 'என்னோட கல்யாணத்தைப் பற்றின சங்கதி மாப் பிள்ளையான எனக்குத்தெரியாமல், ஊர்க்காட்டிலே சாட்டுத் தீயாய் எப்படிப் பரவுச்சாம்? ஒரு வேளை, இந்தச் சேதி என்னோட அன்னத்துக்குத் தெரிஞ் சிருக்குமோ? நெருப்பு இல்லாமல் புகையுமாஎன்ன? அப்படின்னு, செட்டியார் கேள்விப்பட்ட விசயம் உண்மையேதானு? நான் தெரிஞ்சுக்கிட வேண்டிய மங்களகரமான சமாசாரம் அப்படின்னு மட்டும் தான் அப்பா கோடி காட்டிப் பேசினுங்க. அந்த அளவிலே அந்த மங்களச் செய்தி அநேகமாய் என் கல்யாணத்தை ஒட்டியதாகத்தான் இருந்தாகணும் என்கிறது புரியுது எனக்கு. ஆனு, அப்பா தன் திட்டத்தைப் பற்றி, தன்முடிவைக் குறிச்சு எதொண்ணையும் உடைச்சுப் பேசமட்டேன் என் கிருரே? என் கனவுப் பிரகாரமும் ஊருக்குள்ளாற பேச்சு கிளம்பியிருக்கிறதுக்கு ஒத்தபடியும் என்னோட முறைப் பெண் அன்னமேதானே எனக்கு வாழ்க்கைப்படுவாள்? மனம் இருந்து, வழிபிறந்தாச் சின்னு— எந்த அதிசயக் கூத்துதான் நடக்காமல் தப்ப முடியும்?'—இனம் விளங்காத தவிப்பும், இனம் புரிந்த களிப்பும் அவனை ஆட்டிப் படைத்தன. 'ஒரு

வேளை, எண்ணியது நடக்கவில்லையானுல்?'--இத்தனை ஆண்டுக் காலமாக அல்லும் பகலும் அனவிரதமும் அவன் தன்னுடைய இதயத்தின் அச்சாணி மண்டபத்திலே அன்னக்கொடியாகிய பொற்பின் செல்வியைக் கொலுவைத்து, அழகுபார்த்து, அன்புவைத்து, பாசம் கொண்டு அவளோடு தானும் தன்னேடு அவளுமாகப் பிணைந்தும் இணைந்தும் கனவுத் தேரேறி வெள்ளோட்டம் புறப்பட்டு ஆனந்தத் திருக் கூத்து ஆடி ஆடிப் பழக்கப்பட்டு விட்ட அவனுடைய அதே இதயத்தினின்றும் பொற்பின் செல்வி அன்னக்கொடியைக் கைந்நொடிப்பொழுது கூடப் பிரித்துப்பார்க்க அவனுடைய இதயம் ஒரு போதும் சம்மதிக்காது; சம்மதிக்கவே சம்மதிக்காது என்ற அந்தரங்கத்தை அந்தரங்க சுத்தியோடு உணராத நிமிடம் உண்டா? அறியாத விஞடி உண்டா? அப்பா விடுகதை போட மாட்டார்! நல்லவாக்குக் கொடுக்காமல் இருக்கவே மாட்டார்!

பழங் காலத்தின் ஜப்பான் கடிகாரத்துக்குப் பேசத் தெரியும்! மணி மூன்று!...

வீரமணி பெருமூச்செறிந்தான். அது சுட்டது. மணவினைப் பிரச்சினையும், கடன் சுமைச் சிக்கலும் இரு வேறு முனைகளாகி, களம் ஆகிவிட்டிருந்த அவனது நெஞ்சத்திலே அறப் போராட்டம் நடத்துவதைத் தடுத்துத் தடை போட அவனுக்கு வழி தான் பிடிபடக் காணேம்! பூச்சாண்டி காட்டி அழுத்திக் கொண்டிருக்கும் கடன்சுமையைக் கழிக்க வழி என்ன வைத்திருக்கிருர் அப்பா?—'ஆ...த்... தா...!'

காலடிச் சத்தம் கேட்கிறது!

ஆதிமூலத் தேவர் மயில்கண்சரிகை விசிறி மடிப்பை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வாசற்படியை அடைந்தார். "வீரமணி, உன் சிநேகிதி தமிழரசிக்குப் பதில் போட்டுடு," என்ப தாக வீரமணிக்கு நினைவுபடுத்தினார்.

"அதுக்கு இப்பைக்கு என்னஅப்பா அவசரம்?"

"அப்படிச் சொல்லப்படாது, தம்பி. அன்புக்கு-மெய்யான அன்புக்கு உண்டான குணலட்சணத் திலே ஒண்ணுதான் இந்த அவசரத்தனம்! பாவம், எம்மாம் ஆசையோடே அந்தப் பொண்ணு உன் பதிலை எதிர்பார்த்துக்கிட்டிருக்கும்!"

"அப்படீங்களா? குமாரி தமிழரசிக்கு நான் என்ன பதில் எழுத வேணும்னு நீங்க உத்தரவு போடுறீங்க?"

பெரியவர் வெடிச்சிரிப்பை வெடித்தார். "நல்ல பிள்ளையப்பா நீ! இந்தக் கதை, காரணமெல்லாம் இந்தக் கிழட்டுச் சென்மத்துக்கு விளங்குமா, வீரமணி?" என்று நிதானம் காத்துக் கூறினார்.

"விடுகதை போடுறதும் புதிர் வைக்கிறதும் உங்களுக்கு எவ்வளவு தொலைவுக்குப் பிடிக்குமோ, அதே அளவுக்குக் கேள்வி கேட்கிறதும் சோதனை பண்ணுறதும் உங்களுக்குப் பிடிக்கும்; இல்லீங்களா, அப்பா?" என்று கேட்டுவிட்டுச் சிரிக்க முயன்றான் வீரமணி.

ஆனால், தேவரோ வாய் விட்டுச் சிரித்து விட்டார். ''ஊம், சொல்லு. சொல்ல வேண்டிய தைச் சொல்லிடு,'' என்றார்.

வீரமணி மௌனம் சாதித்தான்.

''வீரமணி, நீ கூடத்தான் இப்போ என்னைக் கேள்வி கேட்டுச் சோதிக்கிறே. மௌனம் சாதிச்சு விடுகதை போடுறே. சிரிக்க எத்தனம் பண்ணி, ஆனா சிரிக்க மாட்டாமல் புதிர் வைக்கிறே. அது போகட்டும். நடப்புத் தாக்கலுக்கு வா!''

''தமிழரசி எனக்குத்தான் லெட்டர் போட்டுச்சு.''

''நல்லாய்த் தெரியும். தெரிஞ்சு தான், என் அருமை மகனுக்கு வந்த தபாலை நான் உடைச்சிப் படிச்சேன்!''

''அதுக்கு உங்களுக்கு இல்லாத உரிமையா? அதைப் பற்றி நான் மூச்சுக் காட்டினேனுங்களா, அப்பா?''

''நான் அப்படி உன் மேலே குற்றப் பத்திரிகை வாசிச்சேனுங்காட்டி?''

அப்பாவிடம் வாய் கொடுத்துத் தப்பிக்க இயலாது! சிரித்துவிட்டான் வீரமணி. ''தமிழரசிக் குக் கடுதாசி போடுறதுக்கு எனக்கு அவகாசம் வேணும்,'' என்றான். சொற்களில் ஒரு வீம்புத்தனம். வீம்பிலே அகம்பாவமும் நீரோடியிருக்குமோ?

"அட, சாமியோ, பேனக்குச்சியை எடுத்து ஒரு வரி கிறுக்கி, கட்டிலே சேர்க்கிறதுக்கு உனக்கு அவகாசம் வேணுமோ? அந்தக் காகிதத்திலே அப்படி என்ன இருக்குதாம்?"

தந்தையின் நமட்டுச் சிரிப்பைக் கண்டவுடன் தனயனின் தலை தாழ்ந்தது.

"அந்தத் துப்பு உங்களுக்கா தெரியாது? முழுப் பூசணியைச் சோற்றிலே மறைக்கப் பார்க்கிறீங்களே, அப்பா?"

"ஆத்தாடி மாரியம்மா! நல்லாச் சோதனை பண்ணிக்க: நான் சோறும் வச்சில்லே; பூசணிக்காயும் என் கையிலே கிடையாது, மகனே!" என்று கைகளை அகல விரித்தார் பெரியவர். தீராத விளையாட்டுப் பிள்ளை மாதிரியான நடிப்பு. "ஊம், இந்தக் காலத்து விடலைங்களோட மனசை யாராலே படிச்சுக்க வாய்க்கும்? அதிலேயும், நீ கோணல் எழுத்துப் படிச்சவன். அத்தோட, நீ அசலூரிலே போய்ப் படிச்ச தங்கமாச்சே, தம்பி?" என்று முடித்தார் அவர். வேர்வையை வருடி விட்டது வேப்பங்காற்று.

உலகமே தெரியாத அப்பாவி மாதிரி நடித்துக் காட்டும் அப்பா எவ்வளவு தந்திரமான விநயத்தோடு வாழைப் பழத்திலே ஊசியை ஏற்றுகிறார்!— "நான் உங்க மகன்; சிதம்பரம் சீமான் வீட்டுச் செல்லப்பெண் தமிழரசிக்குக் கூடிய சீக்கிரம் நான் பதில் எழுதி, அதை உங்க பார்வைக்கு வச்சிட்டு, அப்புறம்தான் நான் தபாலிலே சேர்ப்பேனுங்க,

அப்பா!'' என்று பிள்ளைப் பாசத்தின் கட்டுப்பாட்டுடன் தெரிவித்தான் வீரமணி.

கொட்டி முழக்கத் தேவருக்கு யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. ''ரைட்டு!... நான் போயிட்டு வரட்டுமா?'' என்றார்.

''போயிட்டு வாங்க, அப்பா!''

தார்க் குச்சியும் மூக்குக் கயிறும் கைலாகு கொடுத்துக் கொண்டன.

தேவர் இளம் சிங்கமென நிமிர்ந்தார். செவலையின் வாலைச் சுண்டிவிட்டார். வண்டி திட்டி வாசலைத் தாண்டப் பிரயத்தனம் செய்தபோது, யாரோ எதிர்ப்புறம் விரைந்து வருவதைக் கண்டதும், பிடிகயிற்றை லாவகமாக இழுத்துப் பிடித்துக் கொண்டு மாட்டை அதட்டி நிறுத்தினார்.

வந்தவன் ஊராட்சி மன்றச் சேவகன். அவசரக் கோலம் அள்ளித் தெளித்த போக்கில், தலையின் வேடுகட்டிச் சுற்றியிருந்த கிழிசலை அவிழ்த்துக் கட்கத்தில் திணித்துக் கொண்டான் அவன். தேவருக்குக் கும்பிடு கொடுத்தான். ''தலைவர் ஐயா கண்டுக்கிட்டு வரச் சொன்னாரு. நீங்க இருந்தா, வெளியே தெருவே போகாது கொஞ்ச நாழி வீட்டோடவே இருந்தால் தேவலாம்னு தயவாய்ச் சொல்லச் சொன்னாங்க உங்ககிட்டே. என்னமோ பேச்சு இருக்குதாம். நான் திரும்பினடியும், அவரு இங்கே வந்து விழுந்திடுவாருங்க ஐயா!'' என்று அறிவிப்புக் கொடுத்தான்.

"நல்லா வந்து விழட்டுமே!" என்று சொல்லி வாயெடுத்தார் தேவர். ஆனால், சொற்கள் தொண்டையைத் தாண்டின பாடில்லை. நகைப்பு தாண்டாமல் இல்லை. "அதுக்கென்ன? வரச் சொல்லுவேன்," என்று ஒப்புதல் அளித்தார். சேவகன் தலை மறைந்ததும், வண்டியைப் பின்னேக்கித் திருப்பினார். கொட்டகையில் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கினார். மகன் விசையுடன் வருவதைக் கண்டு, அவர் ஒதுங்கினார். 'பஞ்சாயத்துத் தலைவர் இங்கிட்டாலே தேடி வார திண்ணு, ஒண்ணு ஊர்ப் பொதுக் காரியமாய் இருக்கோணும். இல்லாங்காட்டி, சொந்தக் காரியம் ஏதுனுச்சம் இருக்கும். ஒரு வேளை, ராமையாத் தேவனுக்கு நான் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிற கடன் ரூவா பதினெட்டாயிரம் அன்னியில் நான் கொடுக்கிறதுக்குக் கடமைப்பட்டிருக்காத ரூபாய் இரண்டாயிரத்தையும் அநியாயமாய்ச் சேர்த்து, கடன் கூடுதல் தொகை ரூபாய் இருபதாயிரத்தை வட்டி கூட்டி அவனுக்கு நான் கொடுத்தாக வேணும்னு தீர்ப்பு எழுதி வாங்கி, அவனுக்குச் சாதகமாய்த் தீர்ப்பு நிறைவேற்றியும் வச்சுட்டிருக்கிற தவசல் சம்பந்தமாய் பஞ்சாயத்துத் தலைவர் பஞ்சநாத அம்பலம் மத்தியஸ்தம் செய்யவோ, நல்லது கெட்டது பேசி அம்பலம் பண்ணவோ வருவாரோ?'—நினைவுகள் இருண்டால் என்ன?—அவர் எதையும் சமாளிக்கும் மன வல்லமையோடு தலையை நிமிர்த்தினார். வெளிச்சம் உச்சிக் கபாலத்தில் உறுத்தியது.

ஊராட்சித் தலைவர் வருகை தரும் விவரம் அறிந்ததும், மாட்டுக்காரச் சிறுவன் வேலனைக் கூப்பிட்டு, வெளித் திண்ணையைக் கூட்டி, குப்பையைக் கழிக்கும்படி பணித்தான் வீரமணி. பீரோவிலிருந்த ரத்தினக் கம்பளத்தை எடுத்து வந்து விரித்தான். வேலன் கொணர்ந்த தண்ணீர்ச் செம்பையும் வெற்றிலைத் தட்டையும் இடம் கணித்து வைத்தான். தமிழ்ப் பண்பாட்டில் விளைந்திட்ட இத்தகைய சம்பிரதாயங்கள் பகுத்தறியும் அவன் சிந்தைக்கு இதமளித்திருக்கக் கூடும்.

தேவரின் புருவங்கள் எகிறி உயர்ந்தன.

உலக அரசியலிலே வெறும் வாய்க்கு அசை போட உதவுவது கூட்டுச் சேரும்—அல்லது கூட்டுச் சேராக் கொள்கை வியவகாரம்.

ஆனால், இப்போது கூட்டுச் சேர்ந்த கதம்பச் சிரிப்பின் கனத்த அலைகள் ஆர்ப்பரித்து ஓடிவந்து கொண்டிருக்கின்றன.

''வாங்க, வாங்க, எல்லாரும் வாங்க!'' என்று மலர்ச்சியுடன் கை குவித்துக் கையேந்தி வரவேற்றார் ஆதிமூலத் தேவர். கறுத்த நெற்றியின் விபூதிக் கோடுகளுக்கும் அடியில் அம்பாள் குங்குமம் எடுப்பாகக் கண் சிமிட்டியது. ''பொதுக் காரியம் ஏதாச்சும் காத்திருக்கும்!''—எண்ணினார்.

ஊராட்சித் தலைவர் மட்டும் வரவில்லை. கூட மாட, ஊர்க் கட்சிகளின் நீறுபூத்த பூசல்களைக் கடந்த பிரதிநிதிகளாக கந்தையாச் சேர்வை, காளி

முத்துச் செட்டியார், காமராசன், மதிவாணன், தலைமை ஆசிரியர் தங்கராஜ், டாக்டர் பாஸ்கர் ஆகியோரும் வந்தார்கள்.

வீரமணியும் முகமன் உரைத்தான்.

வந்தவர்கள் அவரவர் பங்குக்குப் பெரியவருக்கு வணக்கம் தெரிவித்த வண்ணம், திண்ணையில் அமர்ந்தார்கள்.

கூனிக் குறுகி உட்கார்ந்திருந்த மதிவாணனைக் கண்டதும், வீரமணிக்கு என்னவோ போலிருந்தது. இரண்டு மாதங்களுக்கு முன், கொள்கை அடிப்படையில் கருத்து மாறுபாடு கொண்டு பகைமை பூண்ட அவன், இப்போது வீடு தேடி வந்திருக்கிறான். உபசரிக்க வேண்டியதுதான், கண்ணியம். "சம் மணம் கோலி விசாலமாய்க் குந்திக்கங்க," என்றான். பட்டப் பரிட்சை எழுதி லீவுக்கு வந்திருந்தபோது, தான் ஒரு மேடையிலும் அவன் எதிர் மேடையிலு மாக ஏறிக் கொள்கை முழக்கம் செய்த நிகழ்ச்சி களை ஊர் மறுப்பதற்கில்லை; மறப்பதற்கில்லை. மதி வாணன் முடிகளைச் சீராக ஒதுக்கிக் கொண்டான். ஹிப்பி நாகரிகம் இந்தப் பட்டிக்காட்டு மண்ணை யாவது தொற்றாமல் விட்டிருக்கலாகாதா? என்ன விட்டகுறையோ? — எங்கே தொட்ட குறையோ?

"மேய்ச்சல் ஓய்ஞ்ச நேரம்ணு, சுடு தண்ணி போட் டிருப்பான் காசி. இப்ப ரெண்டுங்கெட்ட சமயம். தாகத்துக்குச் சாப்பிட்டுட்டு எல்லாரும் வெற்றிலை பாக்குப் போட்டுகிடுங்க" என்று உபசரித்தார் பெரியவர்.

தலைகள் அசைந்தாடின.

தலைவர் இருப்பைத் தூக்கி, வாசல் வெளியை வெறித்துப் பார்த்தார்.

"என்னுங்க அம்பலம், அங்கிட்டுக் கடுசாய்ப் பார்க்கிறீங்க?'' என்று வினவினார் தேவர்.

"உங்க மச்சான் ராமையாத் தேவர் ஒழுங்கை யிலே ஒதுங்கி நிற்கிறாருங்க. அதான் பார்த்தேன்!'' என்றார் அம்பலம்.

"அப்படிங்களா?'' என்று ஆச்சரியமாகக் கேட்டுவிட்டு, வாசற்பக்கம் திருட்டி செலுத்தினார் தேவர். பிறகு திரும்பினார். "நீங்க இத்தனை பேரும் ஒரே தடத்திலே மனசை ஓர்மைப்படுத்திட்டு இப்ப இங்கே ஒண்ணடி மண்ணடியாய்க் கூடியிருக்கை யிலே, ராமையாத் தேவன் மட்டும் ஏன் விலகி நிற் கிறானும்? ஊர்ப் பொதுக்காரியம் சம்பந்தமாய் நீங்க எல்லாரும் வந்திருக்கீங்கன்னு தான் தோணுது. உங்களுக்குள்ள அக்கறை அவனுக்கும் இருக்க வேணுமா?- அக்கரைச் சீமைக்காரன் ஆன தாலே முறைப்பாட்டுக்காரன் மாதிரி ஒதுங்கிக் கிட்டானே? அவன் வினை அவனைச் சுட்டிருக்கும்! ஊம்...ஊருக்கு நல்லது செய்ய முந்திரிக் கொட்டை யாய் முந்தி விதரணையோடவும் விருப்போடவும் ஊர் கூடிச் செக்குத் தள்ளி, நன்மையே செஞ்சு பழக்கப்பட்ட புள்ளி நான். ஆகச்சே, உங்களெல்லோ ரையும் மதிச்சும் ஊர்க் காரியத்தை உத்தேசிச்சும், என்னோட சொந்த விருப்பு வெறுப்பு ரோசம் அது

இதையெல்லாம் எட்டித் தள்ளிப்பிட்டு, நான்போய் புதுப் பணக்காரன் ராமையாவை - புது ரோசக் காரன் ராமையாவை அழைச்சிட்டு வர்றேனுங்க!'' என்று சொல்லிவிட்டுத் தயங்கி நடந்து, பின் நடையில் விரைவு பாய்ச்சி நடந்தார் ஆதிமூலம்.

வழக்குக்கு விரோதமாகக் கோயில் கொண்டிருப்பார் சனீஸ்வர பகவான். அதே பாவனையில், சிலையாக நின்றார் ராமையா. அவர் முகம் சனி மூலையில் வக்கிரமாகத் திசை மாறுகித் திரும்பி யிருந்தது.

"ஏ, ராமையா! வா, என் மண்ணுக்கு!'' என்று அழைத்தார் பெரியவர். பற்றறுத்த துறவும் பண்புகூட அவருக்கு ஆகிவந்த கலையோ?

ராமையா முகம் கொடுத்தால்தானே? - மூச்சுக் காட்டினால் தானே? - மூச்...!

ஆதிமூலம் கொந்தளித்த ஆத்திரத்துக்கு 'அணைகல்' போட்டுக் கொண்டே, வாய் எச்சிலைக் காறி உமிழ்ந்து விட்டுத் திரும்பினார். "பஞ்சநதம்! ராமையா மூஞ்சியைக் கூட திருப்பல்லேங்க. அவன் ரோசம் ஊருக்குத் தெரியாதாக்கும்? ஊம்...என் பாடு விட்டிச்சு. சரி, சரி, வந்த காரியத்தைச் சொல்லுங்க,'' என்று தூண்டில் போட்டார் முதிய நாட்டாண்மைக்காரர்.

"பெரியவுக கொஞ்சம் பொறுமையாய் இருக்க வேணும். நம்ம ஆவணத்தாங் கோட்டைக்கு உயர் நிலைப் பள்ளியும் மருத்துவ மனையும் வாரத்துக்கு

உத்தரவு ஆகியிருக்குதாம். அறந்தாங்கி ஒன்றியத் தலைவர் ராஜன் அவங்க தாக்கல் கொடுத்திருக்காங்க. இந்த இரண்டு பெரிய காரியங்களுக்கும் பெருந்தொகையை ஊர் சார்பிலே திரட்டியாக வேணும். ஒன்றியமும் கை கொடுக்கும். ஆனபடியினாலே, ஊர் நலத்தை எண்ணி; ராமையாத் தேவரும் பேச்சிலே கலந்துக்கிட்டால் உபகாரமாக இருக்கும்னு நான் நம்புறேன்,'' என்று சொன்னார் தலைவர். கதர்ச் சொக்காயைத் தளர்த்தி, அந்தி மாலையை நுகர்ந்தவராக, சிந்தனை வயப்பட்டிருந்த வீரமணியை நோக்கினார் — உள் நோக்கத்தோடு, பிறகு, பெரியவரை எடை போட்டார். சலனமற்றுத் திகழ்ந்த அவரைக் கண்டதும், என்னவோ துணிவுடன் வீரமணியை இலக்கு வைத்து விளித்தார். "தம்பீ, நீங்க தீரத்தெளியப் படிச்சவங்க. நம்ம சமுதாயச் சீரமைப்பிலேயும நம்ப ஊரோட முன்னேற்றத்திலேயும் உங்களுக்கு இருக்கக்கூடிய நல்லெண்ணத்தை நம்பி ஒரு வேண்டுதலை உங்ககிட்டே கேட்டுக்கிடப் போறேன். உங்க தாய் மாமனை நீங்களும் ஒரு வாட்டி அழைச்சுப் பாருங்க,'' என்று வேண்டினார்.

நாகரிகப் பண்பு துலங்க, தலையை இணக்கமாக ஆட்டினான் வீரமணி. நடை பயின்றான். "அம்மான்! ஊர்ப்பொது நன்மையை ரோசத்தோடு மதிச்சு, சமுதாயக் கடமையை மனப்பூர்வமாக உணர்ந்து, அதன் பேரிலே உங்களை எங்க வீட்டுக்கு அழைக்கிறேன்; வாங்க,'' என்று தலையைக் கம்பீரமாக நிமிர்த்திக் கேட்டுக் கொண்டான் அவன்.

என்ன ஆச்சரியம்!

ராமையாத் தேவருக்குக் கூடப் புன்னகை புரியும் வாய் இருக்கிறதே? மூச்சுக் காட்டாமல், மகுடிக்குக் கட்டுப்படாமல் தப்ப முடியாத கருநாகம் போலே, வீரமணியைப் பின் பற்றித் தொடர்ந்தார்! - யார்? -திருமிகு ராமையாத் தேவர்!

திண்ணை பரபரப்பு அடைந்தது.

பஞ்சநதம் அமைதி செழிக்கச் சிரித்தார். "ஊம்; மாப்பிள்ளை கூப்பிட்டுத்தான் மாமன்காரர் வரவேணும்னு இருந்திருக்குது. சரி,சரி. ராமையாத் தேவரே, வெட்கப்படாது நல்லாக் குந்திக்கங்க," என்றார். வெற்றிலைத் தட்டை அவர் பக்கம் நகர்த்தி விட்டார்.

வீரமணி எதிர்த் திண்ணையில் உட்கார்ந்தான். அவன் முகம் தெளிவோடு விளங்கியது.

ஆதிமூலத் தேவர் குரலைப் பான்மையோடு சீராக்கிக் கொண்டு, "வேறே யாரும் வரணுமா? சேரி ஈவுக்கு யாரையும் கண்ணுப்புறத்திலே காணோமே?" என்று நினைவு கூர்ந்து நினைவு ஊட்டினார்.

"நல்லவேளை, மூத்தவுக ஞாபகப்படுத்தினுங்க. ஏலே சன்னாசி, இன்னொரு நடை சேரிக்கு ஓடி, சாம்பானைக் கையோட இட்டுக்கிட்டு வா," என்று ஆணையிட்டார் தலைவர்.

"ஓத்தைக்கடை முக்கத்துக் கள்ளுக்கடையிலே விழுந்து கிடப்பான் சாம்பான்!'' என்றான் மதிவாணன்.

வீரமணி இடைமறித்தான். "சாம்பான் செப்டம்பர் வாக்கிலேருந்து கள்ளுக்கடையை மறந்தாக வேணும் என்கிறது நம்ப அரசோட அதிகாரம். ஆனா, அவர் மே மாசத்திலேயிருந்தே கள்ளை மறந்திட்டார். அவர் நிச்சயமாகப் புது மனிதராக மாறியாச்சு என்கிறதை நீங்களெல்லாம் தாராளமாக நம்பலாம்,'' என்று செய்தி பரப்பினான்.

அவன் சொல்லி வாய் மூடுவதற்குள், அங்கே தோற்றம் தந்தான் சாட்சாத் சாம்பான். "சின்ன முதலாளி செப்பினது ஒட்டுக்கும் சுத்தமுங்க. அவுக தான் இந்த ஏழை பாழையோட கண்ணைத் திறந்து விட்டாங்க! எலும்பு உடைய உழைச்சு, நெஞ்சு உடையாமல் காசு சேர்த்து, நூறுகுழி நஞ்சை வாங்கிப் போட்டேன். அதிலே இம்மாம் பொழுதாய் தொழி உழுதுகிட்டிருந்தேன். கஞ்சிக் கலயம் சுமந்துவந்து எம் பொஞ்சாதி சேதியை விழுக்காட்டிச்சு. ஓடியாரேன்!'' என்றான்; மூச்சு இடறியது.

ஆதிமூலம் பெருமையோடு, "சாம்பான், திண்ணையிலே வந்து குந்திக்க,'' என்று சொன்னார்.

சாம்பானுக்கு இல்லாத இடமா?

கிராமநல ஊழியர் காமராசன் புளகம் அடைந்தார்.

"எனக்குத் தலைக்கு மேலே சோலி இருக்கு: சுருக்கண பேச வேண்டியதைப் பேசிஞல் தேவலாம்," என்று குதிகாலில் வெந்நீரை ஊற்றிக் கொண்டு அவசரப்பட்டார் ராமையா.

ராமையாவின் தலைக்கு மேலே எந்தச் சோலியும் காணப்படாததைக் கண்டு, தனக்குத் தானே நகைத்துக் கொள்ளவும் பெரியவர் தவறி விடவில்லை.

தலைவர் அம்பலம் சுறுசுறுப்புப் பெற்ருர். ஒரு நோட்டை எடுத்து வைத்தார். "நான் சொன்ன ஊர்ப் பொதுக் காரியங்களுக்காக, இதிலே கண்ட பத்துபேர் கொண்ட ஒரு குழு அமைச்சிருக்கோம். இந்தக் குழுதான் உயர்நிலைப் பள்ளி, மருத்துவமனை சம்பந்தமாக கட்டிடம் முதலான செலவுகளுக்கான அன்பளிப்புத் தொகைகளை வசூலிக்க அதிகார பூர்வமான அதிகாரம் கொண்டது. அவங்க அவங்க பேருக்கு அடியிலே, முதலிலே கையொப்பம் செஞ்சிடுங்க." என்று விளக்கலாஞர்.

கையொப்பங்கள் பூர்த்தி பெற்றன.

மீண்டும் தொடர்ந்தார் பஞ்சநாதம்:

"நான் குறிப்பிட்ட ரெண்டு பெரிய காரியங்களுக்கும் குறைந்த பட்சம் இருபத்தையாயிரமாகிலும் நம் ஊர்ப்பங்குக்குத் தேவைப்படும். முதலிலே, நம்பளுக்குள்ளாற, அவங்க அவங்க மனசுப்படி, இந்த நோட்டிலே இனும் தொகைகளைக் குறிச்சிடுவோம். பிறகு, குடிக்கணக்கு வீதப்படி வசூல்

பண்ணுவோம். அப்புறம், அக்கம் பக்கங்களிலேயும் வெளியூர்களிலேயும் ரூபாய் நிதி திரட்டலாம். ஆக, இந்த நல்ல காரியங்களுக்கு நல்லவங்க சகலத்தனே பேரும் தட்டாமல் உதவி செய்வாங்க,'' என்று விவரித்தார். பிறகு ஆதிமூலத் தேவரின் பக்கம் திரும்பி, ''பெரியவுகளே, நீங்கதான் வயசுக்கு மூத்தவங்க. உங்களோட ஆசி வந்த தங்கக் கையினுலே ஒரு தொகையை பிள்ளையார் சுழியாய்ப் போடுங்க,'' என்று தயவுடன் விண்ணப்பித்தார்.

''உங்க விருப்பம் அதுவானுல், அப்படியே செய்யக் காத்திருக்கேன்,'' என்று கூறி, பூரிப்புடன் நோட்டை எடுத்தார் பெரியவர். தம் மகனைப் பார்த்தார். வீரமணியின் நிறைவான மனச் சிரிப்பில் திருப்தி கொண்டார். சில கணங்களை யோசனைக்காகச் செலவழித்தார். கடைசியில் நோட்டின் தலைப்பிலிருந்த தம் பெயருக்கு நேராகத் தொகையை எழுதினுர்.

ஊராட்சி மன்றத்தின் தலைவர், ''மூத்தவுக 'ஆவன்னு தீனு' ஆயிரம் ரூபாய் எழுதியிருக்காங்க,'' என்று மகிழ்வுப் பெருக்குடன் அஞ்சல் செய்தார்.

''நான் ஐயாயிரம் ரூபாய் தாரேன், பிரசிடெண்ட் ஐயா!'' தோள் கொடுக்கு மீசை மீது கை போட்டுக் கருவத்தோடு சொன்னுர் ராமையாத் தேவர்.

அவரவர்கள் தொகை குறித்தார்கள்.

"நானு ஐம்பது ரூவா குடுத்துப்பிட்றேனுங்க, சாமிகளே! விரலுக்கு தக்கதுதாங்க வீக்கம்!'' என்றான் சாம்பான்-மெலிந்தவன்!

கூடியிருந்தோரை வாஞ்சையுடன் பார்த்தார் ஊராட்சி மன்றத் தலைவர். "நீங்க எல்லாரும் உங்க உங்களோட சக்திக்கு உகந்தபடியும் இஷ்ட பிரகாரமும் நன்கொடை போட்டிருக்கீங்க. என் சொந்த முறைமையிலே உங்களுக்கு நன்றி சொல்லிக்கிடுறேன்; என்னோட பங்கு தான் இனி தொடுக்க நிற்குது. என் சூழ்நிலைக்கு ஒத்து, நான் ஐந்நூறு ரூபாய் போட்டுக்கிறேன்!'' என்று தெரியப்படுத்தினார். தொகையை நோட்டிலும் எழுதினார். "ஆவணி பிறந்தானதும், நீங்க சாடா பேரும் சொன்ன சொல்படி அன்பளிப்புத் தொகையைத் தவறாமல் கொடுத்துப்புட வேணும். நானும் கச்சிதமாய்த் தந்திடுவேன். இன்னொண்ணையும் விளம்ப வேணும். வசூலாகக் கூடிய நன்கொடைப் பணத்தை உண்டிப் பெட்டியிலே போட்டுப் பூட்டிச் சாவியோடே நம் பெரியவங்க 'ஆவன்னா- தீனா' கையிலே ஒப்படைச்சி வைப்போம். இந்த லாயக்கான ஏற்பாடு உங்க எல்லாருக்கும் உடன்பாடு தானுங்களே?'' என்று அவர்களை விசாரித்தார் பஞ்சநதம்.

ராமையாத் தேவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் வெளிப்படையான நிறைவுடன் தலையை அசைத்து, 'சரி' சொல்லிச் சம்மதம் கொடுத்தார்கள்.

ஆனால், ராமையாத் தேவர் மறுப்பு எதுவும் சொல்லாமல், மௌனப் பிண்டமாக நகர்ந்து தன்

பக்கம் இருந்த தாம்பூலத் தட்டை, முகச் சுளிப்போடு நகர்த்திவிட்டு எழுந்தார்.

தேவரும், தேவர் மகனும் மட்டிலும்தான் இப்போது மிச்சம்.

விருந்தாடி வந்தது சீதளத் தென்றல்.

வெறுமையைச் சூறையாடி விட்டு, வீர மணியைக் கூப்பிட்டார் தேவர்.

"தம்பி! ஊர்ப் பொதுநலக் காரியம் என்கிறதைத் தொட்டுத்தான் உன் அம்மான் மேலே உள்ள மனச்சடவே, சங்கடம் எல்லாத்தையும் அப்போதைக்கு மறக்கடிச்சிட்டு, பெருந்தன்மையோடே போய் உன் அம்மான் தேவனைக் கூப்பிட்டேன் நான். வரல்லே அவன்!—சின்னப் புத்திக்கார அற்பன் அவன்! வினையும் கூச்சமும் பிடுங்கித் தின்னிருக்கும்! சரி; தலைவர் கெஞ்சுதலாய்ச் சொல்லி, அதன் பேரிலே, நீ உன் அம்மான்காரனை ஒரு சொந்த உரிமையோட 'வாங்க அம்மான்'! அப்படின்னு அழைச்சே. வாய் திறக்காமல் வந்திட்டான். எனக்கே கூட மலைப்புத் தட்டிப் போச்சு தான். அதுவும் சரி. ஆனா, அப்படி அழைச்சு வந்த உன் கிட்டேயாகிலும், அவன் பயணம் கட்டின சமயத்திலே 'போயிட்டு வாரேன், மாப்பிள்ளை!' அப்படின்னு ஒப்பனைக்காச்சும் ஒரு வாய்ப்பேச்சு விழுக்காட்டிட்டுத் தொலைஞ்சானா உன்னோட அம்மான் ராமையா? ஒரு சங்கதி: உன்னையும் என்னையும் சோதனை கைவிலங்காக இறுக்கிக்கட்டிப்

போடாமல் இருக்காதாக்கும்! ஊருக்காக வேண்டி, அப்பனும் மகனும் கீழே விழுந்திட்டு, மீசையிலே மண்ணு ஒட்டலேண்ணு இட்டுக்கட்டிப் பேச வேண்டிய இக்கட்டிலே மாட்டிக்கிட்டு முழிக்கச் சோதிப்பு நேர்ந்தாச்சு! இல்லையாப்பா, வீரமணி?''

மௌனப் பிண்டமென உருமாறி, உருக் கொண்டு, உருக்காட்டும் சோதனைப் பொறுப்பு இச்சமயம் வீரமணியின் தலையிலே சோதனையாய் விடிந்தது போலும்!

ஆனல்......

வீரமணியின் மௌனத்தை-விடுகதைப் புதிரென விளங்கிய மௌனத்தைக் கோழைத்தனம் என்று கருதியோ, அல்லது அசட்டுத்தனம் என்று நினைத்தோ, அல்லது அகம்பாவத்தனம் என்று எண்ணியோ, பெரியவர் ஆதிமூலம் அட்டகாசமாக வும் ஆவேசமாகவும் நிர்த்தாட்சண்யமாகவும் சிரித் தார்; சிரித்தார்; அப்படிச் சிரித்தார்!

7. பாசமெனும் பூவிலங்கு

ஆதிமூலத்தேவர் தமது சிலட்டூர்ப் பயணத்தை ரத்துச் செய்து விட்டார்!

வீரமணி சிலையானன்! தன் தந்தை-அன்பிற்கும் பாசத்துக்கும் உகந்த தந்தை பொங்கு மாங்கட லாக உருமாறி, உருக்கொண்டு உருக்காட்டி, நிர்த் தாட்சண்யமாகவும் அட்டகாசமாகவும் ஆவேச

மாகவும் சிரித்த அந்த நிட்டூரப் புதிர்ச் சிரிப்பின் அலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விடுகதை போட்ட வண்ணம், தன்னுடைய நெஞ்சிலும் நினைவிலும் இன்னமும் எதிரொலித்துக் கொண்டேயிருந்த விந்தையை அவன் இப்போதும் மறக்கவில்லை; எப்போதும் மறக்கவும் மாட்டான்; மறக்கக்கூடிய சிரிப்பன்று அது. ஒரு வேளை, மறக்கக் கூடாதென்றுதான் அப்படிச் சிரித்திருப்பாரோ அப்பா......?

அந்தி மாலை அந்தம் காட்டிச் சந்தம் கூட்டிக் கிளிக்கண்ணி பாடிக் கொண்டிருக்கிறது. மாலையின் மணமும், பாட்டின் நயமும் கூடிவரக் கேட்க வேண்டியதில்லை.

சிலையாக மலைத்துவிட்ட அருமைத் திருக்குமாரனைக் கண்டவுடன் பெரியவரின் தந்தை உள்ளம் நெகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும். கீழ் வெளித்திண்ணையில் அமைக்கப்பட்டிருந்த சிமிட்டித்திண்டில் சாய்ந்திருந்த அவர், மெல்ல மெல்ல மூச்சைக்கூட்டி மெள்ள மெள்ள எழும்பி உட்கார்ந்தார். குடுமி அவிழ்ந்தது. அவிழ்ந்தவாக்கில் தான் காட்சியளித்துக் கொண்டிருந்தது. அன்பு மகனை ஆதரவோடு பார்வையிட்டார் அவர். என்ன நினைத்தாரோ?— குடுமியைக் கோதி முடிந்து கொண்டார். "தம்பி, வீரமணி!" என்று பரிவுடன் கூப்பிட்டார்.

அவ்வளவு தான்!

மறுகணம்:

மௌனத் திரை விலகியது.

ஏறிட்டு விழித்தான் வீரமணி. அப்பா தலையை மூடிந்து கொண்டு விட்டார்!- பரவாயில்லை! குற்றவாளியான அம்மான் ராமையாத் தேவரைத் திரும்பவும் குற்றவாளியாக்கி விட்டு, உடனே கைக்கு மெய்யாக, அவிழ்ந்த குடுமியும், அவிழாத வெஞ்சினமுமாகத் தன் தந்தை பயங்கரமாகச் சிரித்தபோழ்தில், பாரதப்பாஞ்சாலி, முடிக்காத கூந்தலோடு தருமத்தின் பேரால் சபதம் முழக்கிய கதை அவனது இதயத்தைத் தொட்டு நின்ற காட்சியை இப்போதும் நினைவு கூர்ந்தான். அப்பாவின் வைரநெஞ்சம் ஊர் அறியாததா? அப்பா அழைத்தாரே! அப்பா'' என்றான் வீரமணி. அவன் மௌனம் தற்சமயம் புதிர் ஏதும் போடவில்லை. அதற்கு 'ஏதும்' இல்லையோ?

பாசத்தைச் சந்தித்தது பாசம்.

அச்சந்திப்பில், பூவின் மணம் இருந்தது: விலங்கின் இறுக்கம் இருந்தது.

அப்படியென்றால்?...

பாசம் ஒரு பூவிலங்குதானே?...

தேவர் மார்பைப் பிசைந்து விட்டார். குலக் கொழுந்தை என்னவோ ஓர் உட்குறிப்புடன் ஊடுருவினார். ''வீரமணி, சத்த முன்னடி நான் உன்னோட அம்மான் மேலே குற்றப்பத்திரிகை வாசிச்சேனே, அந்தச் சங்கதி உன்னோட மனசான மனசுக்கு

ஒப்பலேயாங்காட்டியும்? அதனுலேதான், என் பேச்சை மதிக்காதவன் கணக்கிலே, பிடிச்சு வச்ச மௌனப்பிண்டமாய்க் குந்திக்கிட்டே இருந்தியாக் கும்? ஊம், இப்பவானும் பதில் பேசு!'' என்று ஆணையிடலானுர்.

வீரமணி அதிர்ச்சியடையாமல் தப்ப முடிய வில்லே. பெற்றவரின் ஆணை அவனை எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணச் செய்து விட்டது. 'அப்பாவோட பாசம் பூவாக மணக்கிறதை விட்டுப்புட்டு, விலங்காக - கைவிலங்காக மாறி, என்னைக் கட்டிப்போடப் பார்க்குதா? என்னை என்ருல், என் கைகளே மட்டிலுமா? இல்லே. என் மனசையும் சேர்த்துக் கட்டிப் போட முனேஞ்சி ருக்குதா? அதனுலே தான், தொட்டதுக்கெல்லாம் தூண்டித் துருவித் துளேச்செடுக்கிருரா? எடுத்ததுக் கெல்லாம் சட்டம் போட்டு மாட்டுகிருரா அப்பா?' பொட்டுப் பொழுதுக்கு அவன் சிந்தனே வசப்பட் டான்; விழித்த சிந்தனேயில் தன்மானம் விழித்தது. கால்விரல் மிஞ்சிகள் கொஞ்ச, சதங்கை முத்தங்கள் முத்தமிட்டுக் கெஞ்ச, அன்னமென வந்தாள். அன்னம்; அன்னம் மின்னலென வந்தாள். அன் னம்!...அம்மான் மகளே!-பூஞ்சிரிப்பு; பூச்சிலிர்ப்பு! சுயப்பிரக்ஞை நரம்பு மீட்டியது. அடடே!. அப்பாவுக்கு இம்முறையும் விடை சொல்லா விட்டால், விசுவாமித்திரராகிவிடப் போகிருர், பாவம்!—"அப்பா!'' என்று கண்டாமணிக் குரல் கொடுத்து வைத்தான் முதலில். பேச்சுக்கு அச்சாரம் அது.

"ஊம்; வேதாளம் மறு வாட்டியும் எங்கிட்டு முருங்கை மரத்திலே ஏறிக்கிட்டிச்சோ அப்படின்னு ரோசிச்சேன். ஊம்; சொல்லு: நான் ஒரே ஞாபகத்திலே தான் குந்திக்கிட்டிருக்கேன். நட்டமே நிற்காமல், நீயும் குந்திக்கிடுவேன்!"

வீரமணியின் நெஞ்சிலும் நினைவிலும் சற்று முன்னம் அன்னக்கொடி விளையாடிய மர்மம் பெரியவருக்கு எங்ஙனம் தெரிந்ததாம்?

செம்மறி மந்தை 'மேய்ச்சல்பாடு' முடிந்து, பட்டியில் தஞ்சம் அடையத் தயாராகி விட்டது.

அப்பா, மகனை ஊடுருவ, மகன் அப்பாவைத் துழாவ, இதுதான் நல்ல சமயமென்று கணங்கள் சில பேய்க்கணங்களாகி நழுவுகின்றன.

"அப்பா, நாம இப்ப இருக்கிறது வேதாள உலகம் இல்லேங்க-தமிழ் உலகம்! தமிழர் உலகம்! தமிழருக்காக வேண்டி ஆண்டுக்கிட்டு இருக்கிற ஜனநாயக உலகம்இது. ஆகச்சே, இங்கே வேதாளத்துக்கோ, அல்லாட்டி, பட்டிக்கோ, இல்லாட்டி, விக்கிரமாதித்த மகாராசருக்கோ அலுவல் கிடையாது. இது மட்டுமில்லே. நம்ப வீட்டு முருங்கை மரத்திலே அசல் வேதாளமே நாலுகால் பாய்ச்சலிலே ஓடியாந்து ரெண்டு தரம் இல்லே, இருபதாயிரம் தரம் வேணுமானாலும் ஏறிச் சோதிச்சுக் கிடட்டும். நம்ப குடும்பம் மாதிரியே நம்ப முருங்கைப் போத்தும் எதையும் தாங்கவும் தாங்குமுங்க! அத்தோட, எதையும் சமாளிக்கவும் சாமளிக்குமாக்கும்!..."

தந்தை மகிழ்வார், சிரிப்பார், பாராட்டுவார் என்பதாக அவன் எதிர்பார்க்கவில்லை.

சரிதான்!

அப்பா மது வீரத்தையும் விட்டுவைக்க விரும்பவில்லை போலிருக்கிறது!—மௌனப்பிண்டமாக வேண்டிய சீட்டு அவர் பெயருக்கு விழுந்தது, இப்பொழுது.

அப்பாவுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்தவன் அல்லவா வீரமணி? ஆகவே, அவனுக்கும் நிர்த்தாட்சண்யமாக- அட்டகாசமாக-ஆவேசமாகச் சிரிக்கத் தெரியும். ஆனால், அவனோ விநயமான அமைதியோடு சிரித்தான்.

''அப்பா, நடப்புத் தாக்கலுக்கு வாரேன். வாழ்க்கையிலே நடந்தது நல்லதானாலும் சரி, கெட்டதானாலும் சரி, அதுங்களை மறுதக்கமும் நினைச்சிப் பார்க்கிறதிலேயோ இல்லாட்டி, சொல்லிப் பார்க்கிறதிலேயோ ஏதாச்சும் ஒரு வகைப் பலாபலன் ஏற்படாமல் தப்பறியாயமில்லே. நல்லதானல், அமைதி ஒட்டிக்கு ரெட்டியாகலாம்; கெட்டதானல் சுமை படிக்குப் பாதியாகும்! மனோ தத்துவம் சொல்லக்கூடிய ராசிபலன் இது! இந்த விதிக்கு அதாகப்பட்டது, சட்டத்துக்கு நீங்களும் விலக்கு விதியாக அமைய முடியல்லே! ராமையா அம்மானுக்கு— அதாவது, ராமையாத் தேவருக்கு நாம பட்டிருக்கிற கடன் விவகாரத்திலே அந்தப் பேர்வழி உங்களை நயவஞ்சகமாய் ஏய்ச்ச சங்கதியை

எங்கிட்டே நீங்க ஆயிரம் தபா சொல்லியிருக்கீங்க! பின்னே, நான் மட்டும் அந்த விதிக்கு விதிவிலக்காக லாமுங்களா?''

வீரமணி மூச்சைத் தொடர்ந்தான், பேச்சைத் தொடர வேண்டியவன் ஆனான்.

''அப்பா, நானும் இப்ப ராமையாத் தேவரைத் தான் தொடப்போறேன். யோகக்காரர். சதா நம்ப வாயிலே அடிப்பட்டுக்கிட்டு இருக்கார். அது தொலையட்டும். எக்கேடு கெட்டுத் தொலையாட்டும்! சரி! ஒண்ணு ஒண்ணரை நாழிகைக்கு முன்னரிக்கே ஊர்ப் பொதுக் காரியம் சம்பந்தமாய் ஊராட்சி மன்றத் தலைவர் நம்ப வீட்டிலே கூட்டம் போட்டாங்க. ஒதுங்கி ஒழுங்கைப் புறத்திலேயே கூச்சப் பட்டு நின்ன ராமையாத் தேவரை நீங்க போய் அழைச்சீங்க. ஆடல்லே; அசையல்லே; எல்லைக் கல்லாய் நின்னார். நான் பறிஞ்சு கூப்பிட நேர்ந்திச்சு. பேசாமல் வந்திட்டார். கூட்ட நாட்டம் முடிஞ்சுது. ஏந்திருச்சுக் கால் பாவினார். போகையிலே, அந்தப் 'புண்ணியவான்' அதாவது, என்னோட அம்மான்-அதாவது, உங்க மச்சான் ஒரு மரியாதை வளமையை அனுசரிச்சாவது, உங்ககிட்டவோ இல்லாட்டி, கடைசிப் பட்சம் என்கிட்டேயோ பயணம் சொல்லிக் கிட்டுத்தான் போயிருக்கவேணும். அதுதான் நாகரிகம். ஆனா அடைச்ச வாய் திறக்காமல், கள்ளத்தனமாய் நழுவி விட்டார். அவரோட அமர்த்தலும் ஆணவமும் உங்களுக்கு எரிச்சல் ஊட்டிச்சு. அம்மான்காரர் பேரிலே நீங்க குற்றம் சாட்டினீங்க; வலியக்

கொடுத்த மரியாதைக்குப் பதில் மரியாதை கிடைக்கல்லேயேன்னு ரோசப்பட்டீங்க நீங்க. அம்மான் மேலே சாட்டின குற்றத்துக்கு நான் ஒண்ணும் வாய் திறக்கக் கிடையாது. மௌனம் சாதிச்சேன்! இது தான் ஒட்டு மொத்தமான நடப்பு. ஆனா, நீங்களோ என்னோட மவுனத்தைக் கண்டு தப்புக் கணக்குப் போட்டுப் புட்டீங்க!''

நெற்றி வேர்வையை நெஞ்சிலேயே கொய்தான் இளவட்டம்.

பெரியவர் காட்டம் கொண்டார். "நான் தப்புக் கணக்குப் போட்டேனா? சே...பொய்! அடி நாளையிலே நீயானும் தப்புக் கணக்குப் போட்டிருக்கே; நான் திருத்திப் படிச்சிக் கொடுத்திருக்கேன். ஆனா, நானோ எங்க அப்பன் போட்ட முந்திரி-மாகாணிக் கணக்குகளைக் கூட கரெக்ட்டாய்ப் போட்டுக் காட்டியிருக்கேனாக்கும்! என்னைப்போய்த் தப்புக் கணக்குப் போட்டவன்னு பழி சாட்டுறீயேப்பா?''

வீரமணிக்குச் சிரிப்பும் வரவில்லை; சிந்தனையும் வரவில்லை.

"மறுகா, உன் மௌனத்துக்கு என்ன அருத்தம்?'' துரும்பைத் தூணாக்கித் துருவினார் தேவர்.

''சம்மதம்னு அர்த்தம். நீங்க ராமையாத் தேவரைக் கிளிக்கூண்டிலே நிறுத்திக் குற்றம் படிச்சது எனக்கும் சம்மதம்னு மௌனத்தின் மூலமாய்ச் சொல்லாமல் சொன்னேனாக்கும்; ஆமாங்க,

அப்பாரே!'' என்று அடக்கம் காத்துச் சமாதானம் சொன்ஞன் தேவர் பாலன்.

கூடிவந்த இந்தப் பொன்னுன வாய்ப்பினைக் கூட்டி வைத்து, பொன்னுன வாயைப் பூப்போலத் திறந்து பூச்சிரிப்பை உதிர்த்தால் என்ன?-பெரியவரின் வாய்முத்து உதிர்ந்து விடுமா, என்ன? -சிறு பொழுதைக் கழித்துவிட்டு, மறுபடி பேச்செடுத்தார்.

''நான் உன்னோட அருமை அம்மான்காரனை நியாயத்தோட ஏசினது உன் மனசுக்கும் நியாயம்னு பட்டிருந்தால், பொட்டுக் கட்டின தாட்டம் பட்டுண்ணு 'ஆமாங்க; நீங்க செப்புறது சரிதான். ராமையதேவர் தப்பிலி என்கிறதுதான் நமக்கு வெட்ட வெளிச்சமாச்சுங்களோ, அப்பா' அப்படின்னு வாயைப் திறந்து நீ இணக்கமாய்ப் பேசியிருந்தால், உன்னோட வாய்முத்தா சிந்திப் பூடும்? இல்லே, கேட்கிறேன்! ஊம்; இப்பைக்கு என்னமோ...நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்காம்!—சறுக்குக் கழிக்கிறதுக்கும், சறுக்கினதிலேருந்து தப்பிக்கிறதுக்கும் கதையை ஓட்டுறே! நீ வெறும் நொண்டிக் குதிரை!''

மிச்சம் மீதமிருந்த தேவரின் பற்கள் தொடுசு தொங்கல் வைக்காமல் கடிபட்டன.

''அப்பா, நீங்க பொய் பேசுறீங்க!''

வீரமணி கிராப்புத் தலை குலுங்கத் தலையை உயர்த்தி, ரோசம் குலுங்கக் குரலையும் உயர்த்தி, ஆவேசம் தூள் பறக்கப் பேசினுன்.

"என்ன சொன்னே? என்னைப் பார்த்தாடா பொய் பேசுறவன்னு அபாண்டமாய்ப் பழி பாவம் சுமத்தினே?"

'கோடலி' முடிச்சுப்போட்டிருந்த குடுமி அவிழ, கொடி கட்டிப் பறக்கும் கோபத்தோடு எழுந்தார் பெரும் நிலச்சுவான்தார் ஆதிமூலத் தேவர்.

உள்ளுக்குள்ளே சுழித்திட்ட குறும்புத்தனத் தோடு வெகு மிடுக்காக எதிர்த் திண்ணைத் தூணில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்தான் வீரமணி. நெஞ்சிலே வல்லமை பாத்தி கட்டிப் பாய்ந்தது; விழிகளில் வைரம் பசேலென்ற நெல்மணிக்கதிர்க் கொத்தாகப் பளிச்சிட்டது. "பின்னே என்னவாம்? என்னைப் பார்த்து, வெள்ளெழுத்துக்காரன் கணக் கிலே நொண்டிக் குதிரைன்னு சொன்னால், அது பொய் இல்லீங்களா, அப்பா? நான் குதிரையும் இல்லே; நொண்டியும் இல்லே; நான் உங்களோட அருமைக் கொடுக்கு இல்லீங்களா? பெற்ற தகப்பனா ரான உங்களோட ரோசத்திலே, பிறந்த பிள்ளை யான எனக்கு ஒண்ணுக்கு முக்காலே வீசமாச்சும் இருக்காதுங்களா? அம்மான் ராமையாத் தேவர் எனக்கு ஒண்ணும் கொம்பு இல்லே; அந்தத் தகிடு தத்தக்கார ஆசாமியோட பொல்லாத்தனத்தைச் சுட்டி நீங்க ஏசினது மெத்த சரின்னு ஒப்புக் கொண்டுதான் நான் கம்முன்னு மௌனமாய் இருந்தேனேயொழிய, வேறே ஒண்ணும் கிடையா துங்க. ஆனா, நீங்கதான் ஒரு காசுக்குக்கூடப் பெறுமதி இல்லாத ஒரு அற்பச் சங்கதிக்காக இம்மாம் நேரம் ஆடித் தீர்த்துப்புட்டீங்க!" என்று

வீரமணி நிதானமாகப் பேசி முடித்தான்.

இடைவெளி வாசலில் வந்து நின்ற பெரியவர் உணர்ச்சி கொப்புளிக்கப் பான்மையோடும் அழகாகவும் முறுவல் காட்டினார். மகனைப் பரிவும் பாசமும் சுரக்க, நெஞ்சோடு நெஞ்சாக அணைத்துக் கொண்டார். இமைகள் நனைந்தன. "தம்பி, இப்பத்தான் எனக்கு நல்ல மூச்சு வருது. என்னமோ ஒரு காரணத்தை உள்நோக்கமாய் வச்சுக்கிட்டுத்தான் நீ மௌனமாய் குந்தியிருந்தியோன்னு நினைச்சிட்டேன். அம்மானைத் திட்டினது உன் மனசுக்குச் சம்மதமில்லே என்கிறதைக் காண்பிக்கத்தான் நீ அப்படி மௌனப் பிள்ளையாரட்டம் உட்கார்ந்திருந்தியோன்னு கருதிட்டேன். உன் அம்மான் பேரிலே மயக்கம் கொண்டாடி, அதன் காரணமாகத்தான் நீ கோழையாக மாறி, அசட்டுத்தனமான மௌனத்தைக் காட்டி, உன் தப்பைப் பூசிமெழுக அகம்பாவத்தோடே அப்படி மௌனப் பிண்டமாய் நீ சமைஞ்சிட்டியோன்னு நான் எண்ணிக்கிட்டேன். ஆனா, நான் தப்புக் கணக்குப் போட்டவன் அப்படின்னு மட்டுக்கும் நீ அசந்து மறந்தாச்சும் நினைச்சியோ, அப்பாலே நான் உன்னைச் சும்மா விட்டே மாட்டேன்! மாப்பும் கொடுக்க மாட்டேன். ஏன் தெரியுமா, மகனே?-நான் கணக்குப் போடுறதிலே அசகாய சூரப்புலியாக்கும்!"

தேவரின் சிரிப்பையும் சுவீகரித்துக் கொண்டு வட்டியும் முதலுமாகச் சிரித்தான் தேவர் மைந்தன்!

சமையற்காரர் காசி காப்பியும் கையுமாக வந்தார்.

இப்போது, அப்பாவும் பிள்ளையும் காப்பியும் கையுமாக இருந்தார்கள்.

நல்லகாலம், தந்தைக்கும் தனயனுக்கும் நடுவே சண்டை எதையும் கிளப்பிவிட்டு வேடிக்கைப் பார்க்கவில்லை காப்பி.

பாசம் என்றால் நாலும்தான் இருக்கும்!

கன்றின் குரல் கனிந்து வருகிறது.

காசி மறைந்தார் உள்ளே!

பூசாரி பொன்னையாவின் - சுவாமி வரம் கொடுத்தாலும் வரம் கொடுக்காத பூசாரி பொன்னையாவின் அருமந்தப் புதல்வியாம் ராக்கம்மா! என்பாள் கிழக்கே நடந்து கொண்டிருந்தாள். அப்போது, "என்னடி ராக்கம்மா!" என்ற பெருங்குரல் கேட்கவே திசை மிதித்தவளாகத் துணுக்குற்று நின்றாள். குரல் வந்த திசையைக்கணித்தாள். "எவண்டா அவன் பஞ்சிப் பயமவன்? 'அடி' பட்டம் போட்டில்ல அழைக்கிறான்?" என்ற ஆத்திரத்துடன் நின்ற அவள் ஒற்றை வேப்பமரத் தூரடியை மிதித்திருப்பாள்.

காசி, ஒற்றைமரத்தில் பதுங்கியவாறு, "தாயே ராக்கம்மா! 'என்னடி ராக்கம்மான்னு' நான் கூப்பிடலே; ரேடியோ கூப்பிட்டுச்சு. சன்னல் வழியே உன்னைக் கண்டபடியும் 'என்னடி ராக்கம்மா' என்கிற அந்த ஒரு பேச்சோடவே அந்தப் பாட்டை

நெறிச்சுப்புட்டேன். நீ திரும்பிப் பார்க்காமல் போம்மா. மல்லுக்கட்டிக்கிட்டு உன்னோட மல்லுக்கு நிக்கிறதுக்குச் சந்தைப் பேட்டையிலே உண்டான ஆள் பேருங்க காத்திருப்பாங்க!'' என்று பாடத்தை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பது மாதிரி ஒப்படைத்துவிட்டு, மீண்டும் உள்ளே ஓடலானார் சமையல் காசி.

ராக்கம்மாவின் நாவற்பழ வதனத்திற்கு வெட்கம் வந்து தொலைத்தது; "பேத்திக் குட்டியை நையாண்டி பண்ணுறாட்டி உமக்குப் பொழுது போகாது; ...ம்!'' என்று பொய்க் கோபத்துடன் சிரித்து விட்டு நகர்ந்தாள்.

மஞ்சி விரட்டுப் பூரணி பாயாத பரியாநதம், லாபம் யாருக்கு என்பது தனிப் பிரச்சினை!

ஆதிமூலமும் வீரமணியும் கைகொட்டி நகைத்தனர்.

ஊதா நிற நாட்குறிப்பு ஊதாத பலூனைக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது.

பேனாவை மூடி வைத்து விட்டு எழுதிய நாட்குறிப்புக்களை மறுமுறையும் படித்துப் பார்த்த வீரமணி, பொங்கிப் பூரித்த சிருங்காரப் பண்புடன் பத்தொன்பதாவது தடவையாக மயிலிறகு அடையாளம் காட்டிய பக்கத்தைப் புரட்டினான். புரட்டிய அவன் மறு இமைப்பில் கண் சொக்கி, மனம் சொக்கி நிற்கலானான்.

ஐலேசா......!

சொர்க்கவாசல், மணிக் கதவத்தாழ் திறந்து கொண்டது.

தரிசனம் தந்தவள் பராசக்தியா? அல்லது, அன்னக்கொடியேதானா?

உயிருக்கு உயிரளித்து, உணர்வுக்கு உணர்வாகி, உள்ளத்துக்கு உள்ளம் ஈந்து, அழகே அன்பாகவும் பாசமே நேசமாகவும் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து, மண் தொட்டு விண் காட்டி, விண்தொட்டு மண் காட்டி, மகிழ்ந்தும் மகிழ வைத்தும், நெஞ்சுக்கு நீதியாக-சத்தியத்துக்குத் தருமமாகப் பொலிந்தும் பொலிவூட்டியும் விளங்கவல்ல சக்தி அன்னக்கொடி ஒருத்திக்கே சொந்தம். அழகின் உச்சியல்லவா அவள்?

ஏலேலோ!...ஐலேசா!

அந்தக் குறிப்பில் அவனுடைய உயிரோவியம் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது. அவனும் உயிரோவியமாகி ஆனந்தமாகக் கண்ணீர்க் காணிக்கை வைத்தான். 'அன்னம்! அம்மான் மகளே அன்னக் கொடி!' அவன் எதையும் தாங்குவான், எதையும் சமாளிப்பான்! எதிர் நீச்சல் பழகியவன்; எதிர் வெய்யில் அவனுக்குக் கால் தூசு!

அவன் வீரமணி!- அன்னக் கொடியின் வீரமணி!

கண்ணீர் மாலை மணக்காதா?

உணர்வுகள் மனம் அறிந்து, மணம் உணர்ந்து விழிப்புப் பெற்றிருக்க வேண்டும்.

குறிச்சியில் சாய்ந்திருந்தவன் தலையை நிமிர்த்திக் கொண்டு உட்கார்ந்தான். விடிந்து விட்டதா?—அவன் பார்வை ஓட்டமாக ஓடியது; ஓடி நின்றது; நின்று சுட்டியது. சுட்டின இடத்தில், எழுதிக் கசக்கி வீசியெறியப் பட்டிருந்த காகிதக் குப்பை—கூளங்களுக்கு மத்தியில், ரங்கூன் கமலங் களுக்கு மையத்தில் வைரமாக அந்தக் கடிதம் விளங்கியது; எட்டி எடுத்தான் வீரமணி. நெஞ்சம் விம்மிற்று. கடிதத்தின் நெஞ்சில் இரண்டு சொட்டு முத்துக்கள் சிதறின.

நாட்குறிப்பில் கடிதமும் முடங்கியது.

பொங்கி வந்தது பெரு நிலவு.

நட்ட நடுவிலே, நிலவின் நிழலானான் வீரமணி. நினைவின் நிலவானான் அவன்.

'வயல் வரப்புப் பக்கம் ஒரு நடை போயிட்டு ஓடியாந்திட்றேன்: அப்பத்தான் நடப்புப் புரிய ஏலும். விடிஞ்சா ஆடி. அதனாலே, கால் மாடு தலை மாடாய்ச் சிதறிக் கிடக்கக் கூடிய நம்ப நிலபலன் சாடாவிலேயும் ஒவ்வொரு வண்டி குப்பைச் செத்தை அடிக்கச் சொல்லியிருந்தேன், நாச்சிக் கிட்டே. ஆடிப்பட்டம் ஊர் நாட்டிலே அமளி துமளிப்படுது. போன காலோடே திரும்பிடுவேன், தம்பி,'' என்று சொல்லிச் சென்ற தேவர், சொன்ன சொல் பிரகாரம் போன காலுடனேயே திரும்பி விட்டார். ''தம்பி, ஏப்பா இருட்டிலேயே குந்திக்கிட்டிருக்கிறே?'' என்று கேட்டபடி, தம் மைந்தனை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து நிறுத் தினார். குறிச்சியில் உட்கார்ந்திருந்த அவர் திடுக்

கிட்டார். "தம்பி, அழுதியா?" என்று தழுதழுப்புடன் கேட்டார்.

"என்னமோ ஒரு மங்களகரமான விசயத்தைப் பத்தி என்கிட்டே நீங்க பேசப் போறதாகக் கொஞ்சப் பொழுதுக்கு முன்னாலே நீங்க சொல்லலீங்களா? அதைப்பற்றி நினைச்சுப் பார்த்தேன். ஆனந்தக் கண்ணீர் ஏற்றம் இறைச்சாப் போல பாய்ஞ்சிடுச்சுங்க!"

"நல்லவேளை, நான் பிழைத்தேன், வீரமணி!" என்று சொல்லி ஆறுதல் அடைந்தார் பெரியவர். எடுப்பாகக் கிடந்த ஊதா வண்ண நாட்குறிப்பைக் கண்டு வியப்படைந்தார்.

"இம்மாதிரியான டயரியை நான் ஒரு மூச்சுக்கூட இது மட்டும் காண வாய்க்கலையே, தம்பி?" என்றார்.

"அப்படீங்களா? அதுக்கென்ன? இப்போதான் பாருங்களேன்; சும்மா பார்க்கப்படாது; படிச்சுப் பாருங்க, அப்பா!" என்று கூறி டைரியை எடுத்தான் வீரமணி.

அந்த ஊதா நிற நாட்குறிப்பு இப்போது 'ஆறுகரை' ஆதி மூலத்தேவரின் கையில் கனத்தது!

8. வீரமணிக்கு வெட்கம் வந்துவிட்டது!

எதிர்பார்ப்பவை, எதிர்பார்க்கின்ற மாதிரியே எதிர்பார்க்கும் நேரங்களிலே நிகழ்ந்தால், கதை இலக்கியம் உப்புச் சப்பில்லாமல் போய்

விடுவது இயல்பு. இந்த நிலையில், வாழ்க்கை இலக்கியம் மாத்திரம் சுவைகொண்டு சுவையளிக்க முடியுமா, என்ன?—ஒருகாலும் இல்லை. ஆகவே நான், வாழ்க்கையில் எதிர்பாராதவை, எதிர்பாராத வகையில், எதிர்பாராத வேளைகளில் விளையாடுகின்றன போலும்!

வீரமணியின் தனித்த பார்வைக்கு மட்டுமே உரிமை உடையதான அந்த ஊதாநிற நாட்குறிப்பு, இப்போது அவனது தந்தை ஆதிமூலத் தேவரின் புதிய பார்வைக்கும் உடந்தையாகக் காத்திருக்கிறது.

ஊதா என்றால், அதற்கொரு—மாயக் கவர்ச்சி தான்!

கையிலிருந்த நாட்குறிப்பை முன்னும் பின்னுமாகத் திருப்பினார் தேவர். என்னவோ தைத்த மாதிரி இருந்தது. நெஞ்சைத்—தடவி விட்டார். நெஞ்சில் தான் நெருஞ்சி முள் தைத்து இருக்க வேண்டும். டைரி முன்னைக் காட்டிலும் கூடுதலாகக் கனப்பதை உணர்ந்தார். கைச் சுமையை மனம் தாங்காது என்ற ரகசியம் அவருக்குப் புரிந்திருக்கும். சலனமற்றுக் கிடந்த நாட்குறிப்பையும் சலனமின்றிக் காணப்பட்ட புதல்வனையும் மாறி மாறி—மாற்றி மாற்றிப் பார்வையிட்டார்; பிறகு, மென்மையாக நகைக் கிறுக்கலோடு ஏறிட்டார். "தம்பி வீரமணி, உன்னோட சொந்த அந்தரங்கத்துக்குக்—காணியாட்சிப் பாத்தியம் கொண்டது இந்த டைரி. ஆகச்சே, நான் அந்நியத்தன்மையோட

இதைப் பார்க்கிறது விவேகமாகாது; நாகரிகமாகாது. அப்படிப் பார்த்தால், அது அசிங்கம். இந்தா. வாங்கிக்க,'' என்று தன்மையாகக் குறிப்பிட்டு, நாட்குறிப்பைச் சேர வேண்டிய இடத்தில் ஒப்படைத்தார் பெரியவர். இப்பொழுது கைச் சுமையும் மனச்சுமையும் எங்கே போய்விட்டதாம்?

சோதனையாளரே சோதனைக்கு ஆளாக நேர்ந்தது. வாழ்க்கைக் கதைக்கு 'மறைவுக் கவர்ச்சி' வேண்டுமே!

வீரமணி நிதானமாகப் புன்னகை கூட்டினான். முகவிலாசம் துப்புரவாகவே இருந்தது. ஆரோக்கியமான மாறுதலை உத்தேசித்து, வானொலியை நாடினான். இசைக் கருவிகளின் தொடக்கமே அவனுக்கு இதமாக இருந்தது.

பாடல் ஒலித்தது.

அப்பா எங்கே கிளம்புகிறார்?

எட்டிப் பார்த்தான் அவன்.

போன மச்சான் திரும்பி வந்தானும் பூமணத் தோடே!—அது மாதிரியாக, தேவர் மீண்டார். ''ஆகாயப் பந்தலிலே பொன்னூஞ்சல் ஆடுதுன்னு ரேடியோப் பொட்டி பாடிச்சுது. அதான் லபக்கின்னு ஓடிப் போய் ஆகாசத்தைப் பார்த்தேன். நாம இப்போ இருக்கிற சோதனைக் கட்டத்துக்கு அந்தப் பொன்னூஞ்சல் கிடைச்சா, எம்புட்டோ சௌகரியப்படுமேன்னு ஒரு நப்பாசை. மேலேமானத்திலே முழுசான 'லாவு' தான் சிரிக்குது!''

என்று வாய் திறந்து நகைத்தார்; என்னவோ ஒரு போலித்தனமும் ஊடாடாமல் இல்லை.

இடம், பொருள், ஏவல் எல்லாம் விளங்கும்; எனவே, வீரமணிக்குச் சிரிக்கவும் தெரியும்!

இராச் சாப்பாடு முடித்தானதும், யாடு தீர நிலா முற்றத்தில் அயர்ந்து பேசிக் கொண்டிருக்கலாமென்று குறிப்புணர்த்திய பிற்பாடு, நடையைக் கடந்து நடை தொடர்ந்தார் மூத்தவர்.

'ஒட்டுவாரொட்டி'த் தன்மை கொண்ட சீக்குகள் சிலவற்றை நிர்ணயப்படுத்தி ஒதுக்கி வைக்கிறது உடற்கூறு.

இவ் விதிக்கு உள்ளக் கூறும் விலக்கல்ல.

வீரமணி தனியாய்த் தவித்து, தண்ணீராய் உருகிக் கொண்டிருந்தான். 'நெஞ்சு களம் கண்ட நோய்' வாட்டியது; வதக்கியது. மாலையில் மட்டுமே மலரும் இந்நோய் என்பதன்று. தாபமும் தாகமும் சுழியாகச் சுழித்தன. 'அம்மான் மகளே அன்னம்!' —உதடுகள் துடித்தன. வாடிக்கை மாறுமல், வாடிக்கையை மாற்றுமல் புன்சிரிப்பும் பெருமூச்சும் விளைபலன் காட்டின. அன்னக்கொடியும் சாதி மல்லிகைப் பூவாக மலர்ந்து, தழலாக நெடுமூச்செறிகின்றுளோ? முறைமைப் பெண் அன்னத்தின் நினைவே அவனுக்கு உரமாகவும், அவளது கன்னி மனமே அவனுக்கு உயிராகவும், அவள் உயிரே அவனுக்கு மனச்சான்ருகவும், அவள் இயங்கியும் இயக்கியும் விளங்குகின்ற அதிசயத்துக்கு ஆதார சுருதி யார்?

அவளு? அவளா? இல்லே, அவனும் அவளுமா?—ரோமப் புல்லரிப்போடு அவன் தலையை நிமிர்த்திஞன். புதிதாய்ப் பிறந்த பக்குவம் கிளர்ந்தெழுந்தது. 'இரவு அப்பா விடுகதை போடப் போகிருரா? இல்லே, எதிர்பார்ப்பது போலவே நல்ல தீர்ப்பு வழங்கப் போகிருரா? அன்னம் கால் பாவிஞல் தான்—வலது காலே எடுத்து வைத்து இந்த வீட்டின் திட்டி வாசலே அம்மான் மகள் அன்னம் மிதித்தால் தான், இந்த மச்சு வீட்டின் தாய் வீட்டிலே நல்ல விளக்கு எரிய முடியும்! அப்பாவுக்கு இந்த உண்மை —யதார்த்தமான உண்மை பிடிபடாமலா இருந்து விடப் போகிறது? ஒருவேளே, அப்பா புதிர் போட்டுப் புதிராகி விட்டால்...?' அட்டகாசமாகவும் ஆவேசமாகவும் சிரிப்பு வெடிக்கத் தலேப்பட்டது—உள்ளத்தின் உள்ளத்திலே!

'சொக்க வெள்ளிப் பாற்குடம்' ஆகாயக் கடலில் மிதந்து கொண்டிருக்கிறது.

சுருள் முடிகளே ஒரு தட்டுத் தட்டிக் கோதி விட்டான் வீரமணி. இனிமேல் ஈரம் உலர்ந்து விடும். அணி சேர்ந்த தீவட்டிகளென நிலவில் ஒளிர்ந்த தீப்பூக்களே அலாதியான திடத்தோடு அனுபவித்த வாக்கில் உள்ளே வந்தான். ஆடியில் அவன் முகம் ஆடியது. அவன் முகம் மட்டிலுந்தான் ஆடியதா?

கேட்டுக் கொண்டதற்கு இணங்கி, தோழர்கள் வந்து சேரக் காணும். மாணிக்கம் கூட முகம் காட்டவில்லே. வந்திருந்தால், ஊர்த் தாக்கல்

தெரியும். அந்திக் கட்டிலேயே மேலைக் கோடிக் கம்மாயில் விழுந்து குளித்திருக்கலாம். அன்னத்தின் முக தரிசனமும் கிடைத்திருக்கும்!

மகமாயி கோயில் மணியோசையை மண்டையில் அடித்து விட்டு, கொஞ்சும் சலங்கைகள் கொஞ்சின— திட்டி வாசலிலே.

வீரமணி வெளி வாசலுக்கு விரைந்தான்.

தேவரும் வந்து நின்றார்.

பூவரசுத் தூரடியில் மொட்டை வண்டியை நிறுத்தி விட்டுக் குதித்தான் நாச்சி. அவன் தலைமையின் கீழ் ஏழு எட்டுப் பேர் குப்பைப் புழுதியும் வேர்வைப் பிசிறும் தேங்க நின்றார்கள்.

'அல்லாம் கச்சிதமாய் முடிச்சாச்சுதா, நாச்சி?''

''ஆமாமுங்க, பெரியவுகளே.''

''அது சரி. கிழக்கிட்டு தாராடி நஞ்சைத் தாக்கிலே நீதான் குப்பை அடிச்சியாக்கும்? படிச்சுப் படிச்சுச் சொன்னப்பிலே, எட்டு வண்டிக்கு வள்ளிசாய் தேறியிருச்சா?''

''நீங்களா தப்புக் கணக்குப் போடுவீங்க? எட்டு வண்டிக்கு ஒரு தட்டு கூடத் தட்டுப்பாடு வல்லேங்க, முதலாளி!''

''ஊம், வடக்காலே நாதியத்துக் கிடக்கிற கூந்தல் பனைவயல் காட்டுக்கு வார வியாழச் சந்தைக் கெடுவுக்குள்ளாற இன்னம் முப்பது நாற்பது

வண்டிக்குக் காணும்படியாய்க் குப்பை வாங்கி அடிச்சிடலாம்!''

''நொடியிலே முடிச்சிப்பிடுறேனுங்க, ஐயாவே!''

''பாதையிலே நொடி ஏதாச்சும் வஞ்சனை பண்ணி, வண்டியைக் குடம் சாய்ச்சிடப் போவுது; பத்திரம்!''

''உத்தரவுங்க,'' என்று வணக்கமாக இணக்கம் சொன்னான் நாச்சி. அடி மடியில் சுருக்கு முடிச்சுப் போட்டுச் செருகி வைத்திருந்த பொட்டணத்தை எடுத்தான். ''கருக்கலிலே எம்பத்தேழு ரூபாய்க் காசு தந்தீங்க. குப்பை வண்டிக் கணக்குப் புள்ளியும் சொச்சக் காசும் இருக்குங்க. இந்தாங்க,'' என்று விவரம் கூறி நீட்டினான்.

''சரி; கணக்கு வழக்கை சாவகாசமாய்ச் சரி பார்த்து விடுறேன், நாச்சி. முதல்லே நீங்க எல்லோரும் ஓடி, காக்கா குளியல் போட்டுப்புட்டு ஓடியாங்க. எல்லாரும் ஒரே பந்தியிலே குந்திச் சாப்பிடுவோம்,'' என்று ஆதரவோடு குறிப்பிட்டார் பெரிய பண்ணை. கணக்குக் குறிப்பைப் பிரித்தார். ''கண்டியாப்பா நாச்சி?—உனக்கு நான் 'அரிநமோத்துச் சிந்தம்'—'ஆனா—ஆவன்னா' வெல்லாம் படிச்சுக் கொடுத்தது இப்ப எம்புட்டுச் சகாயமாய்ப் பூடுச்சு?'' என்றார். நாச்சியின் நன்றியை வரவு வைத்துக் கொண்டார்.

நாச்சி திடுதிப்பென்று ''ஆ!'' என்றான்.

பதறித் திரும்பினார் தேவர்.

"ஐயா, இப்பத்தான் சோணிப் பயல் சொல்றான். ஒங்களுக்கு மறு திருப்பும் நெஞ்சடைப்பு வந்திடுச்சாமுங்களே? தீரத் தெளிய, கைக்கு ஒசந்த வைத்தியம் பண்ணிக்கிட்டால் தானுங்க தேவலாம். இனிமே ஒங்களுக்கு கைக்குக் கோலாட்டம் சின்னவர் கை வாகனமாய் இருந்திடுவாங்களே! அப்பாலே, நீங்க பாட்டுக்கு ஆத்தா மூத்தவளைச் சேவிச்சிட்டு, அக்கடான்னு ஒட்டுத் திண்ணையிலே ஒட்டிக் குந்தி, கார்வார் பண்ணி ராசாங்கம் நடத்த வேண்டியது தானுங்களே? பெத்து வளர்த்தவங்க பேச்சைத் துச்சமாய் மதிச்சு, எடுத்தெறிஞ்சு பேசி, தன்னடைச்ச மூப்பிலே தலைகெட்ட தனமாய்த் திரியுதுங்களே நாலுமூணு தறுதலைங்க, அதுகளாட்டமா இருக்கும் நம்ம சின்ன ஐயா? சின்னவருக்கு ஒங்க வாக்குத்தான் வேத வாக்கு; நீங்க கிழிக்கிற கோடுதான் அவுகளுக்கு லட்சுமணன் கோடு! நீங்க தான் எங்களுக்கு ஆலமரம். ஒங்க நிழலிலே ஒண்டி உழைச்சி, உங்க உப்பை நாங்க நாளெல்லாம் நன்னியோட தின்கிறதுக்கு உண்டான பொசிப்பை நீங்க தான் எங்களுக்குப் பெரிய மனசு பண்ணி வாரிக் கொடுக்கோணுமுங்க, பெரியவுகளே!"

வண்டிக்கார நாச்சியின் ஏழைமைக் கண்ணீர் நிற்கவில்லை.

வீரமணியின் கண்கள் மட்டுமல்ல; பெரியவரின் கண்களும் தான் தளும்புகின்றன.

நிலா முற்றம், அந்தரங்க ஆலோசனை மண்டபமாக மாறியிருந்தது.

வெண்ணிலவுக்கும் பூங்காற்றுக்கும் மாத்திரமே. பார்வையாளர் அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தன.

ஊர் நாட்டாண்மைத் தலைமையாளர் ஆதி மூலத்தேவரும் தேவரின் மகன் வீரமணியும் என்னவோ ஒரு நூதனமான உட் குறிப்போடு ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

குண்டூசி விழுந்தால் சத்தம் கேட்கும்.

ஆனால் 'சத்தம்' கொடுத்துக் குண்டூசியைக் கொள்முதல் பண்ணி, அதை வீசிச் சோதித்துப் பார்க்கத் தந்தைக்கும், தனயனுக்கும் பொழுது இல்லை. அவர்களுக்குத்தான், தலைக்கு மேல் என்னென்னவோ சோதனைகள் கண்ணாமூச்சி ஆட்டக் காத்துத் தவம் கிடக்கின்றனவே!

ஏப்பம் பரிந்தது. இன்னொரு மிடறு தண்ணீர் பருகிவிட்டு, கும்பகோணம் தளிர் வெற்றிலைகளில் ஓர் அடுக்கை எடுத்து இடது கைப் புறத்தில் அடக்கிக் காம்பு கிள்ளி நரம்பு உரித்தார்; கொத்துச் சீவலை, கருடன் தவளையைக் கொத்துமே அப்படிக் கொத்தி கடை வாய்க்குள் திணித்தார். வாசனைச் சுண்ணாம்பு கூடியதுதான் சமயம்; அரக்குச் சிவப்பு கைகூடியது. மஞ்சள் கடுதாசித் தாளில் பளபளத்த புகையிலையில் முணுங்கலைச் சலித்துத்தட்டி வீசிவிட்டு மிகுந்ததை மிகுந்த ரசனையோடு வாயில் அடக்கிக் கொண்டார்; பிறகு, முதல் எச்சிலைப் பணிக்கத்தில் துப்பி விட்டு, தொண்டையைக் கனைத்தபடி அட்டணைக்கால் போட்ட வண்ணம், என்னவோ

யோகாசனம் பயில்பவர் மாதிரி உட்கார்ந்தார் தேவர். அப்புறம் ஒரு மாத்திரைப் பொழுது இடைவீடு கொடுத்தபின், அடுத்த தடவையாகவும் தொண்டையைக் கனைத்துக் கொள்ளத் தவறினார் இல்லை. தொண்டையை அடைத்து விடாமல் இருக்க வேண்டும். முன்னெச்சரிக்கையில், அதாவது வருமுன் காப்பதில் — காத்துக் கொள்வதில் அவர் முடிந்த அளவுக்குக் கண்காணிப்புடன் இருப்பார்!

நட்சத்திரத்தோடு நட்சத்திரமாகக் கலந்து சிவப்பு விளக்கைப் புள்ளியாக்கிக் கொண்டே பறந்தோடிய ஆகாயக் கப்பலை அந்த நாளையிலே ரசித்தது போலவே இப்போதும் ரசித்தான் வீரமணி.

எங்கேயோ ஆந்தை கத்தியது.

"வீரமணி," என்றார் தேவர்.

"சொல்லுங்க, அப்பா!" என்றான் தேவரின் கறிவேப்பிலைக் கொழுந்து.

தேவர் பேசத் தொடங்கிவிட்டார்:

"தம்பி, என்னோட ஆஸ்திக்கு ஒரு பிள்ளை என்கிறதிலே சட்டம்தான் வாய் பேசலாம். ஆனா, நீ என்னோட ஆசைக்கும் ஒரு பிள்ளையாக்கும். இந்த உண்மையானது அன்னைக்கும் பொய்யாகல்லே! இன்னைக்கும் பொய்யாகல்லே! நான் பொய் பேசத் தேவை கிடையாதுதான்! கண்ணிலே வச்சு இமையிலேயே மூடி அந்தக் காலத்திலே நானும் உன் ஆத்தாளும் உன்னை வளர்த்தோம். இந்தக் காலத்திலே நான் ஒண்டியாய் உன்னை வளர்த்திருக்கேன்.

ஆனதாலே, இம்மாங் கொத்த அருமைக்கும் பெருமைக்கும் உரிமை கொண்ட உன்கிட்டே— என்னோட குலத்தை வீடும் விளக்குமாய் விளங்க வைக்க வேண்டிய கடமை கொண்ட உன்கிட்டே ஒரு நல்ல சேதியை — ஒரு மங்களகரமான சேதியைச் சொல்லிப்புட வேணும்னு நான் தவிச்சிட்டிருக்கேன்!...''

''மெய்தானுங்க, அப்பா!''

தேவர் தொடர்ந்தார்:

''வீரமணி, இந்த நாட்டாண்மைக்கார ஆதிமூலத் தேவன் வூட்டிலே, எப்பவுமே விளக்குக்குப் பஞ்சப்பாடு இருக்காது. அங்கிட்டு நடையிலே காமாட்சியம்மன் விளக்கு எரியுது; இங்கிட்டாலே, போன சங்கராந்திக் கெடுவுக்குப் போட்ட 'எலெக்கட்டரி' விளக்குங்க ரெண்டு கை வீச்சுக்கு எட்டி எரிஞ்சுகிட்டு இருக்கு. ஆனா, அந்தாலே அந்தத் தாய்வூட்டிலே பதினைஞ்சு பதினாறு வருஷத்துக்கு முந்தி அல்லும் பகலும் மங்களகரமான சுபீட்சத்தோடே எரிஞ்சுகிட்டு இருந்திச்சே ஒரு 'நல்ல விளக்கு', அந்த விளக்கு மட்டும் எரியாமல் இம்புட்டுக் காலமாய் அணைஞ்சே தரிசாய்க் கிடக்குது! அந்த நல்ல விளக்கை ஏற்றி வச்ச திருவிளக்கே அணைஞ்சதுக்கப்பாலே, அது மாத்திரம் எப்படி எரியுமாம்? ...என்னோட ஆசை வள்ளியம்மை — உன்னோட ஆத்தா வள்ளியம்மை கண்ணை மூடினா: எல்லாமே அத்தமிச்சுப் பூடுச்சு! ஊம்! இப்பைக்கு வெளிச்சம் மடைத் தண்ணியாய்

வழிஞ்சோர்டி கிட்டுத்தான் இருக்கு; ஆனலும், நான் பாளத்துக் இருட்டிலே தவிச்சி உருகிக் கரைஞ்சு கிட்டே இருக்கேன். இப்படிப்பட்ட நரக வேதனை யைத் தாங்கிக்கிடுறதுக்கு இனிமே என் நெஞ்சுக்கு ஊட்டம் இல்லே; என்னேட மேனிக்குச் சொகமும் கிடையாது! உன்னைப் பெற்ற மகராசி கண்ணை மூடிகிட்ட அந்தப் பொழுதிலேயே நானும் கண்ணை மூடிக்கிட்டிருப்பேன். ஆனு, சொக்கப் பச்சையான உன் நிமித்தம் தான் உயிர் தறிச்சேன். நான் செஞ்சு முடிச்சுத் தீர வேண்டிய கடமைகளுக்காகத் தான் ஊசலாடிக்கிட்டிருக்கிற என்னேட உசிரைக் கையிலே பிடிச்சுக்கிட்டு, நடைப்பிணமாய் இந்த மண்ணிலே இப்பவும் ஊடாடிக்கிஞு இருக்கேன்!...

"தம்பி, பசிச்சவன் பழங் கணக்கைப் பார்க்கிற தாட்டம் நான் என்னென்னமோ பேசிக்கிட்டே இருக்கேனேன்னு ரோசிக்காதே. புதுக் கணக்குக்கு வந்தாச்சு. இம்மாங் காலமாய் எரியாமல் அணைஞ்சு கிடக்குதே நல்ல விளக்கு, அந்த நல்ல விளக்கை மறுபடியும் ஏற்றி எரியவச்சு, இந்தப் பழைய வூட்டை முன்னை மாதிரி வீடும் விளக்குமாய் விளங்கச் செய்ய வேணுமா? நல்லாவேணும்; மேளா தாளத்தோட வேணும். ஆனதாலேதான், அந்த நல்ல பொறுப்பை உங்கிட்டே ஒப்படைக்கத் தவிச்சுகிட்டிருக்கேன்! புண்ணியவானுச்சே நீ! உன் புண்ணியத்திலேதான் இந்த வீட்டிலே சீதேவி மறு படியும் காலடி எடுத்து வைக்க முடியும்! ஆகச்சே, உன் அப்பனேட இந்த ஆசைச் சொப்பனத்தை நீ ரோசத்தோடவும் வைராக்கியத்தோடவும் நிறை

வேற்றி வச்சு, இந்த வீட்டோடே மானத்தையும் மரியாதையையும் கட்டிக் காக்க வேண்டியது உன்னோட உசிருக்கு உசிரான கடமை என்கிற சத்தியத்தையும் நீ மறக்கவே மறக்கப் புடாதாக்கும், மகனே!''

மிராசுதார் ஆதிமூலம் பேச்சை முடித்துவிட்டு, எதிரே ஊடுருவினார்.

"ஆகட்டுங்க, அப்பா!'' என்றான் வீரமணி.

தந்தை ஆறுதலோடு இதழ்களை விலக்கினார்

தனயன் அமைதியோடு இதழ்களைக் கூட்டினான்.

''வீரமணி, ஆவணி தொடங்கி, உன் பாக்கியத்திலே இந்த வீட்டிலே நல்ல விளக்கு எரியத் தொடங்கட்டும்; அப்புறம் பாரேன், இந்த வீட்டோட மகிமையை!—ஸ்ரீதேவி மீண்டும் வந்து கால் பாவிட்டா, அப்பாலே, ஸ்ரீதேவி பூத்துக் குலுங்கக் கேட்கவா வேணும்? அந்தடியும், நம்மோட சங்கடங்கள் சாடாவும் பொழுது விடியற நாட்டம் விடிஞ்சிடாதா?''

கண்ணை மூடிக் கொண்டு தன் தந்தை பேசியதைக் கேட்டதும், வீரமணிக்குச் சிரிக்கத்தான் தோன்றியது. "“அப்பா, மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்கிற அடிப்படையிலேதான் நீங்க இப்படிச் சொல்றீங்கன்னு நான் நினைக்கிறேன். அந்த நம்பிக்கையை மறுக்க மாட்டேன்

நான். ஆனால்...?'' என்று கூறிவிட்டுப் பேச்சை அந்தரத்தில் நிறுத்தினான் அவன்.

ஆதிமூலம் திகைத்தார். ''ஏன் நிறுத்திப்புட்டே? பேசு வீரமணி, பேசு!'' என்று தூண்டிவிட்டார்.

வீரமணி விநயமான முறுவலுடன், ''நம்ப வீட்டுக்குச் சீதேவி ஒருத்தி என் மூலமாக வந்து சேர்ந்திட்டால் மட்டும், நம்ப வீட்டிலே உடனேயே சீதேவி பூத்துக் குலுங்கிட முடியுங்களா?'' என்று கேட்டான்.

சீண்டி விட்டால், நல்ல பாம்பு படமெடுக்கும்.

''ஏன் பூத்துக் குலுங்க மாட்டாளாம் சீதேவி? நல்ல நேரம் கூடி வந்தா நல்ல நம்பிக்கையும்கை கூடி வராதா? நீயும் உழைப்பாய்; நானும் உழைப்பேன். நம்மோட வீடு தேடி வரப் போற சீதேவியும் நம்மளோட சேர்ந்து உழைப்பாள. தொட்டது துலங்கும். மண்ணைத் தொட்டால் பொன் ஆகும். உன்னோட விவசாயப் படிப்பு துணை இருக்கும்; அரசாங்கத்தோட உதவி ஒத்தாசை கை கொடுக்கும். உன் ஆத்தா வள்ளியம்மையும் கட்டாயம் வாழ்த்துவா. பின்னே, நம்ப தொல்லைகளெல்லாம் விடிஞ்சு, விடி வெள்ளி முளைக்கிறதுக்கு எந்நேரமாகுமாம்? இந்தக் குறுவைப் பட்டமும் தாளடி விளைச்சலும் அமோக மகசூல் கொடுத்தாச்சுன்னா, அப்புறம், நம்ப தலை மேலே பயங்கரச் சுமையாய் குந்தி, கொடுமையாகக் 'கிட்டி கட்டி' அழுத்தி நசுக்கிக் கிட்டிருக்கிற கடன் கப்பி சாடாவையும்

ஒரே மூச்சில் அடைச்சிப்புட மாட்டோமா? செல்லேன், தம்பி!''

மேல் மூச்சும் கீழ் மூச்சும் கால் இடறின. பெரியவர் நெற்றியைத் தடவிக் கொடுத்தார்.

வீரமணி ஐம்பது சதவிகித அளவிற்கு ஆறுதல் கொள்ள முயற்சி செய்தான்.

''அப்பா! என்னோட திட்டப் பிரகாரம், நீங்களும் நம்மோட வெள்ளாமை விளைச்சல் சம்பந்தமான சீரமைப்பு, சீர்திருத்தத்திலே ஒரே மாதிரியான கருத்து வச்சிருக்கீங்க. அந்த அளவிலே நான் ஓரளவுக்கு மனச் சாமாதானம் கொள்ளுறதுக்கு வழி உண்டு. ஆனா, இப்போதுள்ள சோதனையான சந்தர்ப்பச் சூழ் நிலையிலே, மண் பிரச்சினையைக் காட்டிலும் நம்ப குடும்பத்தோட மானப் பிரச்சினை தானுங்களே உச்சமாய் அச்சுறுத்திக்கிட்டு இருக்குது? கடன் கழிஞ்சா, காற்றுப் போலே! நாம தலை மேலே சுமக்க மாட்டாமல் சுமந்துக்கிட்டு இருக்கிற கடன் சுமையை வழி தேடி, வழி கண்டு பிடிச்சு அடைச்சால்தானுங்களே, நம்ப குடும்பத்தோட மானம் மரியாதை பிழைச்சு, நாமளும் ஊர் நாட்டிலே தலை நிமிர்ந்து நடக்க ஏலும்? அப்பத்தானுங்களே, என் மனச் சுமையையும் இறக்கி, உங்க மனக் கனவுப்படி, நானும் தன்மானத்தோடே தலை நிமிர்ந்து மணவறையிலே குந்தவும் என் மனசும் இடங் கொடுக்கும்? அப்பத்தானுங்களே, என்னோட கடமைக்கு நீங்க சுட்டிக் காட்டின சத்தியமும் தருமமும் ஒரு முழுவடிவம் காண

வாய்க்கும்? உங்களுக்குள்ள ரோசம், வைராக்கியம் எல்லாம் எனக்கும் இருக்காதுங்களா, அப்பா?''

உணர்ச்சிகளுக்கு மனம் விட்டு, வாய் விட்டுப் பேசத் தெரியும்.

தேவர் சிரித்தார்.

அப்பா புதிர் போடப் போகிறாரா, என்ன?

அழகான விழிகள் அழகாக ஊடுருவின.

''அடி சக்கை! போடு பகடை பன்னென்டு அப்படின்னு சொன்னும்! அப்படியே கச்சிதமாய் விழுந்திடுச்சாம். சொக்கட்டான் ஆட்டம், வெற்றி முகம் காட்டக் கேட்க வேணுமா? தம்பி, வீரமணி! இப்பத்தான் எனக்கு நல்ல மூச்சு வருதாக்கும்! உன் ரோசமும் வைராக்கியமும் எனக்குத் தலைகீழ்ப் பாடம் தான். அட்டியில்லே! உன்னோட லட்சியப் படி, நாம பட்டிருக்கிற கடன் கப்பி சகலத்தையும் ஆவணி பிறக்கிறதுக்குள்ளாற எப்பாடு பட்டாச்சும் நான் அடைச்சுபிடுவேன்! இனிமே அந்தக் கவலை உனக்கு வேண்டியதில்லே! அப்பாலே ஆவணி பிறந்தடியும் நீ மாப்பிள்ளை முறுக்கோடே மணவறையிலே தலை நிமிர்ந்து குந்துறதுக்கு அட்டி ஏதும் கிடையாதே?''

இதயத்தைத் தடவிக் கொடுத்த வாக்கில் விஞச்சரம் தொடுத்தார் மச்சு வீட்டுக்காரர்.

''ஊகூம்!... ''

வீரமணிக்கு வெட்கம் வந்து விட்டது. வெட்கம்! சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை தான். அதற்காக, வெட்கம் வரக் கூடாதென்று சட்டமா, விதியா?— 'அன்னக்கொடி!... அம்மான் மகளே, அன்னம்!

"பெரியவருக்கு வெட்கம் எதுவும் வந்துவிட வில்லை. ஆனாலும் அவர் சிரித்தார். சிரித்துக் கொண்டே பேச்சைத் தொடர்ந்தார்:

"என் தங்கக் கம்பிக்கு வெட்கம் வந்து தொலைச்சிருச்சாங் காட்டி! ஊம்...வீரமணி, நான் இப்ப சொல்லப் போற நல்ல சேதியைக் காதிலே வாங்கிக்கிட்டு, பின்னாடி தனியே ஓடிப்போய் குந்திக் கிட்டு, அந்த நல்ல சேதியை நினைச்சு நினைச்சு வட்டி யும் முதலுமாய் வெட்கப்பட்டுக் கிட்டு இரு! நான் உன்கிட்டே சொல்லிப்புடத் துடிச்சுத் தவிச்சுக் கிட்டு இருந்த அந்த நல்ல சேதி—மங்களகரமான சேதி இதுதான்: மகனே வீரமணி! அக்கம் பக்கம் பதினறு தலைக்கட்டுக் கிராமங்களுக்குத் தலைமை கொண்ட சிலட்டூர்க் கங்காணியார் பெரிய கறுப்பந் தேவரோட ஒரே மகளான பவளக் கொடியை உனக்காகப் பெண் பார்த்துப் பேசி முடிச்சிருக்கேன், தம்பி!"

ஆதிமூலத்தேவரின் புதிர்ப் பேய்ச் சிரிப்பிற்கு நிகராக அவரது அருமந்தப் பிள்ளை வீரமணிக்கும் சிரிக்கத் தெரிந்தது அப்படியொன்றும் பேரதிசயச் செய்தி அல்ல!

9. பொற்பின் செல்வி அன்னக்கொடி

விடிந்தது- பொழுது.

இரவென்றால், பகல் வரும்.

நிலவென்றாலும், பகல் வருவதும் மரபுதான்!

ஆகவே, மரபைக் காத்து விடிந்த இளங்காலை வேளை இது.

மரபைக் கட்டிக் காப்பாற்றிப் பேணும் ரகசியம் இயற்கைக்குத்தான் தெரியும் என்பதல்ல; இந்த மச்சு வீட்டுக்கும் தெரியும். அதன் காரணமாகத்தான், விடி வெள்ளி முளைத்ததுமே, துயில் கலைந்து கண் விழித்து விட்டது இவ்வீடு.

நயம் தோய்ந்த விழிகளை நயமாகக் கசக்கிக் கொண்டே வீரமணி திட்டி வாசலை ஒட்டி வந்து நின்றான். அழுகின்றானா அவன்? ஊகூம்; இல்லை! பின், அவன் ஏன் கண்களைக் கசக்குகின்றான்?—'தூசு தும்பட்டை' ஏதாகிலும் பட்டிருக்கும். புளி போட்டு விளக்கப்பட்ட பித்தளைச் செம்புகள் மாதிரி அவன் கண்கள் விளங்கின. கண் கொட்டும் பொழுதுக்குக் கூடக் கண்ணைக் கொட்டாமல், கொட்டக் கொட்ட இரவு பூராவும் விழித்திருந்து தவம் செய்த அந்தரங்கம் அவனுக்கே வெளிச்சம் போலும்! அழகான முகத்திலே, அழகான வெய்யில் அடித்திருக்கும். கண்களை மூடி மூடித் திறந்தான்; திறந்து திறந்து மூடினான். கண்கள் மூடினால் என்ன? திறந்தால் என்ன? ஓர் இமைப்பொழுது

கூட மூடாமல், இரவு பகல் எந்நேரமும் சதா திறந்தே கிடக்கின்ற தன்னுடைய இதயத்தின் காதல் மணி மண்டபத்திலே அப்போது தான் மலர்ந்த சாதி மல்லிப்பூவாக- அப்போது தான் இறக்கிய கொம்புத் தேனாக மணத்தும் இனித்தும், விளையாடிக் கொண்டும் விளையாட்டுக் காட்டிக் கொண்டும் இருக்கின்ற அந்தக் 'கனவுக்கிளி'யை அவன் அறியமாட்டானா, என்ன?— 'அம்மான் மகளே!... அன்னக் கொடி!'

யாரோ சிரிக்கிறார்கள்.

வீரமணி நிதானமான அமைதியோடு திரும்பிப் பார்த்தான்.

அடம் பிடித்து ஆணவம் கொண்டாடிய காளைக்கன்று அடங்கிப் போய்த் தாயின் மடியைத் தஞ்சம் அடைந்து கொண்டிருக்கிறது.

வீரமணிக்குச் 'சுருக்' கென்றது. இதயத்தைப் பற்றியவனாக, மாட்டுத் தொழுவத்தை விட்டுப் பார்வையைத் திருப்பினான்.

சாட்சாத் ஆறுகரை ஆதிமூலத் தேவர்தாம் சிரிப்பின் வள்ளலாகி, மீண்டும் புதிர்ச்சிரிப்பை வாரி வழங்கிக் கொண்டிருந்தார்.

அப்பா தான் சிரித்தாரா?—வீரமணிக்கும் சிரிக்கத்தான் தோன்றியது. அவன் சிரிக்கவில்லையானால், அவனை லேசில் விடுவாளா அன்னக்கொடி?— 'அத்தான்!... ஒரு அந்தரங்கத்தை உங்க நெஞ்சுக்கு

நீதியாய் ஒப்படைச்சாக வேணும். எனக்கின்னு ஒரு குடும்ப வாழ்க்கை லபிக்க வேணும்னு விதிச்சிருந்தால், அந்தப் பாக்கியம் நீங்க எனக்கு இடுற அன்புப் பிச்சையிலேதாங்க கிட்ட முடியும்!... இந்த விதியை எப்பேர்ப்பட்ட சோதனையிலேயும் நான் சத்தியமாய் மறந்துப்புட மாட்டேன்!... அதே கணக்கிலே, நீங்களும் மறந்துப்புடாதீங்க, அயித்தை மகனே!'—சத்தியமும் தருமமும் இதய ஒலி எழுப்பிக் கொண்டிருந்தன!... 'அம்மான் மகளே!...அன்னம்!'— உந்திக் கமலத்தினின்றும் வெளிக் கிளம்பிய குறுநகை அவனுடைய செவ்வதரங்களில் முகம் பார்த்தது; அகம் பார்த்தது. நேத்திரங்கள் சுடு நீர்கண்டன. வெய்யில் சுளீரென்றது.

வழியை மறித்து விலகிவந்த தெரு நாயொன்று தொட்டித் தண்ணீரை எட்டி எட்டி நக்கிக் கொண்டிருந்தது. நன்றியை உணர உணர, வால் குழைந்து கொண்டேயிருந்தது.

தேவர் பாய்ச்சல் காளையாகப் பாய்ந்து, 'சீச்சீ, நாயே!' என்று அதட்டி அதை விரட்டினார். காலடியில் சிந்திக்கிடந்த சாணத்தை இரு கைகளாலும் அள்ளி எருக்கிடங்கில் வீசினார். துவாலை வழுவியது; கட்டுக் குடுமி மட்டிலும் கட்டுக்கு அடங்கி விட்டிருந்தது.

முண்டாசுத் தலையும் மண்வெட்டித் தோளுமாக நின்ற வீரமணி, நழுவிக்கிடந்த துவாலையைத் தலை வணங்கி எடுத்து அதைத் தன் தந்தையிடம் அடிபணிக்கையோடு ஒப்படைத்தான்.

அப்பா, மகனை நோக்கினார்.

மகன் அப்பாவை நோக்கினான்.

பாசமும் பாசமும் சந்தித்துக் கொண்டன.

அறுவடை:

ஒரு பூச்சிரிப்பு!

ஒரு நெடுமூச்சு!

பாசம் ஒரு பூவிலங்கேதானோ?

அவரும் மௌனப் பிண்டமானார்!

அவனும் மௌனப் பிண்டமானான்!

இணைந்து பிணைந்த இந்த மௌனத்துக்கு விடுகதை போட மறந்துவிட்டிருக்கலாம்!

மௌனம் போட்டுவிட்ட விடுகதைபோதாதா? பற்றாதா?

வீரமணி சாணக் குழியைத் தோண்டத் தொடங்கினான். கஞ்சிப் பொழுதுக்குள்ளாக, வீட்டுக் குப்பையைக் குறுந்ததடித் தாக்கிற்கும் வெட்டிச் செய்க்கும் அனுப்பியாக வேண்டும். தோண்டத் தோண்ட, குழிச்சவமாகச் சாணம் நாற்றமெடுத்தது. கருமத்தைச் செய்ய வேண்டும்; ஆனால், பலனை எதிர்பார்க்கக் கூடாதாம்!... மண்வெட்டியை வீசினான்; கெட்ட மூச்சை வெளியேற்றினான்;. எச்சிலை உமிழ்ந்தான்; நிமிர்ந்தான். '...மகனே வீரமணி! அக்கம் பக்கம் பதினறு தலைக்கட்டுக் கிராமங்களுக்குத் தலைமைகொண்ட சிலட்டூர்க் கங்காணியார் பெரிய கறுப்பத் தேவ

ரோட ஒரே மகளான பவளக்கொடியை—அவ ரோட செல்லக்கிளியான அழகி பவளக்கொடியை உனக்காகப் பெண்பார்த்துப் பேசி முடிச்சிருக் கேன், தம்பி!'—அப்பாதான் இவ்வாறு தீர்ப் புப் படித்தாரா?— சிந்திச் சிதறியது வேர்வை தானே?

தோட்டம் துர்வுப் பக்கம் நாடி மீண்ட பெரி யவர், வேப்பங்குச்சியை வீசிவிட்டு, வாய் கொப் புளித்தார்.

''வீரமணித் தம்பியோ! தோண்டத் தோண்ட குழி மாளாது; சூட்டோட சூடா இட்டிலியைச் சாப்பிடலாம், வாப்பா. இன்னைக்கு கொத்தமல் லித் தழைத் துவையல் வேண்டாம்னு காசிகிட்டே 'ஆடர்' போட்டாச்சு. சீமைக் கத்தறிச் சட்டினி பண்ணியிருப்பான்!...''

''ஊம்!''—மோதிர விரல் மோதிரத்தைத் தளர்த்தினன் இளவட்டம்.

நேற்று நிலா மலர்ந்த வேளையில் அந்த 'நல்ல சேதி'யைத் திருவாய் மலர்ந்தருளிவிட்டு, அதே சூட்டோடு எழும்பிப் படுக்கப்போன அப்பா இப் போதுதான் திரும்பப் பேச்சுக் கொடுத்திருக்கிறார்!

ரத்தப் பூக்கள் பொன்சிவப்பாகச் சிலிர்க்கின் றன!

அதிர்வேட்டாக வெடித்தது ஏப்பம்!— அவனுக்கே சகிக்கவில்லை. வெட்கமாகப்போயிற்று. இந்த லட்சணத்தில், விக்கல் வேறு. லோட் டாவை எடுத்தான்; மறுகினன், வீரமணி.

ஊர் நாட்டாண்மைத் தேவர் எங்கோ ஊர்ப் பயணம் போகப் போகிறார்! பராக்...பராக்!

கண்ணைக் கட்டிக் காட்டில்விட்ட நடப்பாக இருந்தது வீரமணிக்கு. ஊமையன் கனவு கண்டால் உப்பு, புளிக்கு ஆகாதென்பார்கள். அப்பா எங்கே போகப் போகிறாராம்? கேட்க வாயில்லையே!

பெரியவர் வண்டியைக் கட்டினார்;'செவலை'யை இமை பாவாமல் நோக்கினார். கால்கள் பூமியில் பாவ மறுத்தன. நெஞ்சில் அமைதி கால் பாவ வில்லை. வேல் முனைகளாக விளங்கிய அந்தக் கொம்பு களைப் பார்த்ததும் அவரது இதயத்தின் அடிவாரத் தில் சிறுகச் சிறுகச் சலனம் கடந்த சாந்தி படர்ந்து வருவதுபோல இருந்தது. என்னவோ ஓர் உத்வேக தோடு காளையின் முதுகில் தட்டிக் கொடுத்தார். 'போக்கணங் கெட்டவன், தன்னோட காசு பணத் துக்குள்ளேதான் ஊர் உலகமே அடிமைப் பட்டுக் கிடக்குதின்னு கனா காணுகிறான்; ஊமைப் பயல் கனவு கண்டதாட்டம். அவன் தனக்குள்ளேயே என்னென்னமோ கோட்டை கட்டிக்கிட்டிருக்கான். இந்த விதியிலே, என்னை மூச்சந்திக்கு இழுத்து என்னோட மானத்தைக் கப்பலேற்றப் போறானுமே? காலம்பறவே, தட்டுக்கெட்ட அவனோட அந்த நாற வாயிலே ஓங்கி அடிச்சு அவனோட பல்லு முப்பத்தி ரண்டையும் கொட்டி அவன் கையிலே எண்ணிக் கொடுத்திருப்பேன்!...சகதியிலே கல்லை வீசினால், சகதி நம்ப மேலேதானே பட்டுத் தெறிக்கும்?... அப்பாலே நம்பளுக்குத்தானே அசிங்கம்னு நினைச்

கப் பொறுமையா இருந்திட்டேன்! இவனுக்குக் கொடுக்க வேணும்னு தீர்ப்புச்சொன்ன கடன்கப்பி சனியனை இந்தக் கிழமைக்குள்ளாறவே கூட அடைச் சிடலாம். அந்த நயவஞ்சகனுக்கு நான் கொடுக்க கடமைப்பட்டிருக்காத அநுமத்துப் பணம் ரூபாய் ரெண்டாயிரத்துக்கு அவன் என்கிட்ட எப்பவா னும் ஒரு நாளைக்கு 'சவாப்' சொல்லாமலா அவனை விட்டிடுவேன்?...' கசந்த நினைவுகள் ஊமைக்காயங் களாக வலித்தன. பெருமூச்செறிந்தார் பெரியவர்.

சேவலை உறுமுகிறது.

தேவர் இரண்டாந்தடவையாகவும் சேவலையை அன்புடன் தட்டிக் கொடுத்தார். ரோசக்காரச் சேவலே, ராமையாத் தேவரின் பயந்தாங்கொள்ளி வெள்ளையின் மானத்தை வாங்கிவிடவில்லையா?

தந்தையின் பரிவுடன் கூடிய செய்கையைக் கண்ட வீரமணிக்கு விவரம் புரிந்தது. அம்மானின் வெள்ளைக்காளையை எதிர்த்துச்சாடி, ரோசத்தோடு வெற்றி கொண்டதை எண்ணித்தான், தன் தகப்ப ஞர் சேவலைக் காளையின் முதுகில் தட்டிக் கொடுக் கின்றார் என்கிற காரணம் அவனது ரோச உணர்ச் சிக்கு இதமளித்ததில் அதிசயம் ஏதும் இல்லைதான். பகைமை மறக்காத அவன் உள்ளத்தில் அவனு டைய தாய்மாமன் ராமையாத்தேவர் எட்டி நின்றால் கூட, எட்டியாகக் கசக்காத நேரம் உண்டா? 'அம்மானோட கடனை அப்பா எப்படி உளவடைக்கப் போறுங்க?—' ஊம், புதிரென்றால் அது என்றேனும் விடுபட்டுத்தான் ஆகவேண்டும்.

பெரியவர் மயிர்க்கால்கள் குத்திட்டுநின்ற முகத்தைத் துடைத்துக் கொண்டார்; பிறகு, புதிய ஊட்டம் பெற்றவராக, மேனியைக் குலுக்கிக் கொண்டார். அடுத்து இளஞ்சிங்கமெனஏதோ ஓர் இறுமாப்போடு வண்டியில் தாவிக் குந்தினர். கைப் பிடிப்பில் மாட்டின் மூக்குக் கயிறு உடும்பாகப் பற்றிக் கிடந்தது. "வீரமணி, நான் சிலட்டூர் வரைக்கும் போயிட்டு, உருமத்திலே திரும்பிடப் பார்க்கிறேன். நாச்சி அசமந்தம். தார்க்குச்சி போட்டால் தான் அவனுக்குச் சுறுசுறும்பு வரும். நீயும் அவன்கூடவே வயல் வெளிப் பக்கம் ஒரு பயணம் போய்ப் பார்த்துக்க. உடையவன் இல்லாங்காட்டி எதுவுமே ஒரு முழம் கட்டைதான்!... நான் மத்தியான்னச் சோத்துக்கு வாரதுஈரெட்டுத்தான். அஞ்சாறு சோத்தை உண்ணிட்டு, சாப்பிட்டேன்னு பேர் பண்ணிடாதே நீ. நல்ல நிம்மதியோட நல்லாச் சாப்பிடணும். ஆவணி வாசலுக்கு வந்துக் கிட்டிருக்குது. ரோசிச்சுக்க. நான் போயிட்டு வாரேன்'', என்றார். தாழ்ந்த கண் பார்வையைத் திருப்பினர், வண்டியை ஓடித்துத் திருப்பினர்.

கொஞ்சும் சலங்கைகள் கொஞ்சின.

திகில் தீச்சுடராகச் சுடுகிறது.

'சம்பந்தம் சாடிக்கையை மனசிலே கமுக்கமாய் முடி போட்டு வச்சுக்கிணுதான் போலே, அப்பன்காரர் நேற்றைக்கும் சிலட்டூருக்குப் பயணம் வச்சிருக்க வேணும். இப்பைக்கும் அந்த முகாந்தரத்தின் பேரிலே தான், புதுசாய்ச் சம்பந்திச்

சொந்தம் கொண்டாடிக்கிட்டுக் கங்காணியாரைத் தேடிச் சிலட்டூர்ப் பக்கம் பறிஞ்சிருக்க வேணும் அப்பன் காரர்! ...ம்...ம்!...தப்புக் கணக்குப் போடவே மாட்டாராமே அப்பன்?' வீரமணி மலைப் புத்தட்டி நின்று விட்டான். ஏதோவொரு சுவடு அவனுடைய உள்மனத்தின் ஏதோவொரு முடுக்கில் சுவடு பதித்திருந்த இரகசியம் அவன் வரை 'சிதம்பர இரகசியம்' அல்லதான்!

செம்மறிக் கிடாரி காட்டுக் கத்தலாகக் கத்தியது; விரகதாபம் வாய் பேசியிருக்கலாம்.

வீரமணி எருக் குப்பையை ஒழுங்குபடுத்தி அள்ளிக் கொட்டி, நாலு வண்டிகளை வயல்வெளிக்கு வழியனுப்பி வைப்பதற்கும் சேக்காளி மாணிக்கம் வந்து நிற்பதற்கும் கணக்காக அமைந்தது.

நெற்றிவேர்வை சொட்டச் சொட்ட வீரமணி வரவேற்றான். முட்டின்றி வழிந்த மகமாயி ஊருணித் தண்ணீர் முட்டியைச் சல்லாபமாகச் சாய்த்து உடம்பைச் சுத்தப்படுத்தினான். பெற்ற தாயின் உடல் நலன் பாதிக்கப்பட்டதால், சொல்படி நேற்று அந்திக்கு வர இயலவில்லை என்பதாகத் தோழன் சொன்ன தகவலைக் காதில் வாங்கிக்கொண்டான். சிநேகிதனின் அன்னை நலம் தேறிய தாக்கல் அமைதி காட்டியது. ஆனால், அதே சமயத்தில் அவன் இதயம் அமைதியைப் பறி கொடுக்கவும் நேரிட்டது. 'ஆத்தா!'...வீட்டின் வெளிப்புறத்தே பளிச்சிட்ட கிளிப் பச்சை வண்ணப் பூச்சைப்

போற்றிய அவன், உட் புறத்தில் பார்வையை வீசிய போது, அங்கங்கே பல் இளித்த மண் சுவர்களையும் வெடிப்புக்களையும் சிதிலங்களையும் காணக் காண, அவனுள் ஓர் உறுத்தல் மாறுமல் மாறுமல் ஏற்படவே செய்தது. வீட்டின் உட்புறங்களையும் செப்பனிட்டுச் சீர்ப்படுத்தினுல்தான், வீட்டின் வெளியழகுக்குச் சமதையான—உண்மையான அந்தஸ்து ஏற்பட முடியும் என்ற யதார்த்த நிலை அவனுக்கு விளங்காமல் இல்லை. ஆனுல், வழிதான் மட்டுப்படவில்லை. தலையை அடகு வைத்தாவது முதலில் அம்மான் கடனைத் தொலைத்துத் தலை முழுக வேண்டும். அப்போதுதான், தலை முறை தத்துவமாகக் கட்டிக் காக்கப்பட்டு வரும் இந்தக் கண்டிச் சீமைக்காரர் மச்சு வீட்டின் மானம் மரியாதை எல்லாம் நிலைக்கும்! நிறக்கும்! மணக்கும்!

"வீரமணி அண்ணு! தலை முழுகிப்புட்டீங்களா?"

"இனித்தான் தலை முழுகணும், மாணிக்கம்!"

"கிளம்புவமா?"

"ஓ!"

"மேற்காலே மகமாயி ஊரணிக்குப் போவலாமா? இல்லாட்டி, கிழக்கிட்டு முளைக் கொட்டுக் கம்மாய்க்கு நாடுவமா?"

"உன் இஷ்டம், தம்பி."

"அப்படீங்களா? மேற்காலவே பறிவோம். அப்பத்தான் உங்களுக்குக் கிளுகிளுப்பு மூச்சுக் காட்டும்:"

"ஓகோ, அப்படியா? உன் விருப்பத்தைக் கெடுப்பானேன்? கிளம்பு, கிளம்பு!"

மாணிக்கத்தின் விடமச் சிரிப்புக்கான தாத்பரியம் வீரமணிக்குத் தெரியும். சவுக்கார டப்பாவோடு புறப்பட்டபோது "தம்பி, ஆல வீட்டு நெல் பொட்டித் துரவச்சியைத் தாங்க. பொன்னியிலே ஒரு பொதிக்குக் காணும்படியா எடுத்து அவிச்சாக்க, ஆடிப்பாடு ஒப்பேறிப் பூடும். அறுவது மரக்கால் காணுங்காட்டி, மாசக் கடேசிலே ரோசிச்சுக்கிடுவோம்," என்று தெரிவித்த காசியிடம் சாவியையும் நெல் கணக்கு நோட்டையும் நீட்டினான் அவன். "சரி; அடியெடுத்து வைப்போம்," என்றான் வீரமணி.

நட்பாம் கிழமைக்கு வேனல், வெக்கை துச்சம்.

வீரமணியும் மாணிக்கமும் குட திசையில் ஓடிய ஒழுங்கை வழியில் மடங்கி, நடந்தார்கள்.

போதை மண்டைக்கு ஏறி, தட்டுத் தடுமாறி ஓடி வந்த ஓட்டைச் சைக்கிளுக்கு ஆயுசு கெட்டி.

வீரமணி ஓடைப் புனல் இடை 'கெளுத்தி' மீனாகத் துள்ளித் துள்ளி நடை தொடர்ந்தான். உள்ளத்தில் மகிழ்ந்து கொட்டிய உவகைத் துளிகள் உதடுகளிலும் வழிந்திருக்கலாம். தன் வரையிலும் எதுவுமே அசம்பாவிதமாக நிகழவில்லை என்பதை அங்கீகரித்துப் பிரகடனம் செய்ய விரும்புபவன் மாதிரிக் களியும் கனவுமாக நடந்தான். அப்படி

யென்றால், சோதிப்பு எதுவுமே அவனுக்கு ஏற்பட்டு விடவில்லை யென்று பொருளா? பொருள் புரியாச் கவிதை போலவா, அவன் தந்தை அவனுடைய திருமணத்தைக் குறித்த அந்த முடிவை இரவிலே அவனிடம் வெளியிட்டார்! அவனுடைய குறுநகை 'ஒட்டிக்கு ரெட்டி'யாகவே தழைத்தது. நீராடப் போகும் பாவனையில் சென்றால் வழியில், அவனுடைய 'கனவுக் கிளி'யின் தேவ தரிசனம் கிடைக்கவே செய்யும் என்கிற தன்னம்பிக்கைதான் அவனது அகமகிழ்வுக்குக் காரணமாக இருக்க வேண்டும்.

களத்துமேடு வழி மறித்தது.

"அண்ணாச்சி, உங்களோட களத்து மேட்டுக்குத் தென் வடக்காலே ஒரு மொட்டை வாகை மரம் தண்டமாய் நிற்குதுங்களே, அதை வெட்டியெறிஞ் சாக்க, இடம் போரடிக்கவும் நெல் தூற்றவும் இன்னம் கொஞ்சம் சிலாவத்தாய் இருக்காதுங் களா!'' என்று கருத்துத் தெரிவித்தான் நண்பன்.

"அந்தப் பட்ட மரம் எங்க அம்மனுக்குச் சொந்தம். எங்க காணியாட்சி இடத்தை அடுத்து அவருக்கு உண்டான இடம் ஆரம்பமாகுதாம். எங்க குடும்பத்துக்கு முடிஞ்ச மட்டும் இடசங்கம் செய்ய வேணும் என்கிறது அவரோட வீம்பு! அந்தத் தூரடியைச் சாய்ச்சு எடுத்துக்கிட்டுப் போனா லும், மூணு நாளைக்கு உலை கொதிக்கும். மாட்டேன்னு சொல்லிட்டாராம்! வயிறு நிரம்பினால், சோற்றுப் பானையை மூடாத ஆசாமி

எங்க அம்மான். அந்த ஆள் எங்க பெரியவரை அநியாயமாய்ச் சீண்டுருவம் பண்ணப் போக, இப்போ கதையும் காரணமும் எப்படி எப்படியோ திரும்பிக்கிட்டு இருக்குது. இந்தக் கதை கடைசீலே எங்கே போய் எப்படி முடியப் போகுதோ?—தெரியவே இல்லே!'' வீரமணியிடமிருந்து பெரு மூச்சு வெளியேறியது.

''என்ன அண்ணே அப்படிச் சொல்லுறீங்க? எல்லாக் கதையும், நீங்க உங்க அம்மான் மகள் அன்னக்கொடியைக் கைப்பிடிச்சடியும் சுபமாய் முடிஞ்சிடாதுங்களா?''

வீரமணிக்கு வெய்துயிர்ப்பை மீண்டும் வெளியேற்ற மட்டுமே அப்போதைக்கு முடிந்தது. அப்பாவின் எதிர்பாரத தீர்ப்பை, அல்லது முடிவை, அல்லது திட்டத்தை மாணிக்கம் எவ்விதம் அறிவான்?—பாவம்!

பாவமாவது; புண்ணியமாவது!...

பாவ புண்ணியத்தின் ஐந்தொகையைச் சோதிக்க இது நேரமல்ல.

ஏன், தெரியுமா?

திருமிகு ராமையாத் தேவரின் வீடு அதோ, வந்து விட்டது!—ஜாக்கிரதை...!

வீடு என்றால், ஒரு வீடு என்பது கணக்கு. வீடல்ல; வீடுகள். இரண்டு வீடுகள். ஒன்று, பழைய்

வீடு. நாட்டோடு வேயப்பட்டது. 'நில்லாய் நெடுஞ் சுவரே' என்ற கவியின் ஆணையைச் சிரமேற் தாங்கிக் கொண்டிருக்கும் சுவர்கள். பழைய வீட்டுக்கு எதிரும் புதிருமாக இருப்பது புது மனை. இரண்டடுக்கு தளப் பூச்சுத்தான் சொட்டை. ஆவணிக்குப் புதுமனை புகு விழாவாம்! துப்பு ஒன்று!

கடைகால் படு கெட்டி. ஆகவே, செவ்வாய் மண்டலத்தைத் தாவிப் பிடிக்கும் அளவிற்குக்கூட அடுக்குகளின் எண்ணிக்கை அபிவிருத்தி அடையலாமாம்!—சிங்கப்பூர்த் தேவரின் வாக்கை மாற்று உரைத்துப் பார்க்க யாரால் முடியுமாம்?

தேள் கொடுக்கு மீசைப் பேர்வழியான ராமையாத் தேவர் முச்சந்தியில் நின்றார்.

அதைப் பற்றி வீரமணிக்கு என்ன கவலை? அவனுடைய அப்பாவை முச்சந்தியில் சந்தி சிரிக்க வைத்து விடுவதாகச் சவால் விட்டவராயிற்றே இந்த அம்மான்காரர்? அவன் பற்களைக் கடித்தான். கண்களைத் திசை திருப்ப முனைந்தான் அவன். உள்ளம் களியாட்டம் போட ஆரம்பித்து விட்டது; ஆத்மாவின் ராகமெனப் பண்பாடும் — பண்பாடு பாடும் அந்த அமுதகீதப் புன்னகையைத் தரிசிக்க வேண்டாமா? தேடினான்; தேடிக் கொண்டிருந் தான்!... அற்புதம் அற்புதம்! அதோ, பொற்பின் செல்வியாம் அன்னக்கொடி புனிதச் சாதி மல்லிப் பூவாகப் புன்னகை செய்கின்றாள்!...உயிரின் உயிராகி, உயிருக்கு உயிராகி மலர்ந்த அந்தப் புன்னகைக்கு ஈடாக, குறுணி—பதக்கு என்று

பொன்னும் மணியும் கொட்டிக் கொட்டி அளந்து சொட்டினால் கூட, ஈடாக மாட்டாதே! அந்தப் புன்னகையை 'பட்டா' போட்டு உடைமைப் படுத்திக் கொள்ள எந்தச் சத்தியச் சோதனையையும் அக்கினிச் சோதனையாகச் சந்திக்கத் தவம் இயற்றிக் கொண்டே இருக்கலாமே!—அவன் மெய்ம் மறந்தான்; மெய் சிலிர்க்க, மெய் உணர்ந்தான். அப்பாவின் திட்டத்தை அன்னக்கொடி எப்படி அறிவாள்? — 'அம்மான் மகளே!...என் அன்னக்கொடியே!...' —கண்கள் பொடித்தன. திடுக்கிட்டான். அந்த வைரச் சிமிக்கிகளின் ஒயில் ஆட்டத்தைத்தான் அவனால் அப்போது இறுதியாக தரிசிக்க முடிந்தது! இன்னும் கொஞ்ச நாழிகை யாவது, புன்னகைச் சாதி மல்லிப் பூவைத் தூவி, கனவு காட்டிக் கனவு கூட்டித் தரிசனம் தந்திருக்க லாகாதா, அம்மான் மகளே!... தவித்தான் வீரமணி.

''இனிமே பறியலாமுங்களா, அண்ணுச்சி?''

''ஊம்!...அடடே, என்னமோ இரைச்சல் திமிலோகப்படுதே? என்னவாம் சங்கதி? சரி, சரி. அந்தக் கூத்தை நின்னுதான் பாக்கலாமே!''

''ஆகட்டுமுங்க!''

தோழர்கள் புளிய மர நிழலில் ஒண்டினார்கள்.

அந்த ஏழைக்கு அழத் தெரியும்போது, அந்த ஏழை அழுத கண்ணீருக்குப் பேசவும் தெரிவது சட்ட விரோதம் அல்லதான்! —பேச்சில் ரத்தம் தெறித்தது:

"ராமையாத் தேவராய்யா, நான் உங்ககிட்டே வாங்கின கடன் வள்ளிசாய் நூறே நூறு ரூவா தான். ஆனுக்க, நீங்க எங்கிட்டே நோட்டிலே கை நாட்டுப் போட்டு வாங்கினதோ ரூவா நூத்தி அம்பதுக்கு! வட்டிவாசிக் கூடுதலைப் பூரிக்கச் சட்டம் எடம் குடுக்காதின்னும், அந்த மூணு வட்டி வீதத்தைச் சரிக்கட்டத்தான் நூத்தம்பதின்னு நோட்டிலே சொல்லியிருக்குதின்னும் சித்திரமாச் செப்புனீங்க. உச்சாணியிலே குந்தியிருக்கிற ஒங்க வாக்கை நடுத்தெரு ஏழை நம்பாட்டி, சும்மா விடுவீங்களா? ஆனு, இப்ப காலாவதிக் கெடுவுக்கு புரோ நோட்டுப் படிக்கி ரூவா நூத்தம்பதுக்கு வக்கீல் ஐயா கிட்டே வக்காலத்துக் குடுத்து நோட்டீசு குடுத்திருக்கீங்க!...தெய்வம் திருவுளத் துக்குப் பயந்து மறுமூச்சும் சொல்லிப்பிட்டேன். நீங்க கை நீட்டித் தந்த அசல் ரூவா நூறையும் அதுக்குண்டான பேச்சு வட்டியையும் வாங்கிக்க மாட்டேன்னு செப்பிட்டிங்க. அப்பட்டின்னு, எம் மேலே தாவா தொடுத்துக்கிடுங்க! விதி என்னை என்ன செஞ்சிப்பிடும்னு எனக்குத் தெரவிசாய்த் தெரியும். அனுபவிச்சிக்கிறேன். அச்சமில்லே. கேவலம், அம்பது ரூவாய்க் காசினுலே நான் செத்துப்பூட மாட்டேன். ஆனு, அதே அம்பது ரூவாய்க் காசினுலே ஒங்க சத்தியம் நாக்கைப் புடுங்கிக்கிட்டுச் செத்துப் பூடுச்சு என்கிறதை மட்டுக்கும் மறந்துப்புடாதீங்க! நான் வாரேன்!..."

பச்சைக் குறவன் பழனி, தர்மத்தையும் சத்தியத்தையும் முச்சந்தியில் அந்தரமாக நிறுத்தி

விட்டு நடந்தான். சத்தியத்தையும் தர்மத்தையும் முச்சந்திச் சரக்காக்கி வேடிக்கை காட்டி, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ராமையாத் தேவரை ஏறெடுத்துப் பார்க்காமல் நடந்து கொண்டிருந்தான் அந்த ஏழை.

அநியாயமாகக் கசையடிபட்ட மாதிரி, வீரமணி தவித்தான். பாவம், சட்டம் அவனை இங்கேயும் சோதித்து, அவன் வாயைக் கட்டி விட்டது. நடைப் பிணமாகி நடை தொடருவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. 'அண்ணலே! சத்தியத்தையும் தருமத்தையும் அநியாய விலை கொடுத்து வாங்கத் துணிந்திட்ட சமூதாயத் துரோகிகளுக்கு நடுவிலே இனியும் உயிர் தரிப்பது பாவமென்று முடிவு செய்துதான் எங்களிடமிருந்து விடுதலை வாங்கிக் கொண்டீர்களா?—நெஞ்சைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு புளிய மரத் தடியைப் பிரித்தான். "மாணிக்கம்! வா, வா!" என்றான் வீரமணி.

மழை வெய்யில் எரிக்கிறது.

ஆடிக் காற்று இனிமேல், கொம்பு சுற்றி அடிக்கத் தொடங்கிவிடும்!

10. மண்ணும் மனமும் ஒரே கட்சி!

மண்ணின் வாழ்க்கையும் மனத்தின் வாழ்க்கையும் ஒரே காட்சி!

மண் வளம் பேணி, செய்நேர்த்தி பண்ணி, முறையாக விதை நெல் தூவி, நீர் பாய்ச்சி

உரமிட்டு, நோய் தடுத்து, களை பிடுங்கி, கண்ணுக்குக் கண்ணாகக் கண்காணித்தால், மண்ணில் நெல்மணிகள் மட்டுமல்லாமல், பொன்மணிகளும் நாடிக்கூடிக் கொழிக்கும்.

வேளாண்மை விஞ்ஞானத்தின் உயிராதாரமான அடிப்படை விதி இது.

இதே விதி, இந்த மனத்திற்கும் விதித்திருக்க வேண்டும்.

மனத்தின் மனிதத் தன்மையை-மனிதாபிமானத்தைப் பண்படுத்தி, அன்பு எனும் விதை தூவி, பிறவிக்கடன் கொண்ட இரக்கம், கருணை, தயை-தாட்சண்யம், ஒழுக்கம், தொண்டு, பக்தி, நன்றியவு, பொறுமை, ஈகை, நேர்மை போன்ற மனிதப் பண்பின் உணர்வுகளை உரமாக்கி, சத்தியத்தையும் தருமத்தையும் நீர் பாய்ச்சி, தீவினை, சூது, துரோகம், களவு, பொய்ம்மை, கோபம், கயமை போன்ற வாழ்வழிக்கும் மிருகத்தனமான நோய்களைத் தடுத்தும் களைபிடுங்கியும் மனத்தை மானத்தோடும் மனச்சாட்சியோடும் தமிழ் அறம் பேணிக் கட்டிக் காக்கும்போது, மனம் புடமிட்ட சொக்கத் தங்கமாக ஒளிகட்டுகிறது, ஒளிகாட்டுகிறது!

மெய்.

சோதனைகள் இல்லையேல், மண்ணுக்கு வாழ்க்கை இல்லை; மனத்துக்கும் வாழ்வு கிடையாது.

அப்படியென்றால், சோதனைகளை வெற்றி கொண்ட பிறகு தான், மண்ணும் மனமும் வெற்றி கொள்ளுமா?

ஆம்.

அதனால் தான், வாழ்க்கையைச் சோதனையாக வும்,சோதனையையே வாழ்க்கையாகவும் கொண்டும் கண்டும் பேசுகிறார்கள்; பேசுகிறோம்.

வேடிக்கையான சோதனை!...

விந்தையான வாழ்க்கை!...

இவ்வாறு, அவனுக்குச் சொந்தமான மண்ணில் கால்பாவி நின்றவண்ணம் சிந்திக்கலானான் வீரமணி மண்ணும் மனமும் விருந்து படைக்கக் கேட்க வேண்டியதில்லை தான். உருமப் பொழுதுக்கு வந்தவன் அவன்; இப்போது இரணிய வேளையும் அண்டிவிட்டது. வெட்டிச் செய் நிலப்பரப்பில் நின்று எலுமிச்சையம்மன் கோயில் உள்வாய் திடலை நோக்கினான்; ஆர்வம் மேலிட, பாசம் தாளிட நோக்கினான். அவனது குடும்பத்திற்குக் காணி யாட்சி உரிமையும் உறவும் கொண்ட குறுந்தடி மணியக்காரன் வெளி முதலான வயல் தாக்கு களைக் காணக் காண, அவன் தன்னையே மறக்க லானான். அந்த வயல் வெளிகளிலே தழைக்கலவை களும் சாணக்குப்பைகளும் மட்டுந்தானா அவன் பார்வையில் சிக்கின? இல்லை; அறுவடைப் பருவத் தில் உருவம் காட்டித் தோன்றும் பொன்மணி நெற்கதிர்க் கொத்துக்கள் அல்லவா அவன் மனத்

திரையில் படம் காட்டின! அவன் அறுவடைச் சமயங்களிலே ஆனந்தம் கொண்டாடுவானே, அந்த ஆனந்தம் இப்போதும் கொண்டாட்டம் போட்டது. இன்று வெறும் வயல்களாகத் தோன்றும் இந்த நிலங்களேல்லாம் நாளைக்குத் தழைத்துச் செழித்துச் சிரிக்கத் தலைப்பட்டு விடும். மண்ணின் மகிமையை உணர்ந்து, மண்ணின் அவசியத்தை அறிந்து, மண்ணுக்கும் மனத்துக்கும் ஊடாக ஓர் ஒருமைப்பாட்டுப் பாலம் அமைக்க வேண்டித்தான் அன்றே பராசக்தியிடம் காணிநிலம் கேட்டிருப்பாரோ பாரதி?

நிழல் நீள்கிறது.

நடை தொடர்கிறது.

ஒற்றைக் கடைப் பாலத்தடி? எருக்கலைக் கோட்டைக் கண்மாய், சோளக்கொல்லைச் சதுக்கம், சந்தைப்பேட்டை, கீழக் குடியிருப்புக்கடை வீதி, மேலக் குடியிருப்பு ஒற்றையடித் தடம்-இப்படியாக, காலத்தையும் தூரத்தையும் கடந்தான் அவன்.

அந்திப்பொழுது வந்தது.

மச்சு வீடும் வந்தது.

அவன்-வீரமணி நீள்மூச்சை நீளமாக வெளியேற்றினான். திட்டி வாசல் உறுத்தியது. நெஞ்சத்துச் சுமையை இந்நேரம் மறந்திருந்தான் அவன். உண்ட சோறு போன மாயம் தெரியவில்லை. அவனுடைய மண் அவனுடைய மனத்திலே ஊட்டி அனுப்பிய மகிழ்ச்சி, அமைதி, நிறைவு எல்லாவற்றையும் உண்ட வீடு அபகரித்துக் கொள்ளுவதா?—

வேடிக்கை தான்! பிறந்த மண்ணையே சோதனைக் கூட மாக உருமாறத் தொடங்கி விட்ட விசித்திரம் இப் போது தான் அவனது நெஞ்சிலும் நினைவிலும் மீண்டும் பொறிதட்டத் தொடங்கியது போலும்!

அப்பா விடுகதை போட்டாரா? இல்லை.

அப்பா தான் சிலட்டூர்ச் சம்பந்தத்தைப் பற்றிய தம்முடைய திட்டத்தை வெட்ட வெளிச்ச மாகச் சொல்லி விட்டாரே! ஆனால், அன்றைக்குத் தஞ்சாவூரிலே நீதிபதி, அம்மானுக்குச் சாதகமாகத் தீர்ப்பைப் படித்து விட்டு அதே சூட்டோடு ஆசனத் தை நவிட்டு எழுந்து சென்ற மாதிரி, அப்பாவும் தம் முடிவைத் தெரிவித்த சூடு ஆறுவதற்குள் எழும்பிப் போய்விட்டார். போனதோடு நிற்கவில்லை; புதிர்ச் சிரிப்பை விடுகதையாக வீசிச் சென்ற விநயம் தான் பொருள் பிடிபடாத கவியாகத் திக்கு முக்காடிக் கொண்டிருக்கிறது!

அப்பாவுக்குப் பிள்ளையான வீரமணி மட்டும் சோடை போய் விடுவானா, என்ன? பெரியவர் வெளிப்படுத்திய புதிர்ச் சிரிப்புக்குச் சவால் விடுகிற மாதிரி, அவனும்தான் சிரிப்பை விடுகதையாக்கி விட்டான்! பின்னே என்னவாம்?—எட்டுக்கண் விட் டெரிய, கொடிகட்டி வாழ்ந்து கொண்டிருக்கும் சிலட்டூர்ப் பெருந்தனக்காரரான பெரிய கறுப்பத் தேவரின் செல்வப் புதல்வியான பவளக்கொடியை வீரமணிக்கு நிச்சயம் செய்திருக்கும் முடிவை அதிகார பூர்வமாக அம்பலப்படுத்திய பெரியவர், தம் மைந்தன் வீரமணியின் முடிவைப்பற்றியும்

கருத்தறிந்து கொள்ள வேண்டியதுதானே நாகரிகம், நியாயம், தருமம்?—அவ்வாறு செய்தாரா? ஊகூம்! ஜனநாயகப் பண்பாடு குடும்பத்திலும் செல்லுபடியாக வேண்டியதுதான் மரபு! அல்லவா?

ஒரு நடப்பைத் திரும்பவும் எண்ணிப் பார்த்தான் வீரமணி. கழிந்த மே மாதத்தின் மூன்றாம் வார இறுதியில் சஞ்சலம் கண்ட உள்ளத்தோடு அவன் பட்டணத்திற்குப் பயணப்பட்ட நேரத்தில், அன்பின் தூதுவர்போல, 'அம்பாஸடர்' காரில் வந்திறங்கிய சீமான் பெரிய கறுப்பத்தேவர் தன் பேரில் அன்பு மாரி பொழிந்த காரணத்தின் கருத்துரை, தன்னுடைய தந்தையின் முடிவுக்கு அன்றைக்குத் தன் காதைக் கொடுத்த போதே அவனுக்குப் புரிந்து விட்டது. சோழியன் குடுமி இரு தரப்பிலும் காரியத்தில் கண் வைத்துத்தான் ஆடியிருக்கிறது! பாளை வெடித்ததை நினைவு படுத்தும் சிரிப்பு, பெருமூச்சை வென்று வெளியேறியது. எதையும் தாங்கும் சிரிப்பா? அன்றி, எதையும் சாடும் நகைப்பா அது?

முன்கட்டு அறைக்குள் நுழைந்தான் அவன்.

நாளேடு ஒன்று ஏடு விரிந்து கிடந்தது.

முடங்கல்கள் சில முடங்கிக் கிடந்தன.

படிப்புச் சோதனையில் நல்ல சாதனையுடன் வெற்றி பெற்றதற்குப் பாராட்டுக்கள் கிடைத்திருந்தன.

திருப்பூந்துருத்தியில் அம்பாள் சிலையொன்று காணாமற் போய்விட்ட செய்தியைக் கேள்விப்பட்டான் அவன். அது இப்போது செய்தியில் அடைபட்டிருந்தது. தெய்வத்தின் தலையில் கை வைத்த சமுதாயக் குற்றவாளி இதற்குள் சட்டத்தின் விலங்குக்குக் கட்டுப்பட்டுத் தலைமேல் கை வைத்துக் கொண்டிருப்பான்!

இடைச் செருகல் பாடல் மாதிரி, தந்தி யொன்று நாளேட்டில் செருகி வைக்கப்பட்டிருந்தது.

அன்புத் தமிழரசி வாழ்த்தியிருக்கிறாள்.

அவன் மறுபடி சலனத்தின் கைதி ஆனான். தமிழரசிக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தை தன் அன்புத் தந்தையின் புதிர்ப் பார்வைக்கு வைத்து விட்டு, அதில் நன்றிக் குறிப்பையும் சேர்த்துத் 'தபால் கட்டில்' சேர்த்து விடவும் கருதினான் வீரமணி.

மன உளைச்சலுக்கு மருந்து தேவை.

புத்தக அலமாரி சுழன்றது.

'வெள்ளிக் கிழமை', 'சக்கரவர்த்தித் திருமகன்', 'ஆரிய மாயை', 'பாரதியார் பாடல்கள்', 'ஒதெல்லோ', 'பயிர்ப் பாதுகாப்பு', 'சமுதாயம் ஒரு சைனா பஜார்', 'குடியரசு', 'உயர்ந்த எண்ணங்கள்', 'அலை ஓசை', —இப்படி நூல்கள் ஊடும் பாவுமாக ஓடின.

'கள்ளான்' கடிக்கவே தடவி விட்டுக் கொண்டான் அவன். தலை இருக்க வால் ஆடிய போக்கில் இருந்த தஞ்சைத் தீர்ப்பு நகல் அவன் கைபட்டுக் காலடியில் வீழ்ந்தது. தமிழாக்கிக் கொடுக்க வேண்டுமென்று தந்தை தீர்ப்புத்தாள்களைக் கொடுத்திருக்கிறார். பொருந்து இருந்தால் பூச்சி பொட்டு முடங்கும். மேல் நடவடிக்கை எடுத்து 'அப்பீல்' செய்ய அந்தத் தீர்ப்பிலே சந்து பொந்து இருப்பதாகத் தோன்றவில்லை. காலைச் சுற்றின பாம்பாக அவனது மனத்தைச் சுற்றிக் கொண்டார் அன்னக்கொடியின் தந்தை ராமையாத் தேவர்.

'பழி பாவத்துக்கு அஞ்சாமல் அப்பாவைப் பிராது பண்ணிட்டார் அம்மான். விசயம் மானப் பிரச்சினைக்கு வந்திடுச்சு. இல்லாட்டி, எங்க குடும்பத்துக்கும் அம்மான் குடும்பத்துக்கும் நடுவிலே ஏற்பட்ட பிளவு பொறு பிளவாட்டமே ஆயிருக்கும்; பிணக்கும் தீர்ந்திருக்கலாம்! ஆனல் இப்போது பிரச்சினை கற்பிளவாக நேர்ந்திடுச்சுது! நான் கண்டுக்கிட்டிருக்கிற ஆசைக் கனவை அவசரச் சட்டம் போட்டுக் கணக்குத் தீர்க்கவும் நினைச்சிட்டார் அப்பா! அதாலேதான், நான் அன்னத்தை உசிருக்கும் மேலாக நேசிக்கிறேன் என்கிற துப்பைப் புரிஞ்சிக்கிட்டும், என்னோட சுயமரியாதைக்குச் சவால் விடுறாப்பிலே, எனக்குச் சிலட்டூர்ப் பெண்ணைப் பேசி முடிச்சிருக்கார்!... விதி கண்ணுக்குத் தெரியாது அப்படின்னு அப்பா சகட்டுமேனிக்குச் சொல்லுவாங்க. அப்படின்ஞ, விதின்னு ஒண்ணு இருக்கத்தான் இருக்குதா?......அது எப்படி இருக்

கும்னு சோதிச்சுப் பார்க்காமலா இனி நான் நல்ல தூக்கம் தூங்கப் போறேன்?'

நினைவுகள் சிலிர்த்தன!

தேவர் திரும்பவில்லை!

வீரமணி திரும்பினான்.

'சத்தியச் சோதனை' பளிச்சிட்டது.

பின்னகையில் வைராக்கியம் சுடர் விட்டது.

திரும்பினான் வீரமணி.

'எதிர்பாராத முத்தம்!'—

உயிரோவியம் அன்னம் 'புனையா ஓவிய'மென ஓடி ஓடி வந்தாள்.

சொக்கினான்.

சொக்குப் பொடி தூவியவள் அன்னமெனச் சிரிக்கின்றாள்!

புரட்டினான்.

'விழுமின்! எழுமின்!' என்ற மனச்சாட்சியின் கட்டளை ஒலித்தது; எதிரொலித்தது.

வீரமணி சிலிர்ப்பெய்தினான்.

'அப்பா. முதல் அலுவலாய் அம்மான் கடனை நியாயப்படி தீர்த்தாக வேணும். அடுத்த காரியமாக, அப்பாகிட்டே என்னோடே நெஞ்சைக் கிழிச்சுக் காட்டியாக வேணும்!...' அந்தி மயக்கத்தில் வேர்வை மயங்கியிருக்கக்கூடும்.

அப்போது:

வெளியே சத்தம் கேட்டது.

“டோய் பயலே!...வெரசா ஓடியாலே!” என்று கட்டளையிட்டார் ஆதிமூலத் தேவர்.

வீரமணிதான் ஓடவேண்டியவன் ஆனான்.

எருமை வாகனமும் பாசக் கயிறுமாக வேடம் கட்டும் ‘தர்மப் பிரபு’ மாதிரி, வெள்ளைக் காளையும் சினை வெடிச் சிரிப்புமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தார் நாட்டாண்மைத் தேவர்.

தேவர் திருமகனுக்கு இனம் விளங்கியது.

அது அம்மான் வீட்டு வெள்ளைக்காளை; ரேக்ளாக் காளை!

வீரமணி வினயமாக நகைத்த வண்ணம் அப்பாவை ஏறிட்டு நோக்கியபின், அதே பார்வையில் அம்மான் ராமையாத் தேவரின் அருமை மிக்க வெள்ளைக் காளையையும் அளந்தான். வெள்ளை யென்றால், அந்த நிறத்திற்கென்று ஒரு புனிதம் இருக்கும்; அழகு இருக்கும். ஆனால், இந்த வெள்ளையோ திருடனுக்குத் தேள் கொட்டின பாவனையில் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தது. வைக்கோல் சிதறல்கள் அதன் கொம்புகளிலே சிதறியதோடு சரி. “அப்பா, விடுங்க கயித்தை, வெள்ளையை மடக்கிப்போட்டு நான் கட்டிக்கிடுறேன் வாசல் பந்தல்காலிலே!...உழைச்சுக் கொண்டாந்து போட்டிருக்கிற நம்மோட வைக்கலைத் திருடித் தின்னுட்டு ஓடுறதுக்கு கள்ளத் தனமாய்

வந்திருக்கும் போலே! அம்மான் புத்தி பாவம், வாயில்லாச் சீவனுக்கும் ஒட்டிக்கிடுச்சு!..." என்று ஆத்திரமும் ஆவேசமுமாகச் சீறிக் கொண்டே 'பசு' வாக வேடம் போட்டுக் காட்டிக் கொண்டிருந்த அந்த வெள்ளைக் காளையை ஒரே பாய்ச்சலில் மடக்கிப் பிடித்து, பிடி கயிற்றைப் பரபரவென்று இழுத்துக் கொண்டே போய் அந்தக் காளையைப் பந்தல் காலில்—வெள்ளைக் காலில் கட்டி வசமாகச் சுருக்கும் போட்டு விட்டான் அவன். அவன், வீரமணி.

பெரியவர் ஆதிமூலத் தேவர் அப்போது விடலையாக உருமாறிவிட்ட மாதிரி ஓங்காரமிட்டு நகைக்கத் தொடங்கினார். "பாவம் தேடியாந்து காலிலே தண்டனிட்டுச் சரணாகதி அடையுமாம். அந்தக் கணக்கிலே, இப்ப உன் அம்மான் ராமையாத் தேவன் வீட்டுக் காளை நம்ப வீட்டு வாசலிலே தஞ்சமடைஞ்சிட்டுது!...அந்தச் சனியனை மாட்டுத் தொழுவத்திலே கட்டிப் போடுறதை விட்டுப்புட்டு, இங்கிட்டாலே கட்டிப்புட்டியே தம்பி?...சனியனோட கெட்ட காற்று இங்கிட்டும் வீசிப்புடப் போகுது!" என்று எச்சரிக்கை செய்தார் பெரியவர்.

"எந்தச் சனியும் இனிமே நம்பளை ஒண்ணுமே செஞ்சிப்புட வாய்க்காதுங்க, அப்பா!... அம்மான் காளைக்கு நம்மோட மாட்டுத் தொழுவத்திலே இடம் கொடுக்கலாமுங்களா? அப்பாலே, மாட்டுத் தொழுவத்துக்கு ஊர் உலகத்திலே இருக்கக்கூடிய மதிப்பும் மரியாதையும் என்ன ஆகிறதாம்?"

என்றான் வீரமணி. அவன் நெஞ்சில் சிறுவைக் குறி பனிச்சிட்ட விந்தை அவனுக்குத்தான் புரியும்!

நாட்டாண்மைக்காரர் அட்டகாசமாகவும் நிர்த் தாட்சண்யமாகவும் இப்போதும் ஆவேசச் சிரிப் பைக் கொட்டி முழக்கத் தொடங்கினார்: "இப்ப உன்னோட அம்மான் என்ன செய்வானும்?...நம்ப வீட்டு வைக்கோலை களவாணித்தனமாய் அவனோட வெள்ளை தின்ன அநியாயத்துக்கு இனி அவன் என்ன ஈடு கட்டுவானும்? எப்படி ஈடு கட்டப் போறானும்?... பார்க்கிறேன் ஒரு கை!" என்று சொற்களிலே நெருப்புத் துண்டங்களை வீசியெறிந்தவாறு, கொக் கரித்தார்.

அப்பாவோடு கூடி வீரமணியும் கொக்கரிக்கத் தலைப்பட்டான். "அம்மானைப் பழிக்குப் பழிவாங் கக் கை கூடியிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தைக் கைக்கு மேலே போட்டுக் கெட்டியமாய்ப் பிடிச் சிருக்க வேணுமிங்க அப்பா! அப்பத்தான், அம்மான் காரரோட மானம் மரியாதையெல்லாம் ஊர் முச்சந்திப் புழுதியிலே சிரிப்பாய்ச் சிரிக்க ஏலுமுங்க! ...ஆமாங்க அப்பா!...ஆயிரம் வந்தாலும் சரி, ஆயிரம் போனாலும் சரி, அம்மானோட இந்த வெள்ளைக் காளையை பாவிமனுசன் அம்மான் கிட்டே திருப்பி விட்டுப் புடவே கூடாதுங்க, அப்பா!" என்று சிவப்பு விளக்கையும் ஏந்திக் காண்பிக்கத் தவறி விடவில்லை இளஞ்சிங்கம்.

"நல்லாச் சொன்னே, போ... ஆறுகரை ஆதி மூலத்தேவனா இல்லே கொக்கான்னு உன் அம்மான்

ராமையாத்தேவன் இப்பவாச்சும் புரிஞ்சிக்கிட வேணுமா?...பாவம், ராமையாத் தேவன் அவனோட அருமைப் பொண்ணு அன்னக்கொடியை இனிமேல் எந்த மூஞ்சியை வச்சுகிட்டுப் பார்க்கப் போருனோ? ...ஊம்!'' என்று சொல்லிவிட்டு முடிந்திருந்த தலை முடியை அவிழ்த்து மறுபடியும் முடிச்சிட்டு முடிந்து கொண்டார் பெரியவர்.

அப்போது:

ராமையாத் தேவர், தொங்கிய முக விவாசத் திலே தொங்கிய தேள் கொடுக்கு மீசையோடு பேயைக் கண்ட கணக்கிலே ஓடி வந்து நின்ருர். அப் புறம் தான் அவர் மூச்சை வாங்கி வாங்கி வெளி யேற்ற முனைந்தார். அவருடைய பயங்கரமான கழுகுக் கண்கள் அந்தத் திட்டி வாசலை எடை கட்டித் தேடின. மறுகணம், அவருடைய பார்வை யிலே ஒரு நொடிப்பு பளிச்சிட்டது. தன்னுடைய உடைமையான 'வெள்ளை'யைப் பரிதாபமும் அனுதாபமும் சுழிக்க நோக்கி விட்டுப் பிறகு, அவர் ஆதிமூலத்தேவரை ஏறிட்டுப் பார்த்தார். மேலே உயரமுடியாமல் இறங்கிக் கொண்ட பார்வையை இப்போது வீரமணி நின்ற திசைக்குத் திசை திருப்பத் தொடங்கிஞர் அவர். ''வீரமணி, என்னோட வெள்ளையை நீங்க அநியாயமாய் ஏன் உங்க வீட்டுக் கல்லுக் காலிலே கட்டிப் போட்டிருக் கீங்களாம்?'' என்று 'வக்கணை' படிக்க ஆரம்பித் தார் ராமையா.

வீரமணி தன் தாய்மாமனை ஓர் அலட்சியப் போக்கோடு முறைத்துப் பார்த்து விட்டு, ''நாங்க

உங்க காளையை அநியாயமாகவா கட்டிப்போட்டிருக்கோம்?... உங்க வாய்க்குக் கூட நியாயம் படிக்கத் தெரியுதே? பாவம், வாயில்லாச் சீவனுச் சேன்னு இந்த மாட்டுக்கும் மாப்பு விட்டுப்புட்டு அதைக் காலிலே கட்டிப் போட்டதோட நிறுத்திக் கிட்டோம்! ஆமா!'' என்று முழக்கம் செய்தான் அவன். சுருள் முடிகள், மயங்கிக் கொண்டிருந்த அந்திக் கதிரொளியில் அந்தம் சேர்த்துக் கொண்டிருந்தன.

ராமையாத் தேவரின் தேள் கொடுக்கு மீசை தொங்கியது தொங்கியதுதான் போலும்! ஒரு நாட்டு நடப்புக்காகிலும் ஒரு தரம்- ஒரேயொரு தரம் முறுக்கேறித் துடித்துக் காட்டித் தொலைக்கக் கூடாதோ?—ஊம்!—ம்ச்... ''என்னோட காளையை உங்க வீட்டுக் கல்லுக் காலிலே கட்டிப் போட்டதோட நிற்காட்டி, அந்த வாயில்லாத சீவனை என்ன செஞ்சிருப்பீங்களாம்?......'' என்று சூதுமதி தழலாகக் கொதிக்க வினவினார் புதுப் பணக்காரர் ராமையாத் தேவர். இடுப்பு வேட்டியை வசம் கணித்துக் கட்டிக் கொண்டிருந்தார்.

''எங்க வீட்டு வைக்கலை அநியாயமாய் உங்க காளை தின்ன குற்றத்துக்கு உண்டான தண்டனையை அது அனுபவிக்கும்படி செஞ்சிருப்போம். பாவம், வாயில்லாப் பிராணியாச்சேன்னு பொறுத்துக் கிட்டோம். வாய் பேசத் தெரியாத அந்தச் சீவன் செஞ்ச தப்புக்கு பதில் சொல்லாமல் நீங்க தப்பிக்க- எங்ககிட்டேயிருந்து தப்பிக்க இனி உங்களாலே ஏலவே ஏலாதாக்கும். நெஞ்சிலே முடிச்சுப்போட்டுக்

கிடுங்க!'' எச்சரிக்கை சிவப்புக்கொடியாக ஆடியது. தலையை நிமிர்த்தினான் வீரமணி.

"அப்பனுக்கும் மகனுக்கும் வாய்ச் சவடாலுக்கு மட்டும் குறைச்சல் கிடையாது! சரி, சரி. உங்க கிட்டே எனக்கு என்ன பேச்சு வேண்டிக் கிடக்குது? என்னோட தலையை இத்தனை நாளும் வாங்கிறதுக்கு உங்களுக்குத் துப்பு இல்லையாம், இப்ப கொக்கரிக்கிறீயே, வீரமணி?...ஆமா, என் வெள்ளைக் காளை உங்களோட வைக்கோலைத் தின்னது என்கிறதுக்குச் சாட்சி என்னவாம்? ஊம், பட்டுன்னு சொல்லு!''

இப்போதுதான் ராமையாத் தேவருக்குத் தன்னுடைய அருமை பெருமையான தேள் கொடுக்கு மீசையின் நினைவு சிலிர்த்தெழுந்திருக்க வேண்டும்!...

"டே ராமையா! நீ இப்பிடிச் சாட்சிசாடிக்கை கேட்பாய்னு எனக்குத் தெரியாதாடா? சாட்சி சம்பந்தமெல்லாம் பொழுது விடிஞ்சடியும் தெரியும் உன் புத்திக்கு!...நீ நல்லபடியாய் உயிர் பிழைக்கோணும்னு, இப்பவே இந்த மினிட்டிலேயே என் மண்ணை—என்னோட சொந்த மண்ணை விட்டுப்புட்டு அப்பாலே நகர்ந்துக்கிட்டு ஓடுடாலே!...உனக்குத் தெரியாத தாணுவா? ஓடிவிழுந்து, புகார் பண்ணு வேடா? ஊம், ஓடுடாலே!...''

வினையறுக்கும் சொற்களாகவே வெடித்துச் சிதறின சொற்கள். பெரியவரின் ஆறாத கோபம் இன்னமும் அடங்கின பாடில்லை.

"அட, கிழட்டுச் சிங்கமே! உமக்கு இம்மாம் கொழுப்பு ஏன் வந்திச்சு—எப்படி வந்திச்சு, அப்படின்னு நானும் ஒரு கை பார்த்துக்கிடுறேன்!......ஊம்...! வார விதி ராத்தங்கவா போகுது?... கருநாகத்தைச் சீண்டி விட்டிருக்கீங்க, மச்சானே! இந்த நடப்பை மட்டும் நீங்களும் நெஞ்சிலே முடிச்சுப் போட்டுக்கிடுங்க. நீயும் மறந்திடாமல் முடிச்சுப்போட்டு வச்சுக்கிடு, மாப்பிள்ளே!..."

சாவலுக்கு எதிர்ச் சாவல் வீசிய கையோடு, தன் அருமை வெள்ளைக் காளையை இரக்கத்தோடும் வெட்கத்தோடும் ஒரு முறை பார்த்துவிட்டு, கால் தூசியைத் தட்டி உதறிவிட்டு அங்கிருந்து நகரத் தொடங்கினார் ராமையாத் தேவர்.

"சரிதான் போடாலே!... அடிபட்ட நாய் குறைக்கிறது வளமை தானேடா!"

அந்த வாயில்லாச் சீவனுக்கு வெள்ளைத்தனமாக வாய்விட்டுக் கத்தக்கூட வாயில்லாமல் போய் விட்டது.

வீரமணி எக்காளத்தோடு விழிகளை மீட்டுக் கொண்ட நேரத்தில், திட்டி வாசலின் மேற்புறத் தொங்கலில் ரத்தப்பூக்களின் காலடியில் என்னவோ பளிச்சிட்டுக் கண்ணைப் பறிப்பதை உணர்ந்து விழி வலையை வீசினான்.

அங்கே:

கண்கள் இரண்டையும் பறித்துக் கொண்டிருந்த வைரச்சிமிக்கிகள் இரண்டு, அவனுடைய

நெஞ்சைப் பறிப்பது போலே புன்னகை செய்து கொண்டிருந்தன-வீரமணியின் இதயத்தின் இதயம் விம்மி வெடிக்கத் தொடங்கியது. அந்த வைரச் சிமிக்கிகள் இரண்டும் அப்பொழுது அவனது செவிகளிலே "அன்னம்!... அன்னம்!" என்று கூப்பாடு போட்டுக் கொண்டேயிருந்தன. ஏக்கமும் தவிப்பும் மூண்டெழ அவன் கால்களை எட்டிப்போட்டான். சோள முறுக்குகளைக் கண்ட மாத்திரத்தில் 'லாவி' எடுக்கும் பாலகனைப் போன்று, அவன் அவ்விரு வைரச் சிமிக்கிகளையும் அள்ளியெடுத்து அடிமடியில் விசையோடு செருகிக் கொண்டான். அவன் நெஞ்சம் ஏனோ தறிகெட்டுச் சுழல ஆரம்பித்தது.

மறுகணம்:

"தம்பி வீரமணி!" என்று மிடுக்கான குரலெடுத்துக் கடுமையான சுருதியில் அலட்டிக் கொண்டே அவனுக்குப் பக்கத்திலே அவனுடைய அருமை அப்பா ஆதிமூலத்தேவர் வந்துநின்றார்!

11. வசந்தக் கனவுகள்

அந்தி மயங்கிய வேளை அது.

அந்த வைரச் சிமிக்கிகள் இரண்டையும் அடிமடியில் செருகிக் கொண்ட வேளையில், வீரமணியின் மனமும் தான் மயங்கிப் போயிருந்தது. அம்மயக்கத்தில், இனம் புரியாத பதட்டமும், இனம் புரிந்த துயரமும் தறிகெட்டுச் சுழன்றாலும்கூட அவ்வுணர்வுகளின் விசித்திரக் கலவையினூடே

ஆத்மார்த்தமானதோர் ஆறுதல் எப்படியோ நிழலாடிய அதிசயத்தையும் அவனது மன அந்தரங்கம் வெகுசல்லாபமாக உணரவே செய்தது. 'நல்ல வேளை; இந்த இரண்டு வைரச் சிமிக்கிகளும் அப்பாவோட கழுகுக் கண்களுக்குத் தப்பிடுச்சு. இல்லாங்காட்டி, இதுக ரெண்டும் இந்தச் சென்மத்துக்கு எங்க அம்மாள் மகள் அன்னத் தோட்டைக்குச் சேரவே வாய்க்காதாக்கும்!' என்று அமைதியைக் கற்பித்துக் கொண்டிருந்த நேரத்தில் தன் தந்தையின் விளிப்புக் கேட்டதும், அவனுடைய தார்மீக மனமும் விழிப்புப் பெறத் தவறி விடவில்லை.

"அப்பா கூப்பிட்டீங்களா?"

நிதானமாகவே வீரமணி திரும்பினான்.

"ஊம்", கொட்டினார் பெரியவர் ஆதிமூலத் தேவர்.

தன்னுடைய தந்தை 'ஊம்' என்று குறிப்பிட்டு சத்தம் கொடுத்த அந்தப் பாவனை வீரமணிக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லைதான்; அவரது கூர்மையான பார்வையையுங்கூட அவன் அவ்வளவு தொலைவுக்கு விரும்பவும் இல்லை. 'நான் அன்னத்தின் வைரச் சிமிக்கிகளை நலியாமல் எடுத்து மறைத்துக் கொண்ட துப்பு ஒரு வேளை அப்பாவுக்குத் தெரிந்திருக்குமோ? அப்பாவுக்குத்தான் வெள்ளெழுத்தும் வரவில்லை — கறுப்பெழுத்தும் வரவில்லையே!' என்று மறுகினான். "ஏதானும் விசேஷம் உண்டுங்களா, அப்பா?" என்று வினவினான் அவன்.

ஊர் அம்பலக்காரர் விநயமாகப் புன்னகை ஓட்டி "ஓடற பாம்பை மிதிக்கிற வயசுக்காரப் பிள்ளை. நீ. விசேஷம் எதுவாயிருந்தாலும், அது உன்கிட்டேயிருந்து வர வேண்டியதுதான் நியாயம். நான் கிழவன். ஆனாலும், பல்லுப் போகாதவன்; ஆனதாலே, சொல்லும் போகாது. அது சரி. கொஞ்ச முந்தி என்னத்தையோ குனிஞ்சு எடுத்தியே தம்பி? பணம் காசை அலட்சியமாகத் தொலைச்சிட்டுத் தேடி எடுத்தியா?'' என்று துருவினார் தேவர்.

இனிமேல், விடலை வீரமணி சுதாரித்துக் கொள்ளக் கேட்கவேண்டியதில்லை. "ஊம்.'' என்று குரல் கொடுத்தான்— ஓர் அமர்த்தலோடு. என்றாலும் அவனுக்குத் தன் அருமைத் தந்தையை முகம் கொடுத்துப் பார்க்கத் தைரியம் ஊற மறுத்தது.

மறுபடி சிரித்தார் முதியவர். தலைமுடிகளைக் கோதி விட்டுக் கொண்டே, "காசு பணத்தை இன்னிக்கு நாம காப்பாத்தினால்தான், நாளைக்கு பணம் காசு நம்பளைக் காப்பாத்தும், தம்பி!'' என்று புத்திபடித்துக் கொடுத்தார் அவர்.

"நிசம்தானுங்க, அப்பா. கை நழுவின காசுகளைக் கை கழுவி விடுவேனுங்களா? அதுகளையெல்லாம் சமர்த்தாகப் பொறுக்கி எடுத்துக்கிட்டேன். காசு பணத்தோட அருமை பெருமை உங்க மாதிரியே எனக்கும் புரியாதுங்களா?'' என்று ஒரு போடு போட்டான் வீரமணி. சற்று முன் அப்பா சிரித்த

சிரிப்பின் படம் அவனுடைய நெஞ்சில் படமெடுத்தது, மீண்டும். ஆகவே, அதே அச்சில் அவனும் அப்பா மாதிரி ஒரு சிரிப்பைச் சிரித்து வைத்தான். பற்கள் முப்பத்திரண்டையும் மறைத்துக் கொண்டு சிரித்த சிரிப்பு அது. போலித் தனமான சிரிப்பாகவே அமைய வேண்டுமென்று பாடுபட்டுச் சிரித்த சிரிப்பு அது. அப்படிச் சிரித்ததில் இயற்கையாகவே அவனுக்கு ஏனோ ஓர் ஆறுதல்கூட கனிந்திடவே செய்தது. இவ்வுணர்வின் சுழிப்பு அவனுள் படர்ந்த போது, அவனுடைய மன அந்தரங்கம் அவனைக் கண்டு கைக் கொட்டிச் சிரிக்கவும் தவறவில்லை. 'அப்பா மட்டும் என்னோட மனசைப் படிச்சுக் கிட்டு இருந்தும், என் அம்மான் மகள் அன்னத்திடமிருந்து என்னை மடை மாற்றத் துணியலாமா, என்ன?' என்ற கேள்வியின் நியாயத்தை அவனது மனச் சான்று எங்ஙனம் புறக்கணிக்க முடியும்?

பெரியவர் சில கணப் பொழுது வரை செயலற்று நின்று விட்டார். வீரமணியின் பொடி தூவிய பேச்சின் உள் அர்த்தம் அவருக்குப் பிடிபடா மல் இருந்திருக்காது! 'காசு பணத்தோட அருமை பெருமை உங்க மாதிரியே எனக்கும் புரியாதுங் களா?'' என்று வீரமணி வாழைப் பழத்தில் ஏற்றிய ஊசியாகச் சொற்களைக் கொட்டிக் குத்திக்காட்டிய அந்தப் பேச்சு தேவரைச் சிந்திக்க வைத்ததோ? இல்லை, வேக வைத்ததோ?

சுயப்பிரக்ஞையை மீட்டுக் கொண்டதும், ''ஆமா! ஆமா...என்னோட அருமை மகனுக்கு என்னை மாதிரியே காசு பணத்தோட அருமை

பெருமையெல்லாம் எப்படிப் புரியாமல் தப்ப ஏலும்?'' என்று கூறினார்.

அம்மன் சந்நிதியில் முளை அடித்துக் கட்டிப் போடப்பட்டிருக்கும் பலி ஆடு, தன்நிலை புரியாமல் தலையை உலுக்குமாம்! — அந்தப் பாவனையில் வீரமணி தலையை உலுக்கினான். நிலவின் உதயத்தில் கண்கள் மின்னின.

மகனுடைய தலையாட்டத்தைக் கண்டுதான் ஆதிமூலம் அவ்வாறு 'நின்றது நிலைக்க'க் கண் கலங்கியிருக்க வேண்டும்! — அப்படியென்றால், மெய்யாகவே வீரமணியைப் 'பலி ஆடு' என்றுதான் நிர்ணயம் செய்து விட்டாரா பெரியவர்? ''தம்பி, பொழுது பட்டு, நிலாவும் பறிஞ்சாச்சு. நீ போய் உன் சோலியைக் கவனி. உடம்பையும் அலட்டிக் கிடாதே; உள்ளத்தையும் அலட்டிக்கிடாதே. ஆவணி பிறந்தாச்சின்னா, நீ மாப்பிள்ளையாயிடுவியே? அதுவும், சிலட்டூர்க் கங்காணி வீட்டு அருமை மாப்பிள்ளையாக ஆகப் போற அதிர்ஷ்டசாலிப் பிள்ளையாச்சே?'' என்று கூறினார்.

அவன் அப்பாவை விநயம்கூட்டி ஊடுருவினான். வேதனை கூடியது. ''கல்யாணம் திகைஞ்சு, நாள் நட்சத்திரம் பார்த்துப் பரிசம் போட்டு, அந்தப் பணக்காரக் கங்காணியோட அன்பு மகளுக்கு நான் திருப்பூட்டினதுக்கு அப்பாலேதானே, நான் சிலட்டூர் மாப்பிள்ளையாக ஆக முடியும்? அது மட்டுக்கும், நான் இந்த ஆவணத்தாங் கோட்டையைச் சேர்ந்த சர்வ சாதாரணமான பிள்ளை

யாண்டான்தானுங்களே, அப்பா?'' என்று கேட்டான் வீரமணி.

''ஓகோ, அப்படிப் பிடிச்சிட்டியா நூலை?... அதுவும் சரிதான். இந்த ஆதி மூலத்தேவர் போட்டு வச்ச புள்ளி எப்பத்தான் தடம் மாறிச்சு? சரி, சரி; நீ போ. உன்னோட அருமை அம்மான் வீட்டுக் காளைக்கு நான் காவல் இருப்பேனுக்கும். அதைப் பற்றி லவலேசமும் கிலேசப்படாமல், நீ நட. அன்னம்தான் ரோசம் தாங்காமல் இந்நேரம் தவிச்சுக்கிட்டுக் கிடக்கும்! இல்லையா, தம்பி?'' என்றார் அவர். சுருதி ஓங்கிய குரல்தான்!

''அதையெல்லாம் நான் என்னத்தைக் கண்டேன், அப்பா!''— வீரமணியின் பேச்சு சுருதி இறங்கி ஒலித்தது.

''அதுவும் சரிதான்!''

பெரியவரின் பார்வை அந்த 'வெள்ளை'யின் மீது திரும்பியது.

சமையல் காசியின் புண்ணியத்திஞல் வீடு ஒளி ஏற்றித் திகழத் தொடங்கியது.

வீரமணி திரும்பிப் பார்த்தான். இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வந்து விட்டதாகவே அவன் மகிழ்ந்தான். ஆனல் வீட்டின் வெளியழகுக்குத் திருட்டி கழிப்பது போன்று வீட்டின் உள் அழகு அசடு கட்டி வழிந்தைதக் கண்டதும், அவனது மகிழ்ச்சி, சொல்லாமல் கொள்ளாமல் 'தேசாந்

திரம்' புறப்பட்டுப் போயிற்று. "அப்பா!" என்று கொடூரக் குரலெடுத்துக் கூவினான் வீரமணி.

திடுக்கிட்டுத் திரும்பலானார் ஆதிமூலத் தேவர். தவப்புலவன், தவம் கலைந்த மாதிரி கூப்பிட்ட அந்தக் குரலின் துடிப்பை எப்படி மனத்தில் வாங்கிக் கொண்டாரோ, தெரியவில்லை. அவரையும் மீறின அச்சத்தோடு திசை திரும்பலானார் அவர். "என்னடா ராஜா?" என்று விசாரித்தார்.

"நானாவது, ராஜாவாவது? ராஜாக்கள் பரிபாலனம் செஞ்ச காலமெல்லாம்தான் அப்பவே மலையேறிப் போயிட்டுதே, அப்பா?...நான் ராஜா இல்லீங்க; வீரமணி நான்...!" என்று சொல்லிக் கொண்டு, தன் தந்தையின் முகத்தைப் பார்க்க வசதியாக அவர் முன்னே வந்து நின்றான் வீரமணி. உண்டாக்கிக் கொண்ட வாய்ப்புக்கு ஓர் உத்வேகத்தை உண்டாக்க அவன் தன் தந்தையைக் கொடுமையான ஆத்திரத்தோடு பார்த்தான்; சீரழிந்த துன்பத்தோடு பார்வையிட்டான்!

பெற்ற மகனின் வசந்தக் கனவுகளை யெல்லாம் மண்ணோடு மண்ணாக அழித்து மிதிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருந்த அப்பா அவர்; பெற்ற தந்தை அவர். தாய்க்குத் தாயாகவும் தந்தைக்குத் தந்தையாகவும் அமைந்தும் அமர்ந்தும், கறிவேப் பிலைக் கொழுந்து போன்ற தன் குலக்கொழுந்தை வளர்த்து ஆளாக்கியவர் அவர். அவருக்குத் தன் அருமைத் திருமகனின் ஆத்திரத்தைச் சந்தித்த போது, கண்ணீர் மடைதிறந்த வெள்ளமாகப்

பெருகத் தொடங்கியது. தன்னுடைய கண்ணீரைத் தன் மைந்தன் கண்டு விடக்கூடாதே என்ற பதட்டத்தில், அவசரம் அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டார் முதியவர்.

இக்காட்சியை வீரமணி கண்டான், ரசித்தான்; சிரித்தான். "அப்பா"! என்று என்னவோ சொல்ல வாயெடுத்தான். அப்போது, திட்டி வாசலின்றும் பரிதாபமாக எதிரொலிக்கத் தொடங்கிய ராமையாத்தேவரின் வெள்ளைக் காளை எழுப்பிய சோகக்குரல் அவனுடைய உள்ளத்தில் மட்டுமல்ல, உடலிலும் கூட ஏதோவொரு புதிய மாற்றத்தை உண்டு பண்ணிய விசித்திரத்தை அவனால் தட்டிக் கழித்திட முடியவில்லை. வாயில்லாச் சீவனின் தாபக் குரல் அவனை அவனது அம்மான் மகளிடம் இட்டுச் சென்றிருக்கலாம். இதயத்தின் அந்தரங்கத்தில் நிலைப்பாக ஊற்றெடுத்துக் கொண்டிருந்த ஆன்ம நேயத்தின் புதுமைப் பெண்ணாக—புரட்சித் தமிழச்சியாக அப்போது அவனுக்குரிய அம்மான் மகள் அன்னக்கொடி அழகு காட்டியிருக்கலாம்!

நாட்டாண்மைக்காரர் இந்த ஆவணத்தான் கோட்டைக் குடியிருப்பைப் பொறுத்த மட்டில், மட்டில்லாப் பெருமையைச் சேர்த்து வைத்துக் கொண்டிருந்தார் என்பது பொய்யல்ல. ஆனாலும், வெறும் பெருமை மாத்திரம் ஒரு சமுதாயத்தில் தலை உயர்த்தி நடக்கப் பற்றுவதில்லை. மனிதப் பிண்டத்துக்கு யதார்த்தமான பெருமை ஏற்பட வேண்டுமேயானால், பணம் காசுதான் முதல்படியாக

வேண்டும். பணம் இருந்துவிட்டால், பெருமை தன்னால் வரும்! வீரமணியின் இத்தகைய பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஆதிமூலத்தேவரால் ஈடு கொடுக்க இயலாமற் போய் விட்டது. தென் புறத் தாழ்வாரத்தில் இருந்த குதிர்களிலே நெல்லையும், உட்புறத்தாய் வீட்டில் இருந்த 'மாந்தளை' தேக்குப் பெட்டகத்தில் பணங்களையும் கொட்டி அளந்து குவித்து வைத்திருந்தவர்தான் பெரியவர். ஆனால், தற்போது காலம் மாறி விட்டது. எல்லாம், 'ஆண்டு மாறி' விட்டது. புதுப் பணக்காரர்களுக்கு மத்தியிலே, பழைய பணக்காரர்களால் தலை நிமிர்ந்து கால் ஊன்றி நிற்க முடியவில்லை. ஆகவே, இந்நிலைக்கு தேவர் மட்டிலும் எங்ஙனம் விதிவிலங்கு ஆகக்கூடும்?

செயற்கை ஒளி சரம் கட்டிப் பரவியது.

"தம்பி," என்று பரிவுடன் கூப்பிட்டார் ஆதிமூலம். சோகத்தின் பயங்கரமான மெல்லிய இழைகள் இப்போது அவரது முகத்தில் தடம் காட்ட வில்லை. "வீரமணி, என்னமோ சொல்ல வாயை எடுத்தாய்; சொல்ல வந்ததை— அல்லது சொல்ல வேண்டியதைச் சொல்லாமல் அப்படியே மென்று கொண்டாப்பிலே நின்னிட்டியேப்பா?" என்று வினவினார் அவர்.

வீரமணி பெருமூச்சு விட்டான். அவன் செவி களிலே மறுபடியும் அந்த வெள்ளைக் காளை மாட்டின் அபய ஓலம் கேட்க ஆரம்பித்து விட்டது. அவனுடைய 'மானபிமானம்' சிலிர்ப்படைந்தது.

அத்தோடு அவனுக்கு உண்டான 'மானஅவமான' உணர்ச்சியும் விழித்துக் கொண்டது. அப்பாவின் கேள்விக்கு விடை சொல்லாமல், தென் பக்கம் மடங்கி நடந்தான்.

வீரமணியைத் தொடரலானார் ஆதிமூலம்.

"எங்கே தம்பி போறே?"

"அம்மான் வீட்டு வெள்ளைக் காளை பசியினாலே கத்திக்கிட்டு இருக்குது, பாவம். அதுக்குப் பரணியிலேயிருந்து வைக்கோல் பிடுங்கிப் போடப் போறேன்," என்று சொல்லிக் கொண்டே, கொட்டகை விட்டத்தில் ஒட்டிக் கிடந்த வாங்கரி வாளை எடுத்துப் பிடித்து 'வாகு' கணித்துத் திருப்பினான் வீரமணி. பிறகு, வைக்கோல் போரை நோக்கிக் குறி வைத்து வாங்கரிவாளைச் செலுத்திய நேரத்தில், அந்த வாங்கரிவாள் தட்டிப் பறித்து வீசப்பட்டதைத்தான் அப்போது அவனால் உணர முடிந்தது. "அப்பா!" என்று கோபாவேசத்தோடு கத்திவிட்டான் வீரமணி.

"வீரமணி!" என்று பெரியவர் பதிலுக்குக் கூச்சலிட்டுக் குரல் கொடுக்க மறக்கவில்லை. "உன்னைக் கொஞ்ச நாளாய் நான் கவனிச்சுக் கிட்டுத்தான் வர்றேன். உன்னோட பொடி தூவின பேச்சு வார்த்தைங்களையும், உன்னை யாரோ சொக்குப் பொடி தூவி மயக்கிட்டது கணக்கிலே, நீ கணக்கு வழக்கு மட்டுப்படாமல் மயங்கிக் கிறங்கித் தடுமாறித் தவிச்சுக் கிட்டுத் திரிகிற

போக்குங்களையும் நான் குறி வச்சுப் படிச்சுக்கிடத் தப்பல்லே என்கிற துப்பை மட்டுக்கும் நீ லவலேசமும் மறந்துபுடாதே!'' என்றார். ரவை நாழிக்கு முன்னர் அருமைப் புதல்வனை அதட்டி அலட்டின குரலிலே இழையோடியிருந்த அந்தச் சூடு இப்போது தடம் காட்டவில்லைதான்!

ஆனால், வீரமணியோ தன் அருமைத் தந்தையாரின் அதிகாரத் தொனியைச் சட்டை செய்தவனாகத் தோன்றக் காணோம். சட்டையை இழுத்து விட்டவாறு, பரணடியிலே சிந்திக் கிடந்த வைக்கோல் சிதறல்களைக் கூட்டிப் பெருக்கி ஒரு 'குடங்கை' பொறுக்கி அள்ளிக் கொண்டு தன் போக்கில்—தன் தடத்தில் திரும்பி, மாட்டுக்கொட்டடியை நோக்கி நடந்தான்.

"ஏ, வீரமணி! உன் புத்தி பிசகிப் போச்சுதா! இல்லே, தட்டுக்கெட்டுப் போச்சா? இல்லே, தடம் கெட்டுப் போயிடுச்சா? உனக்கு ரோசம் மானம் துளியாச்சும் இருந்திருந்தால், நீ இம்மாம் பெரிய தப்பைச் செய்யத் துணிவியா? ஊருக்கு ஓசந்த குடியாய், 'மகமேராய்' வாழ்ந்து வந்த நம்ப குடும்பத்தை சொந்தத்துக்குள்ளே சொந்தம் கொண்ட உன் அம்மான் இத்தி கூட ரோசிக்காமல் கச்சேரிப்படிக்கு இழுத்துப் புட்டான்; அத்தோடே மனசு அடங்காமல், இப்ப நம்பளை ஊர்ச் சமுதாயத்து முச்சந்தியிலே வேறே சந்தி சிரிக்க வைக்கப் போறதாய்ச் சவால் விட்டுக்கிட்டும் இருக்கான். இந்த இடுசாம வேளையிலே, நன்னி கெட்ட அந்தப்

புறக்குடிப் பயல் ராமையத் தேவனோட வெள்ளைக் காளை பாவத்துக்கு உண்டான கூலியை அனுபவிக்கிறதாட்டம் நம்ப கிட்டே வந்து சரண் அடைஞ்சிருக்குது. வலியத் தேடி வந்திருக்கிற இந்த அயனை, ஒண்ணும் நம்பர் சந்தர்ப்பத்தை எப்படி எப்படியெல்லாமோ உபயோகப்படுத்திக்கிட்டு, இந்த வெள்ளைக் காளையின் மூலமாக உன் அருமை அம்மான் ராவையாவுக்குப் புத்தி படிச்சுக் கொடுக்க வேணும்னு ரோசனை பண்ணி வச்சிருக்கேன். நீ என்னடான்னு, வெண்ணெய் திரண்டு வாரப்ப தாழியைப் போட்டு உடைச்சு நொறுக்கிற மாதிரி, இருந்திருந்து ஒரு வாயில்லாச் சீவனுக்காகப் பரிஞ்சுக்கிட்டு இரக்கப்பட்டு அதுக்குத் தீனி வீசுறதுக்குத் துடிச்சுக்கிட்டு இருக்கியேப்பா?...''

பயம் ஊட்டும் ரீதியிலே, நயம் சொட்டச் சொற்களை வாரி வழங்கிய வண்ணம், ஆதிமூலத் தேவர் தொழுவத்தை நெருங்குவதற்கும், கையிலிருந்த வைக்கோலை அந்த வெள்ளைக்காளைக்கு முன்னே வீரமணி இதமும் பதமுமாக வீசுவதற்கும் கனகச்சிதமாகத்தான் இருந்தது.

ஆனால்...?

காய்ந்த மாடு கம்பிலே விழுந்தது என்பார்கள் அல்லவா?—அந்தப் பாவனையில் வைக்கோல் பிசிறுகளைக் கண்டதும், வெள்ளைக் காளை ஒரே தாவாகத் தாவி, கொம்புகளைச் சிலுப்பி, வாலை உலுக்கியபடி நாக்கை நீட்டியது. ஆனால் பாவம், ஒரு 'பிரி' மட்டும் தான் அதன் வாய்க்கு எட்டியது. காலுக்கு எட்டிய

மிச்சம் மீதி வைக்கோல் எல்லாம் அதன் வாய்க்கு எட்ட முடியாமல் போயிற்று. வெள்ளைக் காலில் முடிச்சுப் போட்டுப் பிணைக்கப்பட்டிருந்த வெள்ளைக் காளை அவ்வளவு லகுவில் பிடிகயிற்றை அறுத்துக் கொண்டு விடுதலை பெற்று விட முடியுமா? இல்லை, அவ்வாறு விடுதலை அளிக்கத்தான் ஊர் நாட்டாண்மைக்காரர் அவ்வளவு லேசில் இளகி விடுவாரா?—ஒரே எட்டில் பாய்ந்தார் பெரியவர். பசி தூண்டப் பெற்ற நிலையிலே, வாய்க்கு எட்டிய வைக்கோற் பிரியை மென்று அசை போட்டதோடு பசுவாகக் காட்சியளித்த வெள்ளைக் காளையின் காலடியில் கிடந்த வைக்கோல் 'சாடா' வையும் அப்படியே குண்டுக் கட்டாகக் கூட்டிக் குவித்து அள்ளிக் கொண்டு அதே பாய்ச்சலோடு மறுகி தம்முடைய பசுக்களுக்கும் காளைகளுக்கும் தூவிவிட்டுக் கையைத் துடைத்துக் கொண்டு, பிறகு தமது கருக்கரிவாள் மீசையையும் முறுக்கி விட்டுக் கொள்ளலானார்.

வீரமணிக்கு அப்பாவின் செயல் அவமானத்தை மட்டும் தூண்டவில்லை; ஆத்திரத்தையும் தூண்டவே செய்தது. "அப்பா, நம்மளோட கோபதாபத்தையெல்லாம் ஒரு பாவமும் அறியாத இந்த வாயில்லாச் சீவன் கிட்டவா காட்டுவீங்க? உங்கசடனைக்கும் ஆத்திரத்துக்கும் பதில் சொல்ல வேண்டியவர் நீங்க அடிக்கடி குத்திக் காட்டுற மாதிரி என்னோட அருமை அம்மான்தான்: அதொப்ப, அம்மானோட சங்கடத்துக்கும்சாவாலுக்கும் பதில் சொல்லித் தீரவேண்டிய விதி உங்களுக்கு உண்டு. உங்க ரெண்டு பேருக்கும் ஊடாலே நீறு

பூத்த நெருப்பாக பரஸ்பரம் ஒரு வன்ம உணர்ச்சி—பகை உணர்ச்சிமுட்டி மோதி வெடிக்க வேளை பார்த்துக்கிட்டு இருக்கையிலே, உங்க ரெண்டு பேருக்குமே அப்பாற் பட்ட ஒரு காளையின் விசாரத்தை ஏதுக்கு நாம விலை கொடுத்து வாங்க முனைய வேணும்?!'' என்றுவேகம் வடிந்த குரலெடுத்துக் கேட்கலானான் இளவட்டம்!

''தம்பி, நீ சொல்லாமலேயே நியாயம் எது' அநியாயம் எது என்கிற சங்கதியெல்லாம் எனக்குத் தீரத் தெளியப் புரியும். சீட்டாட்டத்தைப் பற்றி உனக்கு ஒண்ணும் தெரியாதிண்ணு தான் நான் நினைச்சுக்கிட்டு இருக்கேன். ஒரு வேளை, தெரிஞ்சிருந் தாலும் தெரிஞ்சிருக்கலாம்' சீட்டு ஆட்டம் போடு றப்ப, துருப்புச் சீட்டு கைக்குக் கிடைச்சிட்டா, அதை யாரும் வெளியே விட்டுப் புடமாட்டாங்க எதிரி தோற்றுப் பூடுவானே அப்படின்னு தர்மம் பார்த்தால், அப்பாலே, அந்த துருப்புச் சீட்டை வச் சிருக்கக் கூடிய பேர்வழியே மண்ணைத்தான் கவ்வ வேண்டிவரும். அதை ஒத்துத்தான் இந்தக் காளைக் கதையும்!... ஆயிரம் வந்தாலும் சரி, ஆயிரம் போனாலும் சரி; குழி பறிச்சுத் தான் குழி முயலைப் பிடிப்பாங்களாம். நானும் உன் அருமை அம்மானை அவனுக்குச் சொந்தமான இந்த வெள்ளையைப் பக டையாக வச்சுத்தான் ஒரு கை பார்க்கப் போறேன்! குன்னக்குடிக்குக் காவடி எடுத்தாலும், ராமையா இனி அவனோட காளையை என்கிட்டேயிருந்து மீட்டுக்கிடவே ஏலாதாக்கும்! ராத்திரி முச்சூடும் மாட்டுக்காரப் பயலோடே சேர்ந்து நான்

கண்ணிலே விளக்கெண்ணெய் ஊற்றிக்கிட்டுத் தான் விடிய விடிய கண் விழிச்சிருக்கப் போறேன்!... தலைமுறை தத்துவமாய் ஊர் நாட்டாண்மைக்கு அதிகாரம் கொண்ட இந்த ஆதிமூலத்தை சந்திக்கு இழுக்கிறதுக்கு மனப்பால் குடிச்சுக்கிட்டு இருக்கிற உன் அம்மான் ராமையாவுக்கு ஈரலிலே பித்தா, இல்லே, எலும்பிலே பித்தான்னு சோதிச்சுப் பிட வேணுமா?... ஊம், சொல்லு தம்பி, சொல்லு!''

பெரியவருக்கு மூப்பு வந்து விட்டது. ஆகவே மூச்சு வாங்கியதில் வியப்பு ஏதுமில்லை.

''நான் சொல்றது இருக்கட்டும் ஒரு முடுக்கிலே. இப்ப நீங்க சொல்லுங்கப்பா! உங்களுக்கு உண்டான மான ரோசம் இம்மாம் தொலைவுக்கு விழிச்சுக்கிட்டு இருக்கிறதைப் பார்த்தால், நாளைக்குப் பொழுது விடிஞ்சதும் விடியாததுமாய், அம்மான் கிட்டே போய், நீங்க அம்மானுக்குப் பட்டிருக்கிற கடன் பூராத்தையும் கட்டிப்பிடுவீங் கன்னு தோணுதுங்களே? என் யூகம் சரிதானுங் களா? அப்படி நீங்க கடனைத் தீர்த்தால்தான், அம்மாேடை இந்தக் காளையைப் பகடையாக்கி நீங்க சொக்கட்டான் விளையாடுறதுக்கு ஒரு நியாய மான அர்த்தம் இருக்க வாய்க்கும்! இல்லிங்களா, அப்பா?— சொல்லுங்கப்பா, சொல்லுங்க!...''

வீரமணியின் தர்க்க வாதம் நல்ல பாம்பைச் சீண்டி விட்ட கதையாகவே ஆயிற்று. பெரியவரின் இடுக்கு விழுந்திருந்த கண்கள் இரண்டுமே மிளகாய்ப் பழங்களாகச் சிவந்து விட்டன. அந்தச்

சிவப்பை மேலும் பயங்கரமாக விளக்கிக் காட்டியது வெள்ளி நிலா. அவர் கோபாவேசத்தோடு வீரமணியை விழுங்கி விடுகிற மாதிரி பார்த்தார்; பார்த்ததோடு சரி! — விழுங்கி விடவில்லை. மீசையில் இடம் தெரியாமல் வந்து குந்திய ஈயை ஆத்திரம் சூடு பறக்க விரட்டிவிட்டு, 'தாழ் வாயை' தடவியபடியோ அல்லது தடவிக் கொடுத்தபடியோ வாயைத் திறக்கலானார்.

அதற்குள்:

ராமையாத் தேவர் பொறுமை இழந்தவராகத் தட்டி மறைவினின்றும் வெளிப்பட்டார். தன்னுடைய தேள் கொடுக்கு மீசையை நீவி விட்டவாறு, "நாட்டாமைக்கார ஐயாவே! உங்க அன்புப்பிள்ளை —என் அருமை மாப்பிள்ளை கேட்ட கேள்விக்குச் 'சவாப்' சொல்லுங்களேன்!" என்று நையாண்டிக் குரலிலே பேசினார்.

வீரமணி மலைத்தான். அடி மடியில் ஒளிந்திருந்த அந்த வைரச் சிமிக்கிகளைக் 'கமுக்கமாக'த் தடவிப் பார்த்துக் கொண்டான். அவன் சிந்தனை எங்கெல்லாமோ, எப்படியெல்லாமோ சுழல ஆரம்பித்தது.

பெரியவர் ஆதிமூலம் எரித்து விடுகிற உத்தேசத்தோடு ராமையாவை விழி பிதுங்க விழித்துப்பார்த்தார்; கட்டுக் குடுமி நிலவுக் காற்றில் ஊசலாட, "டேய், ராமையா!" என்று ஓங்காரமாகச் சிம்மக் குரலெடுத்துக் கூவினார் ஊர் அம்பலக்காரர்!

12. சலனத்தின் உணர்வுகள்

சிங்கப்பூர்ச்சீமான் ராமையாத் தேவர், "டேய் ராமையா!" என்று ஊர் நாட்டாண்மை ஆதி மூலத் தேவர் ஆத்திரம் தூள் பறக்க, அதிகாரம் கொடி பறக்க, அலட்டிய குரலைக் கேட்டதுதான் தாமதம்; உடனே, அவர் சிம்ம அவதாரம் எடுக்க ஆரம்பித்து விட்டார். தன்னுடைய துடிப்பைப் பிரதிபலிப்பது போலத் துடித்திட்ட தேள் கொடுக்கு மீசையைத் தட்டி விட்டுத் தட்டிக் கொடுத்தவாறு, விழிகளை வெட்டிக் கட்டி நிமிர்த்திஞர்: "ஓய், ஆதி மூலத் தேவரே! என்னமோ உங்க வீட்டு மாட்டுக் காரப் பயலை ஏவுறதாட்டம், 'டேய் ராமையா' அப்படின்னு கூப்பாடு போடுறீங்களே?—என்ன நெஞ்சுத் தைரியம் இருக்க வேணும் உமக்கு?" என்று ஓங்காரமாக மட்டுமல்லாமல், ஒய்யாரமாக வும் கேட்டார் அவர்.

ஆதிமூலத் தேவர் பெரியவர்; ஆகவே, அவர் பெரிதாகவே சிரித்தார். எதிர்த்து வந்த ஆத்திரத்தை மடக்கிவிட, சிரிப்பைத் தேளாகக் கொட்டி எதிரியை மடக்கிப் போட வேண்டுமென் பது அவருடைய சித்தாந்தமாக இருக்கலாம். அக் கரைச் சீமைப் புதுப் பணக்காரரான ராமையாத் தேவரை ஏறிட்டுப் பார்த்தார். "துப்புக் கெட்ட மச்சானுக்கு மீசை துடிக்கக் காணும்; ஆத்திரம் தான் துடிக்குது. நேற்று வெடிச்ச இலை நீ; உன்னை 'டேய், ராமையா'ன்னு அடாவடியாய் அழைக்கிற

துக்கு பெரிய நெஞ்சுத் தைரியம் வேணுமாக்கும்? என்னோட நெஞ்சுத் தைரியத்தை இனிமேல்தானா நீ புதுசாய்க் கண்டுக்கிடப் போறாய்?...அடி நாளிலே ஊர் நாட்டிலே வரி வசூல் பண்ணுற விசயமாய் நீ திருடனுக்குத் தேள் கொட்டினது கணக்காய் அவ மானப்பட்டு முழி முழின்னு முழிச்சுகிட்டு இருந் தப்ப, உன் மானத்தைக் காப்பாற்றி, உன்னையும் காப்பாற்ற என்னோட நெஞ்சுத் துணிச்சல் என் னென்ன வழியெல்லாம் விளையாடித் தீர்த்திச்சு என்கிற காரியத்தை மறந்து, அதுக்கு உண்டான நன்னியையும் மறந்து, தலைகெட்டுத் திரிகிறதினாலே தான், நீ என்னைப் பார்த்து கேள்வியும் எதிர்க் கேள்வியும் கேட்கத் துணிஞ்சிட்டே! அப்படித்தா னேடா?'' என்று வேதனையின் நமைச்சலோடும் ஆத்திரத்தின் குமைச்சலோடும் வினவலானார் மூத்தவர். சுடும் நிலவின் சுடாத கதிர்களில் அவருடைய வெண் முடிகள் வைர முடி கட்டிச் சுடர் காட்டின!

வீரமணி முள் மேலே நின்றான்!

''பட்டுக்கோட்டைக்கு வழி என்னான்னு கேட்டால், நீங்க கொட்டைப் பாக்கு விலையைச் சொல்லுறீங்களே?... உப்புச்சப்பு இல்லாத உங்களுக்கே இத்தனை தைரியம் இருக்கையிலே, நாலு ஊர்த் தண்ணியை நாலு நாலு வாயாய் அள்ளிக் குடிச்சுப் பழக்கப்பட்ட எனக்கு மட்டும் வல்லமைக்கு 'வாட்டு' வந்திடுமோ?... சரி சரி. என்னோட வெள்ளைக் காளையைப் பற்றி இப்போ

தைக்கு இனிமேல் நான் மூச்சுக் காட்ட மாட்டேன்! வாய் பேசத் தெரிஞ்ச எனக்குச் சொந்தமான, வாய் பேசத் தெரியாத 'வெள்ளை' யைப் பற்றின என்னோட நடவடிக்கைகளைப் பற்றி விடிகிற பொழுது உமக்குக் கதை சொல்லும்! இப்போ, நான் போனதும் வந்ததுமாய்த் திரும்பி வந்த விசயம் வேறே!...ஐயாவே, ஆதிமூலத் தேவரே! கொஞ்ச முந்தி நான் இங்கிட்டுக் கால் பாவி நின்ன போது, என் அடிமடியிலே கமுக்கமாய் ஒளிஞ்சிருந்த வைரச் சிமிக்கிச் சோடி எப்படியோ விழுந்து தொலைஞ்சிருக்குது; உம்மோட இந்தத் திட்டி வாசலே ஒட்டியேதான் எங்கிட்டாச்சும் நழுவி விழுந்து தொலைஞ்சிருக்க வேணும். கண்ணு ரெண்டையும் ஒரே முட்டிலே பறிச்சுப்பிடுறதாட்டம் மெய்யாலுமே மின்னிக்கிட்டிருகதும் அந்தச் சிமிக்கிகளை நீங்க கண்டது உண்டா?..."

ராமையாத் தேவர், கை முறுக்குகளைக் கைக்கு மெய்யாகப் பறிகொடுத்த குழந்தையின் ஏக்கத்தோடும் வேதனையோடும் வினவினார். கலங்கி அறியாத அவரது கண்கள் இரண்டும் கலங்கிக் கொண்டிருந்தன.

"ஏய், கேலியா பண்ணுறே, கேலி?...போட்ட இடத்திலே கண்ணு ரெண்டையும் விளக்கிக்கிட்டுத் தேடு. தேடினால் கிடைக்கும்; உனக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியிருந்தால் கட்டாயம் கிடைக்கும்!" என்று 'தத்துவம்' படித்தார் ஆறு கரை. நமட்டுச் சிரிப்பு வெட்ட வெளிச்சமாகக் கரைதட்டி

யது. ஆதிமூலத் தேவர் ஓர் அகம்பாவம் இழை யோட கைகளை விரித்துக் காட்டினார்.

ராமையாத் தேவரின் ஆத்திரம் அவருடைய பற்களிலே நசுங்கிக் கொண்டேயிருந்தது. "வீரமணி மாப்பிள்ளை, என்னோட வைரச் சிமிக்கிகள் உங்க கண்ணிலேயாச்சும் தென்பட்டுச்சா?... உங்க அம்மான் மகளுக்காக இன்னைக்கு அந்திக் கட்டிலே தான் செஞ்சு வாங்கினேனுங்க!" என்று கேட்டார் ராமையா.

வீரமணிக்கு ஓர் அரைக் கணம் ரத்த ஓட்டமே நின்று விட்ட மாதிரி ஆகிவிட்டது. அரை நாழிப் பொழுதுக்கு முந்தி, பொட்டலிலே கண்ட விளாம் பழமாகக் கண்டெடுத்த அன்னக் கொடியின் வைரச் சிமிக்கிகளைப் பற்றின நடப்பு நிலவரத்தை அப்பா விடம் மறைத்து விட்ட நிலையிலே, உண்மையை இப்போது எவ்வாறு தாய் மாமனிடம் வெளிக் காட்ட முடியும் என்ற சிக்கல் அவனைப் பிடரியைப் பற்றி இழுத்து அலைக்கழித்துக் கொண்டிருந்தது. தவிர்க்க வாய்க்காத சங்கடமும் தவிப்பும் அவனைச் சோதிக்கத் தப்பிவிடவில்லை. பேயறைபட்ட பாவனை யில் சில இமைப் பொழுதிற்கு இமைக்கவும் மறந்து, செயலற்று—செய்வகை இழந்து அப்படியே 'நத்துக் கல்' லாகவே நின்று விட்டான் வீரமணி.

ஆதிமூலம் தன் அருமை மைந்தனையும் மைத்துனன் ராமையாவையும் மாறி மாறி, மாற்றி மாற்றிப், பார்வையிட்டார். எதையோ எண்ண முயன்று, அல்லது எண்ணி, அவ்வெண்ணத்தில்

பொட்டுப் பொழுது வரை மயங்கி அல்லது மயங்க முயன்று, பிறகு விடுதலை கொண்ட அவர் நெற்றியைத் தடவி விட்டவராக ராமையாவை நோக்கினார். "இந்தாப் பாரு, ராமையா! தும்பை விட்டுப் புட்டு வாலைப் பிடிக்கிறதுக்கு உனக்கு இருக்கக் கூடிய சூழ்நிலை அனுசரணையாக இருக்கலாம். அதைப் பற்றிக் கிண்டிக் கிளற வேண்டிய அக்கறை எனக்குக் கிடையாது. நீ எங்கேயோ புத்திகெட்டு வைரச் சிமிக்கிகளைக் கெட்டுப் போக்கிட்ட தப்புக்கு எங்களை ஏன் குடைஞ்செடுக்கிறே?......நீ காணும வடிச்ச சிமிக்கிகள் வைரமா, இல்லையா?—அல்லது, அதுக ரெண்டும் உன் அன்பு மகள் அன்னத்தினுடையதா, இல்லே, வேறே யாருக்கும் அதுக ரெண்டும் சொந்த பந்தம் கொண்டதா என்கிற தலைவலிச் சங்கதியெல்லாம் எங்களுக்கென்ன தெரியும்?" என்றார் அவர். இன்னும் கூடுதலாக வேறு ஏதேதோ பேசத் துடித்து, பிறகு அத்துடிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டவர் போல அவர் காணப்பட்டார்.

அப்பாவுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறான் என்பதை உணர்த்திக் காட்ட முனைபவன் மாதிரி, அப்பாவின் பேச்சை அனுசரித்து ஒப்புக் கொண்டவனாக, 'காணாமற் போன வைரச் சிமிக்கிகளைப் பற்றி எனக்கும் யாதொன்றும் தெரியாது!' என்கிற மாதிரி, அவனும் எதிர் மறையில் பலமாகத் தலையை உலுக்கி ஆட்டினான்.

ராமையாத் தேவரின் முகம் ஏமாற்றத்தால் மாறி விட்டது; தந்தையையும் தனயனையும் சூட்சு

மத்தோடு பார்வையிட்டார். தன்னுடைய அடி மடியை இதம் பதமாகத் தடவிப் பார்த்தபடி, "மான ஈனத்துக்கு அஞ்சாத புறக்குடிப் பயல் எவனோ ஒருத்தனோட கையிலே என் மகளோட வைரச் சிமிக்கிகள் ரெண்டும் அகப்பட்டு இருக்க வேணும். என்னோட அருமைத் தங்கம்—ஆசைப் பொண்ணு அன்னத்துக்காகச் செஞ்ச அந்த வைரச் சிமிக்கிகளை எடுத்த புறம்போக்குப் பயல் மெய்யாலுமே உப்புப் போட்டு சோறு உண்ணவனாக இருந் திருந்தால், இப்பவே என் வீட்டிலே காதும் காதும் வச்சாப்பிலே கொண்டாந்து போட்டுப்புடுவான்! ஒரு வேளை, அந்தச் சிமிக்கிகளைப் போடாமல், 'அழுச்சாட்டியம்' பண்ணினால், அந்தக் களவாணிப் பயலை சும்மா விடப் போறதில்லை!" என்று காரசார மாகவும் கோபாவேசமாகவும் பேசி நிறுத்தினார் அவர். மிளகாய்ப் பழங்களாகச் சிவந்திருந்த ராமையாத் தேவரின் கண்கள் மேலும் சிவந்து விட்டன.

தாய் மாமன் சூடு பறக்க—அனல் தெறிக்கப் பேசிய பேச்சைக் கேட்டதும் வீரமணிக்குச் சுருக் கென்றது. ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு நெருஞ்சி முள்ளாகத் தைத்து விட்ட வேதனையை அவனுடைய மன அந்தரங்கம் உணர்ந்ததும், அவனது உள்ளம் குற்ற உணர்வின் கசையடி தாளா மல் திணறியது. திண்டாடியது. அன்னக்கொடிக் காகச் செய்திருந்த வைரச் சிமிக்கிகள் வனவாசம் செய்திருந்த அடிமடியை நலியாமல் தொட்டுப் பார்த்த அவனுடைய விரல்களில் அம்மான் மகள்

அன்னத்தைத் தீண்டுகின்ற தொட்டுணர்வு அவனை ஓர் அரைக் கணம் மெய்ம்மறக்கச் செய்தது. உள்ளம் தொட்டவள் அவள்; உணர்வுகளைத் தொட வைத்தவளும் அவளே!—கனவின் தொடுவானமாக விளங்க வேண்டும் என்பதற்காகத்தான் அவளை அவன் இதயத்தினின்றும் பிரித்துவிட கங்கணம் கட்டி விட்டாரா அப்பா? அப்பாவை எண்ணும்போது, விதி என்று ஒன்று இருக்கவே வேண்டுமென்று நம்பத்தான் வேண்டும்போலும்! 'அன்னம், என்னை மன்னிச்சிடு! நான் திருடன்தான்! ஏன், தெரியுமா?—உன் நெஞ்சைத் திருடிக்கிட்டேன் அல்லவா? ஆனால், உனக்குப் பாத்தியதை கொண்ட வைரச் சிமிக்கிகளை நான் திருடவே கிடையாது. தேடி வந்த சீதேவியாக அவை என்னைச் சரண் அடைஞ்சதுக்கு அப்பாலே, அதுகளை ஒதுக்கி விலக்குவேனா?...' நெஞ்சில் காதலாக நிறைந்தவள், கண்களிலே கண்ணீராகவும் நிறைந்தாள்! 'அரிச்சந்திரத்தனமாக இந்த வைரச் சிமிக்கிகளை அம்மாவிடம் இப்போது கொடுத்து விட்டால் அப்புறம் அப்பா என்னைத்தவறாக நினைச்சுக்கிடுவாங்க!' என்ற எண்ணத்தின் பலவீனமான அமைதியில் அவன் உழன்றான்; சுழன்றான். ஆயினும் எதையும் தாங்கும் இதயத்தின் கண்களிலே நேர்மையின் புனிதம் பளிச்சிட்டது!

ராமையா ஏமாற்றத்தின் எடுபிடியாகி அங்கிருந்து நகர்ந்த நேரத்திலே, அவருடைய வெள்ளைக் காளை முன் மாதிரி மறுபடி அவலக் குரல் எழுப்பி

யதைக் கேட்டதும், அவரது பார்வை ஆத்திரம் சிதற ஆதிமூலத் தேவரைச் சாடியது.

அந்தப் பார்வையின் உட்பொருள் ஊர் நாட்டாண்மைக்காரருக்குப் புரியாமல் இருக்குமா, என்ன? அலட்சியமாகத் தன் மைத்துனனை நோக்கினார். ''ராமையா! நீ இங்கேயிருந்து கால் மாறிக் கிளம்புறதுக்கு முந்தி, நான் சொல்லப் போற தாக்கல் தகவலையும் கேட்டுக்கிட்டு நடந்திடு. அது தான் சிலாக்கியம்!'' என்றார் பெரியவர்.

''உத்தரவுங்க, பெரியவுகளே!''

ராமையாத் தேவரின் குரலில் நையாண்டித் தன்மை எடுப்பாகக் குரல் கொடுக்கத் தவறவில்லை.

''நல்லாய்ச் சொன்னே. ஆமா, நான் உத்தரவு தான் இப்போ போடப் போறேன். என் ஆசை மகன் வீரமணியை நீ நொடிக்கு நூறு வாட்டி 'மாப்பிள்ளை—மாப்பிள்ளை' அப்படின்னு சொந்தம் கொண்டாடுறதைப் பார்த்தால்— ஊகூம், கேட்டால், எனக்குப் பரிதாபமாக இருக்குது!... எங்க வீரமணி ஆவணி பிறந்தடியும் சிலட்டூர்க் கங்காணியோட மாப்பிள்ளை ஆகப் போகுதாக்கும்! ஆகச்சே, இனிமேலும் நீ வீணாகப் பகல் கனவு காணாதே!...மனப்பாலும் குடிக்காதே! பசும் பாலைக் குடிச்சிட்டு இரு!'' என்று உத்தரவிட்டார் 'ஆவன்னா தீனா.'

சிங்கப்பூர்த் தேவரின் முகத்தில் எள்ளத்தனை சலனமாகிலும் ஏற்பட்டுத் தொலைக்கக் கூடாதோ?

''அந்தக் கதையெல்லாம் எனக்கு அப்பவே தெரியு மாக்கும்!'' என்று ஓர் அழுத்தம் கொடுத்துப் பதில் கொடுத்தார் அவர்.

''அந்தத் துப்புத் தெரிஞ்சிருந்துமா, துப்புக் கெட்டவனுட்டம் என் மகனை மாப்பிள்ளைச் சொந்தம் கொண்டாடத் துணிஞ்சே?...'' என்று இளக்காரமாக வினவினார் பெரியவர்.

''ஊம்!''

ராமையாவின் விடையில் அகம்பாவம் இருந்ததுதான் உண்மை.

''இந்தாப் பாரு, ராமையா, நீ உன் மகளைக் கொண்டு என் மகன் மேலே ஏதானும் சொக்குப் பொடி தூவச் செஞ்சு, அதன் மூலமாய், நீ விரமணியை வசப்படுத்திக்கிட ஏதாச்சும் சூதுகீது செஞ்சாயோ, அப்பாலே, உன்னைச் சும்மா விடவே மாட்டேன். நெஞ்சிலே முடி போட்டு வச்சிக்கிடு. ஆமா, செப்பிட்டேன்!'' என்று எச்சரிக்கை செய்யலானார் ஆதிமூலம்.

''அதையும்தான் பார்க்கப் போறேனே, மச்சானே!''

ராமையா சிரித்தார். வேகமான சிரிப்பு அது. சிரிப்பின் கனமான காலடிச் சுவடிகளை அழுத்தி மிதித்தவராக, தலையை நிமிர்த்தியபடி அங்கிருந்து நகர எத்தனம் செய்தார் அவர்.

அந்தச் சிரிப்பின் அலைகள் தந்தையை மட்டுமல்லாமல், தனயனையும் சேர்த்து விழுங்கி விடத்

தவித்துக் கொண்டிருந்த உண்மையை அவர்கள் இருவருமே உணர்ந்திடவில்லை!

இப்போது வீரமணி தன்னந் தனியாக இருந்தான். அவனுக்குத் தனிமை வேண்டியிருந்தது. தன்னைப் பற்றிய சுயப் பரிசோதனையில் தன்னை ஈடுபடுத்தி, அதினின்றும் விளையும் நல்லதும் கெட்டதுமான ஆரம்பத்தின் முடிவுகளை அல்லது, முடிவின் ஆரம்பங்களை அலசி ஆராய்ந்து, அதன் மூலம் தன்னுடைய எதிர்காலத்துக்கு ஒரு திட்டம் வகுத்துக் கொள்ள முடியாதா என்றும் வகுத்துக் காட்ட இயலாதா என்றும் அவ நம்பிக்கையோடு கூடிய ஒரு நம்பிக்கையின் நிழலில் ஒண்டிக் கிடந்தான் அவன். நிலவின் அருமையைப் படித்துச் சொல்ல நிழலுக்கு வாய்ப்பு ஏது? என்றாலும், வெண்ணிலவின் தண்மை மண்டின நிழல்கூட ஓர் ஆறுதல் அளிப்பதாகவே அவனுக்குத் தோன்றியது. முத்துக்கள் எடுக்க வேண்டுமென்று இலட்சியம் கொண்டவன் கிளிஞ்சில்களை அலட்சியம் செய்ய வேண்டுமென்று நியதி ஒன்றும் இல்லையே!

ஆதிமூலத் தேவர் வந்தார். உடம்பையும் முகம் கைகால்களையும் வேர்வை நாற்றம் கழியக் கழுவி, நெற்றியில் நீறு தரித்து, உடல் தறிக்காத கும்மாளத்தோடுதான் அவர் காணப்பட்டார். படித்துப் பட்டமும் பெற்ற பட்டிக்காட்டு இளைஞனை வீரமணியை—பரம்பரைப் பணக்காரக் குடும்பத்தைச் சார்ந்த செல்லப் பிள்ளையான வீரமணியை தன்னுடைய அருமை மாப்பிள்ளை யாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று கட்டி

யிருந்த ராமையாவின் மனக்கோட்டையை இடித்துப் பொடித்துத் தரை மட்டமாக மட்டம் தட்டி விட்டதில் அவருக்கு ஏற்பட்ட ஆத்திரம் மிக்க ஆறுதல் இவ்வளவு அவ்வளவு அல்ல! வஞ்சனைக்கு வஞ்சனையைப் பதிலுக்குப் பதிலாகப் பாடம் சொல்லிக் கொடுக்க ஒரு வாய்ப்பு கைகூடி வந்திருப்பதிலுங் கூட அவரது ஆறுதல் இரட்டிக்கவே செய்தது. கைக்கு மெய்யாகக் கொடுத்த கடனைக் காட்டிலும் கூடுதலாகத் தொகை காட்டி, பிராமிசரி நோட்டு எழுதி வாங்கி, நோட்டில் கண்ட உபரித் தொகையை உடனடியாகக் கை ரொக்கமாகக் கொடுத்து விடுவதாகக் கூறி, கடைசி வரை ஏமாற்றித் தீர்த்த ராமையா தன்னைச் சந்தி சிரிக்க வைக்க வேளை பார்த்துக் கொண்டிருக்கையில், அவனை முந்திக் கொண்டு அவனையே முச்சந்தியில் நிறுத்தி வைக்க ஒரு வாய்ப்பு கைகூடி வந்திருப்பதிலும்தான் அவர் ஆனந்தம் கண்டார். ‘சான்றோர் பழிக்கும் வினைக்கு உடந்தையாகப் போகிறாரா பெரியவர்?......’ தம்பி!'' என்றார்.

“இருங்க,'' என்றான் வீரமணி.

“இருக்கிறதுக்கு நேரம்ஏது?...ஆவணி கிட்டணியிலே நெருங்கிக்கிட்டு இருக்குதில்லே?'' என்று ஆனந்தமாகப் புன்னகை செய்தார் அவர்.

தந்தையின் புன்சிரிப்பு வீரமணியின் வயிற்றில் புளியைக் கரைத்தது. ‘ஆவணியைச் சாக்கு வச்சு சதா அப்பா பயமுறுத்திக்கிட்டு இருக்கார். ஆவணி பிறந்திட்டால் மட்டும் சிலட்டூர்க் கங்காணியோட

செல்வப் பொண்ணு பவளக்கொடியின் கழுத்திலே மூணுமுடிச்சுப் போட்டிடுவேளு, என்ன? பாவம்!'— அவனை என்னவோ ஒரு திகில் உணர்வு ஆட்டிப் படைத்தது. இனம் விளங்காத தவிப்பும் இனம் விளங்கிய கிலேசமும் அவனுள் பிசிறி தட்டிச் சிதறிச் சலனத்தின் உணர்வுகளைப் பொங்கிப் பீறிடச் செய்தன.

"தம்பி, எழுந்திரு. சாப்பிடுவோம்," என்று துருசுப்படுத்தினார் பெரியவர். அன்பு மகனிடம் அவனுக்குச் சம்பந்தம் பேசி முடித்திருக்கும் கங்காணியார் மகள் பவளக்கொடியைப் பற்றி அவனுடைய அபிப்பிராயத்தைக் கேட்டறிய வேண்டும். இந்தத் தார்மீக நியாயம் இப்போது தான் அவருடைய உள்ளத்திலே 'சுள்ளாப்பாக' உறைத்தது போலும்! இத்தகைய மானமாறுதலின் புண்ணியம் ராமையாவையே சார வேண்டும் என்ற ரகசியத்தை அவரது மனச்சான்று அறிந்து உணராமல் இருந்திருக்க நியாயம் இல்லைதான்!

"நீங்க சாப்பிடுங்க, அப்பா. எனக்கு வயிறு மந்தமாய் இருக்குது," என்று இட்டுக் கட்டி ஒரு பொய்யை வெளியிட்டான் அவன்.

"வயசுப் பிள்ளை நீ. பசிச்சாலும், பசிக்காட்டியும் வட்டியடியிலே குந்தி ஏந்திருச்சிடு வீரமணி; நாளைக்கு மணவறையிலே குந்தப் போற பிள்ளை நீ. வெறும் பிள்ளை இல்லே!—மாப்பிள்ளை! இந்தச் சங்கதியை அடிக்கொரு கடுத்தம் நீ மறந்துப்புடலாமா?...உனக்கு நல்ல புத்தி படிச்சுக் கொடுக்க

உனக்கு ஆத்தாளா இருக்கிறுள்?'' பெரியவரின் குரல் கம்மத் தொடங்கிற்று.

வீரமணி அப்பாவையே வெறிக்க வெறிக்கப் பார்த்த வண்ணம், வண்ணப் பூக்கோலமெனக் கோல நகை புரிந்தான். 'ஆத்தா இருந்திருந்தால், உங்களை மாதிரி என்னுேட மனச் சம்மதம் கேட்காமல், என் வரை ஊர் பேர் தெரியாத சிலட்டூர்ப் பெண் பவளத்தைப் பேசி முடித் திருப்பாங்களா?' என்று நினைத்த மாத்திரத்தில் அவனுக்கு நெஞ்சை அடைத்தது. பாசத்தின் பிரிவு அவன் கண் கடையில் சுடுநீரைக் கூட்டியது. தன் கண் கலங்கக் கண்டால், அப்பாவின் கண்களும் கலங்கத் தொடங்கும். சமாளித்துக் கொள்ள வேண்டியவன் ஆனுன். தந்தையின் பேச்சுக்கு மறு பேச்சுப் பேசாமல், வேண்டா வெறுப்போடு அவசரமாக எழுந்தான். எழுந்த அவசரத்தில் அவன் கட்டியிருந்த வேட்டியில் கட்டியிருந்த மடி அவிழ்ந்து, உடனே மடியிலிருந்த வைரச் சிமிக்கிகள் இரண்டும் ஒளியின் மிதப்பில் அமரிக்கையாக நழுவி விழுந்து கண் சிமிட்டின. திருடனுக்குத் தேள் கொட்டினுற் போன்று ஆகி விட்டது வீரமணியின் நிலை.

ஆதிமூலம் மூக்கின் முனையில் விரலை வைத் தார். ''அடடே, ராமையாத் தேவன் பறி கொடுத்து வாயிலேயும் வயிற்றிலேயும் அடிச் கிட்டுப் பறிஞ்சதெல்லாம் இந்த ஜோடி வைரச் சிமிக்கிக்குத்தானு?'' என்று பல்லெல்லாம் தெரியக்

கேட்டுக் கொண்டே, நழுவி விழுந்திருந்த வைரச் சிமிக்கிகளைக் கையிலே எடுத்தார் அவர்.

வீரமணிக்கு வேர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது. அப்பா எப்படியெல்லாம் கொதித்துக் கொதிப்படையப் போகின்றாரோ? "ஆமாங்க. இந்த ஜோடி வைரச் சிமிக்கிகளுக்காகத்தான் அம்மான் ஆலாய்ப் பறந்து வந்தாருங்க. வீட்டுக்கு வெளியிலே நீங்க கேட்ட கேள்விக்கு வீட்டுக்கு உள்ளே பதில் சொல்லி, இந்தச் சிமிக்கிகளைக் கையில் எடுத்துக் காட்டி உண்மையைப் புட்டு வச்சுச் சொல்லிப்புட வேணும்னு யோசனை பண்ணியிருந்தேனுங்க, அப்பா!" என்று சமாதானம் சொன்னான் அவன்.

வைரச் சிமிக்கிகள் இரண்டும் வைரம் காட்டி வைரம் கட்டிச் சிரித்திருக்க வேண்டும்!

அதே தருணத்தில், முதியவர் ஆதிமூலத்தேவர் காணுதலைக் கண்ட பாங்கிலே கடகடவென்று சிரிக்கலானார். "டேய் தம்பி, ஆத்தா மகமாயி நியாயத்துக்குப் பரிஞ்சு பேசக் கடமைப்பட்டவள் என்கிற விசயம் இப்பவாச்சும் உனக்குப் புரியுதாப்பா என்று கேட்டார்.

தந்தையின் அடியும் முடியும் இல்லாத பேச்சு புரியாத புதிர் போலப் பட்டது.

"என்ன சொல்லுறீங்க, அப்பா? தெய்வம்னு சொன்னால், அது நியாயத்தின் அடையாளம்னு தானே அர்த்தம்?" என்று இளகிய தொனியில் பேசினான் வீரமணி.

"ஒண்ணைப் பத்தாகப் பெருக்கிப் பார்க்கப் பழகி விட்டால், வாழ்க்கையை வாழ்க்கையாகப் பாவித்துப் புரிஞ்சுக்கிட்டு வாழ இயலும். உன் அம்மான், ஊகூம், அந்தச்சிங்கப்பூரான் ராமையாத் தேவன் கொடுக்காத ரூபாய் இரண்டாயிரத்துக்கும் சேர்த்து என்கிட்டே புரோ நோட்டு எழுதி வாங்கிக் கிட்டதோடு, பிராதும் போட்டு 'டிகிரி'யும் பண்ணி வச்சிருக்கான். அவன் தெய்வத்துக்குப் பயப்படாமல் அன்றைக்குச் செஞ்ச அநியாயம் இன்றைக்கு அதோட கூலியை அனுபவிக்கிறது இன்னமுமா விளங்கல்லே?...ராமையா எனக்குப் 'படுத்தடி' பண்ணின அந்த இரண்டாயிரத்துக்கும் கூடுதலான பெறுமதி கொண்ட அவனோட வைரச் சிமிக்கிகள் இரண்டும் தேடிப் போன மூலிகை காலிலே சிக்கின கதையாக இப்பைக்கு என்கையிலே சிக்கிகிடுச்சுதே, கண்டியா, தம்பி?"

ஆதிமூலம் மேலும் விநயமாகச் சிரித்தார்.

"அப்பா!" என்று விளித்தான் வீரமணி. பின்னர் சற்றே நின்றான். பிறகு, "அப்பா, இந்த வைரச் சிமிக்கிகள் இரண்டும் நான் கண்டெடுத்த தாக்கும். ஆகச்சே, இந்த விசயத்திலே உங்க விவகாரத்தைக் குட்டை குழப்பிப்பிடாதீங்க, அப்பா!" என்றான் வீரமணி. "ஊம், அதுகளை இங்கிட்டாலே என்கிட்டே கொடுங்க, அப்பா!" என்றும் வேண்டுதல் விடுத்தான் அவன்.

உள்ளங்கை வைரங்களென மின்னிப் பளிச் சிட்ட அந்த வைரச்சிமிக்கிகளை விழுங்கி விடுகிற

மாதிரி பார்வையிட்டார் பெரியவர். வைரத்தை விழுங்கி விடாத வரை, அவர் பாடு யோகந்தான்! ''தம்பி, என் திட்டத்திலே மண்ணைப் போட்டு முடிடாதேப்பா!...இந்த வைரச் சிமிக்கிகள் என் கையிலேயே கைகாவலுக்கு இருக்கட்டும்டா, ராஜா!'' என்று 'நையம்' பாடிக்கெஞ்சினர் தேவர்.

''ஊஹூம்; அந்த வைரச் சிமிக்கிகள் என்னோட அன்னத்தின் சொத்துங்க, அப்பா! அந்தச் சிமிக்கிகளை நீங்க 'லவட்டிக்கிட' நான் ஒருக்காலும் அனுமதிக்கவே மாட்டேனுங்க, அப்பா!'' என்று வைரம் தொனிக்கப் பேசிக் கொண்டே, அருமை அப்பாவின் கையிலிருந்த அந்த வைரச் சிமிக்கிகள் இரண்டையும் முறுக்குகளைப் பறிக்கும் வட்டப் பருந்து மாதிரி பறித்துக் கொண்டான் வீரமணி

அப்போது, கைவளைகள் 'கல கல' வென முழங்கும் குரல் கேட்டது.

ஆதிமூலத்தேவர் ஆத்திரத்துடன் திசை திரும்பினர்.

வீரமணி ஆனந்தம் மேவ, பார்வையைத் திருப்பி விட்டான்.

அங்கே, உணர்ச்சிகளின் நாயகியாகத் திகழ்ந்த அன்னக்கொடி, மௌனப் புன்னகை மணக்க நின்று கொண்டிருந்தாள்!

13. பெண்மை இனிக்குதடா!

பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்!

அந்தப் புண்ணியத்தின் தரிசனம் அன்னக் கொடியின் மௌனப் புன்னகையில் வீரமணிக்குக் கிட்டியது. முதுமொழியின் இளம் ரத்தம் அப்போது அவனுக்கு ரத்ததானம் வழங்கியிருக்கத்தான் வேண்டும். இல்லையெனில், அவன் அவ்வாறு மனம் விட்டு — வாய்விட்டுச் சிரித்திருக்க மாட்டான்!— "அம்மான் மகளே!...வா, வா!" என்று காதலாகிக் கனிவுடன் முகமன் மொழிந்தான். உள்ளங்கையில் நெல்லிக்கனியென மின்னிப் பளிச்சிட்ட அந்த வைரச் சிமிக்கிகளின் தரிசனம் அவனை அப்பொழுது நிலை குலையச் செய்தது என்னவோ உண்மைதான். என்றாலும், எல்லாச் சங்கடத்தையும் கடந்தும் கடத்தியும் அவன் சிரித்தான்.

பெரியவர் ஆதிமூலத்தேவர் சிமிக்கிகளைப் பறி கொடுத்த மனச்சலனத்தோடு கைகளைப் பிசைந்த வராக ஏக்கமும் துக்கமும்புடை சூழ—படை சூழ நின்றார். வேர்வை வழி தேடி வழிந்து ஓடியது. கட்டுக் கலைந்த கட்டுக் குடுமியைத் தட்டிச் சேர்த்து முடிந்து கொள்ளக் கூட நினைவிழந்து தவித்தார் அவர். கொண்ட வைராக்கியத்தைக் கொண்டு செலுத்தத் தீட்டியிருந்த திட்டத்தில் பெற்றமகனே பிடிமண்ணைப் பிடித்துப் போட்டு விட்டானே என்ற மனத்தாங்கலோடு, பூசை வேளையில் புகுந்த அன்னக்கொடியின் தோற்றமும் அவரைத்

தள்ளாடித் தடுமாற வைத்து விட்டது. 'மச்சினன் மகள் அன்னத்தின் அலங்காரச் சிமிக்கிகளையே பகடையாக்கி, மச்சினனை ஓட ஓட விரட்டத்துடிச்ச எனக்கு முன்னே, சிமிக்குகளுக்கு உடையவளான அன்னம் எப்படி இங்கிட்டு வந்திச்சாம்?....... தடயம் கிடைச்ச தடத்திலேயே ஓடோடி வந்திருக்குமா இந்தப் பொண்ணு?... இனிமேலே நான் ராமையாவைப் பழிக்குப் பழி வாங்க ஏது சாத்தியம்?...' என்று நினைத்து நெஞ்சம் மருள் கொண்டு நினைவுகள் மறுகிக் குறுக நின்றார் அவர்.

"அத்தான்!" என்று உயிரை அழைத்திடும் உயிரின் உறவோடு அழைத்தாள் அன்னம். நிலா முற்றத்தை முற்றுகை இட்டிருந்த நிலவுப் பால் நுரைகள் கரை தாண்டிக் கன்னியின் பவள மேனியில் பட்டுத் தெறித்துக் கொண்டே இருந்தன.

"அன்னம்!" என்று பதில் குரல் கொடுத்தான் வீரமணி.

"நல்லா இருக்கீங்களா?"

"உன் புண்ணியத்திலே நல்லா இருக்கேன், அம்மான் மகளே! நீ...?"

"உங்க புண்ணியத்திலே நானும் நல்லாய்த் தான் இருக்கேனுங்க, அயித்தை மகனே!"

பேசிய அவள் பாசம் உணர்த்திய பாந்தமும், பேசாத அவள் நேசம் உணர்த்திய பந்தமும்

வீரமணியை எங்கெங்கெல்லாமோ வழி காட்டி, வழி நடத்திச் சென்றிருக்கக்கூடும். அவனுடைய தளர்ந்த நெஞ்சம் மலரத் துடித்துக் கொண்டேயிருந்தது. கைக்கு மெய்யாகக் காட்சி தந்த வைரச் சிமிக்கிகளை உரியவளிடம் ஒப்படைத்து விட வேண்டியது நாணயம் கூடிய பண்பாகும் என்று அவன் கருதினன். ஆனல், எப்படி ஒப்படைப்பது, என்ன காரணம் காட்டி ஒப்படைப்பது என்பது இப்போது அவனுடைய மண்டையைக் குடைந்த பிரச்சினையாக ஆகிவிட்டது. அன்றொருநாள், தான் சுவைத்து எச்சில்படுத்திய முட்டைத் தோசையை அன்னம் சுவைத்துத் தின்ற நடப்பு அவனுக்குப் புதிய வல்லமையைக் கொடுத்தது. தனக்குச் சிலட்டூரில் அப்பா சம்பந்தம் முடித்திருந்த ஏமாற்றத்தின் பூச்சாண்டித்தனத்தைப் பற்றிக் கருதவே அவனுடைய அந்தரங்க உள்ளம் கூசிய நிலையில், உள்ளங்கையிலிருந்த வைரச்சிமிக்கிகளை ஒன்று சேர்த்துப் பையப் பையய மேலே உயர்த்திக்காட்டினன் அவன். உடையவளுக்கு உடைமை பூண்ட உடைமையை ஒப்படைப்பதற்கு அப்பாவின் ஒப்புதலோ அனுமதியோ தேவையில்லை என்பதை அவன், அறிவு பூர்வமாக மட்டுமின்றி, உணர்வு பூர்வமாகவும் அறிந்திருந்தான்.

"நான் வரட்டுங்களா, அத்தான்?" என்று விடை கேட்டாள் அன்னம்.

"விசேஷம் ஏதாவது உண்டா, அன்னம்?"

"வாய் பேசத் தெரியாத எங்க வீட்டு வெள்ளையை வாய் பேசத் தெரிஞ்ச நீங்க கட்டிப் போட்டிருக்கிறதுதானுங்க விசேஷம்!" என்றாள் அன்னம்.

பொட்டில் அறை பட்ட மாதிரி இருந்தது வீரமணிக்கு.

அன்னம் தன் அத்தையின் அன்புக் கணவனை அன்பு பிசகாமல் பார்வையிட்டாள்.

ஆனால், அவரோ அன்னத்தையும் வீரமணியையும் பொறுமையுடன் நோக்கினார். பிறகு, "அன்னம், உங்க காளை தப்புச் செஞ்சது; அதுக்கு உண்டான தண்டனையைக் கொடுத்திட்டான் எங்க வீரமணி!" என்று ஓர் அபாண்டப் பொய்ப் பழியை மகன் பேரில் சுமத்தி விட்டார் பெரியவர்.

வீரமணிக்குச் சுருக்கென்றது. பெற்றவரின் அநியாயப் பழிக்குப் பின்னே கள்ளத்தனமாக ஒளிந்திருந்த சூதுமதியின் சூட்சுமத்தை அவன் அறிந்து கொள்ளத் தப்பவில்லை. அம்மான் மகளுக்கு என் பேரில் ஆத்திரத்தை உண்டு பண்ணத்தான் அப்பா இப்படிப் பழி போட்டிருக்கிறார்!— அப்பாவின் கெட்டி யாருக்கு வரும்? சரி, இந்த அப்பாதானா அம்மானிடம் ஏமாந்துவிட்டார்?

அன்னக் கொடி சிரித்தாள். சிரிப்பின் காந்தி அவளுடைய இயல்பான அழகை 'ஒட்டிக்கு ரெட்டி' யாகக் கூட்டிக் காட்டியது. சரியத் துடித்த முந்தானைப் பகுதியைச் சரிப்படுத்தியபடி, "அத்தான்

ஒரு பாவமும் அறிய மாட்டாங்க. பின்னே, அவங்க மேலே ஏதுக்கு வீண் அபவாதத்தைப் போடுறீங்க? எங்க வெள்ளையைக் கட்டிப் போட்டவங்க நீங்க! இந்த உண்மையை நான் அறியாமல் இல்லே!...'' என்று தெரிவித்தாள் அன்னம்.

ஆதிமூலம் சற்று நேரம் மௌனம் காத்தார். பிறகு, ''தப்புச் செய்கிறவங்க தண்டனையை அனுபவிச்சுத்தான் தீர வேணும்! புரிஞ்சுக்க, அன்னம்!'' என்று புத்தி சொன்னார்.

''தப்புத் தண்டா செய்கிறவங்க கட்டாயம் தண்டனையை அனுபவிச்சுத்தானே தீர வேணும்?''

''ஓ!...ஆமா, ஆமா!''

அன்னத்தின் வாய்ச் சிரிப்பு வழி தடுமாறி வழிந்தது. மாமன்காரர் மறுகி நின்ற திசைக்கு அவள் தன் பார்வையைத் திசை திருப்பி, வீரமணியின் மீது நிலைக்கச் செய்தாள். ''எல்லாம் எனக்குப் புரியுமுங்க, மாமா!'' என்றாள் அவள். அப்புறம், அத்தை மகனை ஏறிட்டு நோக்கினாள். ''எங்க அப்பா சொன்ன மாதிரி, எங்க வெள்ளைக் காளையை நல்ல தனமா எங்க கையிலே ஒப்படைச்சாக வேணுமுங்க,'' என்றாள். ஆதிமூலத்தின் மீது ஏவி விட்டிருந்த பார்வையை மாற்றி, அத்தை மகன் பேரில் ஏவி விட்டாள். ''அத்தான், போயிட்டு வரட்டுங்களா?'' என்றாள்.

உடன் இருந்த தந்தையையும் மறந்து, அன்னக் கொடியையே இமைக்காமல் பார்த்தான் வீரமணி.

பிறகு, தன் கையிலிருந்த வைரச் சிமிக்கிகளை அவளுடைய பார்வையில் படும்படியாக ஏந்தியபடி அன்னத்தையும் அப்பாவையும் ஓடுகிற ஓட்டத்தின் கதியோடு எடை போட்டான். அடி மனத்தில் ஏற்பட்ட மாறுதலின் விளைவாக, நியாயத்தின் அடிப்படையில் நல்லதொரு முடிவுக்கு வரலானான் அவன் "வேறே விசேஷம் ஒண்ணும் இல்லையா?" என்று எதையயா நினைவூட்ட விரும்பிக் கேட்டான் தேவர் மைந்தன்.

அன்னம் இந்தக் கேள்விக்கும் மௌனப் புன்னகையையே விடையாகச் சிந்தினாள். சிந்தாத முத்துக்களாகப் பற்கள் காட்சியளித்தன.

"விசேஷத்தைச் சொல்ல வேண்டியவங்களும் சொல்லிக் காட்ட வேண்டியவங்களும் நீங்கதானுங்களே, அத்தான்?" என்றாள் அவள்.

அன்னக் கொடியை வீரமணி ஏறிட்டுப் பார்த்த நேரத்தில், தன் கையிலிருந்த வைரச் சிமிக்கிகளையே அன்னம் தொடுத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்த காட்சியைக் கண்டான்! வைரச் சிமிக்கிகளைப் பற்றி உடைமைக்காரியான அன்னம் ஏன் மூச்சுப் பேச்சுக் காட்டக் காணோம்? 'என்னை அப்பா சோதிக்கிறது போளுதின்னு, அம்மான் மகளும் சோதிக்குதாங்காட்டி?...' இவ்வாறு மனம் குமைந்தான்.

அப்பொழுது :

பெரியவர் பெரிதாக ஒரு கனைப்புக் கனைத்தார் அது ஒரு சமிக்ஞை — அடையாளம். மகனைத் திசை

திருப்பச் சாகசம் பயின்று தோற்றுவித்த ஓர் உபாயம். ஆனால், வீரமணி என்னவோ சிந்தனை பண்ணியவாறு நின்றதைக் கண்டதும், அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. பகடைக் காய்களாக்கி வைரச் சிமிக்கிகளை உருட்டி விளையாடி, அதன் மூலம் ராமையாத் தேவரை உருட்டி வீழ்த்தக் கனவு திட்டிக் கொண்டிருந்தவர் அவர். 'வைரச் சிமிக்கிகளை என் அனுமதி இல்லாமலே அன்னத் திடம் வீரமணி கொடுத்துவிடுவானோ, என்னவோ?' என்னும் தவிப்பில் அவர் தண்ணீராய் உருகினார். பாவம்!...

வீரமணிக்கு இப்போது ஒரு மாற்றம் தேவைப் பட்டது. "அன்னம்!" என்று அன்பு ஒழுக, பாசம் சிந்தக் கூப்பிட்டான் அவன், கூப்பிட்டுக் கொண்டே கூடத்தின் மையப் பகுதியை அண்டி நடந்தான். வானொலிப் பெட்டியைத் திருகினான். "அன்னம், விசேஷம் என்கிட்டேயிருந்துதான் வரவேணும்னு நீ ஆசைப்பட்டால், அந்த விசேஷத்தை நான் சொல்லிப்பிடுறேன், சொல்லிக் காட்டிப்பிடு றேன்!" என்று கூறி அழகுடன் முறுவல் பூத்தான். அன்னத்தின் சொக்கும் புன்னகை அவனைச் சொக்குப் பொடி தூவிச் சொக்க வைத்தது! 'ஆகா!... உயிரினும் இனிதாய்ப் பெண்மை இனிக்கத்தான் செய்கிறது!'...பாரதியில் இணைந் தான் அவன்!...

மறுகணம், வானொலியினின்றும் பாட்டும் புறப் பட்டது.

"காணி நிலம் வேண்டும்—பராசக்தி!
காணி நிலம் வேண்டும்!—அங்கு
தூணில் அழகியதாய்—நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய்—அந்தக்
காணி நிலத்திடை—ஓர் மாளிகை
கட்டித்தர வேண்டும்!......"

பாட்டு திடுதிப்பென்று ஏன் நின்று விட்டது?

வீரமணி மருண்டான். தன் தகப்பனார் ஆவேசத்தோடு வானொலியின் விசையை நிறுத்தி விட்ட அலங்கோலத்தைக் கண்டதும், அவனுடைய ரத்த நாளங்கள் துடித்தன. "அப்பா, நல்ல பாட்டாச்சுங்களே? நல்ல இடத்திலே ஏன் நிறுத்திப் பிட்டீங்க?" என்று ஆற்றாமையோடு வினவினான்.

"நல்ல பாட்டை நல்ல இடத்திலே நிறுத்தினால் தான், அந்த நல்ல பாட்டோட நல்ல ஞாபகம் நம்ப நெஞ்சிலே சதா ஒலிச்சிக்கிட்டே இருக்கும்! சரி, சரி. பின்கட்டுப்பக்கம் கொஞ்சநேரம் வாயேன். எனக்கு நெஞ்சை என்னமோ பண்ணுது!" என்று பரிதாபமாகக் கூறிவிட்டு, திறந்த மார்பைத் திறக்காமலே தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார் தேவர்.

வீரமணி பதறினான்; துடித்தான்; துவண்டான்; தவித்தான். பாசத்தை பாசத்தின் நிமித்தம் நம்பினான். பாசத்தை நம்ப 'நிமித்தம்' கேட்க வேண்டுமா?—அவன் வரை பாசம் ஒரு பூவிலங்குதான்!—அப்பாவைத் தொடர்ந்தான்.

அன்னம், கொஞ்சம் பொறு. திரும்பிடுறேன்,"

என்று சொல்லிய பிறகு, நடையை ஓசைப்படாமல் விசைப்படுத்தினான்.

ஆதிமூலத் தேவர் கைந்நொடிப் பொழுதுக்குக் கை விரல்களைச் சொடுக்கிக் கொண்டிருந்தார்!

பின்கட்டில் நட்சத்திரக் குழந்தைகள் சிரிக்கின்றன.

வீரமணி இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்த தன்விளைவாக ஏற்பட்ட மனச்சுமையோடும், கையிலிருந்த வைரச் சிமிக்கிகளின் சுமையோடும் நின்றான்.

தனக்குத் தானே என்னென்னவோ கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு, அப்பாவின் தந்திரம் என்னவாக இருக்கக்கூடுமென்ற ரகசியத்தைக் கண்டுபிடித்துவிட்டவன் மாதிரி, ஒரு பெருமூச்சை வெளிப்படுத்தித் தலையையும் ஆட்டிக் கொண்டான். ஆனாலும், மனத்தின் இரண்டக நிலை அவனது முகத்தில் 'களை'யைத் தோற்றுவிக்க மறுத்தது.

"வீரமணி!"

"சொல்லுங்க, அப்பா!"

"அன்னத்தோட வைரச் சிமிக்கிகளை என் கையிலே கொடுத்திடு!"

"அன்னத்தோட வைரச் சிமிக்கிகளை அன்னத்தின் கைகளிலேதான் கொடுக்க வேணும்!"

"என் கையிலே கொடுத்திடு!"

"ஊகூம்!''

"கொடுத்திடுப்பா, தம்பி!''

"ஏன், நீங்க காதிலே போட்டுக்கிடப் போறீங்களா?''

"தம்பி, வைரச் சிமிக்கிகளை நான் போட்டுக்கிறதுக்காகக் கேட்கல்லே. விளையாடக் கேட்கிறேனாக்கும்!''

"விளையாடவா? சிமிக்கிகளோடவா விளையாடப் போறீங்க, அப்பா?''

"நீ என்ன தம்பி, விரல் சூப்புகிற வாண்டு மாதிரி கேட்கிறே?...அன்னத்தோட வைரச் சிமிக்கிகளைப் பகடைக் காய்களாக்கி, உன் அருமை அம்மான் ராமையாவோட விளையாடப் போறேன்!''

"என் அம்மான் மகள் அன்பு அன்னக்கொடியோட வைரச் சிமிக்கிகளைக் கண்டெடுத்த புள்ளி நான். அதை என் கையிலேயிருந்து பறிச்சு நீங்க விளையாட ஆரம்பிச்சீங்கன்னா, அப்பாலே அந்தச் சங்கதி ஊர் நாட்டிலே அடிபட ஆரம்பிக்கும்; அப்புறம் உங்களைப் பற்றி ஊர்ச்சனங்க கொண்டிருக்கிற நல்ல பெயருக்கு மாசு ஏற்படும். இல்லிங்களா, அப்பா?... நீங்க என் அம்மானோட, உங்க இரண்டு பேருக்கும் ஊடாலே உள்ள விவகாரத்தை உத்தேசிச்சு மோத நினைச்சால், அதுக்கு இந்த வைரச் சிமிக்கிகளைக் கையாள நினைக்காதீங்க; அப்படி நீங்க நினைச்சால், அந்தத் துரோகத்துக்கு நான் இடம் தர ஒப்பவே மாட்டேன்! உங்களை

அம்மான் ஏய்ச்சதுக்குப் பழிக்குப்பழி வாங்க நீங்க -விரும்பினுல், அதுக்கு ஊர் நாட்டிலே வழிக்கா பஞ்சம் வந்திடும்?...''

வீரமணியின் பேச்சில் சூடு பறந்தது.

''இதுதான் உன் முடிவா?''

''ஊம்!''

''நீ இப்பைக்கு அந்த வைரச் சிமிக்கிகளை என்ன செய்யப் போறே?''

''அது என் சொந்த விஷயம்—அது சம்பந்த மாய் உங்ககிட்டே இப்போ எதையும் சொல்ல ஆசைப்படல்லே!...'' என்று வாழைப்பழத்தில் செருகிய சூரிக்கத்தியாகச் சொற்களைப் பாய்ச்சி ஞன் வீரமணி.

ஆதிமூலம் செயலற்று நின்று விட்டார். தலை முடிகள் தோளில் புரள, கோபம் ஆருமல் அங் கிருந்து வெளியேறிஞர்.

கொஞ்ச நாளாக அப்பாவின் நடத்தை ரொம்பவும் வேடிக்கையாகத்தான் இருக்கிறது! வீரமணி நெடுமூச்செறிந்தான். கையில் மறைந் திருந்த சிமிக்கிகளின் வைர ஒளி அவனது உள் ளுணர்வுகளைத் தொட்டும் தொடாமலும் உறுத்திக் கொண்டிருந்த சங்கடத்தை இனிமேலும் அவன் சோதனைப்படுத்த ஒப்பவில்லை. ஆகவே, வெளியேறி ஞன். நிலவுக் காற்று இதமாகவே இருந்தது. ''அன்னம், அன்னம்!'' என்று அன்போடும் பாசத் தோடும் நேசத்தோடும் விளித்தான்.

முன்கூடத்தில் கையில் எதையோ பிரித்து வைத்துப் படித்துக் கொண்டிருந்தாள் அன்னக் கொடி. தோள்பட்டையிலிருந்து புடவை சரிந்து விழும் அளவுக்கு அவள் மனம் தடுமாறி விடவில்லை.

முதற் குரலைக் காதில் வாங்கிக் கொண்டதாகத் தோன்றவில்லை அன்னம்.

வீரமணி மறுபடி விளித்தான்.

"என்னுங்க, அத்தான்?" என்று கேட்டாள். "மாமாவுக்கு நெஞ்சடைப்பு சரியாயிடுச்சுங்களா?" என்று தொடர்ந்தாள்.

"ஆமா; சரியாயிடுச்சு. அப்பாவுக்கு என்ன வெல்லாமோ புதுசு புதுசாய் வியாதிகள் தாக்குது!"

"எல்லாம் சரியாகிப் போயிடுமுங்க, அத்தான் என் கையினுலே நாலு வேளை சோறு ஆக்கிப் போட்டேன்னு, எல்லாச் சீக்கும் கடலே கதின்னு ஓடிப் போயிடாதுங்களா?"

"ஓகோ!"

வீரமணி கம்பீரமான தன்னம்பிக்கையின் கம்பியில் நின்று ஊசலாடினுன். நல்ல சிரிப்பும் பீறிட்டது. பெண்மை இப்போதும்தான் இனிக்கிறது! பேஷ்!...

"நான் புறப்படுகிறேன். அப்பாவுக்குப் பசி தாங்காது. போகட்டுமா?"

"போயிட்டு வரட்டுமான்னு கேள், அன்னம்!... இரு; ஒரு நிமிஷம் நில்லு, அம்மான் மகளே!"

என்று அன்பின் நெகிழ்ச்சியுடன் சல்லாபமாகச் சொல்லிக் கொண்டே, இதயத்தின் காதற் துடிப்புடன் காதற் பெண்ணின் கடைக்கண் பணியினை அனுபவிக்க, மெல்ல மெல்ல — மெள்ள மெள்ள நெருங்கினான்.

அன்னம் நாணத்தின் தங்கப் பதுமையாக நின்றாள்.

''அன்னம், உன் வைரச் சிமிக்கிகளை அம்மான் மடியிலே வச்சுக் கிட்டு இருந்திருக்காங்க போலே! வெள்ளை விசயமாக அவர் இங்கிட்டு வந்த சமயத்திலே, அந்த வைரச் சிமிக்கிகள் மடியிலேயிருந்து நழுவி எங்க வீட்டுத் திட்டி வாசல் புறத்திலே விழுந்து கிடந்திச்சு. நான் எடுத்து வச்சிருந்தேன். இந்தா!'' என்று ஓர் அமைதியின் நிறைவோடு பேசிவிட்டு, வைரச் சிமிக்கிகளைக் கைவிரல்களிலே ஏந்தி நீட்டினான் வீரமணி.

''இந்த வைரச் சிமிக்கிகள் என்னுடையது இல்லீங்களே? ஒரு வேளை, இதுகளை என் கண்ணாலத்துக்காக அப்பா செஞ்சிருந்தாலும், அதைப் பற்றி அப்பா என்கிட்டே கட்டாயம் சொல்லியிருப்பாங்களே? இது என்ன ஒரே பூடகமான சமாச்சாரமாக இருக்குதுங்களே, அத்தான்? அப்பா மடியிலே யிருந்து இந்த வைரச் சிமிக்கிகள் விழுந்திருந்தால், அந்த ரகசியம் அப்பாவைக் கேட்டால்தான் விளங்கும்! ஆமாங்க, அத்தான்!''

அன்னம் திகைப்பும் மலைப்பும் மீதூற நின்றாள்.

அப்போது:

"வீரமணி!" என்று அழைத்துக் கொண்டே வந்து நின்றார் ஆதிமூலத்தேவர்.

"மாப்பிள்ளை!" என்று கூப்பிட்டுக்கொண்டே வந்து நின்றார் ராமையாத்தேவர்.

வீரமணி கதிகலங்கித் தலையை நிதானமாக நிமிர்த்தினான். பிறகு அவர்கள் இருவரையும் அசூயை பளிச்சிட நோக்கினான். "நீங்க ரெண்டு பேரும் கொஞ்ச நாழி பேசாமல் நில்லுங்க. நானும் அன்னமும் கொஞ்ச நாழி தனியே ஒரு ரகசியம் பேசி முடிச்சிட்டு வந்துப்பிடுறோம்," என்றான். பிறகு, அன்னக்கொடியை நோக்கி, "அம்மான் மகளே. அங்கிட்டுக் கொல்லைப் பக்கம் வா! ஒரு சங்கதி இருக்கு!" என்று தெரிவித்தான்.

தேவரும் தேவரும் விழித்தார்கள், பாவம்!

அம்மான் மகள் அன்னக்கொடியும், அத்தை மகன் வீரமணியும் நடந்தார்கள்!

அவர்கள் இருவரையும் "வருக! வருக!" என்று இரு கைகளையும் ஏந்தி வரவேற்றது அந்தத் தனிமை!

14. வைரச் சிமிக்கிகள் இரண்டு!

அம்மான் மகள் அன்னக்கொடியையும், அத்தைமகன் வீரமணியையும் 'வருக வருக!' என்று வரவேற்ற அந்தத் தனிமைக்கு ஓர் அர்த்தம் உண்டு;

அந்தரங்கமும் இருந்தது. ஒட்டும் இரு உள்ளங்களும் ஒட்டிக் கொண்டிருந்த அந்தத் தனிமையை ஒரு சொந்தம் வாழ்த்தியது.

மேலே, நட்சத்திரக் குழந்தைகள் 'கண்ணு மூச்சி' விளையாட்டிற்குப் புள்ளி வைத்து விட்டு, நாணக் குதூகலமும் நமட்டுச் சிரிப்பும் குலுங்கக் கீழே பார்த்தன.

"அத்தான்," என்று அன்பு பாராட்டி விளித்தாள் அன்னக்கொடி; நேசம் அன்ன நடை பயின்றது; பாசம் கொடியெனத் துவண்டது; ஆசை கிளியாகப் பேசியது. முகப்புத் தோட்டத்தில் நிலவில் மயங்கி நின்ற ரத்தப் பூக்கள் அவளை என்னவோ செய்தன!

முறைப்பெண்ணை முறையான காதல் உணர்வோடு ஏறிட்டுப் பார்த்தான் வீரமணி. உள்ளங்கைக்கு உள்ளடக்கம் கற்பித்திருந்த வைரச் சிமிக்கிகளின் கனம் நெஞ்சைச் சுமைதாங்கியாக்கி ஏறிக் குந்த, அவன் அவளைப் பார்த்த பார்வையில் ஆழம் மட்டுமல்லாமல், ஆதங்கமும் நிழலாடியது. மாமன் மகளிடம் சற்று முன்பு வைரச் சிமிக்கிகளை ஏந்திப் பிடித்துக் காண்பித்ததைக் கண்ட அப்பாவும் அம்மானும் தன்னை அழைத்த மாறுபட்ட குரல்களையும் வேறுபட்ட சுருதிகளின் மாற்றங்களையும் அவன் இப்போதும் நினைத்துப் பார்க்கவே நாட்டம் கொண்டான். நிலவுப் பூக்களின் மணம் கமழும் வெளிச்சத்தின் ஆரோக்கியமான இன்பச் சூழலில் நின்றவன், இருட்டின் பயங்கரப் புதிர்ச் சிரிப்பின்

சுழலிலே அகப்பட்டுக் கொண்டு மீள முடியாமல்—வழி புரியாமல் தட்டுத் தடுமாறுவதுபோல அவன் தவித்தான்; தடுமாறினான். அன்னத்தின் கண்கள் ஏன் அப்படிக் கலங்குகின்றன? "அன்னம்!" என்று கூப்பிட்டான்; அவளிடம் தோன்றிய சுடுநீர் அவனிடமும் 'மடை' மாறிப் பாய்ந்ததில் வியப்பு இல்லைதான்! "அம்மான் மகளே, ஏன் கண் கலங்குறே?" என்று தழுதழுப்புடன் கேட்கலானான் அவன்.

கலக்கத்தைத் திரைபோட்டு மறைக்க முயற்சி செய்து—மறைக்கப்பாடுபட்டுத் தோற்ற நிலையில் அவள் தன்னுடைய அத்தானை நிமிர்ந்து நோக்கினாள். "என்ன அத்தான், இப்படிக் கேட்கிறீங்களே? பசிக்குதின்னு சொன்னால், ஏன் பசிக்கிதுன்னு கேள்வி கேட்டால், என்ன பதிலைச் சொல்ல முடியுமுங்க?" என்றாள்.

வீரமணி பெருமூச்சு விட்டான்; அம்மான் பெற்ற அருமைத் தவமகளை இப்பொழுதுதான் நேருக்கு நேராக முதல் தரமாகப் பார்ப்பவன் மாதிரி அதிசயத்துடன் பார்த்து நின்ற அவனுக்கு, அவளது பார்வையின் சலனங்களே அவனுடைய நெஞ்சைப் பிசைந்தெடுத்தன. அவன் கண்களில் கண்ணீர் பொங்கியது; பெருகியது.

"அத்தான்!" என்று பதட்டத்துடன் கூப்பிட்டாள் அன்னம்.

"ஊம்," என்று பதட்டமின்றிக் குரல் கொடுத்தான் வீரமணி.

"அழுவுறீங்களா?"

"இல்லையே?"

"ஊஹம்; அழுவுறீங்க!"

"சரி, அழுவுறேன் தான்!"

"ஏனுங்க, மச்சான்!"

"என்னோட விதி!"

"விதியாவது சதியாவதுங்க, அத்தான்!"

"விதியும் சதியும்தான், அம்மான் மகளே!"

"என்ன சொல்லுறீங்க?"

"நடந்ததைச் சொல்லுறேன்; நடக்கிறதைச் செப்புறேன், அன்னம்!" உணர்ச்சிகளை வசப்படுத்த முடியாமல் அவனுடைய குரல் திணறியது. உள்ளங் கையிலிருந்த அந்த வைரச் சிமிக்கிகளை உள்ளங் கைக்குள்ளாகவே வைத்து உருட்டி விளையாடிக் கொண்டிருந்தான் அவன்.

"நடக்க வேண்டியதைச் சொல்லுங்களேன், அத்தான்!"

"அது உன் கையிலேதான் இருக்குது, அன்னம்!"

"இல்லீங்களே! அது உங்களோட கையிலே தான் இருக்காக்கும்!"

"என் கையிலே இருக்குதாங் காட்டி? இல்லே; இல்லவே இல்லே!...என் கையிலே இப்பைக்கு இருக்கிறது உன்னோட இந்த இரண்டு வைரச் சிமிக்கிகள் மட்டிலுந்தானுக்கும்!"

''அந்த வைரச் சிமிக்கிகள்தான் என்னுடையது இல்லீங்கன்னு முன்னாடியே சொல்லிப் புட்டேனுங்களே, அத்தான்!''

''வாஸ்தவந்தான், அன்னம். இந்த வைரச் சிமிக்கிகள் உன்னுடையது இல்லேன்னு நீ மண்டையிலே தட்டிறாப்பிலே வெட்டிப் பேசிட்டே; அந்தத் தீர்ப்பு எனக்கு நல்லாய் ஞாபகத்திலே நிற்குது. ஆனா, இந்த வைரச் சிமிக்கிகள் இரண்டும் யாருடையதின்னு மட்டும் படலேயே, அன்னம்?''-ஒய்யாரக் கொண்டைக்காரி செங்கமலத்தின் ஞாபகம் கெட்ட கனவாகப் பிசிறு தட்டித் தொலேத்தது!

''அந்த உளவு எங்க அப்பன்காரருக்குத்தான் வெளிச்சம், அத்தான்!''

''ஓகோ! அப்படியா சங்கதி? மனிதர்களுக்கு வயசு கூடக் கூட புத்தித் தடுமாற்றமும் கூடிக்கிட்டு இருக்கும்னு தோணுது. நான் இதுமட்டும் என் அப்பாவைப்பற்றித் தான் இப்படி நினேச்சிக் கவலேப்பட்டுக்கிட்டு இருந்தேன். இப்ப அம்மான் விசயமும் இதே கதைதானா?... அம்மான்காரர் இருட்டிலே பொறிகலங்கி நிற்கையிலே, அவருக்கு வெளிச்சம் எங்கிட்டுக் கிடைக்கப் போகுது? அந்திக் கட்டிலே உங்க வெள்ளேக்காளே சம்பந்தமாய் அம்மான் வாசலுக்கு நடைபாவி வந்தாங்க. காளேயும் கையுமாகத் திரும்பிடாலம்னு வந்தவங்களுக்கு வெறுங்கையோடே தான் திரும்ப வாய்ச்சுது. அவர் போன சடுதியிலே தான் இந்த வைரச்சிமிக்கிகள் என் கண்ணிலே தட்டுப்பட்டுச்சு. வைரச் சிமிக்கி

களைக் கண்டதும், முக்காலறுப்பு இதுங்க ரெண்டும் உன்னுடையதாகவே இருக்கும்னும் இதுங்களை உன் அப்பா தான் தவறவிட்டுப்புட்டுப் பாய்ஞ்சிருக்க வேணும்னும் யோசிச்சேன். நம்பினேன். அதுக்குத் தக்கனை, அம்மான் வந்ததும் வாரததுமாய் 'என் ஆசைப்பொண்ணு அன்னத்துக் கோசரம் ஆசாரி கிட்டே செஞ்ச புது வைரச்சிமிக்கிகள் ரெண்டை யும் காணலையே?' அப்படின்னு ஆத்திரம் பொங்க அழமாட்டாத குறையாகச் சேதி சொன்னுங்க. இதுக்குப் பிறகாலே நடந்த நடப்பு, உங்க வெள்ளைக் காளையோட கதை கணக்கிலே முன்னடியான் சாமியாய் ஒதுங்கிக்கிடட்டும்!......"

வீரமணிக்கு இருமல் வரவே, இருமினன். காட்டமான புகைச்சல் இருமல். பிறகு மறுபடி தொடர்ந்தான்: "அன்னம், இந்த வைரச்சிமிக்கி சம்பந்தமான சமாசாரம் எதுவுமே உனக்குத் தெரியாதின்னு எனக்குத் தோணுது. அப்படி யானுல், அம்மான்காரருக்கும் இந்த வைரச்சிமிக்கி களுக்கும் ஊடாலே ஏதோ ஒரு 'கமுக்கம்'-ரகசியம் நந்திக்கிட்டு இருக்க வேணும்! அப்படின்ஞ, இந்த வைரச்சிமிக்கிகளை அம்மான் வேறே யாருக்கா கவோதான் அவசரமாகச் செஞ்சிருக்கவேணும். நீ என்ன கருதுறே, அன்னம்?"

தொட்ட இருமல் தொடர் சேர்ந்தது.

விட்ட பெருமூச்சு விடை கேட்டது.

அன்னக்கொடி அழுகையும் சிரிப்பும் அற்ற நிலைக்கு ஆளானுள்; ஆட்பட்டாள். எதையோ

நினைத்து அழவேண்டும் போலவும், எதையோ மறந்து சிரிக்க வேண்டும் போலவும் அவள் நினைத்தாள்.

"அத்தான், நீக்குப் போக்குப் புரியாமல் உருகி உருக்குலைஞ்சு போயிருக்கிற என்னை மந்திரி தந்திரியாட்டம் கருதி, கருத்துக் கேட்கிறீங்களே? என்னோட கதையே எனக்குப் பிடிபடலே; என் பாதையே எனக்கு இருட்டிக்கிட்டு வருது. இந்த அவல நிலைமையிலே, நான் என்னத்தைச் சொல்லட்டும்? உங்க அப்பா புதிர்னு நீங்க அடிக்கொரு பயணம் சொல்ல மாட்டீங்களா? அதொப்ப, என் அப்பாவும் ஒரு புதிர்தான்னு நானும் சொல்லித்தான் தப்பிக்க வேண்டியிருக்குது!'' என்று கூறி நிறுத்தினாள்.

வீரமணி நெடுமூச்செறிந்தான்.

விதியை வீட்டுக்கு வெளியே இருமுனைகளிலே பிரித்துக் காவல் வைத்து விட்டு, அந்த விதியை வீட்டுக்கு உள்ளே இரு முனைகளில் சோதிக்கத் துணிந்து விட்டவர்கள் மாதிரி, அன்னமும் வீரமணியும் ஒருவரையொருவர் புதிய பார்வையால் அளந்து கொண்டார்கள்.

அவள் சிரித்தாள், அவன் சிரித்தான்.

அவளது சிரிப்பிலே, அவளது எதிர்காலக் கனவுகள் பிரதி பலித்தன போலும்!

அவனுடைய சிரிப்பிலே, சிலட்டூர்க் கங்காணியின் மகள் பவளக்கொடியும், திட்டிவாசலை ஒட்டிக்

கொண்டிருந்த ஆவணி மாதமும் பிரதிபலித்திருக்க வேண்டும்!

"மச்சான்!"

"என் கையிலே இருக்கிற இந்தச் சிமிக்கிகளை இப்போ என்ன பண்ணுறதாம்? வைரச்சிமிக்கிகளாச்சே? பலம் கூடிக் கிடக்குதுங்கிறேன்?"

"பலம் மட்டுமே தான் கூடியிருக்குங்களா?"

'இல்லாட்டி' "பலனும் கிடையாதே? இந்த வைரச் சிமிக்கிகளின் சுமை உறுத்திக்கிட்டே இருக்குது, என்னோட நெஞ்சிலே! ஆமா, அம்மான் பெண்ணே!" என்று கண்களை மிரள மிரள விழித்தான் வீரமணி. குற்ற உணர்வின் பாவனை அது.

"இந்த வெறும் வைரச்சிமிக்கிகள் மட்டிலும் தானா உங்க நெஞ்சை உறுத்திக்கிட்டு இருக்குதுங்க, ஆசை அத்தானே?" பாவத்தின் கூலியை அனுபவிக்க நேர்ந்திட்ட பாவம் அவளது சலனமடைந்த வதனத்தில் கோடு கிறுக்கிறது.

"பின்னே?"

"பின்னே ஒண்ணுமே உறுத்தலையுங்களா மச்சானே?"

நெஞ்சில் தைத்து விட்டிருந்த நெருஞ்சி முள்ளைப் பிடுங்கி எடுத்துவிடத் துடித்தவனாக அவன் மார்புப் புறத்தைத் தடவிக் கொடுத்தான். பிறகு முறைமைப் பெண்ணை முறைப்பாக நோக்கினான். அவ்வாறு நோக்கின வேளையிலே, இருந்திருந்தாற் போன்று, அவன் பவளக்கொடியை எண்ணிக்

கொண்டான். பூடகமாகப் பேச்சுக் கொடுத்த அன்னத்தின் கேள்வியில் 'தொக்கி' நின்ற உள் அர்த்தத்தை அவனால் தற்சமயம் உணர முடிந்தது. ஆனாலும், எதுவுமே விளங்காதவன் போல்—எதை யும் பிடி எடுத்துப் பிடித்துக் கொள்ளாதவன் போல் அன்னக்கொடியை அளப்பதில் ஈடுபட்டான். "சங்கதியைப் பிட்டுவச்சுச் சொல்லிப்பிடப்படாதா அன்னம்?" என்று வினவினான்.

"அத்தான், நீங்ககூட புதிர் ஆசாமிதான் என்கிற உண்மையை இப்பத்தான். என்னாலே விளங்கிக்கிட வாய்ச்சது. நீங்க ஆணாய்ப் பிறந் தவங்க. எப்படி வேணுமானாலும் நடக்கலாம்; நடிக்காலம்! ஆனா பாழாய்ப்போன இந்த பயங்கரச் சமுதாயத்தின் மத்தியிலே பெண்ணாய்ப் பிறந்த நான் உங்களை மாதிரி நடக்கவோ, அல்லது நடிக்கவோ ஏலுங்களா?" என்று பேசி முடித்தாள் அன்னக் கொடி.

"விசயத்துக்கு வா, புள்ளே!"

"விசயத்துக்கு வரவேண்டியவங்களே நீங்க தானுங்களே, மச்சானே?"

"ஓ, அப்படியா?" என்று அரைச் சிலிர்ப்புடன் அரைச் சிரிப்பை வெளிப்படுத்தியவனாக, "இந்தாலே விசயத்துக்கு வந்துப்பிடுறேன்!" என்று ஓரக்கண் சிமிட்டிச் செப்பிக் கொண்டே, நெருங்கி, அவளுடைய சிந்தூரக் கன்னங்களைத் தொட்டான் வீரமணி.

நாணம் காத்தவள் நாணம் காட்டினுள். "பாவம் செஞ்சிட்டீங்களே, அத்தான்?" என்றுள், அன்னக்கொடி.

"ஊகூம்; புண்ணியம் செஞ்சிட்டேன், அம்மான் மகளே!" என்றுன் வீரமணி.

"மெய்யாலுமேதானு, அத்தை மகனே?"

"என்னோட மெய் நடுங்குறதிலேயிருந்து அந்த மெய் உனக்குப் பிடிபடலையா, புள்ளே!"

"புள்ளே, புள்ளேன்னு ஒரு அரை நாழிப் பொழுதுக்குள்ளாற எத்தனை கடுத்தம் அழைப்பீங்களாம்?"

"எத்தனை கடுத்தம் வேணும்னுலும் அழைப்பேன்; அழைச்சுக்கிட்டே இருப்பேன். கன்னி கழியாப் பொண்ணை எடுத்த எடுப்பிலே 'புள்ளே'ன்னு முறை வச்சுக் கூப்பிடுறதுக்கு நம்ப சாதி முறையிலே கற்பிச்சுக் கொடுத்திருக்கிற 'தனி அர்த்தம்' இன்னமுமா உனக்கு ஞாபகத்துக்கு வந்து குதிக்கலே, அன்னம்?"

அன்னக்கொடியின் நளினம் நிரம்பிய நாணம் கண் கலங்கியது. விலக முயன்றவள், விலகாமலே நின்று கொண்டிருந்தாள். "இம்மாம் தொலைவுக்கு என் மேலே பாசமும்நேசமும், பாந்தமும் பந்தமும், ஆசையும் அன்பும் கொண்டிருக்கிற நீங்கதானு சிலட்டூர்ப் பவளக்கொடியைக் கண்ணுலம் கட்டிக்கிட ஒப்புதல் கொடுத்தீங்க, மச்சான்?..." என்றுள்.

"அது கிடக்கட்டும். இப்போ இந்த வைரச் சிமிக்கிகளை என்ன செய்கிறதாம்?" என்று கேட்டபடி, அம்மான் மகளை வாரியணைக்க முனைந்த வீரமணியின் அகன்று விரிந்த கைகள் அடுத்த இமைப்பில் துடிதுடித்தன. விளைவு என்ன, தெரியுமா? அவன் கையிலிருந்த அந்த வைரச் சிமிக்கிகள் கீழே மண் தரையில் சரணடைந்து விட்டன.

அப்போது, அங்கே அதிசயமும் அதிர்ச்சியும் விதியாகச் சிரிக்கத் தலைப்பட்டன. கூன்பிறை விழித்தது!

கீழே நழுவி வீழ்ந்த இரண்டு வைரச்சிமிக்கிகளின் ஒன்று, ஊர் நாட்டாண்மை ஆதிமூலத் தேவர் வசத்திலும், மற்றொன்று சிங்கப்பூர் ராமையாத் தேவர் வசத்திலும் அடைக்கலம் அடைந்திருந்தன!

15. ஆசை அன்னத்துக்கு அருமைத் துணைவன்!

ஊர் நாட்டாண்மை ஆதிமூலத் தேவரும் சிங்கப்பூர் ராமையாத் தேவரும் ஒருவரையொருவர் எரித்து, ஒருவர் சாம்பலை மற்றவர் நெற்றியில் பூசிக் கொண்டு கொக்கரிக்கத் தவிப்பவர்கள் போலவும், ஒருவரை மற்றவர் விழுங்கி ஏப்பம்விடத் துடிப்பவர்கள் போலவும் தோன்றினர்கள்!—ஐந்தாறு நிமிட இடைவெளிக்குள்ளே ஆயிரம் தடவை

அவரவர் கையில் மின்னிப் பளிச்சிட்ட வைரச் சிமிக்கியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கவும் அவர்கள் மறந்துவிடக் காணோம்.

கூத்தை ரசிக்கும் ஆர்வத்துடன் அன்னக்கொடியும் வீரமணியும் புதிய சுதாரிப்புடன் தங்களைத் தயார் செய்து கொண்டவாறு, ஒருவரோடொருவர் உரசிக் கொண்டே புழக்கடை மண்ணில் கால் பாவி நடக்கத் தொடங்கினார்கள்.

ஆதிமூலத் தேவர் தலைமுடிகளைத் தட்டி முடிந்து கொண்டே பெரிதாக ஒரு கனைப்புக் கனைத்துக் கொண்டார்.

ராமையாத் தேவர் கிராப்புத் தலையை வருடிக் கொண்டே சிறிதாக ஒரு பெருமூச்சை நெட்டித் தள்ளினார்.

"மச்சான்காரரே! மண்ணிலே நிலை குப்புற விழுந்தாலும் மீசையிலே மண் ஒட்டலேன்னு சில புறக்குடிப் படைகள் பேசுவாங்களாம்! ஆனா, நீங்க உயர்ந்த புள்ளி. ஊர்க் கார்வாருக்கு உரிய ஆம்பளை. என்றாலும், எனக்குச் சொந்தமான வைரச் சிமிக்கியைச் சந்தடி சாக்கிலே நீங்க லவட்டி எடுத்து வெளிச்சத்திலே ஏந்தி நிற்கிற போக்கை என்னாலே அம்பிட்டுத் தொலைவுக்கு ரசிக்க வாய்க்கல்லேங்கிறேன்! மரியாதையாய் என்னோட வைரச் சிமிக்கியை என்கிட்டே நீட்டிப்பிடுங்க!"

ராமையாத் தேவரின் பேச்சில் ஆத்திரம் பதுங்கிக்கிடந்த ஏளனம் குரல் கொடுத்தது.

பெரியவர் ஏளனமான அலட்சியத்தோடு சிங்கப்பூர்த்தேவரைப் பார்த்தார். பிறகு நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு, கையிலிருந்த வைரச் சிமிக்கியைக் கைக்குள்ளாகவே சமர்த்தாகவும் சாமர்த்தியமாகவும் குலுக்கிக் கொண்டு ஓர் அட்டகாசமான நிர்த்தாட்சண்யச் சிரிப்பைக் கொட்டிவிட்டுப் பேசினார்:

"மச்சான்காரா...ராமையா! நீ எனக்குக் கை நீட்டிக் கை ரொக்கமாகக் கொடுக்காத—கொடுக்கிறதாகச் சொல்லி, கடைசியிலே கொடுக்காமல் ஏய்ச்சுப்பிட்ட அந்த ரெண்டாயிரம் ரூபாய்க்கும் சேர்த்து நீ என்கிட்டேயிருந்து புரோ நோட்டை முன்கூட்டியே மோசடியாய் எழுதி வாங்கிக்கிட்டே! கொடுத்த கடனோடே, கொடுக்காத கடன் ரூபாய் ரெண்டாயிரத்துக்கும் சேர்த்து அடாவடியாய் கோர்ட்டு கச்சேரியிலே என் மேலே 'தாவா' போட்டாய்!—நான் வாங்காத ரூபாய் ரெண்டாயிரத்துக்குச் சாட்சி வைக்க என் கையிலே ஆதாரம் இல்லாததனாலே, நீ கொடுக்காத பணத்துக்கும் சேர்த்து நான் உனக்குப் பணம் கட்டியாகத்தான் வேணும். இது சட்ட ரீதியான நீதி!—ஆனா, சட்டத்துக்கு அப்பாலே உள்ள உன்னோட மனச்சாட்சி உன் மாதிரியே ஊமைத்தனமாய் இருந்துக்கிட்டே வருதே, அந்தப் பொல்லாத பாவத்துக்கு உண்டான கூலியை நீ அனுபவிக்காமல் தப்பிச்சுக்கிடலாம்னு மனப்பால் குடிச்சிருப்பாய். ஆனா, அந்தப் பாவத்தின் கூலியை நீ அனுபவிக்காமல் ஒருகாலும் தப்பவே வாய்க்காது

என்கிற சத்தியத்துக்குச் சாட்சி சொல்லத்தான் இதோ, என் கையிலே கைக்கு மெய்யாய் உன்னுடைய இந்த ஒற்றை சிமிக்கி விதியாகவும் வினையாகவும் தெய்வமாகவும் சிரிக்காமல் சிரிச்சுக் கிட்டே இருக்குதாக்கும்!... இம்மாங் கொத்த நடப்பிலே, என் கையிலே தேடி வந்திருக்கிற இந்த ஒரு வைரச் சிமிக்கிக்கு நீ சொந்தம் கொண் டாடுறியே? அந்தச் சொந்தத்துக்கு உன் கையிலே என்ன சாட்சி இருக்குதாம்? சொல்லுடா, ராமையாத் தேவனே!''

மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கியது; ஒரு வழி யாகச் சமாளிக்க எத்தனம் செய்தார் பெரியவர் ஆதிமூலம். இடுப்பு வேட்டியைச் சரிப்படுத்திய வண்ணம் தன் மச்சான் ராமையாத் தேவரை வெஞ்சினத்தோடு முறைத்து வெறித்துப் பார்த் தார் அவர்.

காளியம்மன் சந்நிதிக்கு எல்லை சொல்லிக் காத்து நிற்குமே சாம்பான் சிலை, அம்மாதிரி, ராமையாத் தேவர் சிலையாக மலைத்து நின்று விட்டார்.

“ஊம்; ஏண்டா ராமையா, வாயடைச்சுப் போய் நின்னுக்கிட்டு இருக்கே? பேசுடா, பேசு! உன் மனச் சாட்சியைப் பேச விடுடா! ஊம்!'' என்று அதிகாரம் பண்ணினர் பெரியவர்.

ஆத்திரமும் ஏமாற்றமும் புதுப் புனலாகப் பொங்க, ஆதிமூலத் தேவரை நோக்கினர் ராமை யாத் தேவர்.

''உங்ககிட்டே நான் ஏன் பேச வேணும்? என் மனச்சாட்சியை எதுக்கு நான் பேசவிடணும்? நீர் ஊருக்கு ஓசந்த மனிதராய் இருக்கலாம். ஆனால் என் வரையிலும் நீர் சாதாரண ஆள்தான்! அம்மன்கோயில் 'முதல் காளாஞ்சி' விசயத்திலே நீர் என்னை ஆட்டிப் படைச்சு என்னைச் சீண்டிவிட்டு வேடிக்கை பாத்தீரே, அந்த ஆத்திரத்துக்குப் பதில் சொல்ல வேண்டித்தான் நான் ஒரு 'தில்லுமுல்லு' செஞ்சு, உம்மைக் கச்சேரிப்படி வரைக்கும் இழுத்துப் போட்டு வேடிக்கை பார்த்தேன். இன்னம் வேடிக்கை காட்டவும் போறேனுக்கும்! அந்த வேடிக்கைக்குத் தூபம் காட்டத்தானே நீங்க எங்க வெள்ளைக் காளையையும் கையாலாகாத்தன மாய் 'அழுச்சாட்டியம்' பண்ணிக் கட்டிப் போட்டு வச்சிருக்கீங்க?—சரி; இப்ப நீங்க களவாடி வச்சிருக்கிற என்னோட ஒற்றை வைரச் சிமிக்கிக்கு ஆதாரம் கேட்கிறீங்க! இல்லையா?...உம்மோட யுக்தி எனக்குப் புரியாமல் இல்லே! நான் உம்மை ஏய்ச்சு உபரியாய் இரண்டாயிரத்துக்கும் சேர்த்து பிராமிசரி நோட்டு பூரிச்சு வாங்கிக்கிட்டதுக்கு ஈடு கட்டி என்னை ஏய்க்கிறதுக்கு என்னோட அந்த ஒரு வைரச் சிமிக்கியைப் பகடையாக்கி விளையாடப் பார்க்கிறீராக்கும்? நஷ்டத்தை ஈடுகட்ட லாபம் சேர்க்க ஆசைப்படுறீராக்கும்?''

இவ்வாறு ராமையாத் தேவர் கவடு தொனிக்கப் பேசி முடித்து, கண் இமைப் பொழுதிற்கு தன் அத்தான் ஆதிமூலத்தை ஓரக் கண் பதித்துப் பார்வையிட்டார். அடுத்த இமைப்பில், சற்றே பின்

வாங்கிப் பதுங்கினார். பின்னர் கையிலிருந்த தன்னுடைய ஒரேயொரு வைரச் சிமிக்கியைப் பரிதாபமாகப் பார்த்தவாறு, அதை இடுப்பு மடியில் செருகிக் கட்டிக் கொண்டார். மேலேயும் கீழேயும் மிரள மிரள விழித்துப் பார்த்தார். மறு வினாடியில் பதுங்கிப் பாயும் வெம்புலியாக உருக் கொண்டு ஆதிமூலத் தேவர் மீது ஒரே பாய்ச்சலாக —காட்டுப் பாய்ச்சலாகப் பாய்ந்தார் ராமையாத் தேவர்!

அப்பொழுது:

கண்களில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டு எச்சரிக்கையோடு நின்றிருந்த முதியவர் ஆதிமூலத் தேவர் வெகு நயமான—நிதானமான மிடுக்கோடு ராமையாவை 'லாகு' கொடுத்து, 'வாகு' கணித்துச் சாடிச் சமாளித்துக் கொண்டார். ராமையாவின் பிடரியிலே ஒரு 'பிடி' முடுக்கி, அந்தப் பிடியை முறுக்கி அவரை நெஞ்சோடு அழுத்திக் கீழே தள்ளினார்.

கீழே விழுந்துவிட்ட தன் மீசையில் மண் ஒட்ட வில்லை என்பதை நிரூபித்துக் காட்டியவராக, பேந்தப் பேந்த விழித்தார் சிங்கப்பூர்ச் சீமான். சுற்றிச் சூழப் பார்வையை வெட்டினார். வெட்டுக் கடாவாக ஒரு துள்ளல் துள்ளினார். அவர் ஆசை யோடு எதிர்பார்த்த மாதிரி ஆதிமூலத் தேவரின் கையிலிருந்த அந்த வைரச் சிமிக்கி அசந்து மறந்து கீழே விழுந்து கிடந்தால்தானே? ஆதிமூலம் அந்த வைரச் சிமிக்கியைப் பத்திரமாக இடுப்பு மடியில்

முடி போட்டு வைத்துக் கொண்டிருந்த சிதம்பர ரகசியம் அவருக்கு விளங்கிஞல்தானே?

ஆதிமூலத்திற்கென்று அப்படியொரு நிர்த்தாட்சண்யமான அட்டகாசச் சிரிப்பு நினைத்த மாத்திரத்திலே கூடி வருகிறது. கைகூடி ஓடி வருகிறது. சிரித்தார். இடுப்பு மடியைத் தந்திரப் போக்கோடு லாகவமாகத் தடவிப் பார்த்து நிம்மதியடைந்தார். இருந்திருந்தாற் போலத் தாவிக் குதித்தார். அடுத்த மூன்ருவது நிமிடம், அவருடைய திருக்கரத்தில் மற்ருெரு வைரச் சிமிக்கியும் கண் சிமிட்டிச் சிரிப்பை வெடித்துப் பொடிக்கத் தலைப் பட்டது. 'டேய் ராமையா! நீ என்னை ஏமாற்றின ரெண்டாயிரம் ரூபாய்க்கு இப்பத்தாண்டா கணக்குச் சரியாகப் போச்சு! உன்னோட இந்த ரெண்டு வைரச் சிமிக்கியும் என்னோட அனுமத்துப் பணம் ரூபாய் ரெண்டாயிரத்துக்கும் இப்பத் தாண்டா ஈடு ஆகுது!'' என்று குரோதம் மண்டிய நிம்மதியோடு கொக்கரித்து விட்டு அடுத்த வைரச் சிமிக்கியையும் இடுப்பு மடியில் கெட்டியாக முடி போட்டு முடிந்து கொண்டே கொல்லைப் புறத்தை விட்டு நகர முயன்ருர்.

அடிப்பட்ட வெம்புலிக்கு அவமானம் மூளுவது இயற்கை; ஆத்திரம் கொப்பளிப்பது இயல்பு. ஆதிமூலத் தேவரின் குடுமியைப் பற்றி மடக்கலாளுர் ராமையாத் தேவர்.

திமிறிக் கொண்டு விடுதலை அடைந்திட முயன்ற பெரியவர் ஆதிமூலத் தேவர், அவ்வாறு

முயன்ற அவசரத்தின் விளைவாக, மண்ணிலே— கட்டாந்தரைப் புழுதி மண் வெளியிலே 'தொபு கடீர்' என்று சாய நேர்ந்தது. அதன் விளைவாக, பெரியவர் ஆதிமூலத்துக்கு நெஞ்சடைப்பு வந்து விட்டது. அது மட்டுமல்ல! —அவருடைய நெற்றிப் பொட்டினின்றும் ரத்தம் பீறிட ஆரம்பித்தது.

"அப்பா!" என்று வீரிட்டான் வீரமணி.

"மாமா!" என்று விம்மினுள் அன்னக்கொடி.

"அத்தான், மாமாவுக்கு மூச்சு இருக்குங்களா?" என்று தழுதழுத்த குரலிலே வினவியவளாக, அருமை அத்தானை ஒட்டிக் குந்திஞள் அன்னம்.

"ஒண்ணும் மட்டுப்பட மாட்டேங்குது, புள்ளே!" ரத்தத்தைத் துடைத்தபடி சொன்னுன் வீரமணி.

"ஐயையோ!"

பாவம், ராமையா விழித்தார். சந்தடி சாக்கில் தப்பின மட்டும் ஆதாயமென்று எண்ணி, பையப் பைய நழுவ வேளை பார்த்திருந்தார்; தப்பி விடவும் முனைந்தார்.

வீரமணி 'கச்சம்' கட்டியபடி கோபாவேசமாக எழுந்தான். "அம்மான்! என்னுேட அப்பாவை உயிர்க் கழுவிலே தவிக்க வச்சுப்பிட்டு எங்கிட்டுக் கால் மாறப் பார்க்கிறீங்க? போனதும் வந்ததுமாய் ஓட்டமாய் ஓடிப்போய், நம்ப நாட்டு வைத்தியர் சோமசுந்தர ஐயாவைக் கையோட இட்டுக்கிட்டு

ஓடியாங்க!'' என்று ஆணையிட்டான். அவனது வேட்டியின் முனையில் ரத்தம் சொட்டியது.

''அப்படியே செய்கிறேனுங்க, மாப்பிள்ளை!''

பெட்டிப் பாம்பாகவோ, அல்லது மகுடிக்குக் கட்டுப்பட்ட பாம்பாகவோ மாறிவிட்டார் ராமையா.

இரண்டாந் தடவையாகப் புதுப்பிறவி கொண்டார் ஊர் நாட்டாண்மை ஆதிமூலத் தேவர். கண்களை மருள மருள விழித்தவண்ணம் சுற்றுமுற்றும் பார்வையைப் பரப்பினார். ராமையாவைக் கண்டவுடன், அவரது கண் வளையங்களைக் குரோத மனப்பான்மை வளைத்துக் கொண்டது. பற்களைக் கடித்துக் கொண்டார். எதையோ நினைவுபடுத்திக் கொண்டவர் போன்று ஓர் அரைக்கணம் திகைப் படைந்தார். அவசரம் அவசரமாக, படுத்த நிலையிலேயே தன் அடிமடியைத் தடவி பார்த்தார். இரண்டு சிமிக்கிகளும் பத்திரமாக இருப்பதைக் கண்டு கொண்டவுடன், ஆறுதலோடு நெடுமூச் செறிந்தார்.

''நான் விடை வாங்கிக்கிடட்டுமா, மாப்பிள்ளை?'' என்று விடை கேட்டார் ராமையா.

''ஏய் ராமையா! என் அருமை மகளை மாப்பிள்ளைச் சொந்தம் கொண்டாடிக் கைக்குள்ளே போட்டுகிட கனவிலேகூட நினைக்காதே! நான் சொன்னதை மறந்துப்பிட்டா, மறுதக்கமும் 'வீரமணி மாப்பிள்ளை'ன்னு அழைச்சு அவன் கிட்டே விடை கேட்கிறே?— உனக்கு எம்புட்டு

நெஞ்சழுத்தம் இருக்க வேணும்? டேய் ராமையா, உனக்கு விடை கொடுக்க வேண்டியவன் நான் தானுக்கும்! ஏன் தெரியுமாடா? என்னோட இந்த ரத்தத்துக்குப் பதில் சொல்லித் தீர வேண்டியவன் நீதானுக்கும்!'' என்று முழக்கம் செய்தார் அவர். கை விரல்களில் படிந்திருந்த ரத்தக் கறையின் சுவடுகளைச் சாட்சியாகக் காட்டினார்.

ராமையாத் தேவருக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்து தொலைக்கவே, அவர் தன்னுடைய பவித்திரமான மீசையை வருடி விட்டார். ''நீர் 'அதகடி' பண்ணி எடுத்து வச்சிருக்கிற என்னோட வைரச் சிமிக்கிகளுக்கு முதலிலே நீர் 'வகை' சொன்னால், நான் உம்மோட ரத்தத்துக்கு வழி சொல்லுறேன்!'' என்றார்.

''ஓகோ! அப்படியா கதையை மடக்குறே நீ?... சரி; உன்னோட வெள்ளையை மடக்கிப் போட்டு வச்சிருக்கிற என்னை நீ எந்தச் சட்டத்தைக் கொண்டு மடக்கப் போறியோ; அதே சட்டத்தைக் கொண்டு, உன்னோட வைரச் சிமிக்கிகளை நான் உன் கண்ணுக்கு முன்னாலேயே லாந்தி வச்சிருக்கிற சங்கதிக்கும் என்னை மடக்கிப் போடுவேன், பார்க்கலாம்!'' என்று வீராப்புடன் மொழிந்தார் பெரியவர்.

''ஊம்; பார்க்கலாம்!'' என்று காட்டமாகத் தெரிவித்தார் சிங்கப்பூர்க்காரர். பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டே, ''அருமை மச்சானே! இந்தச் சந்தர்ப்பத்திலே இன்னொரு உண்மையை

யும் உம்மகிட்டே நான் செப்பிட வேண்டும்!'' என்று கோடி காட்டிவிட்டு, நின்றார் ராமையா.

இப் பேச்சைக் கேட்டதும், முதியவர் மூர்த் தண்யமாகக் கை கொட்டி நகைத்தார். ''அப்பனே ராமையாத் தேவா! உண்மையை நீ நம்பறியா? அதை நீ மதிக்கிறீயா? அட,பைத்தியக்காரப் பாவி! கேப்பையிலே நெய் வடியுதின்னு, கேட்பாருக்கு மதி இல்லையா? நான் உன்னே மாதிரி மதிகெட்டவன் இல்லே! உன்னே மாதிரி, மகள் பேரைச் சொல்லிக் கிட்டு, யாரோ ஊர் பேர் தெரியாத சிறுக்கிக்காக வைரச் சிமிக்கிகளைப் பண்ணிப்புட்டு, இப்ப அதுகளைக் கோட்டை விட்டுப்புட்டு அம்போன்னு நிற்கிறவனு நான்? போடா, போ!'' என்று அதிர் வேட்டுச் சிரிப்பை உமிழ்ந்தார்.

''ஏய் ஆதிமூலத் தேவா!... வாயை மறுபடியும் எக்குத் தப்பாய் நீட்டினீயோ அப்பாலே நான் கையை நீட்ட வேண்டி வந்திடும். ஜாக்கிரதை!''

''சரிதான் போடா, போக்கணங் கெட்ட பய மவனே!'' என்று ஓங்காரமிட்டு உறுமியபடி, ராமையாவை நோக்கிப் பாய்ந்தார் மூத்தவர்.

வீரமணியும் அன்னக் கொடியும் முன் மேல் நின்றார்கள்.

நாட்டு வைத்தியர் இடைமறித்து, ராமையா வின் கைகளைப் பற்றினார்.

''அந்த வெறும் பயல் கையை நீட்டு வானேன்னு, நீங்க வேலை மெனக்கெட்டு அந்த

முடிச்சு மாறிப் பயல் கையைப் பிடிக்கிறீங்க? அவன் கையை நீட்டினால், என் கை பூப்பறிக்கவா போயிடும்? என்னமோ, முதுகுப் புறத்தாலே பயங் கொள்ளியாட்டம் பாய்ஞ்சு என்னைக் கீழே தள்ளிப் போட்டான் அவன். அதுக்கு உண்டான கூலியை அவனுக்குக் கொடுக்காமலா இருக்கப் போறேன்? இந்தத் துப்புக் கெட்ட பயலுக்கு எங்க வீரமணி மாப்பிள்ளையாமே? கேட்டீங்களா கதையை?'' என்று, உறுமினார் பெரியவர்.

''ஆமாங்காணும்! உங்க வீரமணி எங்க வீட்டு மாப்பிள்ளை தானாக்கும்!''

இப் பேச்சைக் கேட்டதுதான் தாமதம். உடனே, ஆதிமூலத் தேவர் தன் மைந்தன் வீரமணி யைச் சந்தேகக் கண்ணோடு பார்வையிட்டார். ''வீரமணி!'' என்று விளித்தார். சாமியாடியின் கண்களாக அவருடைய கண்கள் உருமாறின!

வீரமணி கடைக்கண் பார்வையால் அன்னத்தை அளந்தவண்ணம் தன்னுடைய உரிமை யின் முடிவு பளிச்சிட, கம்பீரமான மிடுக்கோடு நடந்து வந்து நின்றான். மெல்லிய குரலெடுத்து. ''அப்பா!'' என்றான். ஏனோ அவனது அழகான கண்கள் இரண்டும் கலங்கிவரத் தொடங்கி விட்டன!

''தம்பி வீரமணி! உன் அம்மான் ராமையாத் தேவன் உன்னை மாப்பிள்ளைச் சொந்தம் கொண் டாடிக் கும்மாளமடிச்சுக் கொக்கரிக்கிறானே? மெய் தானா அது?''

அப்பாவின் ஏடாகூடமான கேள்விக்கு மகன் விடையிறுக்கத்தான் வேண்டும். ஆனால், அவனோ வாய் மூடி மௌனியானான்!

ஆதிமூலத்தின் இதயத்திலே சாம்பல் பூத்த தணலாகக் குமைந்து கொண்டிருந்த ஐயமும் சினமும் காற்றுப் பட்டுக் கனல் தெறித்தன. "வீரமணி! உன்னைப் பெற்ற அப்பன்—இந்த ஆவணத்தாங்கோட்டை ஊர் நாட்டாண்மைக் காரன் கேட்கிறேன். கேட்டதுக்குப் பதில் சொல் லாமல் வாயை மூடிக்கிட்டு நிற்கிறதைப் பார்த் தால், உன் அம்மான் தன் மகள் அன்னத்தைக் கொண்டு உன்னை மசிய வச்சு வசியம் பண்ணிட் டான்னு அர்த்தமா? பேசு தம்பி, பேசு!" என்று ஆற்றாமையோடு கேட்டார்.

"அப்பா, நீங்களோ என்னைச் சிலட்டூர் மாப் பிள்ளையாக்கக் கங்கணம் கட்டிட்டீங்க; என் அம்மானோ என்னைத் தன் வீட்டு மாப்பிள்ளையாக ஆக்கிக்கிடப் போறதாகச் சவால் விட்டிருக்காங்க! இதுக்கு ஊடாலே என்னோட சொந்த அபிப் பிராயத்தை பற்றித் தெரிஞ்சுக்கிட உங்க ரெண்டு பேரிலே யாருக்குமே பொறுப்பு ஏற்பட்டதில்லீங் களே!" என்று ஒரு புதிய குரலில் சொல்லி முடித் தான் வீரமணி.

அன்னக்கொடி வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு நின்றாள். வேகமாக அடித்த சுழிக்காற்றில் பறந்து வந்து காலடியில் தஞ்சம் அடைந்த ஒரு கடிதத் தாளை நலியாமல் கைப்பற்றி நிமிர்ந்தாள்.

ஆசை அத்தானைக் குழந்தைத்தனமான நிர்மலப் போக்கோடு ஊடுருவினான்.

சுயப்பிரக்ஞை கொண்ட ஆதிமூலம், "ஓஹோ! அப்படியா சங்கதி! சரி, சரி. நான் என் முடிவை உன்கிட்டே சொன்னப்பவே நீ என்கிட்டே சொல்லி யிருக்கோணும்! ஊம், இப்போது சொல்லப்பா, வீரமணி!" என்று கேட்டுக் கொண்டார். நெஞ்சு அடித்துக் கொண்டது!

அன்னக்கொடி தவித்தாள்!

"நான் என்னோட ஆசை அன்னத்துக்கு அருமை யான புருசனாக ஆகப் போறேனுங்க, அப்பா!" என்று தன்னுடைய தீர்ப்பைத் தெரியப்படுத்தினான் வீரமணி!

16: நாலுகால் பாய்ச்சலில் அதிசயம்!

ராமையாத் தேவர் சிவபுரிச் சொக்கத்தை விட்டு மீண்டார். சிவபுரிச் சுருட்டை ஒரு சுண்டுச் சுண்டி வீசினார்.

ஓட்டி வந்தது மெட்டிச் சத்தம்.

'சத்தம்' கொடுக்காமல், அச்சத்தத்தை நெஞ்சில் வாங்கிக்கொண்டார் சிங்கப்பூர்ச் சீமான். பாசம், கவரிமானாகத் துள்ளியாட, ஏறிட்டு விழித் தார். தங்கப் பல் இரண்டும் மங்கி விடாமல் சிரிப்பை வெள்ளோட்டம் விட்டார்.

"ஆத்தா! கம்மாய்க்குப் போயிட்டு வந்திட்டியடிா?" என்று அன்பு மீதூரக் கேட்டார்.

'ஊம்' கொட்டினுள் அன்னம்.

ஆனுல், புதிய பணக்காரரோ பழைய தேள் கொட்டின மாதிரி தவித்துப் போய்விட்டார். "ஆத்தா, வந்திட்டியா?" என்று பாசம் சேர, வினவியதற்கு, அவள் வாய் திறந்து, "ஆமாங்க அப்பா!" என்று வாய் நிறையச் சொன்னல் என்னவாம்? அலுப்பும் சலிப்புமாக 'ஊம்' கொட்டவா வேண்டும்?—குற்ற மனப்பான்மை அவரை நெருஞ்சி முள்ளாகக் குத்திக் குதறிக் கொண்டிருக்கிறது!—பாவம்! ராமையாத் தேவர் பாசத்துக்கு பயப்படுகிறவர்தானு? அப்படியென்ருல் கண்ணுக்குத் தெரியாத அந்த வைரச் சிமிக்கிகள் இரண்டும் ஏன் அவ்வாறு கண்ணுக்குத் தெரியாமல் கைகொட்டிச் சிரிக்க வேண்டுமாம்?

ராமையாத் தேவரின் உள்ளம், சந்தையில் சொக்கப்பச்சை களவு கொடுத்தாற்போல் துடித்தது. பெற்ற அன்புத் தவமகளின் அருமைப் பாசத்தைக் களவு கொடுத்து விட்டாரா அவர்? இன்றைக்கு ஏறிய தங்கத்தின் விலை நாளைக்கு இறங்கக் கூடும்—ஆனுல், அவர் தன் ஒரே புதல்வி மீது வைத்திருக்கும் அன்புப் பாசத்துக்கு எதையும் ஈடு கட்ட வாய்க்காதே?—எதையும் ஈடுகட்டவும் இயலாதே?—'ஆத்தா, அன்னம்!'—உந்திக் கமலம் விம்மலை வெடிக்க, கண்கள் கண்ணீரைப் பொடிக்கின்றன! சிங்கப்பூர்ச் செல்வந்தரின் இதயத்தின்

ஒரு முடுக்கிலே முடுக்கிவிடப்பட்ட இயந்திரமாகக் குற்றவுணர்வு உறுத்தத் தொடங்கி விட்ட உண்மையை அவரால் தட்டிக் கழித்திட முடியாது தான்!

அணில் ஒன்று கீறீச்சிடுகிறது.

அன்னக்கொடி ஈரம் களைந்து, அதாவது, ஈரத் துணிகளைக் களைந்து காய்ந்த கொட்டடியைக்கட்டிக் கொண்டு வந்து நின்றாள்; உடுத்தியிருந்த சேலையின் கொசுவத்தைச் சன்னமாக இழுத்துவிட்டுக் கொண் டாள். அவசரக் கோலம் அள்ளித் தெளித்தாற் போல, நெற்றியில் பூசிக் கொண்டு இருந்த விபூதி யின் பிசிறுகள் கண்களில் தெறித்துக் கண்களைக் கரிக்கச் செய்தன போலும்!—கசக்கி விட்டுக் கொண்டே நின்றாள் அவள்.

இந்நேரம் பார்த்துத்தானா, ராமையா தன் மகளை ஏறிட்டுப் பார்க்கவேண்டும்?—"ஆத்தாடி! கண்ணெல்லாம் மிளகாய்ப் பழம் கணக்கிலே சிவந்துகிடக்குதே?—அழுதியா?" என்று பதற்றம் மூள வினவினார்.

"ஆத்தா மண்டையைப் போட்டதுக்கு அப்பாலே, என்னைத் தலை மேலே தூக்கி வச்சுக் கிட்டு கூத்தாடிக்கிட்டிருக்கிற அன்பான அப்பன் காரர் நீங்க கைக்கு மெய்யாய் இருக்கையிலே, நான் எதுக்குங்க கண் கலங்கவோ, இல்லாட்டி, கண்ணைக் கசக்கவோ போறேன்?" என்றாள் மகள். காதுகளில் ஊசலாடிய பழைய கற்சிமிக்கிகளைத் தடவி விட்டவாறு, 'அரிக்கன்' விளக்கைப் பொருத்

றினாள். பழைய வீட்டின் முகப்பில் நின்று கொண்டு, எதிர்ப்புறம் அழகு காட்டிய புதிய வீட்டை ஒரு முறை நோக்கினாள். பிறகு என்ன நினைத்துக் கொண்டாளோ? விளக்கைத் தூண்டித் தூக்கிப் பிடித்து, புதிய மனையைப் புதிய உள்ளத்தோடு பார்வையிட்டாள். ஆனந்தக் கனவும் இன்பப் பெருமூச்சும் பின்னிப் பிணைய, ஓர் இமைபொழுது வரை இமைக்காமல் நின்றாள். சுய நினைவை ஆட் கொண்டதும், அவளது பேசும் விழிகளின் இமைகள் பேசாமல் படபடத்தன—வண்ணத்துப் பூச்சிகள் சிறகடிக்குமே, அப்படி! "அப்பா;" என்று நிதான மான குரலெடுத்துக் கூப்பிட்டாள் அன்னக்கொடி. கொண்டைப் பூக்கள் கெண்டை மீன்களெனக் குலுங்கின.

"சொல்லு, ஆத்தா!" என்று தவிப்பை அடக்க மாட்டாமல் கூறினார் ராமையா.

"அப்பா, நாம ஏற்கனவே போட்டு வச்சிருக் கிற திட்டப் பிரகாரமே, ஆவணி பிறந்தடியும் நம்மோட புது வீட்டிலே குடி புகுந்து பால் காய்ச்சிக் குடிச்சிப்பிடுவோம்! அப்படித்தானுங்களே?" என்று கேட்டாள். அப்பா காணவேண்டுமென்று விரும்பி யவள் மாதிரி, மறு பயணமும் அவள் தன்னுடைய தங்கச் சிமிக்கிகளை வருடியும் நெருடியும் விட்டுக் கொண்டாள்.

புதல்வியின் சூட்சுமமான இச் செயலைக் கவனிக்கவும் ராமையாத் தேவர் தவறிவிடவில்லை; கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று

தட்டிக் கழிக்க முடியாத பொறுப்புடன்—அந்தப் பொறுப்பைச் சந்தியில் நிறுத்தி விட முயன்று கொண்டிருந்த அவருடைய கள்ளக் காதலி செங்கமலத்தின் நினைவைத் தற்காலிகமாய்த் தட்டிக் கழிக்க முயன்ற நிம்மதியுடன், அவர் தன் அருமைத் திருமகளை இனம் புரியாத அச்சத்தோடு நோக்கினார். "மெய்தான், அன்னம். ஆவணி பிறந்தடியும் புது வீட்டிலே பால் காய்ச்சி மட்டுந்தானா குடிப் போம்? அந்தப் புது மனையிலேயே உனக்கும் உன் அன்பு மச்சான் வீரமணிக்கும் கண்ணாலமும் சேர்ந்து நடக்கப் போகுதாக்கும்!" என்று சொல்லிப் பெருமையுடன் தடபுடலாகச் சிரித்தார். அச் சிரிப்பு, விதியை எதிர்கொள்ளுவதுபோல வளைந்து நெளிந்தது.

பெருங்காயம் வைத்த பாண்டமாகக் காலந் தள்ளும் நாட்டாண்மை ஆதிமூலத் தேவர், தன் மைந்தன் வீரமணிக்கும் சிலட்டூர்ப் பெருந்தனக் காரரான கங்காணி கருப்பையாத் தேவரின் மகள் பவளக் கொடிக்கும் ஆவணியில் திருமணம் செய்து வைத்துவிடத் திட்டமிட்டு, அத்திட்டத்திற்குக் கிட்டும் ஒரு பலனாக, ராமையாத் தேவரிடம் பட்ட கடன்களை கங்காணியைக் கொண்டு அடைத்து விட வேண்டுமென்றும் மனப்பால் குடித்துக் கொண்டிருந்தார் அல்லவா?—அந்த ஆசையிலே, தனக்குச் சாதகமாக, வீரமணியே ஒரு பிடி குருவி மணலை அள்ளிப் போட்டு விட்டதால் விளைந்த அந்தமான—ஆனந்தமான சிரிப்பு அது! கங்காணியைக் கைக்குள்ளே போட்டுப் பணம் புரட்டி, தன் கடனைச்

சட்டப்படி கட்டி அடைத்துவிட்டு, தன்னைக் காலுக்குக் கீழே தள்ளிக் காலால் எட்டி உதைத்து விடச் 'சாகசம்' பண்ணிக் கொண்டிருந்த ஆதிமூலத் தேவரின் தந்திரம் இனி தவிடு பொடிதான்!

தும்மல் சத்தம் துளைக்கிறது.

'ஊம்; இனிமேல் ஆதிமூலம் மச்சானோட மானம் காலாவதிதான்! பெற்ற மகளை பெற்ற அப்பனுக்கு விரோதமாகக் கொடி பிடிச்சுக் கோதாவிலே இறங்கியாச்சு! கச்சேரியிலே தீர்ப்பு ஆகியிருக்கிற என்னோட கடன் உடனுக்கு அந்தக் கிழம் இனி எப்படி 'மால்' பண்ணப் போகுதாம்? தற்காலிகமாக 'லாந்தி' வசப்படுத்தி வச்சிருக்கிற என் வெள்ளைக் காளைக்கும் வைரச் சிமிக்கிகளுக்கும் அந்தக் கிழத்தைச் சும்மாவா விடப் போறேன்?'

நினைவுகள் தோன்றிய மாத்திரத்தில், அவருடைய சிரிப்பினால் விளைந்திட்ட பெருமையை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை! தாங்கிக் கொள்ள முடியாத பெருமையைத் தாங்கிக் கொண்டவராக, மகளைப் பார்த்துக் கொண்டே இருந்தார் அவர்—ராமையா.

"ஆவணி பிறந்ததும் உன் கண்ணாலத்தை நடத்திப்பிட வேண்டியதுதானே?"

"உங்க இஷ்டமுங்க, அப்பா!"

"என் இஷ்டந்தான் உனக்குத் திரவிசாய்ப் புரிஞ்சிருக்குமே, அன்னம்?"

"அப்போ, சரிங்க அப்பா!"

"சரி; சோறு உண்ணலாம் வா, ஆத்தா!"

"ஓ!"

அடுப்படிப் பக்கம் காலடி எடுத்து வைத்தார் ராமையாத்தேவர்.

இருட்டு கனமாயிற்று.

அப்போது, வெள்ளைக் காளை பரிதாபமாகக் கதறும் சத்தம், சோகத்தின் அலைகளை எழுப்பியவாறு காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது.

இச்சத்தத்தைக் கேட்டது தான் தாமதம்; உடனே சிங்கப்பூர்ச் சீமானின் கொட்டி அளந்த சிரிப்பெல்லாம் கொட்டித் தூற்றிய 'சாவி' யாக அதற்குள் எந்தக் கடவுக்கு எப்படித்தான் ஆலாய்ப் பறந்து தொலைத்ததோ? வயிற்றில் அடித்தவனை நெஞ்சைக் கணித்து அடித்து வீழ்த்திக் கருவறுக்கத் துடித்த துடிப்பு அவரது கண் வளையங்களிலே விளையென விளையாடியது. ஏதோவொரு பயங்கர முடிவுக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்ட வராக, பற்களைக் கடித்துக் கொண்டார் அவர்.

மறுபடி வெள்ளையின் காட்டுக் கூச்சல் ஓடி வந்தது.

"பாவம், வாயில்லாச் சீவன் பசி தாளாமல் கத்திக் கதறிக்கிணே இருக்குதுங்களே, அப்பா? நம்ப வீட்டுக் கொட்டடியிலே நின்னிருந்தா, இம் மாம் பொழுதுக்கு எத்தனையோ வாட்டி தீனி அள்ளிப்போட்டு இருக்க மாட்டேனுங்களா, அப்பா? நம்ப உடைமையை இப்படித் தோற்றுப்பிட்டு சிவனேன்னு நிற்பீங்களாக்கும்?"

ராமையா அருமை பெருமை மிகுந்த தனது தேள் கொடுக்கு மீசையைப் பாலைவனம் ஜமீந்தார் மாதிரி நீவி விட்டுக் கொண்டார். பிறகு, "அன்னம், என்னோட ஆத்திரத்தை நீ சரியாய்ப் புரிஞ்சுக் கிடல்லே! உன் அயித்தை புருசன் சவடால் ஆதி மூலத்தேவன் நம்ப வெள்ளையையும் உன்னோட வைரச் சிமிக்கிகளையும் லாந்திப் பிடிச்சி வச்சுக்கிட்டு இருக்கிற குற்றத்துக்கு உண்டான தண்டனையை அந்தக் கிழம் நாளைப் பொழுதுக்குள்ளே அனுபவிக் கிறானா, இல்லையான்னு நீ பார்த்துக்க, ஆத்தா! நாளை மம்மலுக்கு நான் தஞ்சாவூருக்குப் பறந்து திரும்பினதும், கதை எப்படித் திரும்புதின்னு நீ பார்த்துக்க, அன்னம்!" என்று சோளம் பொரித் தார் அவர்; கண்களிலே ரத்தம் கட்டி நின்றது.

அன்னம் நம்பிக்கை இழந்து, அழமாட்டாத குறையாகச் சிரித்தாள்!

இருட்டும் சிரித்தது.

சிங்கப்பூர் ராமையா மகளிடம் என்னவோ சமாதானம் சொல்ல வாயெடுத்த நேரத்திலே, அவரது பண்ணைக்காரன் பரமசிவன் பேயடித்தவன் போல் ஓடி வந்து அவருடைய அழகான காதைக் கடித்தான்.

ராமையா, "ஆ!" என்று துடித்து விட்டார். "அடி, பாவிச் சிறுக்கி!" என்று செருமினார் ராமையா.

"என்னுங்க அப்பா சொல்லுறீங்க?"

அருமைச் செல்வியின் அனுதாபம், அன்பான முரட்டு அப்பாவுக்கு எங்கே புரிகிற தாம்? குமாரத்தி யின் கேள்வியைக் காதில் வாங்கிக் கொண்டால் தானே?

அப்பொழுது, அங்கே ஓர் அதிசயம் நாலுகால் பாய்ச்சலில் ஓடிவந்து நின்றது!

ஆமாம்! அதோ, அந்த வெள்ளைக் காளை அறுபட்ட வாலை ஒய்யாரத்தோடு ஆட்டிக் கொண்டே, அசட்டுப் பெருமையின் குதூகலத் தோடு கத்தியவாறு, அங்கே நாலுகால் பாய்ச்சலில் ஓட்டமாக ஓடிவந்து நிற்கிறது!

17. இருட்டாக ஓடுகிருள் கன்னி!

தந்தை ராமையாத் தேவரும் மகள் அன்னக் கொடியும் அந்தக் காளையை வைத்த விழி விலக்கா மல் பார்த்தார்கள்; பார்த்துக் கொண்டேயிருந் தார்கள்.

அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்!

இந்தப் பழமொழியின் விவகாரமும்கூட வெள்ளைக்குத் தெரிந்திருக்கிறது!- பரவாயில்லை தான்! இனிமேலும் வெள்ளை மீது பழியைச் சுமத்தக் கூடாது. கொட்டையை வீசி விட்டுப் பழத்தைத் தின்னப் பழகிக் கொண்டிருக்கும் சிங்கப்பூர் ஆசாமி யின் காளையா, இல்லை, கொக்கா?—அதிலும்

ஆவணத்தாங்கோட்டைக்கே உயர்ந்த புள்ளியாக உயர்ந்து வர முயன்று கொண்டிருக்கும் ராமையா வின் 'வெள்ளை' அது! எப்படியோ அது ஆதிமூலத் தேவரின் மாட்டுத் தொழுவத்தை 'முறி' வைத்து விட்டு ஓடிவந்து விட்டது.

''அப்பா,'' என்று அலட்டினாள் தேவரின் பெண்.

பருத்தி, புடவையாகவே காய்த்துவிட்ட குதூகலத்தைக் காளை அவர் வசம் ஒப்படைத்து விட்டிருக்க வேண்டும்!—பண்ணைக்காரன் சொன்ன இரசாமச் சேதியை அப்போதைக்கு மறந்து போனார்.

''உன்னோட அயித்தை புருசன் மானத்தைப் பொழுது விடிஞ்சதும் கப்பலேற்றிப்பிட வேணும்னு ரோசிச்சுக்கிட்டு இருந்தேன். பல்லுப்போன அந்தக் கிழம் இப்போதைக்கு என் கிட்டேயிருந்து படிக்குப் பாதி தப்பிச்சுக்கிடுச்சு. நம்மோட வெள்ளை எப்படியோ ராவோடு ராவாக விடுதலை அடைஞ்சி வந்திருச்சு! ஆனா, ஊர் நாட்டாண்மைப் புள்ளி என் கையிலேயிருந்து ஓட்டு மொத்தமாய் விடுதலை அடைய வேணும்னு,நம்மோட அந்த வைரச்சிமிக்கி கள் ரெண்டுக்கும் அவர் பதில் சொல்லியாக வேணும்!'' என்றார் ராமையா.

அன்னக்கொடி நெடுமூச்செறிந்தாள். ''நம்ப வெள்ளை தன்னாலே மச்சான் வீட்டிலேருந்து விடுதலை வாங்கிக்கிட்டு ஓடிவந்திருக்கும்னு நினைக்கிறீங்களா, அப்பா?'' என்று விசாரித்தாள் கன்னிப்பெண்.

"ஒருவேளை, உன் ஆசை மச்சான்—என் மாப்பிள்ளை இந்தக் காளையை, அப்பன்காரர் அசந்திருந்த சமயம் பார்த்து அவிழ்த்து விட்டிருக்குமோ?"

"ஆமாங்க; அப்படித்தான் முக்காலறுப்பு கதை தடம் மாறியிருக்க வேணுமுங்க, அப்பா!"

"கதைதான் எப்பவோ தடம் மாறிப் போயிடுச்சுதே, ஆத்தா?"

"ஓ!"

"உன்னோட வைரச்சிமிக்கி ரெண்டையும் பொழுது விடிஞ்சடியும் நல்லதனமாகத் திருப்பிக் கொடுத்திட்டாராகுல் தான், ஆதிமூலத்தேவன் என் கிட்டேயிருந்து தப்பமுடியும்!" என்று வீறு கொண்டு முழங்கினுர் ராமையாத் தேவர்.

"வைரச்சிமிக்கி என்னோடது அப்படின்னு நூறு வாட்டி சொல்லிக்கிட்டு இருக்கிற நீங்க, வைரச் சிமிக்கிகளை எனக்கோசரம் பண்ணியிருக்கிறதாக ஒரு வாட்டி கூட அச்சாரம் வச்சு இது மட்டும் சொல்லவே இல்லீங்களே, அப்பா?"

"வைரச்சிமிக்கிகளை உனக்காகப் பண்ணுமல், மறுகா யாருக்காகப் பண்ணினேனும், அன்னம்?"

"அந்தத் துப்பு உங்களுக்குத் தெரியும். அப்பாலே, குடிகெடுத்த அந்தப் புறக்குடிப்பாவிச் சிறுக்கி செங்கமலத்துக்குத் தெரியும்!"

சிங்கப்பூர்ச் சீமான் பாக்குக் கடிக்கும் நேரம் வாயடைத்துப் போய்விட்டார்.

அப்பாவின் பரிதாபத்திற்கு உகந்த இந்தக் காட்சியைக் கண்ட அன்னத்திற்கு அனுதாபம் மேலிட்டது. "சரி, சரி, கை கழுவிப்புட்டு வாங்க, சாப்பிடலாம்!" என்றாள்.

"நல்லாய்ச் சொன்னாய், ஆத்தா. இதோ, கை கழுவிப்புட்டு நொடியிலே வந்திடுறேன். நீ உள்ளே போய்க் கதவை நாதாங்கி போட்டுக்கிட்டு இரு, அன்னம்!" என்று கூறிவிட்டு, அரிக்கன் விளக்கைத் தூண்டியவாறு கையிலெடுத்தார் ராமையா. சற்று முன்னம் பண்ணைக்காரன் சொன்ன அந்தப் பயங்கரச் சேதியை அவரால் மறக்கவே முடியாது!

"பசியாறாமல் ராத்திரியிலே எங்கிட்டுப் பறியிறீங்க, அப்பா?"

"அன்னம், நான் உன்னை விட்டுப்புட்டு எங்கிட்டும் மறுகவோ மடங்கவோ ஏலாது. அதனாலேதான், நான் என்னோட விதியை நானே தேடிக்கிட்டுப் பறிகிறேன்; நான் விதைச்ச வினையை நானே, என் கையாலேயே அறுவடை பண்ணிக் கண்டுமுதல் பண்ணிப்புடப் பறியிறேன். புதிராட்டம் என் பேச்சு உனக்குத் தோணுதா! மெய்தான். புதிர்தான் போடுறேன்...! இந்த நாலஞ்சு வருசமாய் உன்கிட்டேயிருந்து கமுக்கமாய் மறைஞ்சு நின்னு புதிர்போட்டுக் கிட்டு வந்த நான், இனி நான் போட்ட புதிரை நானே விடுவிக்க வேண்டிய வேளை வந்தாச்சு. நீ சாப்பிட்டுப்புட்டு, கெட்டியமாய்த் தூங்கு நான் திரும்பினால் கதவைத் தட்டுறேன்! நான் வாரேன்!" என்று கூறி, குரலின்

சலனத்தை நிதானப்படுத்த முடியாமல் தவித்தார் அவர்.

"போயிட்டு வாரேன்னு சொல்லுங்க, அப்பாரே!"

"ஓ......சாத்திரம் பேசுறீயா, மகளே? சரி, போயிட்டு வாரேன்!" என்று திருத்திப் பேசினார், புதுப்பணக்காரர். அன்னத்தின் சுடுநீரை எதிர் கொள்ள வலுவிழந்து, முகப்பினின்றும் வெளி யேறினார் ராமையாத்தேவர்.

பசி வந்திடப் பத்தும் பறந்து போய்விடுமாம்!

ஆனால், அழகுக்குமரி அன்னத்துக்குப் பசி வந்த தென்னவோ நிஜம்தான். ஆனால் அவள் வரை, பத்தும் பறக்காமல், பசியே பறந்துவிட்டது. இதுவும் பொய்யன்று!

'புது மாடி வீட்டு நடையிலே தொங்கவிடுற துக்காக சாம்பிராணி போட்டு வச்சிருக்கிற சிங்கப் பூர்ச் சுவர்க் கடிகாரத்திலே ராவு எட்டுத்தரம் மணி அடிச்சதும், அப்பா தலைபோகிற அவசரத் திலே எங்கிட்டோ தலைதெறிக்கப் பறிஞ்சாங்க. மணி இப்ப பத்தும் அடிச்சு ஒய்ஞ்சிருச்சு. ஆனா, அப்பாவைத்தான் காணோம்! எங்கே போயிருப் பாங்க அப்பா? ஒரு சமயம் அந்தப் பட்டி செங்க மலத்தை நாடித்தேடி காளியம்மன் கோயில் வளைவு முக்கத்துக்குக் கால் பாவி இருப்பாகளோ? கல்யாணம் ஆகாத பெண்ணை வீட்டுக்கு ஒண்டி யாகக் காவல் வச்சுப்புட்டு, ஊரைக் கெடுக்க வந்த

செங்கமலத்துக்குக் காவல் இருக்கப் போயிட்டார் அப்பா!'

நினைவுகள் சீறின! ஆறின!

வெள்ளைக்கு இப்போது என்ன கேடு வந்து தொலைத்தது? வாய்பேசாமல், 'சிவனே' என்று தன் விதியைத் தொழுத வண்ணம் தொழுவத்தில் பசுவாக அடைந்து கிடக்கக் கூடாதோ?—பிடுங்கிப் போட்ட 'கூளம்' அதற்குள்ளாகவா தீர்ந்து விட்டது!- சே!... ஆனாலும், இவ்வளவு குறும்பு கூடாது! அத்தை வீட்டிலே தீனி இல்லாமல் பூராப் பொழுதுக்கும் கொட்டடியிலே கொட்டக் கொட்டப் பட்டினி கிடந்தது மறந்து போய்விட்டது போலும்!

நடராசர் கோயில் பக்கம் நாய் குரைக்கிறது!

வெள்ளைக் காளையின் மூலம் தன் குடும்பத்துக்கும் அத்தையின் குடும்பத்துக்கும் இடையில் நிலவியிருந்த பகைமை காளானாக வளர்ந்துவிட்டிருக்கும் நிலவரத்தை, எண்ண எண்ண, அன்னக்கொடிக்கு வெள்ளை மேலிருந்த அனுதாபம் ஆத்திரமாக உருமாறி, உருக் கொள்ளத் தொடங்கி விட்டது. கொடுக்கல் வாங்கல் விவகாரத்தின் காரணமாக அப்பாவுக்கும் மாமாவுக்கும் நடுவில் வந்த கோபதாபங்களைக் கிண்டிக்கிளறி வேடிக்கை பார்க்கத்தான் வெள்ளை, அத்தை வீட்டின் வைக்கோலைக்கேள்வி முறையில்லாமல் தின்று வைத்ததா? வெள்ளை மீது மட்டிலும் குற்றப்பத்திரிகை வாசிப்பது மனிதத்தன்மை ஆகாது. அந்த வைரம்

சிமிக்கிகளும் அல்லவா இந்தப் பகைமைத் தீயைக் கொழுந்து விட்டு எரியச் செய்து விட்டன! அம்மானும் அப்பாவும் பிணக்குத் தீர்ந்து, எங்கள் திருமணத்தைச் சிறப்பாக நடத்திவைக்க வேண்டும், தெய்வமே!—நீள் மூச்சு நீள்கிறது!

அவ்வேளையில்:

"தங்கச்சி," என்ற குரல் கேட்டது.

ஜன்னலைத் திறந்து கொண்டு எட்டிப் பார்த்தாள் அன்னம். தான் கணித்த மாதிரி, பண்ணைக்காரன் பரமசிவம் தான் குரல் கொடுத்திருக்கிறான்.

"என்னப்பா?" என்று விசாரித்தாள் அவள்.

"தங்கச்சி, தலைக்குமேலே வெள்ளம் போயாச்சு!" என்று மென்று விழுங்கினான் வேலைக்காரன்.

"வெள்ளம் யாரோட தலைக்கு மேலே போச்சு தாம்? உடைசுப் பேசப்பா," என்று உத்தரவு பிறப்பித்தாள் ராமையாவின் பெண்.

"சொல்ல வேண்டியதைச் சொல்லிப்பிடத் தான் வேணும்; ஆனா, உங்க அப்பா சொல்லப் படாதின்னு 'முச்சரிக்கை' வாங்கிக்கிட்டாரு. சரி, சரி, நான் சொல்லிப்பிடுறேன்!"

"சீக்கிரம் சொல்லு!"

"உங்க சின்ன ஆத்தா......"

"எங்க சின்ன ஆத்தாவா? என் ஆத்தாளோடே கூடப்பொறந்தவுக யாருமே இல்லையே?"

"அதுதாங்க...... வந்து...அடடே! நெற்றிக் கண்ணைத் திறந்துப்புடாதீங்க, தங்கச்சி! உங்க அப்பா தொடுத்து வச்சிருந்த செங்கமலம் காதுக்கு எஜமான் வைரச் சிமிக்கி போடலையாம். அந்த நிட்டூரக் கோபம் தாங்காமல், துப்புக்கெட்ட அந்தப் பொந்துக்கிளி பொழுது பட்டடியுமே கை மாறிப் பறந்து போயிடுச்சாம்!

வேலைக்காரன் முண்டாசுத் துவாலையை 'சனியன் விட்டது' என்கிற போக்கில் சுள்ளாப்போடு உதறிப் போட்டுக் கொண்டான்.

அன்னம் தலைகுனிந்தாள். "புள்ளி-புதுப்புள்ளி யாராம்?" என்று தாழ்குரலில் கேட்டாள். ஆற்றுமை கேட்டது.

"அந்தத் துப்பு உங்க அப்பா திரும்பினுத் தானுங்க புரியும்!"

"ஓஹோ!"

விழிநீருக்கு வழிகாட்ட அன்னத்துக்குப் புரியவில்லை.

திடுதிப்பென்று 'வெள்ளை' வீரிட்டுக் கதறியது!

மறுகணம்:

"ஐயையோ! நம்ப வீட்டு வெள்ளைக்காளையை யாரோ இருட்டிலே இழுத்துக்கிட்டு ஓடுறானே?... தங்கச்சி!..."

பரமசிவம் ஓலமிட்டான்:

"ஆ!" என்று வீரிட்டு அலறினாள் அன்னம்!- கதவை 'படா' ரென்று திறந்தாள்; நிற்கவில்லை

நிலைக்கவில்லை. இருட்டைச் சுமந்தவளாக, இருட்டைத் துளைத்தவண்ணம், இருட்டோடு இருட்டாக ஓடிக்கொண்டிருந்தாள் அந்தக் கன்னி!

18. வாழும் சொந்தங்கள் வாழும்!

வாழ்க்கை சுவைமிக்க நவீனமாக அமைந்திட வேண்டுமென்றுதான், கன்னி அன்னக்கொடி கனவு பின்னிக் கொண்டு, காலத்தோடு காலமாக விளையாடிக் கொண்டிருந்தாள்!

ஆனால்...?

'நினைப்பது மாத்திரம் வாழ்க்கை அல்ல; நினைப்பதை மறப்பதும், அல்லது மறைப்பதும் கூட வாழ்க்கைதான்!' என்கின்ற நிதர்சனத் தத்துவத்தைச் சொல்லிக் காட்டுவது மாதிரி, அவள் கடந்த சில நாட்களிலே எத்தகைய எதிர்பாராத சம்பவங்களையெல்லாம் எதிர்கொள்ள நேரிட்டு விட்டது!

முந்திய நாள் இரவு நடந்த நிகழ்ச்சியை மீண்டும் மனத் திரையில் உலவ விட்டாள்.

வெள்ளைக்காளையை யாரோ திருட்டுத்தனமாகப் பிடித்துக் கொண்டு ஓடும் சேதியை பண்ணைக்காரன் பரமசிவம் மூலம் கேள்விப்பட்டாளோ, இல்லையோ, அக்கணமே கிறுக்குப் பிடித்த பாவனையில் வெள்ளைக் காளையைத் தேடி ஓட்டம் எடுத்தாள் அன்னக்கொடி. 'தங்கச்சியோ!' என்று அலட்டியவாறு,

ஓடி வந்த பரமசிவம், அவள் ஓடின காளவாய் ஒற்றையடிப் பாதையிலே மறுக்காமல், வேப்பந் தூரடியிலே மடங்கி விட, இவ்விவரம் அறியாத அபலைக் கன்னி,தன் போக்கில் வெள்ளையின் கழுத்து மணிச் சத்தத்தைக் குறி வைத்து ஓடினாள். காளை யின் பின்னணியில ஊசலாடிய மானப் பிரச்சினையில் தான் அவள் உள்ளம் ஊசலாடியது.

தாராடிப் பொட்டல் காடு வந்தது.

பேயிருட்டில், மணிச் சத்தம் நின்றது!

அன்னம் தன்னையும் தன்நிலையையும், அக் கணம்தான் உணராலானாள். 'ஐயோ! என் அன்பு மச்சான் வீரமணிக்குச் சொந்தம் கொண்ட— பந்தம் கொண்ட அன்புப் பிச்சையாச்சே நான்? அந்நியன் யாராச்சும் வந்து என்னை சாடிப் பிடிச்சு ஐயையோ! ஆத்தாளே...!'விம்மினாள்.

விடியாத இரவாகப் போகிறதா இந்தப் பாழ் இரவு?

அப்போது:

பூங்கரத்தைப் பூ நாகம் கவ்விப் பிடிப்பது போலே, ஓர் உணர்வு—தொட்டுணர்வு கிளர்ந் தெழுந்தது. 'கன்னி கழியாப் பொண்ணுன என் கையை எந்தப் பாவி பிடிச்சு இழுக்கறதாம்?'— அவள் பத்திரகாளியானாள். கண்களைத் தீட்டிக் கொண்டு ஏறிட்டுத் திரும்பினாள்.மேனி நடுங்கியது. கைகளை உதறி விடுவித்துக் கொள்ள முயன்றாள். முடியவில்லை. கைகளைப் பற்றி இழுத்த 'பேடி'யை

இனம் காண வேண்டி, பார்வையைத் தீட்தண்ய மாகத் தீட்டிக் கொண்டாள். இருட்டில் இருட்டைத் தான் சந்தித்தாள். ஆனல், யாரையும் இனம் கண்டு கொள்ளக்கூடவில்லே. ''ஏலே, யார் நீ? சமைஞ்ச பொண்ணேடை கையை பேடி கணக்கிலே கள்ளத் தனமாய்த் தொட்டிழுக்கத் துணிஞ்ச புறக்குடி யார் நீ? நீ மெய்யான ஆண் பிள்ளேயாய் இருந்தால் வெளிச்சத்துக்கு வா. ஒண்டிக்கு ஒண்டி மல்லுப் பிடிக்கலாம்! ஊம்...வாடா!'' என்று முழங்கிஞள்.

ஆனல், அந்த உடும்புப் பிடி இன்னமும் விலகின பாடில்லேயே!

அன்னம் தமிழச்சியாக மாறி விட்டாள். கைகளே யானேப் பலத்தோடு உதறித் தன்னே விடுவித்துக் கொண்டாள். விடுதலே பெற்ற உத் வேகத்தோடு எதிரில் எதிரியாக நின்ற அந்த ஆளே ஓங்கி அறைந்தாள். அறை குறி தவறவில்லே!

கண்மூடிக் கண் திறக்கும் நாழி அங்கே சுடு காட்டு அமைதி பரிபாலனம் செய்வது.

ஆனல், அன்னமோ திறந்த கண்ணே மூடவே இல்லே. தலே நிமிர்ந்து நின்முள்.

''ஏய்! ஒரு பொட்டைக்குட்டி கையிலேலே—கண்ணுலம் கட்டாத ஒரு புத்தம் புதுப் பொண்ணு கையிஞலே வசமாய் அறையை ஏந்தி வாங்கிக் கிட்டு, மானம் இல்லாமல்—ரோசம் இல்லாமல்——சூடு சுரணேயும் இல்லாமல், செல்லத் தேவர் ஊரணித் தொந்திப் பிள்ளேயாராட்டம் கல்லாய்ச் சமைஞ்சு வாயடைச்சு நிற்கிறீயே நீ?—உனக்கே

உன் போக்கு—உன் நடத்தை வெட்கமாக இல்லையா? சீ! நீயும் ஒரு ஆண் பிள்ளையா?''

அடுத்த கணம்:

''அன்னம்!'

அழைப்பின் குரல் இருட்டையும் அமைதியையும் வெட்டிப் பிளந்தது.

அழைப்பது அன்பு அத்தான் வீரமணி அல்லவா? ஐயையோ!—அன்னம் தணலிடைப் பட்டமெழுகுப் பதுமையாக உருகிக் கரைந்தாள். "ம...ச்...சானே!'' என்று விளித்தாள். ஏக்கமும் அச்சமும் அரவணைக்க அழைத்தாள் அவள். ''மச்சான், நீங்களேதானா? பின்னே ஏன் மூச்சு காட்டாமல் பூடகமாய் மௌனம் சாதிக்கிறீங்க?பேசுங்க, மச்சான்! ஐயோ, வாயைத் திறக்க மாட்டீங்களா? என்னைத் தற்காத்துக்கிடுதறதுக்காக — என்னோட பெண்மையின் கற்பைக் கட்டிக் காப்பாற்றிக் கிடுறதுக்கோசரம்தான் நான் அப்படி அறைஞ்சேன்! நீங்கதான் என் கையைப் பிடிச்சு இழுத்தீங்க என்கிற துப்பு எனக்கு இந்தப் பாழும் கும்மிருட்டிலே எப்படித் தெரிய ஏலுமுங்க?'' செருமினாள்.

"அன்னம்!'' என்றான் வீரமணி.

"அன்னம்தானுங்க, அத்தான்! உங்களோட ஆசை அன்னமேதானுங்க, மச்சான்!''

"நீ வேளை கெட்ட இந்த வேளையிலே இந்தக் காட்டுப் பக்கம் ஏன் வந்தே, அன்னம்?''

''நீங்க எதுக்கு இங்கிட்டு வந்தீங்களாம்?''

"நானு?...வந்து......வந்து......?"

"அதுதான் வந்திட்டீங்களே? விவரத்தைச் சொல்லுங்க. நீங்க ஏன் இங்கே வந்தீங்க?"

"நான் எங்க வீட்டோட மானத்தையும் கவுரத்தையும் மீட்டுக்கிட வந்தேன்!"

"ஓகோ!...அப்படீங்களா? நானும் எங்க குலக் கவுரவத்தையும் குடும்ப மானத்தையும் மீட்டுக்கிடத்தான் இப்படிப்பட்ட இருட்டிலே இந்தக் காட்டுக்கு வந்தேனுங்க, மச்சான்!"

"அப்படியா சங்கதி?"

"பின்னே? உங்க வீட்டு வைக்கோலை அறியாமல் தெரியாமல் துளியூண்டு தின்னு தொலைச்ச பழி பாவத்துக்காக, வாயில்லாச் சீவனை உங்க அப்பா கொட்டடியிலே கட்டிப் போட்டாங்க, இல்லைங்களா? அந்த வெள்ளைக்காளை ராவுக்கு ராவாய் விடுதலையாகி எங்க வீட்டுக்கு ஓடியாந்திச்சு. வந்த காளையை யாரோ முடிச்சு மாறிப் போகுடி ஆசாமி கொஞ்ச முந்தி பிடிச்சிக்கிட்டு ஓடிட்டான். அந்தப் 'பொம்பளை செட்டி'யைத் துரத்திக்கிட்டு நான் வந்தேனுக்கும்!"

சிரிப்பொன்று சஞ்சலத்தோடு விம்மிப் புடைத்து வீரிட்டு வெடித்தது!

"மச்சான், ஏன் சிரிக்கிறீங்க?"

"சிரிக்கப்படாதின்னு, அழட்டுமா, அம்மான் பொண்ணே?"

"விளையாடுறீங்களே?"

"நானு விளையாடுகிறேன்? ஊஹூம்! விதி விளையாடுது!"

"ஒண்ணுமே மட்டுப்பட மாட்டேங்குதே, அத்தானே?"

"அன்னம், உங்க வீட்டுக் காளை தன்னாலே விடுதலையாகி உங்க வீட்டை நாடி ஓடி வரல்லே! நானேதான் அதை நேற்று அவிழ்த்து விட்டேன்! ஆனா, இந்தச் சங்கதியைத் தெரிஞ்சுக்கிட்ட என் அப்பன்காரர் உடனே உண்ணாவிரதம் இருக்க ஆரம்பிச்சிட்டார். நான் அவரோட அனுமதி இல்லாமல், தன்னடைச்ச மூப்பாய் அவிழ்த்து விட்ட உங்க வெள்ளையை நானே திரும்பவும் சிறைப் புடிச்சுப்பிட வேணும்னு ஆணை இட்டாங்க. அப்பன்காரரோட வம்பும் வீம்பும்தான் ஊரறிஞ்ச தவசலாச்சே? அவரோட சொந்தத் திட்டத்துக்கு விரோதமாய், நான் உன்னையே கட்டிக்கிடப் போறேன்னு அன்றைக்கு வாக்கு கொடுத்திட்ட சடனையை மனசிலே தாங்கிக்க முடியாமல், பட்டினி கிடக்காங்க. பெற்ற அப்பன் பாவம் சும்மா விடுமா?... நானேதான் கமுக்கமாய் நலியாமல் ஓடி வந்து உங்க வீட்டு வெள்ளையைக் கடத்தி இழுத்துக்கிட்டு ஓடினேன். ஆமா அன்னம்!"

"மச்சான், இப்ப எங்கே அந்தக் காளை?"

"ஏன்? அங்கிட்டு சவுக்கு மரத்திலே முடி போட்டுக் கட்டியிருக்கேன் உங்க வீட்டுக் காளையை!"

"அதை எங்கிட்டே ஒப்படைச்சுப்பிடுங்க! ஏன், தெரியுங்களா? நான் என் அப்பாருக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவளாக்கும்!"

"ஊகூம்! முடியாது! என் அப்பாருக்கு நான் பதில் சொல்லியாக வேணும்! நான் உங்க காளையை என் அப்பா கையிலேதான் ஒப்படைப்பேனுக்கும்!"

"மெய்யாலுமா?"

"ஆமா!"

"பார்க்கலாமா?"

"பார்க்கிறதுக்கு இருட்டு தடை போட்டிருக்குதே, அம்மான் செல்லமே!"

"உங்களைப் படிச்சுக்கிட முடியல்லீங்களே, அத்தானே!"

"ப்பூ!...இம்புட்டுத்தானு? என்னைப் படிச்சிக்கிட திராணி இல்லாத உங்கிட்டேயா என்னை ஒப்படைக்கச் சொல்லுறே?"

"மச்சான்!" என்று கோபக் கனல் தெறிக்க அலறியபடி, காளையைத் தடம் கண்டு தேட ஓடினுள் அன்னம்.

மறுபடியும் அவள் கையைப் பிடித்து இழுத்து மடக்கினுன் வீரமணி. பூங்கரத்தின் தொட்டுணர்வு அவன் இதயத்தின் மனச்சான்றைத் தொட்டு உணர்த்தியிருக்கலாம்!

ஆடி மாத மேகப் படுதாவில் மின்னல் ஒன்று வெட்டிக் கீறியது.

வீரமணி திடுக்கிட்டான். "அன்னம்!" என்று பதறினன். "அழுதியா அம்மான் மகளே?" என்று கேட்டான். அவனுக்கும் விழிகளில் கலக்கம் கண்டது.

"மச்சான், நீங்க அடாவடி அடிக்கிறீங்க!"

அவன் சிரித்தான். பிறகு சொன்னன்: "அன்னம், என் தவிப்பு உனக்குப் புரியாது. பாசம் என்னைப் பூ விலங்காகக் கட்டிப் போட்டிருக்குது, இந்த வெள்ளைக் காளை விசயத்தில் மட்டும்!—உன் தவிப்பும் எனக்குப் புரியாமல் இல்லேதான்!"

"அப்பாலே, எனக்கு வழி?"

"உனக்கு வழி காட்டத் தான் நான் இருக்கேனே, புள்ளே!"

"சள்ளைப்படுத்துறீங்களே, மச்சான்! என் வழி எனக்குப் புரியும்!"

"ஊகூம்; உன் வழி உனக்குப் பிடிபடாது. ஏன், தெரியுமா? இது இருட்டு நேரம். இருட்டிலேயும் இருட்டு, பேய் இருட்டு! மூச்சு விடாமல் நான் சொல்லுறதைக் கேள். உங்க வெள்ளையை உன் கிட்டவே ஒப்படைக்க வேண்டியது என் பொறுப்பு. ஆனல், இப்ப நான் அந்தக் காளையை என் அப்பா கையிலேதான் ஒப்படைப்பேன்!-பின்னடி உன் கிட்டேயே ஒப்படைச்சிப்பிடுறேன் நான்!...என்னை நம்பு. நான் உன்னைக் கண்ணுலம் கட்டிக்கப் போற முறை மச்சானுக்கும்! ஆமா, சொல்லிப்பிட்டேன்! நம்மோட சொந்தங்களும் பந்தங்களும் ஆத்தா ஆணையாக வாழத்தான் போகுது! ஆமா!..."

அவள்—அன்னம் சிரிக்கவில்லை.

ஆனால், அவன்—வீரமணி அவளைச் சிரிக்க வைத்துவிட்டான்!

19. சிலட்டூர்ப் பவளக்கொடி!

உலை கொதித்துக் கொண்டிருக்கின்றது!...

அன்னக்கொடி பதறிப் பெருமூச்செறிந்தாள்.

வாசலில் சத்தம் கேட்டது.

அப்பா தஞ்சாவூரிலிருந்து அதற்குள் எப்படித் திரும்ப முடியும்?—ஊகூம்!...

ஆனால்,

வாசலில் 'விதி'யாகக் காட்சியளித்தவள் சிலட்டூர்ச் செல்வமகள் பவளக்கொடி!

அன்னக்கொடிக்குப் பவளக் கொடியை மறந்தே போய் விட்டது!...

"அன்னம், என்னை உனக்கு நினைப்பு இல்லையா?" என்று விசாரித்தாள் பவளக்கொடி. எடுப்பான நாசி முனையிலே எடுப்பாகச் சிரித்தது அந்த 'மரு'!

பவளக் கொடியை ஏற இறங்கப் பார்வையிட்டாள் அன்னக்கொடி. எடுத்த எடுப்பில் அவள் பார்வையில் எடுப்பாகப்பட்டது பவளத்தின் காதுச் சிமிக்கிகள் சிந்திய வைர ஒளிதான். அடுத்தபடியாக அவள் சந்தித்தது பவளத்தின் அந்தப்

பார்வையை. அந்தப் பார்வை 'என்னவோ ஒரு மாதிரியாக' இருந்தது. அதில் யதார்த்தமான பாசம் இல்லை; போலித்தனமானதும் ஊமைத் தனமானதுமான ஒரு செயற்கைத் தன்மையைத் தான் அவள் பார்வையில் அன்னம் காண முடிந்தது. வரவழைத்துக் கொண்ட பூஞ்சிரிப்புடன், "மூஞ்சி நெஞ்சிலே நிற்குது; ஆனா, உம் பேர் தான் நினைப்பிலே நிற்கல்லே!" என்று தெரிவித்தாள் சிங்கப்பூர் ராமையாவின் அருமை மகள்.

"நல்லாய்ச் சொன்னே, போ! நான் உன் பேரை முத்திரை குத்தினது கணக்கிலே இம்மாம் காலத்துக்கு ஞாபகம் வச்சுக்கிட்டிருக்கேன். நீயானால், பழசுபட்டதை அடியோடு மறந்தாப்பிலே, எம் பேரையுமில்லே மறந்து போயிருக்கே?"

பவளக்கொடியின் பேச்சு அன்னத்திற்குச் சிரிப்பை ஊட்டி விட்டது. முத்துச் சுடர் ஒளிர, ஓர்மையோடும் தன்மையோடும் சிரித்தாள் அவள். பிறகு, "கதைன்னா, அதிசயமாய்த் தான் இருக்கும்; இருக்கவும் வேணும். கதையின்னா, அதுதானே அருத்தம்? பார்க்கப் போனால், வாழ்க்கை கூட கதையேதான்! நீ செப்பின தொப்ப, என் கதை கூட ரொம்ப அதிசயமானதுதான், தங்கச்சி!" என்று பேசினாள்.

"அன்னம், உன்னை மாதிரியே உம் பேச்சும் அழகாய் இருக்கு!"

"பொய் பேசலியே நீ?"

"பொய்யே பேசத் தெரியாது!"

"பொய்யே பேசத் தெரியாது என்கிறதே பொய்! நான் நம்புறதுக்குத் தயாராக இல்லே. ஆனா, பொய் பேசப் படாது அப்படின்னு சொல்லு, நம்புறேன்."

"அந்தச் சங்கதி இப்பைக்கு ஈசான்ய முடுக்கிலே ஒடுங்கட்டும். மெய்யாலுமே நீ ஓசத்தியான அழகு கொண்ட பொண்ணுதான்! அதாலேதான் உன்னை என்னாலே இம்புட்டு வருசத்துக்கு மறக்கவே முடியல்லே, அன்னம்!"

"ஓ! அப்படீன்னா, அம்புட்டுத் தொலைவுக்கு என் அழகு உன்னை மயக்கிடுச்சின்னு சொல்லு!"

"ஊம்! உன் அழகு என்னை மட்டுந்தானா மயக்கும்?"

"அப்பன்னா, உன் வாய்க்குச் சர்க்கரைதான் போட வேணும்!"

"வெறும் சர்க்கரை மட்டிலும்தான் என் வாய்க்குப் போடப் போறீயா, அன்னம்?"

தேடி வந்த விருந்தாளி வேறு என்ன எதிர் பார்க்கிறுளென்று அன்னத்திற்கு விளங்கிடவில்லை. அப்போது, மூக்கின் முனையில் முன் கோபத்தைக் கூடுகட்டி வைத்திருக்கும் முசுடு மாதிரி, அடுப்பில் உலை கொதித்துக் கொண்டிருந்த ஓசை கேட்டது. "வாய்க்குச் சர்க்கரையும் போடுறேன்; வயிற்றுக்குச் சோறும் போடுறேன், தங்கச்சி!" என்று 'டக்' என்று ஒரு போடு போட்டாளே, பார்க்க வேண்டும்!

''நான் தங்கச்சி இல்லே!''

''தங்கச்சி இல்லையா? அப்படின்னு அக்காவா?''

''ஊஹூம். நான் பவளம்... அதாகப்பட்டது, பவளக்கொடி!''

''உன்னுேட பேரைக் கேட்டுக்கிடத்தான் கூப்பிட்டேன். ரொம்ப அழகான பேர்!''

''அப்படியானல், நான் அழகில்லே, கறுப்புன்னு இடிக்காமல் இடிக்கிறீயாங்காட்டி, அன்னம்?''

''நாவப்பழம் கறுப்புத்தான். அதை எத்தனை ஆசையோட தின்கிறேம்? நீ கறுப்பானல் என்ன? அந்தக் கறுப்பிலேயும் மனசைச் சுண்டியிழுக்கிற அந்தம் சந்தமும் சேர்ந்திருக்குதே, பவளம்!''

''என்னுேட அழகிலே மனசைச் சுண்டி இழுக்கக் கூடிய அந்தம் இருக்குது என்கிற துப்பு உனக்குக் கூடப் புரிஞ்சிருக்குதே?'' என்று அட்டகாசமாகச் சிரித்தாள் பவளம். ''அடி, சக்கை!''- கும்மாளம் போட்டாள்.

பவளத்தின் பேச்சுக்கு உண்டான அர்த்தமோ, அல்லது, அவள் சிரிப்புக்கு உரித்தான காரணமோ அன்னத்திற்கு மட்டுப்படவில்லே. ''கைப்புண்ணுக்குக் கண்ணுடியா வேணும்?'' என்றுள்.

''கண்ணுடி வேணும். சில பேருக்குக் மூக்குக் கண்ணுடி தேவைப்படாதா?''

''ரொம்பச் சூட்சுமக்காரியாய் இருப்பே போலிருக்கே, பவளம்? சரி, சரி. வந்த காலோட

நிற்காமல், அப்படிக் குந்து. இந்தாலே ஓடிப்போய் சோத்தைக் கவிழ்த்து 'கலவடை'யிலே இறக்கி வச்சிட்டு, ஒரு எட்டிலே ஓடியாந்திடுறேன்... பவளம்!'' என்று சொல்லிக் கொண்டே, பவளத்தைப் பார்க்காமல், காலைப் பார்த்து நடந்தாள் அன்னம்.

'விடிகாலையிலேயே தஞ்சாவூருக்குக் கார் ஏறிப் பறந்த அப்பா எப்போது திரும்புவார்? அப்பாவுக்கு இப்போது தஞ்சையில் என்ன அவசர அலுவல்? 'கேசு' தான் கெலிச்சுப் போச்சே? பாவம், ராத்திரியும் அவர் சோறு உண்ணலையே? 'இரு மனம்' பூண்ட இரும்பு நெஞ்சுக்காரியான செங்கமலம் 'கால்மாறி' ஓடி விட்ட சேதி கேட்டு, அவளைக் கையும் களவுமாக—கையும் மெய்யுமாக ஓடிப் பிடித்து விடுகிற மாதிரி ஓடுறாரே அப்பா? ஆனால், நட்ட நடு ராத்திரியிலே அவர் மாத்திரம் தானே திரும்பினார்? அந்தப் பாவி பழிகாரி—சண்டாளிச் சனியன் செங்கமலம் என்ன ஆனாள்? என்னமோ, எல்லாமே மூடு மந்திரமாக அல்லவா இருக்குது? வேலைக்காரப் பரமசிவம் எங்கே போய்த் தொலைந்தானும்? — சே! குழப்பத்திற்குப் பேர்தான் வாழ்க்கையோ?— ஐயையோ!'

இப்படி என்னென்னவோ கேள்விகளையெல்லாம் மனக்குழவி, 'குளவி'யாகக் கொட்டிக் கேட்க, அந்தச் சலனத்திற்கும் குழப்பத்திற்கும் மத்தியிலே ஒரு வழியாகச் சோற்றைக் கவிழ்த்து—வடித்து இறக்கி வைத்தாள் அன்னம்.

பவளம் இங்கே ஏன் வந்திருக்கிறாள்? அவள் பார்வை நன்றாக இல்லையே? வைரப் புளியங் கொம்பாகப் பார்த்துத்தான் அத்தானைக் கட்டிப்போட நினைத்திருக்கிறார் மாமா! பாவம், அத்தை புருஷன் ஏமாந்து விட்டாரே?

அலைகள் ஓய்வதில்லை!

அன்னக்கொடி அவளுக்கே உரித்தான பரிவுடன் பவளக்கொடியை—சிலட்டூர்க் கங்காணியாரின் அருமந்தப் புதல்வி பவளக்கொடியை நெருங்கி, "பவளம், வா, சோறு உண்ணலாம்", என்று அன்புடன் அழைத்தாள். மனிதாபிமானம் மணந்திட அழைத்தாள்.

"ஏலே அன்னம்! ஈனத்தனமும் சின்னத்தனமும் கொண்ட உங்க வீட்டிலே கை நனைக்க வந்திருக்கேன்னு மனப்பால் குடிச்சே நீ? என்னோட தாலிப் பிரச்னை சம்மந்தப்பட்ட ஒரு சங்கதியைப் பாலை வெடிச்சாப்பிலே உங்கிட்ட ஓதிப்புட்டு ஓடத்தான் ஓடியாந்திருக்கேன்! கேட்டுக்க!" என்று மறைவுக் கவர்ச்சி விளையாடச் சற்றே நிறுத்தினாள் பவளம்.

அன்னத்தின் சந்திர பிம்ப வதனத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கத் தலைப்பட்டன.

உச்சாடனம் கொண்ட சூன்யக்காரியாகப் பவளம் தொடர்ந்தாள்:

"ஏ, அன்னம்! உன்னைக் கண்ணாலம் பண்ணிக்கப் போறதாக உன் ஆசை அத்தை மகன் வீரமணி வாக்குக் கொடுத்திருக்காராமே? அந்தப்

பாக்கியம் இந்தச் சென்மத்திலே உனக்குக் கிட்டவே கிட்டாது; கிட்டவும் இந்தச் சென்மத்திலே விடவும் மாட்டேன் நான்! ஏன், தெரியுமா? உன் நேச மச்சான் வீரமணி எனக்கே திருப்பூட்டுறதாக ஆத்தாளைச் சாட்சி வச்சு, எனக்குக் கையடிச்சுக் கொடுத்திருக்காகளாக்கும்! அந்தச் சத்திய வாக்கை நான் வேத வாக்காய் நம்பித்தான், நான் என்னோட அருமை வீரமணி மச்சானுக்குக் கண்ணாலம் காட்சிக்கு முந்தியே ஒரு நிலா ராத்திரியிலே நான் முந்தானை விரிச்சுப்புடத் துணிஞ்சேனாக்கும்!...''

மின்னாமல் முழங்காமல் இடி இடிக்குமா, என்ன?...

20. அன்னக்கொடி— பவளக்கொடி!

திட்டமிட்ட காரியத்தைத் திட்டமிட்டவாறே செய்து முடித்து விட்ட ஆணவத்துடன் நின்று கொண்டிருந்த சிலட்டூர்க் கங்காணி மகள் கன்னி பவளக்கொடியை நோக்கி ஆத்திரம் கொடிகட்டிப் பறக்க நடந்தாள், ஆவணத்தாங் கோட்டை ராமையாத் தேவர் மகள் அன்னக்கொடி வஞ்சினத்துடன் ''அடி பாவி!... பழிகாரி!'' என்று வீரிட்டுக் கொண்டே விரைந்தாள் அவள். வீரிட்ட குரல் வீங்கி வெடிப்பதற்குள், பவளக்கொடியின் கறுப்புக் கதுப்புக் கன்னங்களிலே ஓங்கி ஓர் அறை விட்டாள் அன்னம்.

பசையும் பச்சாப்பும் மிகுந்த பெருந்தனக் காரரின் மகள் பவளக்கொடி இந்தப் பயங்கரமான அறையை எப்படி எதிர்பார்த்திருப்பாள்? பாவம், அவள் அப்படியே கதிகலங்கி, பொறிகலங்கி நின்று விட்டாள்!

"கேடு கெட்ட குட்டி உனக்கு என் மூஞ்சியிலே அறையறதுக்கு அம்மாம் கொழுப்பு முட்டிப் பூடுச் சாங் காட்டி?" என்று கொள்ளிவாய்ப் பிசாசு மாதிரி கத்திக் கொண்டே, அன்னக்கொடிக்குப் பதில் அறை கொடுக்கக் கையை ஓங்கலானுள் பவளக்கொடி.

பவளத்தின் 'சவடால்' அன்னத்திடமா சாயும்? அன்னம் அவள் மார்பில் கைவைத்து ஆவேசத் தோடு அவளை அப்படியே எட்டித் தள்ளிவிட்டாள்.

நாவற்பழம் மண்ணிலே உதிருமே, அந்தக் கதையாகச் சாய்ந்தாள் பவளம். பின், பதனமாக எழுந்தாள்; நின்ருள்.

பொங்குமாங்கடலெனக் காட்சியளிக்கின்ருள். கன்னிக் கொழுந்து அன்னம்!

"அடி, பாவிப்பட்டி!... அடி, மூதேவி! தர்ம ராட்டமும் அரிச்சந்திரராட்டமும் மானத் தோடவும் மனிதாபிமானத்தோடவும் ஊர்நாட் டிலே நடமாடிக்கிட்டிருக்கிற என்னுேட அன்பு அத்தான் வீரமணி மேலேயா இருந்திருந்து நீ பழி பாவம் சுமத்தத் துணிஞ்சே? என் ஆசை மச்சானை வீரமணி பேரிலே அநியாய அவதூறு சுமத்துறதன்

மூலம், உன்னோட பேரிலேயே நீயேபழிசுமத்திக்கிட நேரிட்ட இடுசாமச் சங்கதி நாளைக்கு நம்ம மறக் குலச் சமுதாயத்திலே காட்டுத் தீயாகப் பரவத் தொடங்கினால், கன்னிப் பொண்ணான உன் கதி என்னாகும்னு ரோசிச்சுப் பார்க்கக் கூடவா உனக்கு மதிகெட்டுப் போச்சு?''

அன்னம் வீறு கொண்டு முழங்கினாள்!

தடம்புரண்டு நழுவியோட முனைந்தாள் பவளக்கொடி.

சீமைக் கொய்யாப் பழத்தைக் கள்ளத்தன மாகக் கடித்துத் தின்றுவிட்டு நழுவி ஓடிவிட முயலும் எலியைத் துரத்திப் பிடித்துக் கைக்கு மெய்யாகத் தண்டனை கொடுக்க முனைவது மாதிரி, பவளக்கொடியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண் டாள் அன்னக்கொடி!

"ஏ, பவளம்! உன்னைப்போய் தங்கச்சின்னு விளிச்சேனே?-நான் ஒரு பைத்தியக்காரி! ஆனா, நீ பலே கைகாரி! அது மட்டுமல்ல; நீ படு சூதுக்காரி! அதாலேதான், யானை தன் தலை மேலே மண்ணை வாரிக் கொட்டிக்கிடுறதொப்ப, நீயே உன் பேரிலே வினையைத் தூவி விதைச்சுப்பிட துணிஞ்சிருக்கே! சே! நீயும் ஒரு பொம்பளையா? தமிழ்ச் சாதியோட நல்ல பேரைக் கெடுக்க வந்த கோடாரிக்காம்பு நீ! சீ!...எச்சிற் கலைக்கு அலைகிற வெறிநாயே!''

சிம்மக்குரல் வீசி முழங்கி விட்டு, எச்சிலைக் காறிப் பவளத்தின் மீது துப்பிவிட்டாள் அன்னம்.

மைந்நொடிப் பொழுதிற்குள்:

பவளக்கொடி காட்டேரியாக மாறினாள். அன்னத்தின் பேரில் அவளும் பதிலுக்குப் பதில் எச்சிலை உமிழ்ந்தாள். அத்துடன் விடவில்லை, கங்காணி மகள். அன்னத்தின் குழற் கற்றையை மடக்கிப் பிடித்துக் கொண்டாள்.

"ஈயத்தைப் பார்த்து இளிச்சுதாம் பித்தளை! நானடி கெட்டழிஞ்சவ? நீதான் கெட்டழிஞ்ச லம்பாடிச் சிறுக்கி! உன் சிங்கப்பூர் அப்பன் செங் கமலத்தோட கொசுவத்தைச் சுற்றிக்கிட்டு இருந் திட்டு, இப்ப ஏமாந்து நிற்கலியா? அந்தப் புத்தி தானே உனக்கும் இருக்கும்? நான் ராமருக்கு வாய்ச் சிட்ட சீதை கணக்காக்கும்! எனக்கு அந்த வீரமணி நம்பிக்கைத் துரோகம் செஞ்சு, என்னை மோசம் செய்யத் துணிஞ்சால், அப்பவே அந்த வீரமணியை நாசமாக்கிப்பிட மாட்டேனா?" என்று உறுமினாள் பவளம்.

"ஆ!" என்று கூக்குரல் பரப்பிப் பவளத்திட மிருந்து விடுதலை பெற்று விட்டாள் அபலை அன்னம். 'அப்படின்னா, பவளம் செப்புறதெல்லாம் மெய்யே தானா?'—மெய் நடுங்கியது. புயலிடை அகப்பட்ட அகல் விளக்கானாள். கொழுந்து விட்டெரிந்த மனத்திரி, ஏன் இப்படி 'அலமந்து' துடிக்கிறது? பவளம் கடைசிவரை அவள் பிடியில் கிடைத்தால் தானே? அவள் ஆத்திரத்துடன் தவித்தாள்; வேதனையோடு துடித்தாள்; அச்சத்தோடு துவண் டாள். கண்ணீர் மடைமாறிய வெள்ளமாக

வெட்டிச் சாடிற்று! 'மச்சான்! வெறிபிடிச்ச இந்த நாய் உங்களைப் பார்த்துக் குலைக்கிறது ஓட்டுக்குமே நிசந்தானு?... உங்களை மலைபோலே நம்பிக்கிட்டிருந்தேனே நான்? கடைசீலே, நீங்களே சதம்னு உங்க காலடியிலே உயிர்ச்சரண் அடைஞ்சிருந்த உங்க அருமை அம்மான் மகளான என்னை மலை மேலேயிருந்து உருட்டி விட்டிடுவீங்க போலத் தோணுதுங்களே?—ஐயையோ, தெய்வமே! என் சாமியே வீரமணி!'—மனம் தூண்டிற் புழுவாகித் துடிதுடித்தது!—அன்னம் சுடர் விளக்கானுள்!...

சூழ்வினை, மாய விதியாகச் சூழ்ந்து, மௌனத் தின் சூழலைக் கைகொட்டிச் சிரிக்கவைத்துக் கொண்டிருக்கிறதா, என்ன?

இப்போது உள்ள சூழலிலே அன்னத்திற்கு அழத்தான் தெரிகிறது!-பாவம்!

"ஏட்டி அன்னக்குட்டி! ஏண்டி வாயடைச் சிட்டே? கோட்டையிலே பிறந்தாலும் போட்ட சுழி தப்பாது அப்படின்னு ஒரு பழமொழி உண்டே, அந்தக் கதை தெரியாதா உனக்கு? பாவம்!" என்று நிர்த்தாட்சண்யமாகவும் ஆணவச் செருக்காகவும் சிரிப்பினை வெடித்தாள் பவளம்.

குனிந்திருந்த தலையைப் பைய நிமிர்த்தினுள் அன்னம். பவளத்தை ஏக்கமும் சோகமும் ஏமாற்ற மும் சூழ நோக்கினுள் அவள்.

பவளம் மேலும் சிரிக்கலானுள். "ஏலே, அன்னம்! இனிமே வீரமணி எனக்கேதானுக்கும்! வீரமணி என்னோடை ஆசை மச்சானுகி, நேச மச்சா

ளுகி, வள்ளிசாய் நாள் முப்பத்தஞ்சு ஆகிடுச்சு! ஆமா!'' என்ருள்.

பவளம் பெண்தாளு?— அவளைக் கடித்துக் குதறிப்போட்டால் என்ன?-அன்னத்தின் கைகள் மறுபடி குறுகுறுக்கத் தொடங்கின. 'இவளை மாதிரி மான ரோசம், சூடு சுரணை இல்லாத ஈனச்சென்மமாக என் அன்பு மச்சான் வீரமணியையும் ஆக்கிப் போட கங்கணம் கட்டித்தான் கூத்து ஆடுருள் போலே!-கூத்தடிக்கிருள் போலே இந்தப்பாவி!'- பற்கள் கடிபட்டன. பவளத்தை விசையாக நெருங்கிளுள் அன்னம்.

"அசலூர்க் குட்டியாச்சே நீ, அப்படின்னு உன்னைச் சமிச்சு உனக்கு மாப்பு விட்டிருக்கிறேன். இல்லாங்காட்டி, முந்தியே உன்னைக் கடிச்சுக் குதறி வீசியிருப்பேன்! என் ஆசைமச்சான் பாதை தவறிப் போற ஆம்பளையே இல்லே. அந்த நம்பிக்கை இந்த விளுடி வரை எனக்கு உண்டு. ஆளு, நீயாக மோடி பண்ணி என் மச்சானை எங்கிட்டேயிருந்து அபகரிச்சுக்கிட உனக்கு வயசு பற்ருது! எதுவுமே என் மச்சான் வீரமணியோட தீர்ப்புப் படித்தான் நடக்கும்!''

அன்னம் தியாகிச் சீறிளுள்,

பவளக்கொடி துளிகூட அதிர்ச்சியடையாமல், தன்னுடைய பயங்கரச் சிரிப்பைத் தொடர்ந்து வெடித்தாள்.

"ஏலே, பவளம்! நான் கேட்கப்போற சங்கதிக்கெல்லாம் பதில் சொல்லு, பார்க்கலாம்!''

"ஊம்!"

"நீயும் வீரமணியும் கூடிக் களிச்சிங்க என்கிற துக்குச் சாட்சி என்ன வச்சிருக்கே? சொல்லுடி, பவளம், சொல்லு!"

எங்க சிலட்டூர் மாரி மகமாயி சத்தியமாகச் சாட்சி வச்சிருக்கேன்!"

"ஓகோ! அப்படியா? அப்படீன்னு, இப்பவே என் பின்னுடி ஓடிவா. இப்பவே தமுக்கடிச்சு, எங்க ஆவணத்தாங் கோட்டைக் காளி மகமாயி சந்நதித் திட்டிலே ஊர்ப்பஞ்சாயத்தைக் கூட்டுறேன். இப்பவே எனக்கு எது நிசம், எது பொய், யார் அசல், யார் போலி என்கிற உண்மையும் தர்மமும் சத்தியமும் விளங்கியாக வேணும்!...ம்...வாடி பவளம்!"

அழைத்துக் கொண்டே பவளக்கொடியின் கரங்களைப் பற்றி, மாட்டை இழுப்பது போன்று 'பர பர' வென்று இழுக்கலானுள் அன்னக்கொடி.

ஆனுல், பவளமோ திமிறிக்கொண்டு பின்னுக்கு இழுத்தாள். அன்னத்தின் பிடியை விட்டு விலகிக் கொண்டாள். "அன்னம், நான் கன்னிகழியறத் துக்கு முந்தியே கெட்டுப் போனவள் என்கிற ரகசியத்தை ஊரைக் கூட்டித் தமுக்குக் கொட்ட நினைக்கிறே நீ. நான் வாரேன்! ஆனு, அதே ஊர்ப் பஞ்சாயத்திலே, உன் ஆசை மச்சான் வீரமணி யாலே நான் கெடுக்கப்படல்லே என்கிறதையும் நிரூபிச்சுக் காட்ட வேணுமாக்கும்!... ஆமா,

சொல்லிப்புட்டேன்!'' என்று ஓங்காரமிடலானாள் பவளக்கொடி. வெயிலில் மூக்குத்தி பளபளத்தது.

இப்பேச்சைக் கேட்டதும், அப்படியே வாய டைத்துப் போய்விட்டாள் அன்னம். மறுபேச்சாட வில்லை அவள். பவளக்கொடியின் அறைபடாத இன்னொரு கன்னத்திலும் இப்போது ஓங்கி ஓர் அறை கொடுத்தாள் அன்னக்கொடி. பத்ரகாளி யாக உருக்கொண்டு விட்டாளா அன்னம்? "அடி, பாவி! உனக்குப் பைத்தியம் பிடிச்சிருச்சா?''— ஓலமிட்டாள்.

அப்போது:

''அன்னம்!'' என்று விளித்த வண்ணம், அன்னத்திற்கு உடைமை பூண்ட வெள்ளைக் காளை யும் கையுமாக அங்கே தோன்றினான் வீரமணி!

21. மணலால் ஒரு வீடு

'தேடிவந்த தெய்வம்' என்று சொல்லுவது உண்டல்லவா?-தெய்வம் தேடிவருமோ என்னவோ? ஆனால், வீரமணி அன்னத்தைத் தேடி வந்தான்.

வீரமணியை உச்சிப் பொழுதில், தன் இல்லத் தில் அன்னம் எதிர்ப்பார்க்கவில்லைதான். என்றா லும், பழி சுமத்திய பவளக் கொடியைப் பழிக்கு ஆளாக்கப்பட்டுள்ள ஆசை மச்சான் வீரமணியின் முன்னிலையில் நிறுத்தி நீதி விசாரணை நடத்திவிட வேண்டுமென்ற உள்நோக்கத் துடிப்போடுதான்

ஆத்தா சந்நிதானத்தில் 'ஊர்ப் பஞ்சாயம்' கூட்டம் போவதாகப் 'பாவலா' காட்டி, அவனைக் கையைப் பிடித்து இழுத்தாள் அன்னம்.

வீரமணி வெள்ளைக்காளையும் கையுமாக அப்போது அங்கே காட்சியளித்தான்!

வீரமணியைக் கண்டதும், அவனைத் தேடிவந்த தெய்வமெனவே மதித்தாள் அன்னம். அடித்தாலும், அணைத்தாலும் சேய்க்குத் தாய்தான் சதம்.

வீரமணியைக் கண்டவுடன் தாயைக் கண்ட சேயாக மாறிவிட்டாள் அன்னக்கொடி. உடனே மச்சான்!'' என்று அலறினாள், கதறினாள்!

வீரமணிக்குத் திக்கும் புரியவில்லை; திசையும் விளங்கவில்லை. ''அன்னம்! ஏன் அழுகிறே, அன்னம்? என்னத்தைப் பறிகொடுத்திட்டே? உன்னோட வெள்ளைக்காளையைத்தான் நான் உன் கிட்டே வாக்குக் கொடுத்ததுபோல கொண்டாந்து சேர்த்துப் புட்டேனே? என் அப்பாரோட வம்பை விலை கொடுத்து வாங்கினாலும் பாதகமில்லே; உன்னோட அன்பை விலை கொடுக்காமல் வாங்கக் கடமைப்பட்டவன், உரிமைப்பட்டவன் அப்படின்னு தீர்மானம் பண்ணித்தான் மறுதக்கமும் கோதாவிலே இறங்கிப் புட்டானே?— இரங்க மாட்டேயா நீ, அன்னம்?'' என்று சிறுபிள்ளை மாதிரி செருமத் தொடங்கினான் வீரமணி.

வெள்ளை கத்திக் கொண்டே அன்னத்திடம் ஓடிப் பாய்ந்து வந்து நின்றது.

அத்தானை ஏக்கத்தோடும் சோகத்துடனும் பார்த்தவண்ணம், வெள்ளையைக் கைத்தாங்கலாகப் பிடித்துச் சென்று மாட்டுத் தொழுவத்தின் நிழலில் கட்டிப் போட்டுவிட்டுத் திரும்பிய அன்னத்தின் பேதை நெஞ்சமும் கூடத்தான் கட்டிப் போட்டுவிட்ட பாங்கில் தவித்தது; தடுமாறியது!

பவளக்கொடியையும், அன்னகொடியையும் வீரமணி மாறி மாறிப் பார்த்தான். அவனுக்கு அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை.

"என்ன நடந்திச்சு, அன்னம்?"

"மச்சான்!" என்று மீண்டும் விம்மினாள் அன்னம். நடந்த கதையை எங்ஙனம் விளக்குவது என்றதுப்பு விளங்காமல் குழப்பமும் ஏக்கமும் சலனமும் சூழ்ந்திட வீரமணியை உறுத்துப்பார்வையிடலானாள் கன்னி. "என்ன நடக்கப்படாதின்னு நான் கவலைப்பட்டேனோ, என்ன நடக்காதின்னு நான் நம்பினேனோ, அது நடந்து போச்சுங்க!" என்று பொருமினாள் அவள். தொடர்ந்து, பவளக்கொடியை நடுங்கும் விரலால் சுட்டிக் காட்டி, "இவளைத் தெரியுமா உங்களுக்கு?" என்று ஆத்திரக் குரலெடுத்துக் கேள்வி கேட்டாள் அன்னம்.

குழப்பமும் சங்கடமும் மலிந்திட, பவளக்கொடியை ஏற இறங்கப் பார்வை பரப்பினான் வீரமணி; எங்கேயோ எப்போதோ அந்த முகத்தை, அந்தப் பார்வையை இதற்கு முன்னம் சந்தித்திருப்பதாகவே, அவனுக்குப் பட்டது. பிறகு, பவளக்கொடியை அன்புடன் ஊடுருவியவனாக, சற்றே

நெகிழ்ந்த வெட்கச் சிதறலோடு, "நீ...நீ...பவளக் கொடி...சிலட்டூர்ப் பவளக்கொடிதானே?" என்று கேட்டான்.

இவளைத்தான் ஏதோ ஒரு பிரதிப் பிரயோசனம் கருதி, தன்னுடைய தலையில் அப்பா கட்டக் கங்கணம் கட்டியிருந்தார் என்கிற விவரத்தையும் அவன் மனச்சாட்சி உணர்ந்துதான் இருந்தது. ஆனல், இவளே தான் இப்போது தன் மூச்சைப் பிரித்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறுள் என்ற விஷயத்தை மட்டும் அவன் உணர்ந்திருக்க இயலாது!

ஆடு திருடிய கள்ளிக்குச் சமதையாக நின்றுள். பவளக்கொடி.பின்னர், என்னவோ முடிவுக்கு வந்தவளாக, "ஆமாம்! நான் பவளக்கொடிதான்...!" என்று தலையைப் பலி ஆடு மாதிரி உலுக்கிக் குலுக்கினுள். வைரச்சிமிக்கிகளின் ஒளியில் மூக்குத்திக் கற்கள் முகம் கண்டன. மாரகச் சேலை இடம் பெயர்ந்த காரணத்தால், கழுத்து அட்டிகை இப்போது தான் தன்னைக் காட்டிக் கொள்ளவோ காட்டிக் கொடுக்கவோ வேளை பார்த்திருக்கலாம்.

"பவளம்! என்னைத் தெரியுதா, உனக்கு?" என்று வினவினுன் வீரமணி.

"உங்களை எப்படிங்க மறப்பேன் நான்? நெஞ்சிலே உள்ளதை நினைப்பிலே கொண்டாந்து, உள்ளதை உள்ளபடி சொல்றேனுங்க! நெஞ்சை ஒளிச்சு ஒரு வஞ்சகம் இருக்குங்களா?"

வீரமணியின் மனப்பதற்றம் சூடு பிடித்தது.

பவளம் பழைய காட்டேரியாக உருக் கொண்டாள்! உடனே "மச்சான்!" என்று வீரிட்டாள். குரல் தழுதழுத்தது. கறுப்புக் கண்கள் கன்றிச் சிவந்தன. சிவப்பில் ஒரு 'சாகசம்' சிவப்பு விளக்குக் காட்டுகிறதே?...

அன்னக்கொடிக்குச் சுருக்கென்றது.

வீரமணி உந்திக்கமலத்தில் உதை பட்டமாதிரி பதைத்தான்; "மச்சானு? எங்கே உன் மச்சான்? யாரு உன் மச்சான்?" என்று ஆத்திரத்தோடு வினவினன்.

பவளக்கொடி விம்மத் தொடங்கினுள். "நீங்க தான் என் மச்சான்! என்னேட மச்சான், நீங்களே தானுங்க!" என்று நறுக்குத் தெறித்தாற் போல முழக்கம் செய்தாள்.

'அடி பாவி!'— வீரமணிக்குக் கண் தெரியாத காட்டிலே கண்களைக் கட்டிவிட்ட மாதிரி இருந்தது, 'கண்ணுமூச்சி விளையாடுகிருளே இந்தச் சிறுக்கி?'— வீறுகொண்டான் வீரமணி. "பவளம், என்னு கதை பண்ணுறே?" என்று ஆவவேசத் தீ கொழுந்து விட்டெரிய, அவளை அண்டினன்.

அன்னம் முள்மேல் நிற்கிருள்!

"நானு கதை பண்ணுறேன்? நீங்கதான் நாம இரண்டு பேரும் மண்வீடுகட்டி விளையாடினது எல்லாத்தையும் மறந்துப்புட்டு, ஒண்ணுமே அறியாத பச்சைப்பிள்ளை கணக்கிலே என்னை என்னென்னமோ விசாரிக்கிறீங்க! அடிநான்

தொட்டு என் நெஞ்சைத் தொட்டவங்க நீங்க. துல்லிதமான அந்த மயக்கத்திலே மயங்கினேன் நான். ஆனு நீங்களோ அன்னத்தையே கொண்டுக் கிடப் போறதாகத் தீர்ப்புப் படிச்சிட்டீங்களாம்! ஐயோ, நீங்க எனக்குத் துரோகம் செஞ்சிட்டீங் களே! மச்சான்!''

வீரமணியின் இதயத்தை என்னவோ ஓர் உணர்வு பிராண்டத் தொடங்கியது. "நான் எப்படி உனக்குத் துரோகம் செஞ்சதாக அர்த்தமாக முடியும், பவளக்கொடி?''

"நீங்க எனக்குத் துரோகமே செய்யலையா? ஒரு நிலா ராத்திரிப் பயணத்திலே என்னை எங்க ஊர் மாரியத்தா கம்மாய்க் கரைப் பத்தைப் பக்கம் சந்திச்சு. என்னையே நீங்க கண்ணாலம் கட்டிக்கிடு றதாக ஆத்தா பேரிலே ஆணை வச்சுக் கையடிச்சும் கொடுத்தீங்களே, அப்ப என்னு நடந்திச்சாம்?''

தலையில் இடிவிழுந்த மாதிரி தலையைக் கெட்டி யாகப் பிடித்துக் கொண்டான், வீரமணி.

"ஒரு ஆவணிக் கெடுவிலே உங்க ஊரையும், எங்க ஊரையும் ஒருமிக்கக் கூட்டி ருசுப்படுத்திச் சொல்லத்தான் போறேன்! நீங்க என்னை ஆசை காட்டி, மோசம் பண்ணிக் கெடுத்த மாதிரியே, நீங்க உங்க முறைப்பொண்ணு அன்னக்கொடியை யும் ஆசை காட்டி, மோசம் பண்ணிக் கெடுத்தி ருக்கீங்க என்கிற நடப்பையும் ரூதலிச்சு மெய்ப் பிக்கத்தான் போறேன். ஆமா!...''பேயாகக் கொக் கரித்தாள் பவளக்கொடி.

"பவளம்......!"

அன்னக்கொடி மட்டிலும் தான் இப்படி அலறிக் கதறினளா?—வீரமணியும்தான்!

22: சவால் விடு தூது

வீரமணிக்கு அப்போது தான் சுயப்பிரக்ஞை திரும்பியிருக்க வேண்டும். அரும்பு மீசை துடித்தது, அவனது தோள்களைப் போல! தலைகுனிந்தவாறு எதையோ சாதிக்கத் திட்டம் தீட்டி, அத்திட்டத்திலே பாதிக்கிணறு தாண்டிவிட்ட எக்களிப்புடன் நின்றிருந்த பவளக்கொடியைத் தலையை நிமிர்த்தி நோக்கினன். "அடி பாவி! கொலைக்கு அஞ்சாப்பழிகாரி!" சொற்கள் உந்தியினின்றும் முட்டி மோதிக் கொண்டு வெளிக் கிளம்பின. எத்தகைய பயங்கரப் பழி பாவத்தைச் சுமத்தி விட்டாள்!

"ஏலே, பவளக்கொடி! அப்படியே அங்கேயே நில்லு!"

வீரமணி விடுத்திட்ட ஆணையில் பிணை பாவிய காட்டம் அன்னத்தை அச்சம் அடையச் செய்தது சாதுமிரண்டால் காடு கொள்ளாது. மச்சானின் நியாயமான ஆத்திரம் பவளக்கொடியின் அநியாயமானபழிக்கு என்ன பாடத்தை எப்படிக் கற்பிக்கப் போகிறதோ?

பவளக்கொடியோ எதையும் சமாளிக்கும் இதயம் பூண்டவளைப்போல வீரமணியின்

ஆணைக்குக் கட்டுப்பட்டு நின்றவாறு தலையை உயர்த்தி நிதானமாக விழிகளைச் சுழல விட்டாள்!

வீரமணி விசையோடு நடை தொடர்ந்தான்; துருதுருத்த தன்னுடைய உரம் மண்டிய கைகளை வீசியெறிந்து, பவளக்கொடியின் நடுங்கும் பூக்கரங்களைப் பிடித்தான். "பவளம்! ...செய்யாத குற்றத்துக்காக என்னைப் பலிவாங்கப் பாத்தியா, என்ன?" என்று உக்கிரமாக ஓலமிட்டபடி அவளை அணைத்துக் கொள்ள முயன்ற வேளையிலே:

'ஐயையோ!' என்று அலறிப் புடைத்த வண்ணம் ஓடி, வீரமணியைத் தடுத்து நிறுத்தி விட்டாள் அன்னக்கொடி.

எதையோ ஆசையோடு எதிர்பார்த்து ஏமாந்த மூர்த்தண்யமான ஏக்கத்தோடு தடுமாறி நின்றாள் பவளக்கொடி!

வழிந்த விழி நீரை வழி விலக்கக் கூட நினைவிழந்த அன்னம் தன் அருமை மச்சானை வீராவேசம் பொங்க ஊடுருவினாள்: "மச்சான்!" என்று அலட்டினாள் அவள். அப்போது, வாசல் வெளியிலே என்னவோ அரவம் கண்ட மாதிரி, திசைமறுகினாள் அன்னக்கொடி.

அங்கே, பண்ணைக்காரன் பரமசிவம் ஐந்தாறு ஆண் பெண்கள் புடைசூழ நின்று கொண்டிருந்தான்.

அன்னம் திகைத்தாள். அந்தக் கும்பல் வெகு நேரமாக மறைந்து நின்று இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்திருக்குமோ?...

வீரமணியும் அந்தக் கூட்டத்தைக் கண்டு கொள்ளத் தவறி விடவில்லை. பவளக்கொடி புதிய தெம்பு வரப் பெற்றவளாக விறைத்து முறைத்து நின்றதைக் கண்ட வீரமணி மறுபடி ஆத்திரம் கொண்டுபவளத்தை மடக்கிச் சாட முனைந்தான்.

ஓடினாள் அன்னம். "மச்சான்! பவளக்கொடி உங்க மேலே ஒரு பழியைச் சுமத்திப்புட்டா! அதுக்காக, நீங்க இன்னொரு பழியைச் சுமக்கலாமா? நாலு சுவர்களைத் தாண்டி இப்ப நாம நின்னுக்கிட்டு இருக்கோமாக்கும்! ஆகச்சே, எம்பேச்சை நீங்க சுயபுத்தியோட நெஞ்சிலே வாங்கிடவேணும்! ஊருக்கு முன்னிலையில் இப்ப நாம ரெண்டு சங்கதிகளை நிரூபிச்சுக் காட்டக் கடமைப்பட்டிருக்கோம்! ஒண்ணு, நீங்க சீதைக்கு ஏற்ற ராமர் அப்படின்னு மெய்ப்பிச்சுச் காட்டியாகணும்!... ரெண்டாவது, நான் ராமருக்கு ஏற்ற சீதை அப்படின்னு ரூதலிச்சுக் காட்டியாக வேணும்! அப்பத்தான் நீங்களும் நானும் தலை நிமிர்ந்து நின்னு, இந்தப் பவளக் கொடியைத் தலைகுனிய வைக்க முடியும்!" என்று உணர்ச்சிகள் பீறிடக் கதறினாள் அன்னக் கொடி.

மறுகணம்:

இடி இடிப்பது மாதிரி, அட்டகாசமாகச் சிரித்து முழக்கியவளாக, கூட்டத்தைச் சாடிப்

பிளந்து கொண்டே ஓடி விட்டாள் பவளக்கொடி!

வீரமணி சிலையாக மலைத்துப் போய்விட்டான்!

"மச்சான்!" என்று விம்மி விளித்தாள் அன்னக்கொடி. விம்மல் வெடித்தது; கண்ணீர் பொடித்தது.

ஒரு காக்கை குருவியை இப்போது அங்கே காணோம்!

அன்னக்கொடி மத்தியான்னச்சாப்பாட்டைச் முடித்தாள். கூறுகெட்ட செங்கமலம் என்ன ஆனாள்?—சற்று முன், பவளக்கொடி இங்கே புயல் காற்றுச் சூழலில் நிற்கையில் ஊரார் புடைசூழ வேடிக்கை பார்ப்பது போன்று நின்று கொண்டேயிருந்த பண்ணைக்காரன் பரமசிவம் திடுதிடுப்பென்று எங்கே மறைந்து தொலைந்தான்?

வெள்ளை செல்லப் பிள்ளையாகச் சிணுங்குகிறது. பவளக்கொடி கட்டுச்சோறு கட்டிக் கொண்டு சிலட்டூரிலிருந்து வந்து, வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டு பறந்து விட்டாளே, பாவி! கொஞ்சப் பொழுதுக்கு முந்தி வீரமணியும் பவளமும் சண்டையில் ஈடுபட்டிருந்த நிலவரத்தை பரமசிவம் மாத்திரம் கண்டிருந்தால் ஒன்றும் குடிமுழ்கிப் போக மாட்டாது. கூடமாட, வேலப்பன், நாச்சி, பார்வதி, விசாலம், மனோன்மணி என்று யார் யாரோ இருந்தார்களே? உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூட வாய்க்காதே?—

வாசல் தடத்தில் வாழைத் தார்களையும் கத்திரிக்காய்க், கூடைகளையும் சுமந்தவாறு, சந்தைப்

பேட்டையை இலக்கு வைத்து நடந்து கொண்டிருந்தார்கள் ஆடவரும் பெண்டிரும். விடிந்தால் தான் வியாழச் சந்தை. ஆனால், இன்று புதன் கிழமையே இங்கே சந்தை கூடிவிடும்; 'மகமைக்', காசுகள் குலுங்கும்; லாபக் காசும் புரளும்.

சருகுச் செத்தைகளை-கூளங்களை அடுப்புப் பற்ற வைக்கப் பொறுக்கினாள் அன்னம்! அடுப்படியில் ஒழுகிக் கிடக்கிறது. தேங்கி நின்ற மழை நீரைக் காலால் எற்றிவிட்டாள் இன்னும் கொஞ்ச நாள் பாடு. அப்புறம் ஆவணி விடிந்ததும், புது மனைக்குக் குடி போய் விடலாம். மேளதாளம் முழங்கிடத் தோன்றிய திருமண வைபவக் காட்சி ஏடு விரிய, அந்தக் கனவின் மோனத்தில் கை குவித்து, மேனி சில்லிட்டு நின்றாள் கன்னிப்பூ, அன்னக் கொடி. "மச்சான்!" என்று வாய்விட்டு விம்மினாள். கூப்பிட்ட குரலுக்குச் 'சடுகுடு' போட்டு ஓட்டமாக ஓடிவரப் பழகியவன் அல்லவா வீரமணி! ஆனால், அழையாத வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தாளே பவளம்? 'அப்பா வரட்டும்! — இவளை ஒரு கை பார்க்காமலா நான் நல்ல மூச்சு விடப் போறேன்?' — நெடு மூச்சு நீண்டது.

மாமன்காரர் ஆதிமூலத் தேவர் 'இடுக்கி' வைத்திருக்கும் வைரச் சிமிக்கிகளும், அப்பன்காரர் 'சொடுக்கி' வைத்திருக்கும் பிராமிசரி நோட்டும் விக்கிரமாதித்தனின் பதுமைக் காலத்தைச் சிவப்புக் கோடிட்டுக் காட்டியபடி, கூடுவிட்டுக் கூடு பாய்ந்தன. தூக்கியெறிந்து பேசிய பவளக்கொடியின் அநியாயப் பழியும் 'அம்மடங்கு' கொண்ட

சவாலும் எதிரொலித்தன. பட்டி செங்கமலத்தின் வேசிக் கூத்தும் தலைவிரித்தாடியது! வலி மண்டையை உடைத்தது. புகை கண்களைக் கரிக்கப் பண்ணிற்று. எழுந்தாள் ராமையாத் தேவரின் மகள்.

பண்ணையாள் பரமசிவம் வினை நடந்து வந்து நிற்பதுமாதிரி வந்து நின்றான்.

உடன் வந்தாள் விசாலாட்சி.

அன்னம் அகம் நிமிர்த்தி, முகம் உயர்த்தினாள்; அந்தி ஒளி முகத்தில் அடிக்கவே, இடம் பெயர்ந்து நின்றாள்; "வா, சாலாச்சி," என்று முகமன் மொழிந்தாள். பிற்பாடு, பரமசிவத்தை இனம் பிடிபடாத ஓர் அசூயையோடு நோக்கினாள். "போன காரியம் என்ன ஆச்சுப்பா?" என்று விசாரித்தாள்.

"வெள்ளைதான் தொழுவத்தில் நிற்குதே, தங்கச்சி!" என்று நினைப்பூட்டினான் பரமசிவம்.

"அது தெரியுது! மற்ற சங்கதி என்னாச்சடா?"

"எந்தச் சங்கதியைக் கேட்கிறீங்களாம்?" என்று மக்கு மாதரி எதிர்க் கேள்வி கேட்டான் வேலைக்காரன்.

அன்னத்திற்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. செங்கமலம் என்ன ஆனாள் என்று அந்நியப் பெண் விசாலத்தின் முன்னே எப்படிக் கேட்க முடியும்?

பரமசிவம் 'போடு, பகடை பன்னிரண்டு!' என்பது போலே, ஆந்தை விழிகளை உருட்டி விட்டான்.

வெற்றிலை எச்சிலைத் துப்பி விட்டு,காலில் குத்திய காரை முள்ளைப் பிடுங்கி வேலிக்குச் சாட்சியாக நின்ற ஒணான் மீது வீசிவிட்டு, மீண்டாள் அன்னம். "அத்தி பூத்தாப்பிலே வந்திருக்கியே, சாலாச்சி?" என்றாள்.

விசாலாட்சியை முந்திக் கொண்டான் பரமசிவம். 'ராத்திரி நம்ப வெள்ளையை யாரோ சேப்படி அடிச்சிக்கிட்டு ஓடுறதாக நான் உங்க கிட்டே சொன்னடியும், நீங்க நிற்காமல் ஓடினீங்க. நானும் பின்னாடியே ஓடியாந்தேன். ஆவாரம் பத்தை ஒண்டலிலே, பேயிருட்டு வேளையிலே நீங்களும் உங்க அயித்தை மகன் வீரமணியும் ஒண்ணடி மண்ணடியாய் நின்னுக் கிட்டு இருந்தீங்க. நான் என்பாடு விட்டிச்சின்னு என்னோட குடிசைக்கு ஓடிப்போயிட்டேன் தங்கச்சி. அந்தப் பொம்பளையைப் பற்றி ஊர்க்காட்டிலே ஓரேபுரளியாய்க் கிடக்குதாக்கும்!'' என்றான் எடுபிடி ஆள்.

"ஆமா, அன்னம். அந்தப் பொம்பளை பவளக் கொடி உன் மச்சானையும் உன்னையும் கண்ணிலே விரலைக் கொடுத்து ஆட்டிப்படைச்ச சங்கதியைப் பற்றித்தான் நம்ப பஞ்சாயத்துக் கேணியடியிலே யும் அம்மன் ஊரணிக்கரையிலேயும் சாலைக்கோனார் சாயாக் கடையிலேயும் கிருஷ்ண தேவர் மகன்

ராமசாமி பெட்டிக் கடையிலேயும் பேச்சாய் இருக்குதாம்!'' என்று 'குறுக்குச்சால்' ஓட்டினான், வந்தவன்.

''நான் சொன்னது பவளக் கொடியைப் பற்றி இல்லே!'' என்று திருத்தினான் பரமசிவம்.

இடம், பொருள், ஏவல் தெரியாமல் உளறப் பார்க்கிறானே பரமசிவம்? ''சரி, சரி!'' என்று அடக்கிவிட்டாள் அன்னம்.

''நெருப்பு இல்லாமல் புகையுமாடி, அன்னக் கொடி?'' என்று கிண்டலாகப் பேசிக் கிண்டினாள் விசாலாட்சி. பீழை கண்களில் கொப்பளித்தது.

தலைமயிரைக் கோதி விட்டாள் அன்னம். ''அந்தாலே எங்க அடுப்பிலே நெருப்பு இல்லாமல் புகையிறதைப் பாருடியோ விசாலாட்சிப் பொண்ணே!'' என்று ஏளனமாகச் சொன்னாள். ''எங்களுக்கு மடியிலே கனம் இருந்தாத்தானே, நானும் எம் மச்சானும் வழியிலே பயப்பட வேணும்? சிலட்டூர்க் குட்டி பவளக்கொடி சூதுக் காரி என்கிற உண்மையையும், நானும் என் நேச மச்சான் வீரமணியும் நிரபராதிங்க என்கிற சத்தி யத்தையும் இந்த ஆவணத்தாங்கோட்டை மட்டு மில்லே, அந்தச் சிலட்டூரும்தான் ஆவணிக் கெடுவிலே தீரத் தெளியப் புரிஞ்சுக்கிடப் போகுதே! சகதி யிலேகல்லே வீசினால் நம்ப மேலே தெறிக்கத்தானே செய்யும்? தன் வினையைப் பவளம் அனுபவிக்காமல் தப்பிக்க விடவா போறாங்க எங்க காளியும் மாரி யும்?'' பேசி முடித்தாள் அன்னம். ஏதோவொரு

முடிவுக்கு வந்தவளாகத் தலையை உறுதிப்பாட்டோடு ஆட்டினாள்.

அப்போது, தோல்பையும் கையுமாக வந்தார் சிங்கப்பூர்ச் சீமான் ராமையாத் தேவர். தோளில் தொங்கும் கோலாலம்பூர்க் குடையை லாகவமாக எடுத்துத் திண்ணையில் வீசினார்.

''அப்பாவா? வாங்க, வாங்க!'' என்று வாய் கொள்ளாமல் சிரித்தவாறு, எதுவுமே நடக்காத மாதிரி, மகிழ்வுடன் தந்தையை வரவேற்றாள் அன்னக்கொடி. 'அல்லி அரசாணி மாலை' சிரிக்கிறது.

''அன்னம்! என்னோட செங்கமலத்தை வைரச் சிமிக்கிகளை ஆசைகாட்டிக் காடு மாற்றியிருக்காங்களாம் சிலட்டூர்க் கங்காணி பெரிய கருப்பத் தேவரும் உன் மாமன் ஆதிமூலத் தேவரும்!... நானே அந்தப் பெரிய மனுசங்க ரெண்டு பேரையுமே காடு மாற்றப் போறேனாக்கும்!... அதுமட்டும் இல்லே! எனக்குக் கடன் பட்டிருக்கிற ஊர் நாட்டாண்மைக்காரர் ஆதிமூலத் தேவரோட வீடு வாசல், காணி கரை சாடாவையும் விடிஞ்சதும் ஏலத்துக்கு விடப்போறேன்! ஆமா!... அப்பாலே ரொம்ப வைரச்சிமிக்கிகளுக்காக அவர் பேரிலே தாவா கொடுக்கவும் போறேன்!''

ராமையாவின் இப்பேச்சு திக்கெட்டும் ஒலிக்க—எதிரொலிக்க ஆரம்பித்தது!

23. பத்தினிப் பெண் வேணும்!

ஊர் நாட்டாண்மைப் பெரியவர் ஆதிமூலத் தேவரின் மைந்தன் வீரமணிக்குக் கையும் ஓட வில்லை; காலும் ஓடவில்லை. ஆகவே, அவனும் எங்கேயும் ஓடாமல், தன்னுடைய சொந்த அறையே சொந்தமென்று எண்ணியும், நம்பியும் அங்கேயே பழியாய்க் கிடந்தான். பேய் இருட்டைப் பேய் விரட்டிய குழல் விளக்கின் அழகான ஒளி வெள்ளத் தில் பிரிந்து கிடந்த பாரதியையும் தாகூரையும் வர வழைத்துக் கொண்ட மனச்சாந்தியுடன் நோக்கி ஞன் அவன். தீஞ்சுவைக் கவிகளின் தீர்க்கதரிசனம் நிரம்பிய சிந்தனைகளிலே அவனுடைய சிந்தை ஆல வட்டம் சுழன்றது; விவசாயப் படிப்பும்,அப் படிப் பிற்கான செய்முறைப் பயிற்சியுமாக அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலும் இளங்கோமனையிலும் கழிந்த அந்தக் கனவுலக நாட்களை அவனுல் ஒருபோதும் மறக்கவே முடியாது!—அந்நாட்களிலே அவன் கொண்ட இலட்சியங்கள் எத்தனை?—கண்ட கனவு கள் எத்தனை?—நாளும் பொழுதும் களிப்பும் அமைதியுமாக விளங்கிச் சுதந்தர வானம்பாடி யாகப் பறந்தவன் அவன். பிரச்னைகளுக்கு அப்பாற் பட்டவன் ஆண்டவன் மாத்திரமல்ல; அவனும் தான்! —ஒரு காலத்தில் அப்படித்தான் இருந்தான்! அப்படிப்பட்டவன், இப்போது சோதனைமாதிரி, எத்தனை எத்தனை பிரச்னைகளுக்குப் பதில் சொல்ல நேரிட்டிருக்கிறது! ஓ! வாழ்க்கை ஒரு விளையாட்டு அல்ல! - வாழ்க்கையே ஒரு பிரச்சினைதான்!...

பிறை நிலவு முன்னேறி வருகிறது!

'அன்னம்!...... அம்மான் மகளே, அன்னக் கொடி!' இருட்டுக்கு மகத்தான மாண்பைக் கற்பித்துக் காட்டிக் கொண்டிருந்த ரத்தப்பூக்களை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த வீரமணி வெய்துயிர்ப்பை வெளிப்படுத்தினன். உதிரத்திற்கும் ஓர் உன்னதம் இருக்கத்தான் வேண்டும். அந்த உன்னதம் தியாகத்தினுல் விளையுமா? காதலால் விளேயுமா? இல்லே, அன்பினுல் விளையுமா—— நல்ல முடிவுக்கு வந்தவன் மாதிரி, நிமிர்ந்து குந்திக் கொண்டான். அடி மடியைத் தடவிச் சோதித்தான்; கனம் இருந்தால்தானே? பவளக்கொடியின் ஞாபகம் விதியாக மறித்தது. வரும் விதி இராவிலே தங்காதாமே?.... 'அடிபாவி! பழிகாரி!—தமிழ் மண்ணின் மரபையும் பண்பையும் கட்டிக் காக்கும் கடன் உனக்கும் உண்டு என்கிற உண்மையையே நீ மறந்து விட்டாயா? என்னே அழிக்க உன்னுல் முடியுமா? பாவம்! ஆழம் தெரியாமல் காலே விட்டு விட்ட பேதை நீ! பேய் நீ!' வைர நெஞ்சில் பிறந்த ஒளி அவனுடைய பேசும் கண்களில் பேசாமல் நிழலாடியது. 'அன்றும் சரி, இன்றும் சரி; ஏன், என்றென்றும் நான் என்னுடை சீதை அன்னத்துக்கு உரிய ராமர்தான்!...'— பெருமையும் பெருமிதமும் சொக்கட்டான் ஆட, அவன் தலையைக் கம்பீரமாக உயர்த்தினன்; கண்கள் கசியத் தொடங்கின!

அந்தச் சுந்தரக்கனவு ஏடவிழ்ந்தது.

வீரமணி ரசித்தான். அன்று அன்னம் முத்துச் சிதறச் சிரிக்கவில்லேயா? சிரித்த அந்த முத்துச் சிரிப்

யில் மெய்சிலிர்த்தான். 'அம்மான் மகளே, அன்னக் கொடி! நம்மோட புனிதமான சொந்தங்களின் நேர்மையான தவம் கட்டாயம் பலிக்கும்! நீ ராமருக்கு ஏற்ற சீதை; நான் சீதைக்கு ஏற்ற ராமர் என்கிற சத்தியத்தர்மத்தின் உண்மையை நம்ப ஊர் நாடு சாடாவும் கூடிய சீக்கிரம் உணர்ந்துக் கிடத்தான் போகுது!' மனச்சாட்சி முறுவல் ஏந்த மனம் ஆனந்தமான அமைதி காத்து விம்மியது!— புதிய சிரிப்பொன்று பழைய அலையாக ஆர்ப்பரித்தது. அவன் தலையை வைரம் மின்ன நிமிர்த்தினான், 'அடி பாவி, பவளக்கொடி!... உன் பேர் சந்தி சிரிக்கிறதை மறந்திட்டு அப்படிச் சிரிக்கிறதுக்கு உனக்கு வெட்கமாக இல்லையா? பழிகாரி பவளம்! எனக்கும் என்னோட அன்னத்துக்கும் நீ ஒருநாளும் விதியாக ஆகவே முடியாது!...ஆமாம்!'—திரும்பினான் வீரமணி.

பாரதி வானொலியில் பாடிக் கொண்டிருக்கிறார்!

வீரமணி ரசிகன் ஆகிறான்.

''பத்துப் பன்னிரண்டு — தென்னை மரம்
பக்கத்திலே வேணும்; — நல்ல
முத்துச் சுடர் போலே — நிலாவொளி
முன்பு வர வேணும்! அங்கு
கத்துங் குயிலோசை — சற்றே வந்து
காதிற்படவேணும்; — என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே — நன்றாயிளந்
தென்றல்வர வேணும்!

பாட்டுக் கலந்திடவே — அங்கேயொரு
பத்தினிப்பெண் வேணும்: — எங்கள்
கூட்டுக் களியினிலே — கவிதைகள்
கொண்டுதர வேணும்; — அந்தக்
காட்டு வெளியினிலே — அம்மா! நின்றன்
காவலுற வேணும்; — என்றன்
பாட்டுத் திறத்தாலே — இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்!...''

அமரகவியின் நெஞ்சம் தன்னுள் உருகி வழிந்ததை உணர்ந்ததும், வீரமணிக்குப் புல்லரித்தது. தன்னை மறந்த லயம்; உணர்ச்சி வசப்பட்ட நிலை; சிக்கல்கள் அனைத்தையும் சிக்கறுத்து வெற்றியுடன் தலை நிமிர்ந்த ஆனந்தப் பரவசம். பின், பாரதியை-பாரதியின் பாட்டைப் படிக்கவும் பாடவும் தடை இருக்காதுதான்!

''காணி நிலம் வேண்டும் —பராசக்தி!
காணி நிலம் வேண்டும்; —அங்கு
தூணில் அழகியதாய் — நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் —அந்தக்
காணி நிலத்திடையே — ஓர் மாளிகை
கட்டித்தர வேணும்; — அங்கு
கேணியருகினிலே — தென்னைமரம்
கீற்று மிளநீரும் .. ''

பாட்டு நின்று விட்டது!

வீரமணியின் இதயத்தில் கொடி மின்னல் பாய்ந்தது; கொடி முல்லை மணத்தது. அன்றைக்கு அன்னக்கொடியிடம் இதயத்தைத் திறந்து காட்டி வீரமணி பேசினன் அல்லவா? சத்தியத் தீபமாய் பொலிந்த அச்சொற்களை வீரமணியும் மறக்க மாட்டான்; அன்னமும் மறக்க மாட்டாள்.

"அன்னம்!...கடன் இல்லாத சுயேச்சை மனிதனாக - சுதந்திர வீரமணியாக நாணயத்தோடவும் நேர்மையோடவும் நம்ப ஊர்ச் சமுதாயத்தின் வீதிகளிலே தலைநிமிர்ந்து நடமாடவே நான் ஆசைப் படுகிறேன். அப்பத்தான், என் சுய கவுரவம்-தன் மானம் தப்பிப் பிழைக்கும். அப்பன் பாட்டன் சேர்த்து வச்ச நில பலம் அப்படியே காடுமாறிப் போனால் போகட்டுமே?—என்னோட நெஞ்சிலே உரமும், நேர்மைத் திறமும் ஆத்தா பலமும் இருக்கையிலே கேவலம் ஒரு காணி நிலத்தைக்கூட—சுயார்ஜிதமாய்க் கிரயம் பண்ணத்தானா என்னாலே முடியாமல் போயிடப்போகுது?..."

வீரமணி மெய்ம்மறந்தான்!

சேரிப் புறத்தினின்றும் நரியின் ஊளைச் சத்தம் கர்ணகடூரமாக மிதந்து வந்தது.

அந்தச் சத்தம் வீரமணியை என்னவோ பண்ணியது. அம்மான் ராமையாத் தேவரிடம் தன் தகப்பன் பட்டிருக்கும் கடன் அவனைக் கலங்கச் செய்தது, மீண்டும். கடன் கழிந்தால் காற்றுப் போலே!-மெய்தான். ஆனால், உபாயம்?... யோசனை சூடேறியது. பவளக் கொடியின் பழிசுமத்திய படலமும் குறுக்கே பாய்ந்தது. கண்கள் சிவந்தன. தன்னிடம் முத்தாய்ப்பு வைத்து அன்னம் சுட்டிய அந்த இரு பொறுப்புக்களையும் நினைத்தான். காற்றில் படபடத்த தமிழரசியின் புனிதப் பதில் கடிதத்தின் மீது தாகூரைச் சுமை வைத்தபோது, ஏடு புரண்டது. 'உனது சிம்மாசனத்திலிருந்து இறங்கி வந்து என் குடிசையில் நிற்கிறாய்!... பாடிப் பழக்க

யில்லாத என் கீதம் உன் அன்பைத் தொட்டு விட்டது!...'-நேத்திரங்கள் குளமாக, "தெய்வமே!" என்று கண்ணீர் விம்மினான். முத்தங்கள் தமிழரசியின் விடைக் கடிதத்துக்கு விடை கொடுத்தனவோ? —'தமிழரசி! எங்கள் முதற் காதலை உணர்ந்து, நீ எத்தனை நாகரிகமாக எங்களை வாழ்த்தியிருக்கிறாய்! ஆகா!......'

அப்போது:

"மச்சான்!"

அன்னத்தின் அவசரக் குரல் கேட்டு, சிந்தனையிலிருந்து விழிப்புப் பெற்றான் வீரமணி; முறைப் பெண்ணை வரவேற்றான்.

"பாரதி பாட்டு ரொம்ப நல்லாய் இருந்திச்சுங்க!"

"பாரதி பாட்டு நல்லாய்த் தானே இருக்கும்?"

"நான் உங்க பாட்டைச் சொல்லுறேன்!"

"ஓகோ! பாரதி பாட்டை நான் கொஞ்ச முந்தி பாடினேனே, அதைச் சொல்றியா? அப்படீன்னா, நீ நேரத்திலேயே வந்திட்டியா?"

"ஊம்!" என்று ஆமோதித்தாள் அன்னம். வெளிச்சத்தில் அவளுடைய விழிகள் பேசின; அப் பேச்சில் சோகம் மின்னுகிறதே?

"அந்தப் பொம்பளை செங்கமலம் கிடைச்சாச் சாமா?"

"அந்தப் பாவியைத்தான் உங்க அப்பாரும் சிலட்டூர்ப் பவளக் கொடியோட அப்பாவும் காடு

மாற்றிப்புட்டாங்களாமே? எங்க அப்பா கொதிச்சுக்கினு இருக்காங்க, மச்சான்!''

''அட கடவுளே!'' என்று அனுதாபப்பட்டான் வீரமணி. ''வர வர அப்பாவோட நல்ல புத்தி பிசக ஆரம்பிச்சிடுச்சு. எங்க அப்பாவை உங்க அப்பா மதி மோசம் பண்ணினதுக்குப் பழிக்குப் பழி வாங்கத் தவிச்சுக்கிட்டு இருக்கார்போலே எங்க அப்பா. அந்தத் தவிப்பிலேதான், மூடின கண்ணைத் திறக்காமல்கூட. தடம்புரண்டு நடக்க ஆரம்பிச்சிட்டார். நான் உனக்குக் கொடுத்த வாக்குப்படி உன் வெள்ளையை உன் கையிலே ஒப்படைச்சதுக்காக எம்மேலே சடைனப்பட்டுக்கிட்டு, இந்தக் கும்மிருட்டிலே எங்கிட்டோ பறிஞ்சிருக்காங்க எங்க அப்பா!'' என்றான் அவன்.

''தெய்வம் நம்ப ரெண்டு பேரையும் ரொம்பச் சோதிக்குதுங்களே, அத்தான்?''

''சோதிக்கிறதுக்காகவே தான் தெய்வம் இருக்குது, அம்மான் மகளே! அப்பத்தான், மனுசன் மனுசனாக இருக்கானா, இல்லையா என்கிற முடிவு அம்பலமாக முடியும்! ஆனா, இந்த மனுசங்க இருக்காங்களே மனுசங்க, அவங்க சோதிக்கிறதுக்குத் தான் அளவே இல்லாமல் போயிட்டுது!''

''வாஸ்தவம்தானுங்க!''

''அன்புக்காக வாழ்ந்தாரே காந்தி!...''

''அன்பு எதையும் கேட்காது: கொடுக்கவே செய்யும்னு சொன்னார் அண்ணல். கடைசியிலே அவர் சொல்படி அவர் தம்மோட உயிரையே

அன்புக்காகக் கொடுத்திட்டாருங்களே!'' என்று நெஞ்சம் பிழியக் கூறினாள் அன்னம்.

"மகாத்மா...!'' வீரமணியின் உள்ளம் செருமத் தொடங்கியது.

இரத்தம் மாதிரி, இருட்டு உறைந்திருந்தது.

"மச்சான்,'' என்றாள் அன்னம்.

தன்னுணர்வு பெற்றான் வீரமணி. "ம்..... சொல்லு, அன்னம்,'' என்றான்.

அவள் என்னவோ சொல்லத் துடித்தாள்; ஆனால், தயங்கினாள்; மருட்சி மீதூர நின்றாள். அப்புறம், "காரியம் தலைக்கு மேலே போயிடும்போல் இருக்குங்களே, மச்சான்?'' என்று தெரியப் படுத்தினாள்.

"பவளக்கொடி சமாசசாரத்தைத் தானே சொல்லுறே?—ஆமா, ஆமா,'' என்றான் அவன். நெற்றியைத் தடவிக் கொண்டான். நரம்புகள் புடைத்திருந்தன. "நம்ம ரெண்டு பேரையும் ஊர் நாட்டுக்கு மத்தியிலே ரெண்டு கேள்விக்குறியாக்கிப் புட்டு, பழிகாரி பவளம் ரெண்டு கேள்விக்குறிக்கும் ஊடாலே ஒரு ஆச்சரியக் குறியாக நிற்கிறாள்!... பவளக் கொடி விதைச்ச வினையை பவளக் கொடியே அறுவடை செய்யாமல் விடப்போறது தில்லை நான். அதுக்கெல்லாம் வழி புரிஞ்சுக் கிட்டேனுக்கும்! இந்த ஆவணத்தாங்கோட்டையும் அந்தச் சிலட்டூரும் கண்ணுக்குக் கண்ணாகக் கண்டு தெளியத்தானே போகுது, அன்னம்?''

அன்னம் 'ஊம்' கொட்டித் தலையாட்டினாள். தோன்றிய ஆறுதல் புன்னகை மாறத் தொடங்கியது. "உங்களை எனக்குத் தெரியாதா?-என்னை உங்களுக்குத் தெரியாதா...? இல்லே, நம்ப ரெண்டு பேரையும் பற்றி அக்கம் பக்கம் பதினறு ஊர் நாட்டுக்கும் தெரியாதா?...மச்சான்! நான் சொல்ல இங்கிட்டு வந்த விசயம் வேறே!" என்று மென்று விழுங்கினாள் ராமையாவின் பெண்.

என்னவோ சத்தம் கேட்டது.

அன்னமும் வீரமணியும் ஏறிட்டு விழித்தனர்.

அங்கே:

பெரியவர் ஆதிமூலம் எள்ளும் கொள்ளும் வெடிக்க நின்றார். களத்துமேட்டில் சாவிக் கதிர்கள் பறப்பதை நினைவூட்டின, அவருடைய வெண் முடிகள். ஊர் நாட்டாண்மைக்காரர் முதற்பணியாக தமது அருமைத் திருமகனை முறைத்துப் பார்த்தார்; அடுத்த அலுவலாக, தம் மைத்துனன் மகளை வெறித்து நோக்கினார். "அன்னக்கொடி, சமைஞ்ச பொண்ணுன நீ வேளை தப்பின இந்த வேளையிலே, இப்படி அசல் இடத்துக்கு வந்திருக்கிறது அசிங்கம் இல்லையா? கங்காணியார் மகள் பவளக்கொடி எங்க வீரமணி பேரிலே சுமத்தியிருக்கிற பழிச்சொல் இப்பத்தான் என் காதுக்கு எட்டிச்சு!...வந்த வழியைப் பார்த்துக்கிட்டு நீ போ, அன்னம்!...உங்க அப்பன் எங்க காணி, கரை, வீடு, வாசலை ஏலத்துக்கு விட்டுப்புட்டு, அவன் இந்த ஊரிலே குடியிருந்திட முடியுமாக்கும்?— விடியட்டும், விடியட்டும்!... உன்

அப்பனைப் பார்க்கிறேன்— ஒரு கை!...முதலிலே நீ இந்த இடத்தைக் காலி பண்ணு, தாயே!'' என்று பிசிறு தட்டிய குரலில் உத்திரவிட்டார் பெரியவர்.

''அப்பா!'' என்று கூப்பாடு போட்டான் வீரமணி. ''என்னோட அன்னம் என் வீட்டுக்கு வாரதுக்கும் போறதுக்கும் நேரம் காலம் பார்க்க வேணும்னு ஒரு விதியும் கிடையாது. இது என் சொந்த விஷயம்; எங்க சொந்த விஷயம் இது!... எங்க மானத்தைக் கட்டிக் காத்துக்கிட எங்களுக்குத் தெரியும். நீங்க உங்க மானத்தைக் காபந்து பண்ணிக்கிடுங்க, போதும்!'' என்று கூவி வெடித்தான் அருமைத் தேவரின் அன்பு மகன்.

அன்னம் விம்மினாள். ''மச்சான்! நம்ப சொந்தங்கள், வாழும் வாழ்ந்து காட்டும்னு கனவு கண்டேன். ஆனா, ஆத்தாளும் மாமாவுமே சோதிக்கிறாங்க!... அத்தான்! என்னை முகாந்திரமாய்க் கொண்டு நீங்க உங்களைப் பெற்ற அப்பன்காரரோடே மல்லுக்குநிக்காதீங்க. உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டுங்க!...நான் போயிட்டு வாரேன்! ஊம்...நான் போறேனுங்க!''

இப்போது, அங்கே இருட்டு சிரிக்கிறது!

தந்தையும் தனயனும்தான் மிச்சம்!...

சிந்தனை வயப்பட்ட நிலையில் அன்னத்தை நோக்கி நடந்த வீரமணி, அலமாரியில் பதுங்கிக் கிடந்த அறந்தாங்கி 'ஸ்டேட்பாங்கி'யின்சேமிப்புக் கணக்கு நோட்டைப் புரட்டிக் கொண்டே ''வேறே என்ன விஷயம், அன்னம்?'' என்று பதட்டத்தைக்

கட்டுப்படுத்திய நிதானத்தோடு விசாரித்தான்.
"எங்க அப்பாவுக்கு உங்க அப்பா கொடுக்க வேண்டிய கடன் ரூபாய் இருபதாயிரத்துக்கு எங்க அப்பா கோர்ட்டுக் கச்சேரியிலே டிகிரி வாங்கி வச்சிருக்காங்க, இல்லீங்களா? அதை வச்சு......?" என்று பேச்சை முடிக்க மாட்டாமல் திண்டாடினள் அன்னம்.

"சத்தியாய்ச் சொல்லேன்!"

அன்னம் மனப்பாடம் ஒப்புவிப்பது மாதிரி சொன்னுள்:

"எங்க கடனுக்காக உங்க வீடு வாசல், காணி, கரை எல்லாத்தையும் விடிஞ்சதும் ஏலத்துக்கு விடுறதுக்கு உத்தரவு வாங்கி வந்திருக்காகளாம் எங்க அப்பன்காரர்!... இந்த ரகசியம் வெளியே காற்றுப் பறியக்கூடாதின்னு சொன்னுங்க எங்க அப்பா. இதை உங்க காதிலே விழுக்காட்டத்தான் பயந்து பயந்து இந்தப் பின்னிருட்டிலே ஓடியாந்தேனுங்க," என்று நிறுத்தினுள் அன்னம். புடவைத் தலைப்பு, கண்களை நாடியது. மார்பகம் இளமை துடிக்கத் துடித்தது!

வீரமணி வாயடைத்து நின்ருன்!

24. ராமருக்கேற்ற சீதை!

பச்சைமண் அழகாகக் கண் வளர்ந்து, அன்பாகக் கண்மலரும் காட்சியே காட்சி! அந்தக்

கண்கொள்ளாக் காட்சியை நடைமுறையில் சொல்லிக் காட்டும் அர்த்தத்தில், பொழுது மெல்ல மெல்ல விடிந்து கொண்டிருக்கிறது.

வீரமணி நீராடி, நீறு தரித்துக் காளியம்மனைச் சந்தித்துத் திரும்பினான். வீட்டின் தலை வாசலை மிதித்ததும் அவனுக்குத் 'திக்' கென்றது. வீட்டை ஏக்கமும் சோகமும் சூழ, ஏற இறங்கப்பார்வையிட்டான். எதை நினைப்பான்? எதை மறப்பான்? நீள் மூச்சுப் பிரிந்தது. பிரிந்து கிடந்த 'யூரியா—அமோனியம் பாஸ்பேட்' உரங்களைக் கண்டதும், அவனுக்கு நெஞ்சை அடைத்தது. கண்கள் குளமாயின. 'அன்பு, தர்மம், சத்தியம் முதலான மனிதாபிமானக் குணப் பண்புகளை மனிதன் கைவிடாத பரியந்தம், அவனைத் தெய்வம் ஒருபோதுமே கைவிடாது! பின், மனிதன் ஏன் தெய்வமாக ஆக முடியாது?—தெய்வமாக ஆகா விட்டாலும், மனிதன் கேவலம் மிருகமாக மாறாமல், கடைசிப் பட்சம் மனிதன் மனிதனாக நிலைத்து நிற்கவாவது பழகக்கூடாதா? ஆத்தா!'— கொட்டாவி தொடர்கதை படித்தது.

விடியாத இரவும் விடிந்து விட்டது!

தண்டோராச் சத்தம் கேட்டது.

பாம்பைக் கண்ட பாங்கிலே பயந்து, ஆனால், பாம்பை நோக்கிப் பாய்ந்தவராக வெளியே ஓடி வந்தார் பெரியவர்; "ஐயையோ, தெய்வமே! ஐயோ, ஆத்தா!" என்று நெஞ்சைப் பிசைந்துகொண்டே ஓலம் பரப்பினார்.

"அப்பா!...ஐயோ, அப்பா!"

வீரமணியின் அன்பெனும் பிடியில் தலைசாய்ந் தார் ஆதிமூலம்.

"அப்பா!" விம்மினான்; வெடித்தான் வீரமணி. கருப்பையாவும் நடராசனும் கொணர்ந்து தந்த விசிறியையும் மகேஸ்வரி தந்த செம்பையும் வாங்கினான். தந்தையின் முகத்தில் நீரைத் தெளித் தான்; ஒரு கையினால் மார்பைத் தடவிக்கொடுத்துக் கொண்டே, இன்னொரு கையினால் விசிறினான்.

அட்சயப் பாத்திரமாகப் பொழிந்த-பொலிந்த வெய்யலின் குடை நிழலிலே நடந்து கொண்டே யிருந்த தர்மயுத்தத்திற்குச் சவால் விடுவது போலே தமுக்குச் சத்தம் அண்டி வந்தது.

கச்சேரிச் சேவகன் புடை சூழ, அங்கே வாசலில் தோன்றினார், சிங்கப்பூர் சீமான் ராமையாத் தேவர்.

ஆடிப்பட்டத்தில் தூவப்பட்ட விதைநெல் பருவமும் பருவமழையும் பெற்றது. நாற்றுக் கண் திறப்பது உண்டு. அந்தப்பாவனையில் ஊர்த்தலைக் கட்டுப் பெரியவர் ஆதிமூலத்தேவர் கண்களைத் திறக்கலானார்: "தம்பி வீரமணி! ஆதியிலே நான் போட்டு வச்சிருந்த அயனான திட்டப்படிக்கு நீ சிலட்டூர்க் கங்காணி மகள் பவளக்கொடியைக் கண்ணாலம் கட்டிக்கிட நல்ல வாக்குக் கொடுத்திருந் தால், சிலட்டூர்க் கங்காணியைக் கொண்டு, நான் உன் அம்மான் பாவி ராமையாவுக்குக் கொடுக்க

வேண்டிய கடன் பூராத்தையும் இந்நேரம் அடைச்சிருப்பேனே?— புரோ நோட்டிலே வரிஞ்சுக்கிட்டு ஆனால், கொடுக்காமல் ஏமாற்றின பணம் ரூபாய் ரெண்டாயிரத்துக்குத்தான், அதுக்கு மேலே பெறுமதி கொண்ட வைரச்சிமிக்கி ரெண்டையும் சிக்க வச்சுக்கிட்டேனே! நீ பவளக்கொடியைக் கொண்டுக்கிட ஒப்புதல் சொல்லியிருந்தால், உன் பேரிலே எந்தப் பழியையுமே அந்தப்பவளப் பொண்ணு மனசு துணிஞ்சு சொல்லியும் இருக்காதே? ஐயையோ! ஊருக்கு நாட்டாண்மை செஞ்சுக்கிட்டு தலைமுறை தத்துவமாய்க் கட்டிக் காத்து வந்த நம்ப குடும்ப கவுரவமும் மானமும் கப்பலேறப் போகுதேடா, பாவி!'' என்று புலம்பினார்; மண்டையில் அடித்துக் கொண்டு, மயிரைப் பிய்த்துக் கொண்டார் முதியவர்.

வீரமணி அமளி துமளியாகச் சிரிப்பைக் கக்கினான். விதியின் சிரிப்பல்லவே அது?

''அட, ரோசம் கெட்டவனே! நீ என் மகனா? சே! நான் வயிறு வெடிக்க அழுகிறேன். நீ வயிறு குலுங்கச் சிரிக்கிறீயா? சிரி! நல்லாச் சிரி! மானம் இல்லாமல் இப்படிச் சிரிக்கிறியே நீ? நீ என்ன பெரிய விதியாக்கும்? ம்...இன்னும் நல்லாய்ச் சிரி. பொட்டுப் பொழுதுக்குள்ளே என் சீவன் பட்டுன்னு பிரிஞ்சிடும்!...நல்லாச்சிரிடா, பாவி மகனே!''

''அப்பா!'' என்று கூக்குரலிட்டான் வீரமணி. ''ஆமா, நான் பாவி மகன்தான்!'' என்றுவிம்மினான். ''ஏய் வெத்து வேட்டு நாட்டாண்மைக்காரரே!

கையாலாகாத பேடி கணக்கிலே பதுங்கிக்கிட்டு இருந்தால், சட்டம் உம்மைச் சும்மாவா விட்டுப் பூடும்? வாருங்காணும், வெளியிலே!'' என்று கொள்ளிவாய்ப் பிசாசாக இடிமுழக்கம் செய்து கொண்டிருந்த தாய்மாமன் ராமையாத் தேவரின் சுடுகணைகளை நெஞ்சில் உதிரம் வழிய ஏந்தியவனாக, அருமைத் தந்தையைத் தரையிலே கிடத்தி விட்டு, உள்ளே தாய் வீட்டுக்கு ஓடித் திரும்பினான் வீரமணி ''அப்பா, நான் பாவிமகனோ, என்னவோ!— அந்தத் துப்பு உங்களுக்குத்தானே புரியுமுங்க? ஆனா, நான் பாவி இல்லே! இன்னொரு ரகசியத்தை நீங்க புரிஞ்சுக் கிட்டால் தேவலாம். உங்களுக்கு ஆயுசு கெட்டி!'' என்று தாழ்குரலில் கூறிவிட்டு, தலைவாசலுக்கு ஓடத்தலைப்பட்டான் ஆதிமூலத்தேவரின் புதல்வன். பிறகு என்ன நினைத்துக் கொண்டானோ? திரும்பவும் தந்தையைப் பிடித்து உட்காரவைத்தான். ''அப்பா, விதி என்ன விதி?... விதியை மதியாலே வெல்லலா மாக்கும்!'' என்று தெரிவித்துவிட்டு மறுபடியும் வாசலுக்கு ஓடலானான் வீரமணி.

நெற்றிக்கண் திறந்தான் கதிரவன்.

சமுதாயம் என்பது வெறும் நாலு பேருக்கு மேற்பட்டது, அப்பாற்பட்டது என்கின்ற நியதிக்கு வாய்த்த தத்துவமெனக் கூட்டம் நிர்த்தூளிப் பட்டது.

வீரமணி தலைவாசலில் வந்து நின்றான்; கூட்டத்தை நாட்டத்தோடு நோட்டம் இட்டான்;

முகத்தை வெகு கம்பீரமான மிடுக்குடன் உயர்த்தினான்; "அம்மான்!" என்று கோபாவேசத்தொடு அலட்டினான்; அடிமடியைத் தடவிப் பார்த்துக் கொண்டான். சத்தியம் சுடர் தெறிக்கக் காட்சியளிக்கும் பாரத வீரனைப் போன்று—அகம் கண்டு புறம் கண்ட தமிழ் வீரனைப்போன்று காட்சியளித்தான் அவன்.

ராமையாத்தேவர் கலக்கம் மிஞ்ச, நிமிர்ந்தார். அவருடைய எக்காளச் சிரிப்பு இப்போது போன இடம் தெரியக் காணோம்!

"மாமா, வார்த்தையை எண்ணிப் பேசுங்க, ஆமா!"

"உங்க அப்பன் என்கிட்டே பட்டிருக்கிற கடன் ரூபாய் இருபதாயிரத்தை வட்டி முதல் தொகையோடே 'ஐசாபைசா'வாக எண்ணி வச்சிட்டால், நான் வார்த்தையை எண்ணிப் பேச மாட்டேனா, மாப்பிள்ளே?"

"மாப்பிள்ளையும் ஆச்சு, மண்ணாங்கட்டியும் ஆச்சு! மாப்பிள்ளை முறையெல்லாம், முறைகெட்ட உமக்கு ஒரு கேடாக்கும்?"

"ஓகோ! அம்புட்டு ரோசம் பொத்துக்கிட்டு வந்தாக்க, இப்பவே இந்த மினிட்டிலேயே என் கடனை அப்பனும் மகனும் எண்ணி வச்சுப்பிடுறது தானே? இல்லாட்டி, ஒங்க வீடுவாசல், காணிகரை சகலத்தையும் கச்சேரி அ'மீனைவைக் கொண்டு இப்பவே சட்டப்படி ஜப்தி பண்ணி ஏலம் விட்டுப் புடுவேன்!" என்று ராமையா கொக்கரித்தார்.

"எங்களோட வீடு வாசலேயோ, இல்லே, நிலம் நீச்சையோ, இல்லே, காடு கரம்பையையோ ஏலம் விடுறதுக்கு நீங்க செத்துச் சிவலோகம் போய்த் திரும்ப வேணுமாக்கும்!" என்று அரும்பு மீசையைக் குறும்பாக முறுக்கிக் கொண்டே எக்காளமிட்டான் வீரமணி. கண்களில் ரத்தம் வடிகால் அமைத்திருந்தது.

புத்தி தடுமாறியவர் போன்று பாய்ந்து வந்தார் நாட்டாண்மைத் தேவர் ஆதிமூலம், பதுங்காமல் பாயுமே கிழட்டுப்புலி, அப்படி! "டேய் ராமையா! உம்புட்டு மானம் மரியாதை எல்லாத்தையுமே உன்னோட சிறுக்கி செங்கமலம் ஏலம் போட்டுப் புட்டு, வேடிக்கை காட்டி, வேடிக்கை பார்த்துக்கிணு நிற்கிறுளே?— அந்த இடு சாமக் கதையை யெல்லாம் மறந்துப்புட்டியாடா? என் உயிர் என்னோட எலும்புக் கூட்டிலே உறைஞ்சு இருக்கிறமட்டுக்கும் உன் பேராசைக் கோட்டையிலே இடியைத்தான் வீசுவாள் ஆத்தா மகமாயி! எனக்கு முன்னாலேயே என்னோட சொத்துக்சுகங்களை ஏலம் போடப்போறேன்னு நாக்கு மேலே நாக்குப் போட்டு நீ சொல்லுறதுக்கு உனக்கு அம்மாம் தைரியம் வந்திடுச்சாடா? ஊம், எங்கே காட்டு, உன் கைவரிசையை? நானும் உன்னை ஒரு கை பார்த்துக்கிடுறேன்! ம்...!" என்று உச்சாடனக் குரல் எடுத்து முழங்கினார் பெரியவர். அவிழ்ந்து திரிந்த வெண்முடிகளை முடிந்து கொண்டார் அவர்.

நல்ல பூமியின் அமைதி கலைந்தது.

"ஐயா, அமீனு! கோர்ட்டு உத்தரவை அமல் படுத்தி நடவடிக்கை எடுங்க!ம்...சீக்கிரம்!'' என்று உத்தரவிட்டு, ஊர்க் கூட்டத்தை ஊடுருவிய வண்ணம் ஏளனமாக எக்காளமிட்டுச் சிரிக்கலானார் சிங்கப்பூர்ச் சீமான் ராமையாத் தேவர்.

''டேய், சண்டாளப் பாவியே...ராமையா!'' என்று விண்ணும் மண்ணும் அதிர அலறிக் கொண்டே தன் மைத்துனன் ராமையா மீது பாய்ந்தார் ஆறு கரை ஆதிமூலம்.

பதட்டத்துடன் பாய்ந்தோடிப் பெற்றவரைத் தடுத்தான் வீரமணி. பிறகு, தயங்கிப் பயந்து முன்னேறிக் கொண்டே, நீதிமன்றச் சேவகருக்குக் குறுக்கே மறித்து நின்றான்! அமீனு ஐயா! இப்படியே நிற்கிற இடத்திலேயே நில்லுங்க. வாதி ராமையாத் தேவருக்குப் பிரதிவாதியான என்னோட தகப்பனார் கொடுக்க வேண்டிய கடன் முதல் ரூபாய் இருபதாயிரமும் இதுக்குச் சட்டப்படி உண்டான வட்டிப் பணம் ரூபாய் மூவாயிரத்து அறு நூற்றுச் சொச்சமும் இதோ, கைக்கு மெய்யாக வச்சிருக்கேன்...!'' என்று நாணயமும் கம்பீரமும் குலுங்கிட, அடிமடியிலிருந்து கரன்ஸி நோட்டுக் கத்தைகளை வீரமணி வெளியே எடுத்துக் காட்டினான். கதிரொளியில் அசோகச் சக்கரங்கள் மின்னிச் சுழன்றன.

"ஊம், புறப்படுங்க. கோர்ட் அடைக்கிறதுக்குள்ளே நானே அங்கே கட்டிப் பிடுவேன். இன்னும் கால்மணி நேரத்திலே அறந்தாங்கியிலேருந்து வருற

தஞ்சாவூர் பஸ் சாலைக்கு வந்திடும்!'' என்றான் வீரமணி.

''மகனே!'' என்று மெய் சிலிர்க்க விம்மி அழுதார் ஊர் நாட்டாண்மைக்காரர் ஆதிமூலத் தேவர்.

சிங்கப்பூர்ச் சீமான் ராமையாத் தேவர் முகத்தில் ஏமாற்றமும் அசடும் ஒன்றுக்கொன்று போட்டிபோட்டுக் கொண்டு வழிய, சிலையாக நின்றார்.

கூட்டம் மூக்கில் விரலை வைத்தது.

அப்போது:

வேலைக்காரன் பரமசிவம் தலைதெறிக்க ஓடிவந்தான். ராமையாத்தேவரின் முன்னே மூச்சிரைக்க நின்றான். ''எசமான், வெள்ளம் தலைக்கு மேலே பூடுச்சுங்க!—தங்கச்சி அன்னம் தன்னோட அத்தை குடும்பத்தைச் சந்திசிரிக்க வச்சுப் புட்டாதீங்கன்னு விடிய விடிய உங்க காலடியிலே விழுந்து கெஞ்சிக் கூத்தாடிச்சுங்களே! நீங்க கேட்கவே மாட்டேன்னு சொல்லிட்டீங்களே? இப்ப உங்களையும் கேட்காமல் குன்றிமணி விதைகளை அரைச்சுக் குடிச்சிடுச்சுங்க!......பேச்சு மூச்சு இல்லாமல் கிடக்குதுங்களே, முதலாளி!'' என்று கதறினான்.

''ஐயையோ, மகளே!'' என்று நெஞ்சு வெடிக்க கூப்பாடு போட்டுக் கொண்டே ஓடினார் ராமையாத் தேவர்.

"அன்னம்! என் தெய்வமே!" விண்முட்டி மண்ண முட்ட அலறினன் வீரமணி.

பிரளயத்தில் சிக்கித் தவித்து, ஜீவமரணப் போராட்டம் நடத்தி, பின்னர், உயிர் தப்பிப் பிழைத்த நாணயமான அமைதியோடும் நேர்மை யான ஆனந்தத்தோடும் வீரமணி தன்னுடைய மனையின் மண்ணை அந்தக் கும்மிருட்டில் மிதித்த போது, ரத்த ஓட்டம் வேலை நிறுத்தம் செய்து விட்ட மாதிரி, அரைக் கணம் உணர்ந்தான். தவிப்பு துடித்தது.

அப்பா இருமிக் கொண்டிருந்தார்.

"அப்பா," என்று விளித்தான் வீரமணி. "தஞ்சாவூர்க் காரியம் முடிஞ்சாச்சு, கோர்ட்டிலே அம்மான் கடனைக் கட்டியாச்சுங்க," என்று விவரம் சொன்னன். முகமும் கண்களும் ஒளி காட்டின. ஒளி கூட்டின!

"தம்பி, வீரமணி!" என்ருர் ஆதிமூலத்தேவர். நெஞ்சைப் பிசைந்து கொண்டார். "பணம் காசோட அருமை பெருமையை என்னைக் காட்டி லும் நீ ரொம்பக் கச்சிதமாகப் புரிஞ்சுக்கிட்டு, மரபு காத்து வந்த நம்மோட குல கவுரவத்தையும் குடும்ப மானத்தையும் கட்டிக் காத்துக் காட்டிப் புட்டே!" என்று உணர்ச்சி வசப்பட்டும் மனம் நெகிழ்ந்தும் பேசினர். என்னவோ ரகசியம் கேட்கவோ, அல்லது ரகசியம் சொல்லவோ எண்ணி யிருக்க வேண்டும்.

“பாசம் பூவிலங்காகச் சுமக்க, “அப்பா! புறப் படுங்க நம்ம சொந்த மண்ணுக்கு!” என்று வீரமணி வேண்டினுன்!

“இதுதானே நமக்குப் பூர்வீகமான சொந்த மண், தம்பி?” என்று உயிரும் உள்ளமும் நடுங்கி ஒடுங்கக் கேட்டார் ஆதிமூலம்.

வீரமணி தொண்டை கம்மப் பேசலானுன்: “இது இப்ப ஆண்டுமாறிப் போயிடுச்சுங்க; கை மாறிப் போயிடுச்சுங்க, அப்பா! நம்மளுக்கு இந்த மட்டும் சொந்தமாக இருந்த நம்மோட வீடு வாசல், காடுகரை, நிலம் நீச்சு எல்லாம் இனி லேவாதேவி நல்லதம்பிச் செட்டியாருக்குச் சொந்தம்! அந்தப் புண்ணியவானை மட்டும் ஆத்தா எனக்கு இனம் காட்டாமல் இருந்திருந்தால், காலம்பறவே நம்ப குடும்பத்தோட மானமும் நம்ப ரெண்டு பேரோட உயிரும் பறிபோயிருக்குங்களே, அப்பா! தெய்வம்னு ஒண்ணு கட்டுச்சோறு கட்டிக்கிட்டுத் தனியே வந்து நமக்கு முன்னே குதிக்குமா, என்ன? நல்லதம்பி அண்ணுச்சிக்கு நான் ரொம்ப ரொம்ப நன்றிக் கடன் பட்டவனுக்கும்!” நன்றியறிவு அவன்பேச்சில் ஏலமாக மணத்தது.

நாட்டாண்மைத் தலைவர் ஆதிமூலம், இருதயத்தைப் பற்றிக்கொண்டு குமுறிக் குமுறி அழுதார் கேவிக் கேவி அழுதார்!...

அப்பா!, கண் கெடுறதுக்கு முந்தியே சூரியனைக் கும்பிடுறதுதான் விவேகம் அழாதீங்க. அழுறதுக்காக வாழ்க்கை இல்லே!—சிரிக்கிறதுக்

காகத்தான் வாழ்க்கை!— ஆண்டவன் நமக்குக் கொடுத்த உயிருக்கு நாம் ஒரு அர்த்தம் கொடுக்க வேணும். இந்த நியதியையும் நீதியையும் மறந்துப் புட்டு, என்னையும் மறந்துப்புட்டு, நீங்க விஷப் பொடியைத் தின்னு ரகசியமாகச் சாகத் திட்டம் போட்ட உங்களை ஆத்தா, பாதிச் சாமத்திலே எனக்குக் காட்டிக் கொடுத்துப்புட்டா!—நல்ல காலம், விஷப் பொடியை மாற்றி, அதுக்குப் பதிலாகக் காய்ச்சல் பொடியை வச்சுப்புட்டு, நலி யாமல் நழுவி விட்டேன்! எதிர்வெயில் அடிக்காமல் இருக்கங்களா? எதிர் நீச்சல் போடாமல் தப்பிக்க முடியுங்களா, அப்பா?''

நிதானமாகப் பேசி நிறுத்தினான் பட்டதாரி இளைஞன்.

''மகனே!'' என்று வீரிட்டார் ஆறுகரைத் தேவர்.

''அப்பா, என்னுடை சொந்தச் சேமிப்புப் பணத்தைக் கொண்டு, மகமாயி திடலுக்குக் கிழக் காலே காணிநிலம் கிரயம் பண்ணி, அங்கிட்டு ராத் திரியோடு ராத்திரியாய் ஒரு குடிசையும் போட்டிருக் கேன். அந்தக் குடிசைதான் இனி நமக்கு வீடுவாசல் மாட மாளிகை எல்லாம்!—மனம் கொண்டது மாளிகை ஆச்சுங்களே? மனம் வச்சுப் பாடுபட்டால், குடிசையையே மாளிகையாகவும் ஆக்கிப்புட முடி யாதுங்களா, அப்பா?''

''நூத்திலே ஒரு சேதிடா, தம்பி!''

சமையல் காசிக்கு அப்பொழுதுதான் புயல் கலந்த அமைதியுடன் வெளிக்கூடத்தை மெள்ள மெள்ள எட்டிப் பார்க்கத் தென்பு பிறந்தது. அதிசயக் கூத்தாகத் தந்தையும் தனயனும் சண்டை போட்டுக் கொண்டதும், ஆனந்தக் கூத்தாகச் சமா தானம் அடைந்ததும் அவருக்குச் சொப்பன மாகவே தோன்றியிருக்கலாம். ஊறிய மகிழ்வில் திளைத்தவராக, வாஞெலியை மெல்ல மெல்லத் தொட்டார்.

'சிரித்து வாழ வேண்டும்!—பிறர்
சிரிக்க வாழ்ந்திடாதே!'

சின்னவருக்கு சிரிக்கவும் தெரியும்!
பெரியவருக்கு அழவும் தெரியும்!

கொட்டு மேளம் கொட்டியது ஆவணி.

'ஆயி மகமாயி' வெறும் கல் அல்லள்!—அவள் சிரிக்கிறாள்; சிரித்துக் கொண்டே இருக்கிறாள்! ஊராண்டு, உலகாளும் அன்னையின் 'அறக் கருணைச் சிரிப்பு' அல்லவா அது!

கும்பிட்ட கரங்கள் ஜோடி சேர்த்தும், ஜோடி சேர்ந்தும் கும்பிட்டுக் கொண்டிருக்கின்றன.

"அம்மான் மகளே!"

"அயித்தை மகனே!"

"எல்லாம் நீங்க தந்த பாக்கியம்! ஆத்தா, இட்ட மடிப் பிச்சை!" என்று மெய்ம் மறந்து பேசினாள் அன்னக்கொடி.

"ஓ!" என்று கண்களைச் சிமிட்டினான் வீரமணி.

"ஊம்!" அமுதூறும் இதழ்கள் துடித்தன; கனா ஊறும் கயல்விழிகள் பொடித்தன.

காஞ்சிபுரம் கூறைப்பட்டும் மானம்புச் சாவடிச் சரிகை வேட்டியும் சல்லாபம் செய்தன.

மணமாலைக்கு அர்த்தமாக அமைந்து தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்த மஞ்சள் தாலியை எடுத்துக் கண்களிலே ஒற்றிக்கொண்டாள் அன்னம்.

புனிதத்தின் தரிசனத்தைப் புனிதத்தோடு ஊடுருவினான் வீரமணி. தலைநிமிர்ந்தான்; கம்பீரத்தின் நேர்மையும் சத்தியத்தின் நாணயமும் கண்ணீராகப் பளிச்சிட்டன!

"அன்னம், நீ வச்ச ஆணைப்படியே, நமக்கு நாமே புனிதமான தீக்குளி நடத்திக்கிட்டு, சீதைக்கு ஏற்ற ராமராக நானும், ராமருக்கு ஏற்ற சீதையாக நீயும் ஆத்தா மகமாயியையும் சாட்சிக்கு வச்சு, இந்த ஊர்ச் சமுதாயத்துக்கு மெய்ப்பிச்சுக்காட்டிப் புட்டோம்! 'மனசுக்கு மனசுதான் சாட்சி; மற்றதுக்குத் தெய்வமே சாட்சி' அப்படின்னு சொல்லுவாங்க. அந்த வேதவாக்கை நம்பியும் மதிச்சும், நீயும் நானும் ஆத்தா சந்நிதானத்திலேயே புருசனும் பெண்சாதியுமாக ஆகிப்புட்டோம். ஆத்தா மூத்தவ தயவிலே நம்ப லட்சியமும் கனவும் பலிச்சிடுச்சு! நாம கொடுத்து வச்சவங்க!-அதனாலேதான் நாம எல்லாச் சூதுகளையும் எதிர்த்து, எல்லாத்

தடைகளையும் தாண்டி, எல்லாச் சோதிப்புகளையும் செலிச்சு, ரெண்டு பேரும் ஒருத்தருக்கு ஒருத்தராக நம்மை நாமே எடுத்துக்கிட்டிருக்கோமாக்கும்!''

''மெய்தானுங்க மச்சான்! அஞ்சு வயசிலே, அறியாப் பருவத்திலே நீங்களும் நானும் மணல் வீடு கட்டி, புருசன் பெண்டாட்டி விளையாட்டு' விளையாடினோம். இப்ப அன்பு வீடு கட்டிக் கணவனும் மனைவியுமாக ஆகியிருக்கோம்!... நான் உங்க மூலம் தாலி பாக்கியம் பெறவேணும் என்கிறது ஆத்தா முடிவு; அதனாலேதான், என்னையும் செத்துப் பிழைக்க வச்சுப்புட்டா, நான் செத்துப் போயிடுவேனோன்னு பயந்த நீங்களும் செத்துப் போயிடத் துடிச்சுருக்கீங்க. உங்களையும் காப்பாற்றிப்புட்டா ஆத்தா!''

அன்னம்! உழைத்து வாழ்பவனே வணங்கத் தக்கவன் என்று பேரறிஞரும், உழைப்பே தமிழனின் சரித்திரம் என்று கலைஞரும், உழைப்பே உயர்வளிக்கும்னு மக்கள் திலகமும், உழைப்பே உலகம்னு காமராசரும், பெரியாரும் சொல்லி, யிருக்காங்க இல்லையா? அந்த அமுத வாக்குகளைக் கும்பிட்டு, நாமும் நம்மோட உழைப்பை வணங்கி உழைக்கக் கடமைப்பட்டிருக்கோம்!—நம்மோட காணி நிலத்திலே இனி நாம் நெற்றி வேர்வை நிலத்தில் விழ பாடுபட்டுப் பிழைப்போம். அப்பாலே மண்ணிலே பொன் விளையக் கேட்கவா வேணும்? நாட்டிலேயும் பசுமைப் புரட்சி மேலும் பூத்துக் குலுங்காதா, அம்மான் மகளே!''

"மெய்தானுங்க, அத்தான்."

புதிய வைரச் சிமிக்கிகள் பளிச்சிட்டன!

பொன்மணித் தீபம் புன்னகை செய்கிறது.

இளங்கதிர்கள் கண்ணாமூச்சி ஆடுகின்றன.

அந்நேரத்திலே:

"மகனே, வீரமணி!" என்று ஓடி வந்தார் ஊர் நாட்டாண்மைக்காரர் ஆதிமூலத்தேவர். கட்டுக் குடுமியில் புதிய ஒளி பளிச்சிட்டது.

"மகளே, அன்னம்!" என்று தேடி வந்தார். சிங்கப்பூர்ச் சீமான் ராமையாத் தேவர். அவரது முகத்தில் புதிய சிரிப்பு நிழலாடியது.

புது மணத் தம்பதி, புதிய மனத் தந்தைமாரிடம் ஆசி பெற்றனர்!

அடுத்த இமைப்பினிலே:

அங்கே அழகான கூண்டு வண்டியும் பாய்ந்து வந்தது; நின்றது!

"மச்சான்!" என்று அலறிப் புடைத்த வண்ணம், தட்டுத் தடுமாறியவாறு ஓடிவந்தாள் சிலட்டூர்க் கங்காணியாரின் செல்வத் திருமகள் பவளக்கொடி. புதுமணப்பெண்ணைக் காட்சியளித்தாள் அவள். வீரமணியின் காலடியிலே நெடுஞ்சாண்கிடையாகச் சரண் அடைந்தாள் அவள். மல்லிகைப் பூக்கள் சிதறின. திலகம் சிலிர்த்தது!

மணமகன் வீரமணி திகைத்தான்!...

மணமகள் அன்னக்கொடி திடுக்கிட்டாள்!...

கூட்டம் நெரியத் தலைப்பட்டது!

பவளக்கொடி விம்மினாள். "மச்சான்! ஒரு வாட்டி நான் இங்கிட்டு விருந்தாடி வந்த காலத்திலே, உங்களோடே மணல்வீடு கட்டி விளையாடக் கொடுத்தவச்ச அந்த நாள் தொட்டு நீங்க என் மனசைத் தொட்டு விளையாடினீங்க! அது முதல் நீங்களேதான் என்னோட ஆசை மச்சான் அப்படின்னு நான் எனக்குள்ளே முடிவு பண்ணிக்கிட்டேனுங்க! ஆனா, விதி என்னோடு மெய்யாய் விளையாடிச்சு!—நானோ விதியோடு பொய்யாய் விளையாடினேன்! — பொய்ப்பித்தாலாட்டம் செஞ்சு சூரியபகவானோட பரிசுத்தமான ஒளியை வெறும் கையைக் காட்டி மறைச்சுப்புடலாம்னு அற்பக் கன்னியான நான் தப்புக் கணக்குப் போட்டேன்! என்னை இந்தத் தமிழ்ச் சமுதாயம் சமிக்கவே சமிக்காது!—நான் பாவி! ஆனாலும், இந்தப் பாவிக்கும் ஒரு பாக்கியம் கிடைச்சிருக்குதுங்க!— உங்களோட தூய நினைவின் பேராலே, உங்களை நினைச்சு, எனக்கு நானே கட்டிக்கிட்ட புண்ணியத் தாலிங்க இது!— உங்க பேரிலே உங்க சீதையான அன்னத்துக்கு உள்ள உரிமையும் உறவும் அதே பரிச்சுத்தம் கொண்டஎனக்கும்—இன்னொரு சீதையான எனக்கும் எப்பவும் உண்டுங்க! ஆமாங்க, மச்சான்!"

அவ்வளவுதான்!

மறுகணம், பவளக்கொடியின் குவளைக் கண்கள் மூடிக்கொண்டன. பவளஇதழ்களினின்றும் நுங்

தும் நுரையுமாக வழிந்து கொண்டிருந்தது. ரத்தம். 'அந்த அதிசயத் தாலி' இரத்தத் திலகம் இட்டுக் கொண்டதோ?...

''பாவம், பவளக்கொடி!'—வீரமணி இப்போது வாய்விட்டுச் செருமினான்.

அன்னக்கொடி விம்மினாள்: ''தங்கச்சி!''

அதோ, ஆத்தா மகமாயி இன்னமும் சிரித்துக் கொண்டுதான் இருக்கிறாள்!...

நிறைகிறது

wrapper printed by :
prabhu printing house, madras-600017.